17



புது எழுத்து











பாவம்

இந்தியத் தமிழர்கள்

குருட்டுச்செவிட்டுமைகள்



அட்டை - **இனக்கொலைகள்** - **சாய்ரா வாஸிம்**

(பாகிஸ்தானிய பெண் நுண்ணோவியர்)

புது எழுத்து

நவீன படைப்பிலக்கியத்திற்கான சிறுபத்திரிகை

17

2009

ஆசிரியர்

மனோன்மணி

பதிப்பாசிரியர்

இரா. சுகவனம்

நூல் அச்சு

செந்தில் அச்சகம்,

தருமபுரி.

வடிவமைப்பும் ஒளி அச்சும்

ஏ.எஸ்.கனிஷ்க் பிரிண்டர்ஸ்,

நெ.7, பி.டி.வி.காலனி, பெங்களூர் ரோடு,

கிருஷ்ணகிரி - 635 001.

செல் 97915 77886

தனி இதழ் விலை ரூ.100/- ஆண்டு சந்தா ரூ.300/-

அனைத்து தொடர்புகளுக்கும்

புது எழுத்து

3/167, ஸ்ரீராமுலு நகர், காவேரிப்பட்டிணம் - 635 112.

கிருஷ்ணகிரி மாவட்டம், செல் 98426 47101,

மின்னஞ்சல் : **pudhuezhuthu@gmail.com**

புது எழுத்து பேரிடரில் சிக்கி அலைவுற்றுக் கொண்டிருக்கிறது ஆதரவு ஏதுமின்றி. வந்திருக்க வேண்டிய ஒடே ஷ்ரம் - கணிதன், ஒரியக்கவி நிரஞ்சன் மொஹந்தி, மிரியம் அம்மா, மஞ்சித்பாவா, ஆதிமூலம், ஃபராஸ் என எல்லோரும் தவறிப் போயினர் - லா.ச.ரா. இதழுடன். நிர்கதியிலும் சில சிறப்பிதழ்களைக் கொணரும். அடுத்ததாக சி. மணி சிறப்பிதழ்

ஆதிரை என்றொரு அகதி



ஐந்து வயதான ஆதிரைக்கு
கடல் புதிது
கேள்விகளாலான அவள்
அன்றைக்கு மௌனமாயிருந்தாள்
துவக்குச் சன்னங்களுக்குப்
பிடரி கூசி
ஒவ்வொரு வெளிச்சப்பொட்டிலும்
படகினின்று உயிர் தளும்பிய அவ்விரவில்
கடல் குறித்த எல்லாக் கவிதைகளும்
எனக்கும் மறந்துவிட்டிருந்தன
கடல் ஒரு நீர்க்கல்லறை என்பதன்றி

கழிப்பறை வரிசை...
கல் அரிசி..
சேலைத் திரை மறைவில்
புரியாத அசைவுகள்..
காவல் அதட்டல்...
கேள்விகளாலான அவள்
ஊரடங்குச் சட்டமியற்றப்பட்ட
பாழடைந்த நகர் போலிருந்ததாள்.

சுவர் சாய்ந்து
தொலைவனுப்பிய உன் விழிகளுள்
விமானங்கள் குத்திட்டுச் சரிகின்றனவா?
குருதிப் பிசுபிசுப்பு காலொட்டும்
முடிவிலாத் தெருவொன்றில்
நடந்து கொண்டிருக்கிறாயா?

என் சின்ன மயில் குஞ்சே
போரோய்ந்து திரும்புமொரு நாளில்
பூர்விக வீட்டை பிரிய மறுத்து
போருள் தங்கிவிட்ட
என் தாய்முன் இளகலாம்
கெட்டித்து இறுகிய உன் கேள்விகள்

அம்மம்மா அவையள் ஏன் என்னை
அகதிப்பொண்ணு எண்டு கூப்பிட்டனை?

தேவ வசனம்

தனிமைத் தாழியுள்
தன்னைக் கிடத்தியவளைப் பார்த்துவரப்போனேன்
அவள் கண்ணிலிருந்து
சுண்டியெறிந்த துளி
பல்திவலைகளாய் பெருக
வீட்டினுள்ளே மூழ்கிக் கொண்டிருந்தாள்

வெளியே அழைத்துப்போனேன்
மஞ்சள் பூவலைவுறும் வெளிகளில்
இல்லாத பட்டாம்பூச்சிகளை
குசலம்கேட்டாய்
காலம் கால் நழுவும் கோயில்களில்
தானுமோர் கல்லென
இறுகிச் சொன்னாள்
மதுச்சாலையொன்றில் ஒலித்த
ஒற்றை சாக்சபோன் இசையை
நிறுத்தும்படி பரிசாரகரிடம்
பணிந்து கேட்டாள்

வெயில் கருக்கும் இந்நகரை
நினைவின் மது என்கிறாள்
வின்கானிஸ் உபயத்தில்
யன்னல்கள் பெயர்ந்து திரியும்
இவ்விரவில்
மணிக்கூண்டில் ஒரு மணி அடித்து
பைபிள் ஒலிக்கிறது
நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை
உன்னைக் கைவிடுவதுமில்லை
எழுந்தமர்ந்து சிலுவைக்குறியிட்டு
நெகிழும்படியான தேவவசனங்களை
சந்தர்ப்பத்திற்கேற்றபடி எதிரொலிக்கிறவர்களை
செருப்பாலடியும் என் தேவனே
என்றவள் தன் தாழிக்குள்
இறங்கி மரிக்கிறாள்

ஒரே மாதிரி

காலையில் எழுந்ததும்
இந்தக் கண்ணாடியைத்தான் பார்க்கிறேன்
கண்ணில் ஒற்றும்
அம்மன் முகத்தில்
பன்னிரு வருசப் பழமைக் கருணை
நேரே நடந்து
இடதுபுறம் திரும்ப குளியலறை
தண்ணீர் நிறமற்றது
தேநீரில் துளி சுவை மாற்றமில்லை
பகல் கனவுகளின் நீட்சியாய்
துரோகமும் கோபமும்,
மாலை நடக்கப்போகும் தெருவில்
மிஞ்சி மிஞ்சிப் போனால்
ஒரு பூ அதிகமாகப் பூத்திருக்கலாம்
பாப்பா என்ற பைத்தியக்காரி
இன்றைக்கும்
அதே சேலையோடும்
மாறாத வார்த்தைகளோடும்

இரண்டாவது தலையணை
எப்போதும் நீள்வாட்டில்
டார்ச் லைட்
பாம்புக் கறுப்பாய் பழுப்பு மஞ்சளாய்
10.32 ஆகலாம் இன்று தூங்க
நாளை
இந்த மின்விசிறியில்தான்
தொங்குவேனாயிருக்கும்
அப்போதும் கால்கள்
ஒரே மாதிரியாகவா இருக்கும்?

திரும்பவியலாத வீடுகள்

மிகுதொலைவில் இருக்குமென் வீடு
ஒரு மரணப்பொறி
இல்லை
கல்லாலாய கனவு
இருள்பச்சை நிற கவசவாகனங்கள்
மின்சாரம் பாய்ச்சிய முள்வேலிகள்
இரும்புத்தொப்பிகளின் அடியில்
வெறியில் மினுக்கிடும் விழிகள்
இவை தாண்டி
கண்ணிக்குத் தப்பி
விதைபொறுக்கும்
பறவையென வருகிறேன்

குளிர்தரையினுள்ளே துடிக்குமோ
வீட்டின்
வெம்மைசூழ் இதயம்

உருக்கி ஊற்றிய தங்கமெனப்
முற்றம் படரும் வெயிலை
கண்களுள் சேமிப்பேன்
கிணற்றின் ஆழ இருளினுள்
பளிச்சிடும் நாணயங்களை
ஓராண்டு செலவக்க
பொறுக்கிக் கொள்வேன்
ஓ கிளைகொள்ளாத லசந்தரா
என் கனவினில் சொரிக சொரிக
நின் இளஞ்சிவப்பு மலர்கள்

பூனைக்குட்டி
என் வாசனையைத் தொடராதே
தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டவளாயினேன்
பூட்டப்பட்ட என் அறையின் முன்னமர்ந்து
தீனமாய் அழைக்காதே என் செல்லமே
அங்கில்லை நான்.

திரும்பவியலாத யாரோ ஒருவர்
இதை வாசித்துக்கொண்டிருக்கிறீர்கள்
விழி பனிக்க

சிற்ப நினைவுகள்

கல்லில் இறுகிக் கிடக்கும்
இறந்த காலம்
உல்லாசப் பிரயாணிகளின்
புகைப்படக்கருவிகளுள்
கூடு பாய்கிறது.

நீ இதில்தான் சாய்ந்திருந்தாய்.

கர்ப்பகிருகப் பின்புறத்தில்
வெளிச்சத் தாரையொழுக
நிற்கிறாள் மீனாட்சி.

அவள் இழைத்த உடலில்
எண்ணெய் போல்
வழுக்கிச் செல்கிறது நிகழ்

கருங்கற் தளத்தில்
காலமற்ற காலத்துள்
நடந்து போகிறேன்
தனித்து

பிதாமகனின் மீள்வருகை

இம்முறை பிதாமகன்
புத்தக அடுக்குப் பக்கம் வரவில்லை
மாமிசவாடை தூக்கலாக இருப்பதாக
சலித்துக்கொண்டார்.
அவரால் நிராகரிக்கப்பட்ட பெண்களின் பட்டியலை
தம்பி பட்டத்திற்கு வாலென
எடுத்துப் போனபிறகு
அடுக்களைக்குள் வந்து தண்ணீர் கேட்டார்
என்வீட்டுக் குழாயில்
கடல் வருவதில்லை என்றதற்கு
அஞ்சலோட்டத்தில் நான் பின்தங்கியதாக
குறைபட்டார்
வெறுங்கால்கள் சமன் அடிடாய்ஸ்
என்ற சூத்திரம் எனக்குப் பிடிபடவில்லை
கைத்தட்டல்களின் ஓசையில்
தன்னால் உறங்கமுடிவதில்லை
என்றவரைக் குறித்து
தோழியிடம் கேட்டேன்
ஓடுகளத்தில் அவரைக் கண்டதேயில்லை என்றாள்.

நினைவரவம்

அந்தி சூழவும்
எந்தப் புற்றிலிருந்தோ
ஊர்ந்துவருகிறது நினைவரவம்
கழுத்திறுகி மூச்சுதிணறும் இரவுகளில்
பருகப் பருகத்
தீர்ந்திடாத மரண விடாய்
மாத்திரைகளில்
கழிவுக்கரைசலாகி வழிகிறது பூமி.
கைநடுக்கமுற வெட்டிய
இரத்தக் குழாய்களினூடே
இறங்கித் தப்பித்துப் பார்க்கிறேன்
அலைகளும் துப்பிய உடலமாய்
கரைவிழுந்து கிடக்குமத்
தருணம் விடிகிறது
பெயரறியாப் பறவையே
உன் குரலினிது
உலகினிது
உயிரினிது
அந்தி வாராதிருக்கட்டும்

குருதியினும் கனம் மது

நாங்கள் உங்களைப்போலவே வெளியேறினோம்
அன்றேல் வெளியேற்றப்பட்டோம்
பிரிவு கொடியது
எனினும் மரணத்திலும் மெலியது.
நெஞ்சுக்கூட்டுக்குள்
குண்டுகள் சிதறும் அதிர்வுடன்
தேசங்களின் எல்லைகளைக் கடந்தோம்

ஒரு நிந்தனையில்லை.
செய்திகளாலும் மரணங்களாலும்
மட்டுமே அறியப்படும் நிலத்தை
காலப்புல் படர்ந்து மூடுகிறது.
மீட்சியிலா பனிச்சேற்றுள்
புதைந்தன எங்கள் பாதங்கள்

இழித்தொரு சொல்லும் எழுதேன்
எது உனக்குத் திருப்தி தரும்?
சமாதானப் பணியாளர்களின் வெளியேற்றம்?
ஆட்சியாளரின் கொடியேற்றம்?
போராளிகளின் பின்னடைவு?

வேலை சப்பித் துப்பிய
விடுமுறை நாட்களில்
சலித்த இசங்களையும்
அழகிய நாட்களையும்
பேசித் தீர்ந்த பொழுதில்
மதுவின் புளித்த வாசனையில்
மிதக்கவாரம்பிக்கிறது தாய்தேசம்
ஊறுகாயிலும் தொட்டுக்கொள்ள உகந்தது
எதிர் அரசியல்

நாற்காலிகளும் மௌனம் கலைத்த இந்நாளில்
உன் மூளைச்சலவை மிக நன்று
பேசு..

அவன்
விமானங்கள் சிதைத்துப்போன
தசைத்துணுக்குகளைப் பொறுக்குகிறான்
தலைகளையும் உடல்களையும்
சரிபார்த்துப் பொருத்துகிறான்
அவள்
இடம்பெயர்ந்து
சேலைத் திரை மறைவில்
இறுதி இழுபறிப்படும் கர்ப்பிணியின்
கைகளைப் பற்றியபடியிருக்கிறாள்
மேலும்
அவனும் அவளும்

எல்லைகளில் இறந்துபோகிறார்கள்
ஒரு புகைப்படமாய்...
தாயின் முகத்தில் கண்ணீர் துளியாய்
தோழர்களின் விழிகளில் கோபமாய்..
துயரம் ததும்பும் ஞாபகமாய்
உறைகிறான் உறைகிறாள்.

நீ பேசு நண்ப
பேசுவது எத்தகு இனிமையானது
சுலபமானதும்கூட

கற்றல்



போன வருட கூதிரில்
பிறந்திராத மிக்கி நாய்க்குட்டி
பல்கனியில் நின்று
மழையைக் கடிக்கிறது
ஒவ்வொரு துளியையும்
விளையாட வரச்சொல்லி
எம்பிக்குதிக்கிறது.
போதாதற்கு
அறுந்த தொலைபேசிக் கம்பியில்
நாக்கு வைத்து மின்னதிர்வினோடு
செல்லம் பொழிகிறது.

இனிவருமாண்டில்
மழையும் மின்னதிர்வும் பழகும்
அதுபாட்டில் அதனிடத்தில்
அரைக்கண் மூடும்


நனைந்தும் உலர்ந்தும்
நானும் நீயும்
ஏன் தான்?

கன்னியாகுமரி

கவிதைகளில்
தகதகத்த தங்கச்சூரியனைக்
காணப் போயிருந்தோம்
விடிகாலைத் துயிலொருநாள்
ஒறுக்க மறுத்த
விழிகளுடன் ஊடியெழுந்தோடிப் பார்த்தால்
கண்களைக் கழற்றி
கட்டிலில் வைத்துவிட்டு
விடுதியின் மொட்டைமாடியில்
அனைவரும் தயார் நிலையில்
செம்மஞ்சள் தங்கம்
உயர்கிறது உயர்கிறது
இந்தியா ஒளிர்கிறது
காமெராக் கண்கள் வழியே

ஊர்சுலா ராகவ் கவிதைகள்

முத்தம் தரும் ஓவியம்



என் ஓவியத்தை
உற்று நோக்கும்போது
ஒருமுறை
முத்தம் கொடுக்க முயலுங்கள்
ஒருவேளை அது
உயிர்பெற்று எழக்கூடும்
மேலும் ஓவியத்தை பக்கவாட்டில்
பார்க்க நேர்ந்தால்
மாலைநேரத்து
சூரியகாந்திப்பூவை போல கவிழ்ந்த
ஒரு எளிய விவசாயிக்கு
தன் மூதாதையின் விதைகளும்
பலகீனமான மனம் கொண்ட
முதிர் கன்னியொருத்திக்கு தற்காலிகமான நட்பும்
கையேந்தும் சிறார்களுக்கு
இனிப்பு ரொட்டிகளும்
பெரும் துக்கத்திருப்பவர்களுக்கு
மன அமைதியும்
நக்கும் நாய்களுக்கு ஒரு கறித்துண்டும்கூட
கிடைக்கலாம்.
ஒருவேளை அசிரத்தையாய்
அவ்வோவியத்தை காணாமல்
நீங்கள் கடக்கும்போது
இருட்டு சந்திலிருந்து
தலையைத் தாக்குவதுபோல
கூச்சலிட்டு பறந்துவரும்
கறுப்பு வவ்வால்களைக்
கண்டு திடுக்கிட நேரிடும்.

ஒன்றும் இரண்டும்

பூமி இரண்டாக பிரிந்த சமயம்
முன் பாதியில் ஆண்களும்
பின்பாதியில் பெண்களும்
பிரிந்திருந்தனர்
முதற்கட்டமாக
ஆண்களின் உழைப்பு மறைந்து
பெண்களின் உழைப்பு தொடங்கியது
அடர்ந்த மயிர் கற்றைகளோடு
ஒரு வாலில்லா குரங்கைப்போல்
ஆண்கள் அலைந்து திரியும் சமயம்
பின்பாதியில்

ஆடைகளற்ற பெண்கள்
உரத்த குரலெழுப்புகிறார்கள்
சந்ததிகளற்று ஆண்களும் பெண்களும்
தாம் கற்ற மொழிகளோடு
தற்கொலை செய்துகொள்கிறார்கள்.
சிலர் வக்கிரத்தன்மையோடு
ஒருவரையொருவர் சீண்டிக் கொள்கிறார்கள்
பின்
ஒரே நாள் மழையில் பெண்களும்
ஒரே நாள் வெயிலில் ஆண்களும்
மரித்துப் போயிக்கிறார்கள்
முன்பாதியில் நீண்ட நிலப்பரப்பும்
பின்பாதியில் ஆழ்கடலுமாய்
மாறிப்போன சமயம்
பிரிந்த பூமி ஒன்றாகிறது
கடலில் நீந்தும் அமீபா இரண்டாகிறது

சகிக்க முடியாத ஆண்

ஒரு கவிஞனுமான எனது தந்தை
சமூகம் விரும்பாதவனாகவும்
தன் சுதந்திரத்தை அடிமைப்படுத்தும்
பெண்களுக்கு கணவனாக இருப்பதாகவும்
தன் போதை நாட்களிடையே உளறுகிறார்
வெளியெங்கும் சொல்லாடல்களுக்கான
நபர்களை தேடிக் கொண்டிருக்குமவர்
மதுவோடு இறைச்சியையும்
காலி செய்தவாறு சில கவிதைகள்
கிடைத்த நாளில் மகிழ்வுடன் எங்களிலிருந்து வெளியேறுகிறார்
நள்ளிரவு விடுதிகளில் கைவிட்டுச் செல்பவரை
தனது புரவலர் என்று அறிமுகப்படுத்தும்
அவரைப் புரிந்துகொண்ட பெண்ணொருத்தி
மனைவியாகக் கிடைக்க வழியற்று
காலம் கடந்து போய்விட்டதாக புலம்பும் போது
யாராலும் சகிக்க முடியாது
இச்சைகளை கவிதையில் புணர்ந்து கொண்டும்
நமைச்சல்களை உறக்கத்தில் கீறிக்கொண்டும்
ஏறக்குறைய பரி நிர்வாணமாகிவிடுகிறார்
சில சமயம் தன் கவிதைகளுக்கு சில நாணயங்களை
பரிசாகக் கொண்டு இருப்பிடம் திரும்பும் அவர்
நள்ளிரவில் என்னை எழுப்பி நடனமாடுவார்
தன்னை ஒரு தந்தை இல்லையென்றும்
உன் தாயின் தோழன் அல்லது காதலன் என்றும்
பொய் சொல்வார்
கன்றாவிதான் ஒரு கவிஞன் தந்தையாய் இருப்பது

அறிதல் நிரந்தரம்

துப்பாக்கியில் இருந்து விடுப்பட்ட
குண்டின் வேகம் போல
ஒரே நொடியில் மரணம் ஏற்படுவதை
என்னால் ஒத்துக் கொள்ள முடியாது
ஆகாயத்தில் பருந்துகளின் நிழலையுணர்ந்து
வளையிலிருந்து வெளிவர முயலும்
எலியின் பயம் போன்றதொரு கணம்
அல்லது முதன்முதலாக இரைத்தேடச் செல்லும்
சிறிய பட்சியைப் போல
ஒரு சாலையைக் கடக்கும்போதோ
நீந்தும் போதோ
மரணத்தை மெல்ல உணரவேண்டும்
திடுக்கிட வைக்கும் ஒரு இசைப் பேரொலியின்
போது, இதயம் நின்றுவிடுமாயின்
மரணத்தை ஏன் அறிய வேண்டும்
ஒவ்வொருகணமும் ஏன் என்பது தான் கேள்வி.

விஸ்வநாதன் கணேசன் கவிதைகள்

ஒரு கேள்வியொன்றை
மரமொன்றில் உரசி
உரத்து சிரிக்கும்
கூட்டத்தைப் பொதித்து
வைத்திருக்கும்
படபடப் பறவைகள்
முகவரி தேடி அலைவது
ஒரு வேள்வி யென்று
வினவி அலையும்
வங்கப் பெருங்கடல்
கடத்தப்பட்ட கேள்விகள்
நுரைதள்ளி
ஒவ்வொரு தடவையும்
செத்துப்போயின
அதிலிருந்து பறவைகள்
விதை கொத்திச் சென்றன
வீழ்ந்தது உன்
நிலமாயிருக்கலாம்.

உன் சிரிப்பு இன்னும்
நினைவிலேயே நிற்கின்றது
உன் நினைப்பு ஓடுகின்றது
காற்றிழுத்து அமர்கின்றது
உடல் தகைத்து

நீர் நிலைகளை உறிஞ்சுகின்றது
சூரியனின் தகிப்பை
கைக்குட்டையால்
விரட்டி அடிக்கின்றது
மழை தருவிக்கின்ற தருணத்தில்
ஆனந்தக் கூத்தாடுகிறது
உன்னை வைத்து மீன் சுட்டவனை
இப்பெரு அலைச் சமூகத்திடம்
காட்டிக்கொடுக்கும் திட்டம்
நிலுவையில் இருக்கிறது.

கிரக வரலாறு

புளூட்டோ வென்று தன்னை
அறிமுகம் செய்து கொண்டான்
சிங்கப்புரியில் செய்தவனாம்
இருங்காட்டுக் கோட்டைக்
குண்டு குழிகளில்
நடந்தவாறு வானை மீட்டான்
எப்படி எனக் கேட்க வியலாது
வியந்து குடித்த அது
ஆகாசப் பாலாயிருக்கலாம்
பிரவாகமாய் வருவது
நதியோ?
கடலோ?
சிற்றோடையோ?
புளூட்டோ தன்னை
அறிமுகம் செய்து விட்டான்

ஏதோவொருக் குருத்தினையாவது
காதலிக்க முடியுமா
போலிப் புன்னகையின்றி
போலியென்று சொன்னதற்கு மன்னிப்பீர்களாக
பலசமையற் குறிப்புகளை
மதித்துப் பிண்டத் தின்னலை
உணவென்று சத்தியம் செய்தவாறு
போய்க்கொண்டே இருத்தலின்
மரண விக்கல்
கடைசித் துளி
ஒளித்துளிகள் திரிந்த
வெளி நிலம்
கால் கடுக்கத் திரிந்தேன்
காதலித்தேன்
நீயின்றி ஒரு கணமும் இல்லையென்கிறேன்

கொன்றாள் என்னை
நீலி சூலி
பின் இருள் செறிந்தாள்
சூரியனை நோக்கி

புலம் பெயர்ந்த மரம் ஒன்றினைத்
தாலாட்டிக் கொண்டிருக்கிறேன்
நிலம் எய்தலின் உண்மை
புரிந்து கொண்டது
இரகசியமாய் நிகழ்ந்த அற்புதத்தை
அடை காத்தது
வேலியே பயிரை மேய்தலின்
கனவு கண்டு பதறி எழுந்தது
சிரித்த படி வீழ்ந்தது
அச் சிறுமியின் காமக் காட்டினில்
புலம் பெயர்ந்த சூரியன்
புலம் பெயர்ந்ததே இல்லை

கார்மென் நாரான்ஜோ

தற்போது காஸ்டாரிகா (Costarica) வில் வசித்து வரும் கார்மென் நாரான்ஜோ 1931 ஆம் ஆண்டு பிறந்ததும் காஸ்டாரிகோவில்தான். நாவலாசிரியை, சிறுகதை எழுத்தாளர், கவிஞர் என்ற பல பரிமாணங்களில் தனது அரசியல் மற்றும் பெண்ணியக் கருத்துக்களைத் தந்திருப்பவர். ஏழு கவிதை தொகுப்புகள் வெளியிட்டுள்ளார். எனினும், இவர் பிரபலமாக அறியப்படுவது உரைநடை எழுத்துக்களாலேயே.

காஸ்டாரிகோ பல்கலைக்கழகத்தில் ஸ்பானிய தத்துவ இயலில் முதுகலைப் பட்டம் பெற்றவர் கார்மென். தேசிய மற்றும் உலகளாவிய பொதுத்துறை நிர்வாகங்களில், பதவி வகித்த காஸ்டாரிகோவின் ஒரு சில முதல் பெண்மணிகளில் இவர் முதன்மையானவர். 1972-74 காலங்களில் காஸ்டாரிகோ தலைமையின் நேருதவிச் செயலராகவும், 1974-76இல் இந்தியாவிற்கான வெளிநாட்டுத் தூதுவராகவும், மற்றும் காஸ்டாரிகோவின் கலாச்சாரத்துறை மந்திரியாகவும், பதவிகள் வகித்துள்ளார். 1978-1982ல் இளைஞர் நலத்துறை மற்றும் விளையாட்டுத்துறை மந்திரியாகவும் பதவி வகித்துள்ளார். EDCICA என்ற அமெரிக்க அமைப்பின் மேலாளராகவும் இருந்துள்ளார்.

அரசியல், சமுதாய, பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும் களங்களிலிருந்தும் பொறுப்புகளிலிருந்தும் பெரும்பாலும் பெண்கள் ஒதுக்கி வைக்கப்படுவது, பொதுச்சேவை மற்றும் ஆட்சி அதிகாரப் பணித்துறைகளில் பணி செய்தபோது தான் அறிந்து கொண்ட செய்திகள், மனிதன்பால் தனக்கு உள்ள அன்பு இவைகளே திரும்பத் திரும்ப இவரது படைப்புகளில் பேசப்படுகின்றன. பொதுவாக லத்தீன் அமெரிக்கா அசட்டை செய்யும், எல்லா மனிதர்களையும் சரி சமமாகப் பாவிக்கும் இன்றியமையாத அந்த மனோபாவத்தையும் கருத்தையும் தான் இவரது படைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. வெறும் நுகர்வோராக மட்டும் வாழ விரட்டப்படும் சமுதாயத்தையும், பொருளாதாரம் மட்டும் தேடும் சமுதாயத்தில் மனிதனின் தனிமை, விரக்தி இவற்றைப் பற்றியும் எழுதியுள்ளார் இவர்.

அதீதமான தனிமை மற்றும் சலிப்பு இவைகளுக்கு சரியான வடிகால் கற்பனைக் கனவே என்றும் குறிப்பிடுகிறார். இவை தொடர்பாக சொல்லப்படும் தன் படைப்புகளில் புதுமையான கதை சொல்லும் பாணியை பின்பற்றுகிறார். உரையாடல்களை வழிநடத்துவதான ஆசிரியத்தன்மையை புறக்கணித்து உரையாடல் போல அமையப்பெற்றிருக்கும் ஒரு புதுமையான, நுட்பமான வடிவத்தை தேர்ந்தெடுக்கிறார். இவரது மிகச் சிறிய புதினங்களில் காணப்படும் கவித்துவ நடைக்காகப் பெயர் பெற்றவர். புதுப்புது வார்த்தைகளை உருவாக்கும் திறன் பெற்றவர். இவருடைய சில படைப்புகள் ஆங்கிலம், கிரேக்க, ஹீப்ரு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய படைப்புகள்

Dairy of a Crowd (1974), The Dogs did not Bark (1966)

பல விருதுகளைப் பெற்றிருக்கும் கார்மென், சிலி நாட்டின் பெருமதிப்பிற்குரிய விருதான Gabriela Mistral விருதை 1996இல் பெற்றார். Santo Domingo பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் தந்ததுள்ளது. (1991)

காஸ்டாரிகோவின் மிகவும் வெற்றிகரமாக படைப்பாளியாகத் திகழும் இவர் பிறநாடுகளில் மிகக் குறைந்த கவனத்தையே பெற்றிருக்கிறார். இவரது சிறுகதைகளும் கவிதைகளும் அவற்றின் தகுதிக்கேற்ற கவனத்தைப் பெறவில்லை.

ஆணாதிக்கம், ஆண்மயமான ஒழுக்க மதிப்பீடுகள் ஆட்சி செய்யும் ஒரு சமுதாயத்தில் பெண்ணின்குரல் பற்றி தனது பெண் கதாபாத்திரங்கள் வாயிலாகப் பேசியவர். எனினும், தம்முடைய சுய அடையாளங்களைத் தீர்மானிக்க முடியாத நபர்களாவே முடிந்து போகின்றனர். தனிமையும் சலிப்பும் மட்டுமே பெண்வசம் மிஞ்சுகிறது. என்பதான இவரது பெண் கதாபாத்திரங்கள் உலகளாவிய முக்கியத்துவம் பெறுகின்றன.

விநோத படைப்புகள், கதைகள் மற்றும் விஞ்ஞானக் கதைகள் என்ற ரீதியில் Encounter தொகுக்கப்பட்டிருக்கும் தொகுப்புப் புத்தகங்களில் இவரது சிறுகதை Symbiotic இடம் பெற்றிருக்கிறது. பால் மாறுதல், பால் மாறி உணர்தல் என்பதான விவாதங்களிலும், இவருடைய இந்தச் சிறுகதை குறிப்பிட்டுப் பேசப்படுகிறது. A man is pregnant என்ற தலைப்பில் இந்தக் கதை குறித்து விவாதிக்கப்படுகிறது. A Magic and the real என்ற லத்தீன் அமெரிக்க பெண் படைப்பாளிகளின் சிறுகதை தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் இந்தக் கதை தற்போது தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

-ரெங்கநாயகி



நாங்கள் காதலர்களாக இருந்தோம். என் பெயர் அனா. அவன் பெயர் மானுவெல். நாங்கள் தற்செயலாகச் சந்தித்துக் கொள்ளவில்லை. யாரோ என்னைப் பற்றி மானுவெலிடம் சொல்லியிருந்தார்கள். என்னுடைய அசாதாரண வாழ்க்கை முறை பற்றி, மாறுபட்ட உலகம் பற்றிய என் கனவுகள், எப்படி இரவு நேரம் என் கண்களை விழித்திருக்கச் செய்யும், மேலும் எப்படி அது என்னை அழகாக்கும் என்பது பற்றி, எப்படி சில நேரங்களில் மிகக் குறைவாகப் பேசும் என்னை, மற்ற சில நேரங்களில் யாரையுமே வாயடைக்கச் செய்ய முடியாமல்போய்விடும் என்பது பற்றியும், உணர்ச்சி பொதிந்த முகங்கள் என்னை வியப்பில் ஆழ்த்துவதும், அதனால், மிக நீண்ட, முடிவுறாத தனி மொழிப்பாடல்களால் ஆன நாவல்கள் நான் எழுதுவது பற்றியும். அதே அந்த யாரோதான் மானுவெலைப் பற்றி என்னிடமும் கூறியிருந்தார். அவனுடைய அவலமான காதல் லீலைகள் பற்றி, அவன் தனிமை, சாதாரண, பொதுவான விஷயங்களுக்குக் கூட நரம்புத் தளர்ச்சியால் பாதிக்கப்பட்டவன போன்று உணர்ச்சி வசப்படும் பழக்கம் பற்றியும், அந்தத் தீராத நோவு ஒரு வியாதிக்காரனுக்குரிய சிடுசிடுப்பான தேய்த்துக் குறுக்கிக் கொண்டிருந்தது பற்றியும். பின்னாளில் அதே அந்த யாரோதான் ஒரு தற்செயலான சந்திப்புக்கும் ஏற்பாடு செய்தார்.

நான் முதலில் வந்துவிட்டேன் ஏதோ அடி பிறழ்வது போல் என்னை உணரச் செய்யும் அந்தப் பாழாய்ப் போன காலந்தவறாத பழக்கம்.

அவனும் வந்துவிட்டான் என்று எனக்குத் தெரிந்தது. குதூகலமாக ஹலோ சொல்லும் அவன் பாணியையும், குரலையும் தெரிந்து கொண்டேன். எட்டியிருந்து கொண்டு நம் கன்னங்களை நோக்கி சத்தமாய் முத்தமிடும், அல்லது; உணர்ச்சியற்று, ஒட்டாமல் உள்ளங்கையால் முதுகில் தட்டும், அல்லது ஆர்வமுற்று நம்மைத் தழுவும் நபர்களில் ஒருவன் அல்ல அவன்.

அந்தக்கூட்டம் முடிந்திருக்க வேண்டும் என்று நான் நினைத்த சமயம் அவனைப் பார்க்காமலேயே அவனுடன் பேசாமலேயே வெளியேறினேன் மற்ற சமாச்சாரங்களுடன், தடியான கருநிற காதணிகள் அணிந்து கொண்டால் எப்படி ஒருவர் தன் தோற்றச் சாயலை மேம்படுத்திக் காட்ட முடியும் என்பதான பல குறிப்புகளையும் பற்றி எந்தக் கூட்டத்தினரிடம் பேசினேனோ, அவனை நெருங்கியபடி நின்றிருந்த அந்தக் கூட்டத்தினரிடம் குட்பை சொல்லி விடைபெற்றேன். கதவுக்கருகிலிருந்து யாரே என்னை நோக்கிக்கத்தினார்கள். எல்லாம் ஆரம்பமாகிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் எப்படி நீ போகலாம்? அவனைப் பார்க்காமலேயே, எனக்கு வேறு வேலை இருக்கிறது என்று பதில் கூறிவிட்டு குட்பை சொன்னேன். பொழுதுபோக்கான சேளிக்கை கூட்டத்தில் ஆர்வமுடன் பங்கெடுத்துக் கொள்வதிலிருந்து விலகிக் கொள்ளும் பிரகிருதி என்கின்ற பெயரை நான் தக்க வைத்துக் கொண்டதற்காக சந்தோஷப்பட்டேன். மேலும், அத்தனை முன்னேற்பாடுகளுக்கிடையிலும் அவனை நான் அறிமுகம் செய்து கொள்ளாமலேயே இருந்தேன் என்பதை அந்த உரையாடல் வாயிலாக உறுதி செய்தேன். அவனை உனக்கு நான் அறிமுகம் செய்கிறேன். நீங்கள் இருவரும் இசைந்து போகக்கூடியவர்கள் என்பது பார்த்தாலே தெரிகிறது என்பதை நான் அறிவேன்.

தெருவில் இறங்கியதும் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டேன். அட. என்ன இன்பம். உரையாடல்களை விட தனிமொழியாடல், உணர்வுக் கிளர்ச்சியைவிட உணர்ச்சி, தேர்ந்தெடுக்கப்படுவதைவிட தேர்ந்தெடுப்பது - இவை உசிதமாகப்பட்டன. எனக்கு கிட்டத்தட்ட தெருமுனைக்கு நான் வந்தபின், என்னை

அவன் நிறுத்தினான். என்னை விலக்கித் தள்ளியிருப்பதிலேயே நீ முயன்று கொண்டிருந்தாய். ஆனால், உனக்காகத் தான் நான் வந்தேன். இந்த சந்தர்ப்பத்தை இழக்க நான் விரும்பவில்லை. இருவரும் ஒரு கோப்பை காபி குடிக்கலாமா?

நம்பிக்கை ஏற்படும் வகையிலும் ஆட்கொள்ளும் தன்மையிலும் இருந்தது அவன் குரல். வேறு வழியில்லை. முகத்துக்கு முகம் நேரே பார்த்தபடி அந்த உணவகத்தில் உட்கார்ந்திருந்தபோது எங்கள் பாதங்கள் தொட்டுக் கொண்டன. தினறடிக்கக்கூடிய ஏதோ ஒரு ஊக்கத்துடன் எதற்கோ, நிச்சயமாய், எதற்கோ நான் தயாரானேன் என்று உணர்ந்தேன். அவன் வாயைப் பார்த்தேன். வார்த்தைகளும் பிறகு முத்தங்களும் ஒன்றாக வழிந்தன. சிகரெட் மற்றும் காப்பி மணத்துடன் அவன் என்னை முத்தமிட்டான். மேஜை முனை என் இடையை வேதனைப்படுத்தும் வரை நான் அவனை முத்தமிட்டேன்.

கைகளை கோர்த்துக் கொண்டும், எடுத்து வைத்த ஒவ்வொரு காலடிக்கும் முத்தமிட்டுக் கொண்டும் என் இருப்பிடம் வரும் வரை நாங்கள் நடந்தோம். பகல் இரவு வித்யாசம் பாராட்ட முடியாதபடி படுக்கையில் சிந்திய பொருக்குகளாலும், இறைச்சியோ பீர் வகையோ அடைத்து வைக்கப்பட்டிருக்கும் குவளைகளிலிருந்து வந்த வாடையும் அலுத்துப் போகும் வரையிலும், முதலில் நாங்கள் காதிலேயே போட்டுக் கொள்ளாத ஆனால், இறுதியில் காதில் அறைவது போல ஆட்டிப்படைத்த தொலைபேசியின் குரலுக்கு பதில் சொல்லவேண்டிய தேவை ஏற்படும் வரையிலும் நாங்கள் ஒரு வார காலம் அங்கேயே கழித்தோம்.

நான் உன்னை நேசித்தேன், இன்னமும் நான் உன்னை நேசிக்கிறேன் மானுவெல். அதை நீ புரிந்து கொள்ள வேண்டும். மனித உறவுகளின் ஒரு பகுதியான பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளப்படும் வேறுபாடுகளின் இயல்பான விளைவாக, சந்தேகமில்லை, எல்லாமே மாறிவிட்டன. எல்லா ஒப்பந்தங்களும் ஒரு முடிவுக்கு வந்து ஞாபகத்தில் நிழலாடுகின்றன.


வார இறுதிகளில் மட்டும் என்று எங்கள் சந்திப்பைக் குறைத்துக் கொள்ள ஆரம்பித்தோம். ஏதோ நீண்ட நாள் பசியுடன் இருந்ததைப் போல, முதலில் எல்லாம் பேருவப்பு மிக்கதாய் இருந்தன. பிறகு, அவை சாதாரண அன்றாட நிகழ்வாகவும், முன்னிலும் குறைந்த கால அளவு நீடிக்க, பிறகு, ஏற்கனவே தீர்மானித்திருந்த ஒன்று என்ற காரணத்தினால் கிட்டத்தட்ட மிகச் சாதாரணமான ஒன்றாக ஆகியிருந்தன, இறுதியில் போகட்டும், இந்த வார இறுதியில் நாம் என்ன செய்யப் போகிறோம்?

எல்லா சாத்தியங்களையும் நாங்கள் தீர்த்துவிட்டிருந்தோம். எதிர்பாரா அதிர்ச்சி, வலுக்கட்டாயமான பிரிவு, கவர்ந்திழுத்தல், கோமாளித்தனம், போலி நடிப்பு, பொறாமை, ஒருவர் மீது ஒருவர் கொண்டிருக்கும் உண்மை ஒழுக்கம் பற்றிய சந்தேகம், போட்டி காதல் நபரை உடன் அழைத்து வருவது கூட.

நாம் எதைப் பற்றிப் பேசினோம் என்று உனக்கு ஞாபகமிருக்கும். நாம் எப்படி நேர்மையாக இருக்கிறோம், எப்படி சந்தோஷமாய்,அதிர்ஷ்டசாலிகளாக இருக்கிறோம், மற்றும் நம்ப முடியாத நமது குண ஒற்றுமை பற்றி, மற்றவர்களிடமிருந்து நாம் எப்படி மாறுபட்டு இருக்கிறோம் என்பது பற்றி, நமக்கே உரியதாகவும், நம்மைப்பற்றிச் சொல்லக்கூடியதுமான ஒரு தனிச்சிறப்பான உலகம் நமக்கு வேண்டியிருந்தது பற்றி, சரியான மாற்றங்களை நாம் ஏற்படுத்தினோம். உடோபியா என்பது நம் கைக்கெட்டும் தொலைவில்தான் இருக்கிறது என்று நாம் நம்பியதால், மற்ற எவருமே நமது சித்தாந்தங்களை புரிந்து கொள்ளாதது பற்றி. என நாம் எப்போதுமே நம்மைப் பற்றியேதான் பேசினோம். இலக்கியத்தை பொறுத்தவரை நம் கவனத்தை முழுவதும் கவர்ந்தது விநோதமும், எதிர்பாராதவையுமே.

ஒரு நாள், ஒரு நண்பர் மானுவெலின் கண்களின் நிறம் பற்றி என்னிடம் கேட்டார். மங்கலான, வெளுத்த நீல நிறமாகவும், அழகாகவும், தீர்க்கமான, உணர்ச்சிப்பூர்வமான கண்கள் அவை என்று உடனே பதில் சொன்னேன். ஆனால் என் பதிலில் சற்று தெளிவில்லாமல் இருந்தேன். சில சமயங்களில் அவை கிட்டதட்ட பச்சை நிறத்தில் இருந்தன. ஏகமாய் மலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது, நீல நிறம் பச்சை நிறமாக மாறுவதுண்டு. அவன் கண்களின் நிறம் எனக்குத் தெரியவில்லை என்ற உண்மையால் நான் அதிர்ச்சியடைந்தேன். கண்ணோடு கண் அவனை நான் நிஜமாகவே இதுவரை பார்த்ததேயில்லை. எங்கள் ஸ்பரிசங்கள் ஒரு மூடுபனியான உலகத்தில் எங்களை தொலைக்கச் செய்திருந்தன.

அந்த சமயங்களில், இந்த உறவுக்கு இருவரில் யார் அதிக பங்கு தருகிறார்கள் என்று வாதாடுவோம். வசதிகளுடனான இருப்பிடம், அதற்கான வாடகை, மின்சாரம் மற்றும் தொலைபேசி வசதி என்ற இவைகள் சார்பற்ற என் சுதந்திரத்தை உறுதிப்படுத்துபவை என்று நான் கூறுவேன். மதிய உணவுகள், வோட்கா, சிகரெட், எரிவாயு மற்றும் வெளியிடங்களில் சாப்பிடும் கொசுறுத் தீனிகள் போக, அவனிடம் மிஞ்சியிருப்பவை வெறும் சில்லறைக் காசுகளே, அவை கூட, டிப்ஸ் தர வேண்டியிருந்ததால் காணாமல் போய்விடும் என்று திட்டவட்டமாய்க் கூறுவான்.



இப்படியே போகக்கூடாது. இது போன்ற மோசமான நிலையை நான் அடைந்ததே இல்லை. இலவசமான தங் குமிடம், பெண் பேச்சு என்று இருந்துவிட்டு - என்ன, ஏதோ ஒத்திக்கு அல்லது அடமானம் வைத்திருக்கும் ஆள் போலவா ஒருவன் எனக்குக் கிடைத்தான்? கடவுளுக்குத் தோத்திரம்! அவனது குற்றமற்ற, உண்மையான உதவிகளுக்கு, குலுக்கலில் நான் வெல்வது கழிக்கப்பட்ட குப்பைக் கூளங்களே.

எளிமை மற்றும் சிக்கனம் பற்றி, எதுவுமே தெரியாதவள் நான் என்று நீ கூறினாய். அப்படித்தான் நான், மொத்தத்தில் ஒரு ஊதாரி. மூத்திரத்தை அடக்கிக் கொள்வது மாதிரியான பைத்தியக்காரத்தனமான சேமிப்பு பற்றி உண்மையாகவே

---

1. ஒருவகைச் செடி. இதன் காய்கள் உணவாகவும், மருந்தாகவும், பானமாகவும், பயன்படுத்தப்படுகின்றன. கிட்டதட்ட மிளகு போல மருத்துவத் தன்மையும் கொண்டது.
2. சோளம் மற்றும் கோதுமை மாவினால் செய்யப்படும் பணியாரம் அடை போன்ற தின்பண்டம். இதனைக் கொண்டு சூப் மற்றும் பானமும் தயாரிக்கலாம்.

எனக்குப் புரியவில்லை. ஜீரணித்துவிட்ட ஒன்றை மறுபடியும் மென்று கொண்டிருக்கும்படியான சாயல் விதைக்காமலும் அறுவடை செய்யாமலும் உன் பணத்தை இரட்டிப்பாக்கலாம் என்று போதனை செய்வதன் பலன் போலாகும் இது

என்ன விநோதங்கள்? எங்களுக்குள் உன்னைத் தெளிவாக நான் பார்த்தேன் என்னதன் மேல் உன் கண்கள். ஆமாம், உன்னுடையவை என்னதன்மேல், தீர்க்கமாய ஆர்வமாய் எவ்வளவு நேரம் நாம் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தோம என்று எனக்குத் தெரியவில்லை. அந்த நிறத்தைக் கண்டுபிடித்தேன். எல்லாவற்றையும் பிரதிபலித்து, மாற்றும் தன்மையுடைய ஒரு பழுப்பு மஞ்சள், உணர்ச்சிப் பூர்வமான பார்வைகளின் இழுப்பு, பார்வையில் பட்ட அத்தனையையும் உறைய வைக்கக்கூடிய ஒரு உன்னதமான குளிர்ச்சி. சேமிப்பு என்று வந்து, வீண் செலவுகளுக்காக வசைபாடிக் கொண்டு, ஏகப்பட்ட விளக்கங்கள், விளக்கங்களினாலேயே ஒருவர் முழுவதுமாக மாட்டிக்கொள்கிறார். இனிமை, வியப்பு, கண்டனம் மற்றும் மனக்கசப்பு இவையாவும் பட்டியலிடப்படும் படியாக எங்கள் கண்களின் வழி ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தோம், நாங்கள். அதுதான் நாங்கள் கடைசிமுறையாக உறவு கொண்டது. முடிவில், எங்கள் தீர்க்கமான, ஊடுருவலான கண்களை நாங்கள் வேறுபுறம் திருப்பிய பொழுது, கடந்து, முடிந்துவிட்ட புணர்ச்சிப் பரவச நிலையில், வியர்வையுடன் நாங்கள் நடுங்கிக்கொண்டிருந்தோம்.

அற்ப விஷயங்களுக்காக சேறு வாரி இறைத்துக்கொள்ளும் சலிப்பூட்டுதலைச சொல்லும் வகையில் திரும்பப் பெற்றேன் என் குரலை. மன்னிப்பு வேண்டிக் கெஞ்சினான் அவன், இதுபோல் இனி எப்போம் நடக்காது, எனக்குக் கசப்பான விஷயங்களே இன்று நடந்தன. பிறகு எல்லாம் மாறிவிடும். ஏனெனில், ஒருவரையொருவர் பிரிந்திருப்பதும், இழந்திருப்பதும் மனித உறவுக்கு ஒரு நிஜமான சாரத்தைத் தரும். அந்த வாரம் கழிந்ததும், அவனுடைய அழுக்குத்துணிமணிகள், சூட்கேஸ் மற்றம் போதையின் மிச்சம் மீதியுடனும், மூச்சுக் காற்றின் கெட்டவாடை சகிதம் வந்து சேர்ந்தான் அவன். நோய்வாய்ப்பட்டான். எப்படியோ நான் அவனை இழந்திருந்தேன். என்னால் உண்மையும் சொல்ல முடியவில்லை, பொய்யும் கூற முடியவில்லை. அதனால் வாயை மூடிக் கொண்டேன்.

எங்களுக்கான தனித்தனி மூலைகளில் ஒடுங்கினோம். அவரவர் அவரவரது இடங்களில், ஒன்றுக்கொன்று அளவெடுத்துக் கொண்டு, ஏற இறங்கப் பார்த்துக் கொண்டு கிடக்கும் மிருகங்கள் போல. இரவில் அவன் வாந்தியெடுக்கும் சத்தம் கேட்டேன். எதையும் அவனால் ஜீரணம் செய்து கொள்ள முடியவில்லை. கொடிமுந்திரிப் பழங்களை சாப்பிட ஆரம்பித்தான், அதனால், குளியலறையிலும், கழிப்பறை இருக்கை முழுவதிலும் அரைக்குறையாய் ஜீரணிக்கப்பட்ட கொடி முந்திரிகள் அலங்காரமாய் இருந்தன. கொய்யாப்பழம், குபா[1], டார்டில்லா[2] மற்றும் வறுத்த பீன்ஸ், பாலாடைக் கட்டியுடன் கோதுமையில் செய்த இனிப்புப் பண்டங்கள், மற்றும் பீட்ஸா வகைகள் என்று எதைச் சாப்பிட்டாலும் இதே விளைவுதான் அவனிடம் இருந்தது.

சின்ன விஷயங்களை பெரிதுபடுத்தல், சில பாவனை நடிப்புகள், பெண் தன்மையுடனான பெருகிப் போன அவனது பலவிதமான சிறுபிள்ளைத் தனங்களை நான் வெறுக்க ஆரம்பித்தேன்.

அவன் ஒல்லியாக இருந்ததால் வளர்ந்து கொண்டிருந்த மார்பகங்களையும், ஊதிப் பெருத்துக் கொண்டிருந்த அடிவயிற்றையும் கண்டு வியப்படைந்தான். ஆறு மாதங்கள் கழித்து ஒரு ஆண்மகனை கற்பனை கூட செய்து பார்க்க முடியாதபடியான கோரமான தேகத்துடன், குழப்பமான என் மானுவெல்! பாவம், கிட்டதட்ட கூர்ந்து முன் தள்ளியிருக்கும் பெரிய வயிறு, தொங்கிப் போன மார்பகங்கள், கன்னம்

மறைத்துக் கொள்ள கவிந்து, கூன் போட்டுக்கொண்டு, சோர்வாக நடக்கும் பாணி அவனது காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு மற்றும் பேச்சு என்று அவனை இடையூறு செய்து கொண்டேயிருந்தது விடாப்பிடியான குமட்டல் வேறு.

ஒரு மருத்துவரை பார்க்கலாம் என்று நான் யோசனை கூறினேன். பாவம் அவன், வெளியே செல்வதற்கு விருப்பம் இல்லாமல் இருந்தான். வேறு எந்த வேலையும் செய்யாமல், ஓயாமல் கைப்பின்னல் மட்டும் செய்து கொண்டேயிருந்தான். அவனுக்கு குறைந்த இரத்த அழுத்தம் இருந்ததால் அது அவனை பயங்கரமாய் நடுங்க வைத்துக்கொண்டேயிருந்தது. வேறு எதனாலும் அவனை கதகதப்பாக வைத்திருக்க இயலவில்லை. ஆக, ஸ்கார்ப், ஸ்வெட்டர் என்று பின்னிக் கொண்டிருந்தான்.

அவன் முரண்டு பிடித்ததனால் அவனுடைய தனிப்பட்ட பழக்க வழக்கங்களை நான் பொறுத்துக்கொண்டேன். அவனுடைய சின்னச்சின்ன சமாச்சாரங்கள், பேச்சுகள் என்று எல்லாமே குமுறியெழுந்து ஒரே விஷயத்துடன் முடிந்து போகும். நான் இறந்து கொண்டிருக்கிறேன். நான் இனி எதற்கும் பிரயோசனம் இல்லாதவன். பிஞ்சில் பழுப்பதுபோல இளமையிலேயே முதுமையை கொண்டுவிட்ட ஒரு நிலை இது.

அவன் உடலுறவில் ஈடுபட முயற்சி செய்தான். ஆனால் அதை தாங்கிக்கொள்ள முடியவில்லை என்னால். என்னைத் தொடுவதற்கு வந்தால், அவன் கைகளை தட்டி விட்டுவிட்டு, அது திடீரென என்னை வேறு வகையான ஒரு உணர்ச்சியில் பிடிக்கிறது என்று கூறினேன். பிறகு, நானும் கூட வாந்தியெடுக்க ஆரம்பித்தேன்.

நாங்கள் மருத்துவரிடம் சென்றோம், அவனை நிர்வாணமாக்கி, அடி வயிற்றின் அசைவுகளையும், கசக்கிய போது ஒருவித திரவம் அவன் மார்பகங்களிலிருந்து வழிந்ததையும் சோதித்த பின்னர், நாங்கள் ஒருவருக்கொருவர் உடைமாற்றி அணிபவர்களா என்று அவர் கேட்டார் நாங்கள் அப்படி இல்லை என்று நான் அவரிடம் கூறினேன். இன்னும் அந்த அளவுக்கு வரவில்லை இது பிறகு, குழந்தை நன்றாக இருக்கிறது. சிசேரியன் முறையில் பிரசவம் டிசம்பரில் நடக்கலாம். மேலும் தனிப்பட்ட முறையில் ஒரு ஆராய்ச்சி செய்வதற்கான உரிமைகளை நீங்கள் எனக்கு கொடுத்தால், உங்களிடம் வேறு கட்டணம் வசூலிக்க மாட்டேன் என்று பதில் சொன்னார் அவர்.

நானா? மானுவெலுடைய குழந்தையின் அம்மாவா? இல்லை, அவனுடைய குழந்தையின் அப்பாவா? அப்படி இருக்க முடியாது. இருவருமே அதை எதிர்க்க முடிவு செய்தோம், ஏனெனில், இதுவரை கேள்விப்பட்டிராத ஒன்றாக இருந்தது மட்டுமில்லாமல் இது கேலிக்குரிய ஒன்றாகவும் இருந்தது. மேலும், தெரிந்தவர், தெரியாதவர் என்ற பாகுபாடே இல்லாமல் நாங்கள் இருவருமே கேலிப்பொருளகளாக ஆகிவிடுவோம். ஒரு பொதுவான ஒப்பந்தத்தின் பேரில், நாங்கள் இருவருமே கருச்சிதைவை சிபாரிசு செய்தோம். ஆனால், மானுவெலின் நிலையில் அப்படிச் செய்வது தற்கொலைக்குச் சமம். அந்த குழந்தையைப் பொருத்தமட்டில் அது ஒரு கொலைக்குச் சமம் என்று அந்த மருத்துவர் கூறினார். மேலும் மீதி இருக்கும் நான் மட்டுமே இந்த இரண்டு பின்விளைவுகளுக்கும் பொறுப்பாகிவிடுவேன் என்றும் கூறினார். சும்மா சர்வ சாதாரணமாக ஒரு குழந்தை என்பது வராது, மூலக்காரணியாய அதில் நான் பெரும் பங்காற்றியிருந்தேன்.

யோசிப்பதற்கு நாங்கள் கால அவகாசம் கேட்டோம். எங்கள் பிறப்புறுப்புகள், நாங்கள் முயற்சித்து ஏற்றுக்கொண்ட பலவகையான உறவு நிலைகள், மனோபாவங்கள், நாங்கள் விளையாடிய விளையாட்டுகள் என எங்கள்

செயல்பாடுகளை நுண்மையாய் ஆராய்ந்தோம். இயற்கைத்தன்மை மீறிய, நம்பத்தகாத எங்களுடைய இந்த சூழ்நிலையை விளக்குவது போன்று எந்த ஒன்றும் அவற்றில் இல்லை பில்லி சூன்யமா? இருக்கலாம், ஒருவேளை நமக்கு அதில் நம்பிக்கை இல்லை என்றாலும், அதற்கான சாத்தியம் இருக்கிறது எப்போதுமே. இந்த உணர்வு மேலும் மேலும் தெளிவாகிக் கொண்டு வந்தது. ஒருவருக்கொருவர் ஆடையின்றி வெளிப்பட்டிருந்த எங்கள் நிர்வாணத்தை வெளிப்படுத்தியிருந்த அந்தக் கண்ணழற்சியில் வீக்கங்கண்ட புணர்ச்சிப் பரவச நிலை - அதில் அப்பட்டமாகப் பதிந்திருந்தது அந்த உண்மை. மேலும், ஏதோ ஒரு பயங்கரமான பேய் கெட்ட நோக்கத்துடன், இருபாலாரின் பால்வேறுபட்டுத் தன்மையால் இயல்பாய ஒழுங்குவகை செய்யப்பட்டிருந்த முறைமையை சீர்குலைந்திருந்தது.

நம்ப முடியாத நிகழ்வுகள் பற்றியும், (எங்களுக்கு பிரயோசனமாக இருந்ததோ இல்லையோ இது மாதிரியான விஷயங்கள் பற்றிய தகவல் அறிவில் நாங்கள் திறமைசாலிகளாக ஆனோம்). விநோதமான கோட்பாடுகள் பற்றி நூலகத்தில் விசாரித்துக் கொண்டும், சலிப்புத் தட்டும் வரையில் திரும்பத் திரும்ப அதைப்பற்றி மனதில் புகைந்து கொண்டிருந்தபின், அறிமுகமில்லாதவர்களுக்கு மட்டும் வேடிக்கை காட்டும்படியாக அமையும் ஒரு வகையில் அந்த வரம்பை மீறிச் செல்ல நாங்கள் முடிவு செய்தோம்.

அந்தப் பயணத்தின்போது அவன் ஏதாவது புகார் செய்தானா? சரியான நச்சரிப்பு அவன். கிட்டதட்ட ஒன்பது மாதங்கள் முடிந்திருந்த நிலைமையில் எந்த இடத்திலும் அவன் சரிப்பட்டு வரவில்லை. முன்பெல்லாம் அவனை வெறுத்தேன் என்றால், இப்போது அவன் ஒழிந்தால் தேவலை என்றே விரும்பினேன். கார் கதவைத் திறந்து ஒரு ஆளரவமற்ற நெடுஞ்சாலைப் பரப்பில் அவனை வெளியே தள்ளிட வேண்டும் போல சில சமயம் நான் உந்தப்பட்டேன்.

ஒரு வழியாய் நாங்கள் வந்து சேர்ந்தோம். அவனால் எவ்வளவு தூரம் சமாளிக்க முடியுமோ சமாளிக்கட்டும் என்று மருத்துவமனை வாசலில் அவனை விட்டு விட்டேன். மறுநாள் மற்ற பார்வையாளர்களுடன் நான் வரிசையில் இருந்தேன். பிரசவ அறையிருக்கும் வார்டை வேண்டா வெறுப்பாக அணுகினேன். மானுவெலை ஆமாம், அந்த கண்டறாவி, தான்தோன்றி மானுவெல்தான், பற்றி விசாரித்தேன். அவனைப் பற்றி யாருக்கும் எதுவும் சொல்ல முடியவில்லை. கர்ப்பமுற்ற ஒரு ஆண்பிள்ளைக்கு அந்த மருத்துவமனையில் யாரும் வைத்தியம் செய்திருக்கவில்லை. பார்கள், தனியார் மருத்துவமனைகள், தங்குமிடங்கள், ஹோட்டல்கள், கல்லறை, பிணங்களை அடுக்கி வைக்கும்இடம் என்று எல்லா இடங்களிலும் நான் அவனைத் தேடினேன். நம்பிக்கையிழந்தேன். என்ன இருந்தாலும் அது என் குழந்தை. அந்த என் குழந்தை என்பது கம்மிய குரலில் வெளிப்பட்டது. நான் பேசும் போது எனக்கு மீசை இருப்பது போல உணர ஆரம்பித்தேன். கிழவிகள், நாட்டு வைத்தியர்கள் மற்றும் போலி வைத்தியர்கள் என்றெல்லாம் சென்று பார்த்தேன். என் குழந்தை திருடு போய்விட்டது என்பதை தீர்மானமாய் நான் நம்பினேன். இதைக்கூட காற்றில் ஆடிய தாடியின் சுமையையணர்ந்தபடியே ஆண்குரலில் பாடுபவரின் குரலில் கூறினேன்.

வஞ்சனையாய் ஏமாற்றப்பட்ட ஒரு தந்தையின் அடையாளங்களை தெளிவாகக் காட்டிக் கொண்டு என் தங்குமிடத்திற்குத் திரும்பினேன். அந்தத் தனிமை அதீதமாயிருந்தது. ஏனெனில் நான் உருச்சிதைவு அடைந்து குறையுடலானது போல உணர்ந்தேன். யாரோ என்னுடைய ஒரு பகுதியைச் சுமந்து கொண்டு எங்கோ நடந்து கொண்டிருந்தார். இப்பொதெல்லாம் ஒரு நாளைக்கு இரண்டு முறை மழிக்கத் தேவைப்படும் இந்த ரேஸர் தண்டனைக்குரியதாய் அமைந்தத என் முகத்தைப் போல - அந்த தனிமையில் நான் இறுகிப் போனேன்.

செந்தமிழ் மாரி கவிதைகள்

விரகம்



தாயின் மடிவிரும்பும்
பச்சைப் பாலகனாய்
நேர் நின்று கதறும்

தீக்குச்சிகளின் முகடுகளில் எழும்பும்
புகைமூட்டல்கள்
பற்றிக்கொள்ள
காகித அடுக்குகளைத்
தீவிரமாய்த் தேடியலைந்து
சுவை மொட்டுக்களின் நுனி நகங்களில்
வலியணிந்து கொள்கிறது.

வசீகரிக்கத் தெரியாது
தவிக்கும் துல்லிய இடைவெளிகளை
நடுங்கும் நாகங்களாகிக் கொத்துகிறது.
விஷம் தோய்ந்த அம்புகள்

கொத்தல்களில் மரணிக்கும்
கடும்புனல் தாபம்
விதவையிடம் அகப்பட்ட
சரமல்லிகையென
நெஞ்சைப் பிளந்து
உதிர்ந்து ஓய்கிறது
அக்கணம்

தாகம்

அறியாதிருந்தபோது
இரட்டையாகித் தடித்துத் துப்பும்
அரும்பெரும் சாதனைகளென
தன்னினும் எளியோரிடம்

வறட்சியை நீவிக்கொள்ள
ஒரு துளி நீருக்காய்

வானம் வசப்படும்
வரம் ஒன்று கேட்டுத் தவிதவிக்கும்
நாவு இப்போது

தீர்க்கும் வழி யாதொன்றும்
அறியாது குழறி
சேறால் நிரம்பிய குட்டைகளிடமும்

தார்கிக்கிறது
மானுட பேதங்களை மடலவிழ்த்து

தண்மைக்காய் இச்சைமிகும்
நாவுகள்
திவலைகளைச் சட்டென
உயிர்ப்பித்துக் கொள்கிறது
உடலெங்கும் தளிர்த்துப்பூத்து

அந்த நிலவும்தான்
கடலிடம் கையேந்திக் காத்திருக்கிறது
பல காலமாய்
உப்புநீர் அகற்றி
தன் தாகம் தீர்ப்பது பற்றிய
அத்தனை வரையறைகளோடும்

கனவு திறக்கும் வெளி

இரவுகளில்
யாசித்துப் புசித்துக் கொள்கின்றன
அக்கனவுகள்
என்னை

அதற்கு இரையாகாதவாறு
இரவுகள் அரும்பும்தோறும்
இறுக்கிப் போர்த்துகிறது
கைகளும் நினைவுகளும்

எனினும்
கண்களின் இடைவெளிகளில்
மறைந்து கொண்டிருந்தனவாம் அவை

என்மீது இறங்கி நடக்க
ஒற்றையாய் கவிந்திறங்கும் இரவுக்கு
அக்கனவு
கைத்தடியென மாறிக் காலூன்றுகிறதாம்.

யதார்த்தம் வழியும் பேழைகளிலிருந்து விடுபட்டு
வேட்கையோடு திரிந்து பறந்து
பட்டாம்பூச்சியின் சிறகை
வாங்கிய அவை
நான் துஞ்சாப் பகல்களில்
அறையெங்கும்
அலையடித்துக் காத்திருந்தன
சுவர்ப் பல்லிகளாகி

ஒற்றையாய்ப் பயணிக்கிறேன் - இரவை
எனும் தோறும்
அந்தர விழிப்பின் துகிலுரிக்கும்
திடுக்கிடலைத் துடைத்து தூர வீசி
எனக்கான வெளியை
நிரப்புகிறது
என் கனவுகள்.

நகரங்களின் நாட்குறிப்புகள்

நுண்தோல் வேய்ந்த
உடல்களின் துவாரங்களில் இடம்பிடித்து
வினாடிகள்தோறும்
பிரசவித்துக்கொண்டிருக்கின்றன
புகை கக்கிகளை

கடலின் அலைகள்
விரும்பி அழித்துக்கொண்டிருக்கின்றன
காதலியின் கால்தடமெனக்
கரைகளை முகர்ந்து

பச்சை உடுத்திய
இயற்கையவளின் விழியகற்றி
காட்சி மறைத்து
கடைவிரித்துக்கொள்கின்றன
அடுக்கிய பெட்டிகளென
குடிசார்புகள்

அவர்களாலும் எழுதப்படாத
வாக்கியங்கள்
நெஞ்சகம் தோறும்
அடைத்துக்கொள்கின்றன
மணலென உதிர்ந்து
நீள்சரமெனச் சுற்றும்
போலிமை பரிவர்த்தனைகளை



முத்தங்கள்

முத்தங்கள் ஆழ்த்தும் கணம்
முடிவற்று இருக்கிறது
என் வெளி

பறவைகளென அவை
என்னைச் சலிக்கையில்
வேரறுந்து நிற்கிறது
ஒரு தோணி

தீண்ட முடியாதபோது
நினைத்த முத்தங்களின் சுவைகள்
கூடற்றுத் திரிகின்றன
புவியில்
குழந்தை முகம்தேடியும்

வாசனை வேண்டி அது
துரத்துகையில்
நானோர் இதழ்களற்ற
ரோஜாவைப் போல்
உதிர்கிறேன்.

பின்தொடரும் அவர்கள்

நான் அவர்களிடம் இல்லை
நான் விடுபடும்தோறும்
வண்ணத்துப் பூச்சியின்
எல்லைகளற்ற வெளியில்லாது
காற்றாடிக்காரர்கள் ஆகிறார்கள்
நழுவி விழும்போதும்
எனைத் தூக்கி நிறுத்தும்
எழுத்துக்கள் அல்ல அவர்கள்
இடறிவிடும்
கபடமேறிய கூர்கற்கள்

நானும் அவர்களாகிறேன்
ஒருபோது
நானாகிறார்கள் அவர்கள்
சிலபோது

இப்போது
அடுத்த வாழிடம்

திரும்பிப் பார்க்கிறேன்
அவர்கள் தொலைந்து
அவர்களேயாகிறார்கள்.





ஒரு காட்டுச் செடியின் ஆயுதம்

ஒரு காட்டுச் செடியை
என் தோட்டத்திற்கு விற்றாள் ஒருத்தி
என்றாலும் ஒரு காட்டுச் செடியாகவே உணரப்பட்டது
அதன் பருவங்களும் பொழுதுகளும்
எனதுடலுக்குள் நுழைந்து
தலைநிமிர்ந்து விட்டேன்
மஞ்சரியின் மேலுறையும்
சாயும் வண்ணம் பூத்து
தத்தாரித்தனத்தின் உச்சமாய்
கட்டுத்தெறித்த உடல்வாகு
பகலின் வெண்மாலையை அணியுந்தோறும்
சிவந்து வெளிக்காட்டும் தளிர்முகம்
புடவையின் வண்ணங்கள்
கலைந்துதிர்ந்து மீண்டும் வரிந்து
பல்லாயிரம் முலைகளும்
தாராளமாய் நீளும் கரங்களுமுடைய
ஒரு விரிந்த மரமாகும்
ஆன்மாவின் உறங்கும் மௌனம்
வந்து அடைந்த பறவையின் சிறகசைவுகளாய்
விழித்து உலகைக் காணும்
காலப்பெருவெளியின் ஊதைக் காற்றில் நடந்தேக
மெல்லிலைகளை விடுவிக்கும் கணுக்கள்தோறும்
முளைத்திருக்கும்
உதிர்க்கமுடியா தொரு முள்ளும்
இன்று எனதுடல்
எல்லைகளற்ற ஒரு பெருங்காடு

அதிகாலை

எங்கெங்கும் விரிந்திருந்த அதிகாலையாய்
காலம்
அதன் மெலிந்த கிளையில்
வந்தமர்ந்த காகம்
கத்திக் கத்திக் கதறி
விழுங்கியது காலையை
அப்பொழுது காலமென்று எதுமில்லை
காலத்தை அதிகாலையாய் விழுங்கிய
காகம் மட்டும்
எங்கெங்கும் காகங்களும் கதறல்களும்

அணில்

விழுந்துவிடாமல் திசைகளின் கரங்களினைப்
பற்றிக்கொள்ளத் தவித்து
தென்னையின் இடுப்பைத் தொற்றியிருக்கும்
அணிலுக்கு
அதன் மேடு ஒரு சுழலும் பூமியாகிறது.

வீண்பொழுது

இருந்திருந்து
இன்றுதான் உன்னைத்தேட இயன்றது
பெருவெளியில்
உன்னிரு கண்களும்
கோள்களாகி இயக்கும் நம் பால்வெளியை
உன் நகை மொத்தமும் அக்கண்களுக்குள்
கொப்பளிக்க
மண்மயங்காமல் எகிறிக்குதிக்கின்றன
என்பொழுதுகள்
வீணே என்றாலும்

பிரசவம்

நீர்ப்பாத்தியில் நிழலேதும் வேண்டாது
தாவரஇச்சையின் மிடுக்குடன் எழும்
கவர்ச்சியில் திரண்ட வாழை
குலைதள்ளும் நாளில்
வெட்டிச் சாய்த்த உமது அரிவாள்
தோலுரித்தது
உடல் கிழித்தது
காலைச் சுற்றிலும்
கனுக்கால் உயரத்தில்
மறுமுறை முளைத்தெழும்
அதன் கம்பீரத்தோகைகள்

இரவின் சுவை

முதலில் ஒவ்வொரு மிடறாய்த்தான்
குடிக்கத் தொடங்கினேன்
நாக்கில் அது உராயும் சுவையின் ஓசை
போதையேறயேற
குவளையோடு கவிழ்த்தேன்
தொண்டைக்குழாயின் வழியே
அது ஓடிமறையும் சப்தம்
கண்கள் மதுவின் மீது மிதக்கும்
பனித்துண்டங்களைப் போல் கண்கள்
எந்தப் பிடிமானமுமற்று
மது கனவுவெளிக்குப் பிரவேசித்து
ஒரு நதியின் உடலை இழுத்துவந்தது
கனவில் நிலவாய் விழித்திருந்த நான்
நதிக்குள் உடல் முழுமையும் குளிர
அந்தரங்கம் நடுங்க இறங்கினேன்
சில்லிட்ட கோப்பையின் அடிவயிறு உணர்ந்திற்று
நிறைந்திருந்தது இரவென்று

பார்வை

கண்களுக்குள் சிட்டுக்குருவிகளும்
மஞ்சள் மூக்கு மைனாக்களும்
குடிபுகுந்து நிறைக்கின்றன
உமது பார்வையை
இன்னொரு கல்லெறியும் பார்வையால்
கூடுகலைகின்ற அப்பறவைகள்
சிறகசைக்கும் அவை விரிக்கும்
நீர் மறைத்த வானத்தை

உடலை எப்படி விரிப்பது?

குழந்தையை உறங்கக்கிடத்தும் படுக்கையைப் போலா
தரையிறங்கியதும் ஆசுவாசத்துடன் பள்ளங்களை நிறைத்து
மேடுகளின் மூலைகளையும் அணைக்கும் கர்வத்துடன் பாயும்
நதியைப் போலா
கரையில் ஈரப்புடவையை உலர்த்தி
மணலென உடலை வெயிலுக்குக் கொடுப்பவளைப் போலா
அதிகாலைச் சூரியன் கரம் விசிறி விரிக்கும் வானத்தைப் போலா
கனிந்த பருவத்தைக் கிளிக்குக் கொத்தத்தரும் கனியைப் போலா
அர்த்தம் புரியா கனத்த சொல்லால்
அவள் கழுத்தில் கீறிய அவனிடம்
கேட்க நினைத்திருந்தாள்

புறமுதுகு

வெயில் விறைத்திருக்கும் உச்சிவேளையிலிருந்து
இலையொன்று சுழன்று மாலைக்குள் ஒதுங்குகிறது
காரில் நகரத்தெருக்களைக் கடக்கையில்
அவசரமாய் ஓடி மறைகிறது
பழைய காதலின் புறமுதுகுப்பிம்பம்
அது அவனாயிருக்கலாம்
பேராச்சியின் உடலில்
மதர்த்துக்கிடக்கும் காமப்பூக்களை
முகர்ந்து பார்த்தவன்
பிறகொரு நாள் அவனைச் சந்திக்க நேரலாம்
தனது மூளைக்குள் நெளியும் நினைவுப்புழுக்களை
நசுக்குவது எப்படியென எப்படியும்
அவன் ஆலோசனை கேட்கலாம்
அல்லது
உறங்கவிடாது
கண்களுக்குள் கள்ளிச்செடிகளை வளர்க்கும்
தோட்டக்காரனாய் அவன் இருந்ததை
நான் இடித்துக்காட்டலாம்
உஷ்ணமுட்கள்
வேகமாய் வளர்ந்துகொண்டேயிருக்கின்றன.

நட்சத்திரங்களெரியும் விளம்பரப்பலகைகள்

வீட்டின் முகப்பை மூடிமறைக்கும்
உறைந்த முகங்களுடன் நகரம் உயிர்த்தெழுகிறது
சிரித்தவர் சிரிப்பின் வரைகோடுகள் மாறாதவாறே
மீசை முறுக்கியவர் அதைப் பற்றித் தொங்கியவாறே
தொலைபேசி ஏந்தியவரோ
இரைச்சலை அதிகப்படுத்தியவாறே
குளிர்விடைக்கும் நகரம்
உறங்குகையிலும்
கண்கொட்டாது விழித்திருக்கின்றனர்
அரிவாள்களோடு வேகமாய் நடந்தவாறே
கதாநாயகிகளின் முலைகளைக் கன்னமென்று உரசியவாறே
மேற்பார்வையின் நோக்கம்
தான் அசையாதிருப்பது
முகங்கள் அடைத்துக்கொண்ட இப்பெருஞ்சாலைகள்
பறவைகள் கழன்றடிக்கும்
வானமுடைய வயல்வெளியில்
முடிந்தால் நன்றாயிருக்கும்
சுவாதீனமாக மூத்திரம் கழிக்கலாம் அல்லது
கனவுக்கோப்பையைப் பருகத் தொடங்கலாம்
உடல்களை வெறிக்கும் கண்களுடன்..
காலைவெயில் புழுதியைத் தூற்றுவதிலிருந்து
தகரக்கதவுகளை இழுத்தடைக்கும் அந்திவரை
அம்முகங்கள் நம் கனவுகளைச் சுட்டெரிக்கின்றன.

மீன்தொட்டி

மென்னுதடுகள் பேசும் மீன்குஞ்சுகள்
வளையவரும் தொட்டியாய் இருந்தேன்
இரவு பகல் எழுச்சியுறும் கடலில்லை
பழம்பெரும் பாசிப்படர்ந்த கூழாங்கற்களை
உருட்டிக் கொரித்தது குஞ்சின்பசி
குத்துயிர்கனவுகள் உடலை முட்டும்
உயிர்ப்பற்ற குமிழிகள் மேடுதட்டும்
ஓர் இரவும் அதனோடவியும் உம் ஆண்மையும்
கடலாக்கியது என்னை
சுவரை எட்டியுதைத்தன குஞ்சுகள்

நினைவுக் காகங்கள்

நினைவுகளின் சொல்லாற்றாமை
காகங்களைத் துரத்திவரும்
கொதிப்பு துலங்கும் தனியறைக்குள்
குப்பையைக் கிளறும் பசிக்கூச்சல்
நிழல்கள் பல்கிப் பெருகி
சடசடவென்று இருள் சரிக்கும்
காகங்களின் நிழல்
பிரமைகளின் ஊற்று
நிழல்கள் சுவரோட்டும்
காகங்கள் நிழற்கிளை அமரும்
அடையடையாய் காகங்கள்
நிழல் தப்பாது
கபாலம் சுவர்மோதி உடையும்

யாக்கை

கரையேறத்துள்ளும் மீன்களை
கட்டிப்போடுகிறாள் கண்களுக்குள்
உயவு மையேறிய அச்சாணியேபோல்
ஓயாமல் சுழல்கிறாள்
கூந்தல் அலட்சியமாய்ப் பறக்கிறது
உலர்ந்த மல்லிச்சரம்
ஊசலாடுவதே போல்
பாம்பின் சரவேகம் அவள்
என்புகளுக்கு
ஏதோ ஒரு கணத்துாணில் தன் எண்ணச் சித்திரத்தில்
நிலைப்புற்றுச் சாய்ந்து நிற்கையில்
தெய்வமே தேகசாந்தி கொள்வதாய்

கோடையின் முகம்

அதுவே கடைசிச்சந்திப்பாக
இருந்திருக்க முடியும்
உமது தேநீர் சில்லிட்டிருந்தது
எறும்பொன்று தீண்டிச்சுவைத்தது
இரக்கமற்ற கண்களுடன்
கோடையின் முகம்
எனக்கான சொற்களையெல்லாம்
நீங்கள் தீர்த்தபொழுது
கிறீச்சிடும் மின்விசிறி
பொழிகிறது வியர்வையை
காகிதமுனைகளைப் போல
மடிந்துகிடக்கும் உமது உதடுகள்
எப்போதோ பருகிவிட்டேன்
எனது தேநீரை

....

கோடைகாலத்தின் நினைவுகள்
பாசி உலர்ந்து விடுபடுகின்றன
தொடமுடியா கோலத்தில்
கைகளென்று ஏதுமில்லாத மீன்
தன் வாயினாலேயே அனைத்தையும்
சாத்தியப்படுத்திக்கொள்ளுதல் போல்
தனித்து விடப்படுகிறேன்
புணர்ச்சி விரும்பிக் காத்திருப்பவனையும்
நாடாது நகர்கிறது விழிக்கருப்பை
மேதகு மேனியில் முத்தத்தின் நிழற்சுவடுகள்
நிரம்பி உடல் தீப்பிழம்பாகிறது
உடல் மீது
கோடையின் நடையழகு
அத்துணை துல்லியமானது

தீவை மறிக்கும் கடல்

காலை சுவைக்கும் அலைகளை
கடலென்று எண்ணியோர்
தீபகற்பத்திலேயே தங்கிக்கொண்டனர்
அலைத் தீவினை மறைக்கும்

இங்கே கண்ணீர் உப்பு
கவிதை உப்பு கலவியும் உப்பு
சுடும் சூரியனின் விரல் உப்பு காதல் உப்பு
மூலிகையின் வேர் உப்பு
கடலின் வாதை உப்பு

இங்கே கண்ணீர் உடப்பு
தொலைவிலிருந்தும்
பகைவனைப் போல் நெஞ்சில் புளித்தேப்பம்
நண்பனின் தீராநோயைப் போல்
ஒரு பதைபதைப்பு
மூச்சடக்கி கடல் கடந்து
தீவைச்சேர்வார் எவருமில்லை
தீவு தெப்பமாய்
தெப்பமும் தீச்சட்டியாய்
பின் எதிரியுதொரு நினைவாய்

மழைச்சாலை

விரல் நடுக்கத்தில் மழை அவிழ்கிறது. மழை அறுக்க முயலும் வாகன ஓட்டமோ தெருவில் ஒரு நதியாகப் பாய்கிறது. அதில் கலக்காது மிதக்கும் மின்சார வாகனத்தின் அபாய ஒளியின் இரத்தம் ஒரு கலவரத்தை எழுப்பாது பயங்கரத்தையூட்டுகிறது. என்ன சொல்ல முயன்றும் வார்த்தை அகப்படாத குளிரால் நீரின் கயிறு உடலை கட்டுகிறது. ஓங்கி விழுந்த சரடின் அடியை மண்டையில் வாங்கிக்கொண்டு பொறி கலங்கி எழுந்து நடப்பவரே போல் உடலை முன் சாய்த்து சாலையின் மழையைப் பின்கட்டி இழுத்துச் செல்கின்றனர் பாதசாரிகள். சூனியம் தழுவிய வெயிலின் பருவத்திலிருந்து அடுக்கு சிமெண்ட் மஞ்சரிகளை வானத்தின் கோலாகலம் நோக்கும் மொட்டைமாடிகளாக்குகின்றன. காரை தலைகீழாய்ப் புரட்டும் நீரின் முரட்டுக்கரங்கள் தாம் சைக்கிளில் சக்கரக்கம்பிகளில் கூந்தல்மயிராய் சிக்கிக்கொள்கின்றன. எச்சில் ஒழுகும் கீழுதடுகளுடன் நீருக்குள்ளிருந்து எழும்பி வருகின்றன எருது வகை வாகனங்கள். வர்க்கம் மறக்கும் பொழுதில் ஒரு சூடான தேநீராய் மாறிவிடும் அழகைக் கொள்கிறது. மழைவிடாது வருடிக்கொடுக்கும் ஒரு செல்ல நாயாயிற்று.

பரு

தழல் மேனி கட்டியணைத்து ஒரு கணமும் ஆசுவாசமாய் அன்பைத் தின்னாதாரரெல்லாம் உடலை ஒரு பருவாய் ஓடியோடி கண்ணாடி முன் நின்று கிள்ளிப்பார்க்கும் அருவருப்பாய் ரகசியமாய் அவதியுறுகின்றனர். அல்லது காமமெல்லாம் களிப்போடு ஓடி வெளிகொண்டு திமிறும் நதியாய் இரவுக்குள் தலைதெறிக்க இன்னொருடலை முத்தமிட்டு வேகத்துடன் வாயிற்படியில் காசு வைத்துத் திரும்பிப்பாராது காலையைத் தொடுவர்.

சேவலண்ணன் கதறுகிறார்

சேவலண்ணனுக்கு முட்டையிடவும் தெரியாது. பெட்டையைப் போல் கூடித்திரியும் களிப்பையும் அறியார். பிரக்ஞையின் கூட்டிற்குள்ளிருந்து தினப்படி சாட்டையாலடிக்கும் சேவலண்ணனின் குரல், கனவில் நாவறுந்த கதறலுடையது முட்டையின் கவர்ச்சியையும் பெட்டையின் விடியல் நோக்கிய வாழ்வையும் பொறாமையாய் கழிய மட்டுமே தெரியும். காலைதோறும் வலைத்தளங்களிலெல்லாம் பேதியாய் சேவலின் கழிவு. சேவலின் மகிழ்ச்சியற்ற வார்த்தைகள் சொருகிக்கொண்ட வெளி முட்கானடை மாறும். பொழுது மாறக்கூடவும் புட்டத்திமிர் ஒரு வெற்று. ஆகவே முட்டைகளை விசையென்றும் குஞ்சுகளைப் புறக்கணித்தும் அலைகின்ற சேவல். பொரிகின்ற மின்மினொளியில் பிளாஸ்டிக் கோழிகள் ஒரே நிறக் கொண்டையுடனும் உடலுடனும்.



மொழிபெயர்ப்பு உரிமைகளும் - மறுபதிப்புக் கடமைகளும்

செல்வ புவியரசன்

புற்றீசல் போலப் பொலபொலவென கலகலவென அனுதினமும் புதுப்புது பதிப்பகங்கள் தமிழில் உருவாகி வரும் வேளையிது. குறுங்குழுவாதமாக முடங்கிக்கிடந்த தீவிர கலை இலக்கிய மற்றும் அரசியல் விவாதங்கள் விரிவானதொரு பரப்பை அடையக்கூடுமென்ற நம்பிக்கை துளிர்த்து மகிழ்ச்சியளிப்பதைப் போலவே இப்பதிப்பகங்களின் காயசண்டிகைப்பசியை எளிதில் தீர்த்துவைக்கும் உள்ளீடற்ற எழுத்து ,வகைகள் முதன்மை பெற்று பதிப்புலகின் புத்தெழுச்சியை பலிகொண்டுவிடுமோ என்ற ஐயமெழுந்து பதற்றம் கொள்ளவும் வைக்கிறது. எப்படியிருப்பினும் பதிப்புப் பணிகள் மீதாக உருவாகிவரும் வணிக நம்பிக்கையெண்ணி வாசகர்கள் ஆறுதலடையலாம்.

மிகுந்த எண்ணிக்கையில் நூல்பதிப்பு முயற்சிகள் ஒருபுறம் வெகு மும்முரமாக நடந்துகொண்டிருந்தாலும் பதிப்புரிமைகள் குறித்த அடிப்படைப் புரிதலுணர்வுகூட இல்லாமலிருப்பது வருத்தத்திற்குரியது. அதிலும் குறிப்பாக பிறமொழி நூல்கள் தமிழில் மொழிப்பெயர்க்கப்படும்போது அதற்கான சட்ட விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்றால் ஏறக்குறைய இல்லையென்றேதான் சொல்லவேண்டும்.

மொழிபெயர்ப்புக்கான அவசியமிருக்கும் எந்தப் பிரதியையும் எவரும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட உரிமையுண்டு. பதிப்புரிமை என்பது அதன் உரிமையாளருக்கு மட்டுமான முற்றுமுழுதான உரிமையல்ல. எந்தவொரு அயல்மொழிப்பிரதியையும் அதன் பதிப்புரிமையாளர் அந்நியராக

இருக்கும்பட்சத்திலும் கூட இந்தியாவில் மொழிபெயர்த்து வெளியிட சட்ட வழிமுறைகள் இருக்கின்றன. அதற்கான நிபந்தனைகளும் கூட வெகு எளிமையானதுதான். அந்நிய மொழிப் படைப்பொன்று வெளியான தேதியிலிருந்து மூன்றாண்டுகள் முடிந்திருக்கவேண்டும். அதுவே இந்தியமொழிப் படைப்பெனின் ஏழாண்டுகள் முடியுமட்டும் காத்திருக்கவேண்டும். பொதுப்பயன்பாட்டில் இல்லாத அந்நியமொழியொன்றில் வெளியான நூலென்றால் ஓராண்டு முடிந்திருந்தாலே போதுமானது.

மொழிப்பெயர்ப்புப் பிரதியின் சில்லறை விலையைக் குறிப்பிட்டு, பதிப்புரிமைக் கோருவதற்கான கட்டணத்தை பதிப்புரிமைகளுக்கான பதிவாளரிடம் செலுத்தவேண்டும். அவ்வாறு உரிமம் பெற்று வெளியாகும் மொழிப்பெயர்ப்புப் பிரதிகளை பொதுவிநியோகம் செய்யும்பொருட்டு அயல்நாடுகளுக்கு அனுப்பிவைக்கக்கூடாது. ஆனால் தனி நபர்கள் எவருக்கும் அஞ்சல் வழியாக அனுப்பி வைக்கலாம்.

பதிப்புரிமையாளரிடமிருந்து முறையாக உரிமம் பெற்று முன்னரே அந்நூல் தமிழில் வெளியிடப்பட்டிருந்தாலும், அப்பிரதிகள் விநியோகத்தில் இல்லையெனறால், இவ்வுரிமத்தைக் கேட்டுப் பெறலாம். இதுபோக, குறைவான பக்கங்கள் கொண்ட நூல்கள் அதிக விலையில் விற்கப்படுவதாக எண்ணினால், அதைவிடக் குறைந்த விலையில் மறுமதிப்பு செய்வதற்கும் கூட உரிமம் கோர முடியும்.

பதிப்பாளர் ஒருவர் இவ்விதிகளை அனுசரித்து உலகின் எந்த மூலையில வெளியாகும் எம்மொழி நூலையும் விநியோகிக்க முடியும். பதிப்புரிமையரே நூலை வெளியிட மறுத்தாலும் சட்ட வழிமுறைகளைப் பின்பற்றி தம் விருப்பத்தை நிறைவேற்ற முடியும். பதிப்புரிமையாளர் தமது நூலை தாமே முன் வந்து மொழிபெயர்த்து வெளியிடலாம். இல்லாத பட்சத்தில் இச்சட்டவிதிமுறைக்கு இணங்கித்தான் போக வேண்டும். இவ்வாறு கட்டாய உரிமம் பெறும்பட்சத்திலும் பதிப்புரிமையர்க்கான சன்மானத்தை வழங்கும் பொறுப்பிலிருந்து தப்பிக்கமுடியாது.

இவ்வுரிமைகளை தமிழ்ப்பதிப்பாளர்கள் அறியாமல்தான் இருக்கிறார்கள் என்றால் அது துரதிருஷ்டவசமானது. ஆனால், அறிந்தேதான் தவிர்க்கிறார்கள் என்றால் அது நூறுசதவீத அயோக்கியத்தனம். 1957ம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டத்திலேயே, மொழிப்பெயர்ப்பு செய்யவும் அதை வெளியிடுவதற்கான கட்டாய உரிமம் கோரவும் வகை செய்யும் சட்டப்பிரிவு 32 மட்டும்தான் அதிகமான உட்பிரிவுகளைக் கொண்டிருக்கிறது.

அதிக உட்பிரிவுகளைக் கொண்ட மற்றொரு சட்டப்பிரிவு 52. இது பதிப்புரிமை மீறலுக்கான விதிவிலக்குகள் பற்றியது. இவ்வித விலக்குகளில் துணைக்கொண்டு நாம் எத்தனை சதவீதம் பயனடைந்திருக்கிறோம் என்று கணக்குப் போட்டுப்பார்த்தால் ஏமாற்றம்தான் எஞ்சுகிறது. நூல்வடிவில் வெளிவந்தவற்றை இதழ்களில் மறுபிரசுரம் செய்யலாம் என்ற விதிவிலக்கு ஒன்றினை மட்டுமே சிற்றிதழ்கள் வேண்டுமட்டும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன. அதுவே பிறகு நூல்வடிவம் பெறும் வழக்கம்போல பதிப்புரிமைச்சிக்கல் எழுந்துவிடுகிறது. ஆனால் அதைத்தான் நாம் பொருட்படுத்துவதேயில்லையே!

உரிமைகளைப்பெறுவதற்கு பதிப்பாளர்கள் தயக்கம் காட்டுவது போலவே கடமைகளைப் பின்பற்றுவதையும் தட்டிக்கழித்தே வருகின்றனர்.

முன்னரே தமிழில் வெளிவந்த மொழிப்பெயர்ப்புகளை மீண்டும் பதிப்பிக்கும்போது மொழிப்பெயர்ப்பாளர்களின் பெயர்களைக் கவனமாகத் தவிர்ப்பது பதிப்புசார் அறங்களைக் காலில் போட்டு மிதிப்பதேயன்றி வேறென்ன? தமிழில் எழுதப்பட்ட அல்லது மொழிபெயர்க்கப்பட்ட நூலொன்று முதன்முதலில் தமிழில் எழுதப்பட்ட

யாமல் எப்போது வெளியிடப்பட்டது என்ற ஆவண மதிப்புள்ள குறிப்புகளைக் கூட நூலக ஆணையின்பொருட்டு தவிர்ப்பது வழமையாகிவிட்டது. இரண்டாம் பதிப்பெனில் குறைவானப் பிரதிகளையே ஏற்றுக்கொள்ளும் நூலக ஆணைக்குழுவின் அறியாமை அல்லது அகம்பாவத்தை என்னவென்று சொல்வது? நூலின் தன்மையையும் முதற்பதிப்பு வெளியாகி எத்தனை ஆண்டுகளாகிறது என்கிற விபரங்களையும் கூட உதாசீனப்படுத்துவது ஒருபோதும் சரியான அணுகுமுறையன்று. ஒன்றிரண்டு தசாப்தங்களுக்கு முன்பு வெளிவந்த நூல்களைக் கூட அரசு நூலகங்களில் தேடிக்கண்டுபிடிக்க முடியவில்லை. ஆய்வு மாணவர்கள் தனியார் நூலகங்களைச் சரணடையும் நிலையே இன்னமும் நீடிக்கிறது.

ஆங்கிலம் வழியாக பிறமொழி நூல்கள் மொழிப்பெயர்க்கப்படும்போது, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவரின் பெயரை நன்றியுடன் குறிப்பிடும் நாகரீகமும் கூட நமக்கு அந்நியமாகிவிட்டது. பதிப்புரிமைகளுக்கென்று பெயரளவிலாவது ஒரு சட்டமிருக்கிறது. பதிப்புசார் கடமைகளுக்குத்தான் எந்த வலியுறுத்தல்களும் இல்லையே...

நாட்டுடைமையாக்கப்பட்ட படைப்புகளின் நூல்கள் மறுபதிப்பாகும் வேகத்தைப் பார்க்கையில் நூல் உருவாக்கத்தின் தரம் முகம் சுளிக்கவே வைக்கிறது. அதற்கு முந்தைய பதிப்புகள் குறித்த விபரங்களையும் புதிய பதிப்பாளர்கள் லட்சியம் செய்வதில்லை. ஒரு படைப்பாளியின் நூல்கள் நாட்டுமையாக்கப்படுகிறது என்றால் அவரெழுதிய நூல்கள் மட்டும்தான் நாட்டுடமையாகின்றனவேயன்றி அவர் மொழிபெயர்த்த நூல்களல்ல. பிதொரு மொழியில் வெளிவந்த நூலை மொழிப்பெயர்த்து வெளியிடும் தற்காலிக உரிமத்தை மட்டுமே வழங்க முடியுமேயொழிய அவ்வுரிமையை பொதுமையாக்க முடியாது.

பதிப்புரிமைச்சட்டம் பிரிவு 57ன் படி படைப்பாளியொருவர் தம் பதிப்புரிமையை முழுவதுமாகவோ அல்லது அதனொரு பகுதியையோ உரிமைமாற்றம் செய்தபிறகும் கூட அவருக்கு தம்படைப்பின் மீது தார்மீக உரிமையுண்டு. அவருடைய படைப்பை, திருத்தவோ, சிதைக்கவோ, மாற்றங்கள் செய்யவோ கூடவே கூடாது. எழுதிக் கொடுத்த உரிமையை அவரால் திரும்பப்பெறவும் முடியும். தம் படைப்பிற்கும் அவருக்குமான உறவு எந்தவொரு ஒப்பந்தத்தாலும் அறுபட்டுப் போய்விடாது. பதிப்புரிமைக் காலம் நிறைவுபெற்றபிறகும் கூட (ஆசிரியரின் வாழ்நாட்களுக்கு பிறகான அறுபது வருடங்கள் வரையிலும்) அப்படைப்பின் மீதான தார்மீக உரிமைகள் அவரைவிட்டு நீங்குவதில்லை.

இயல்பான அறவுணர்வுதான் சட்டமாகிறது. ஆனால் அறங்கள் அனைத்துமே சட்டங்களாகி விடுவதில்லை. சட்டங்களையும் கட்டிக் கழித்து அறங்களைப் பொருட்படுத்தாத போக்கே தமிழ்ச் சூழலில் நிலவுகிறது. உரிமையும் கடமையும் தாளொன்றின் இருபக்கங்களாகக் கருதப்படுகிறது. சட்ட மீறுகை என்ற வகையினங்களில் அடங்காத அறங்களையும் பதிப்பாளர்கள் பின்பற்றுவது பழிபாவச் செய்கையல்ல. உரிமையையும் கோராமல் கடமையையும் செய்யாமல் இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் காகிதங்களை வெட்டி நறுக்கி வீணாக்கிக்கொண்டிருப்பது?

இணைப்பு
மொழிப்பெயர்புகளை ஆக்கவும் வெளியிடவும் உரிமம்
பிரிவு 32, பதிப்புரிமைச் சட்டம், 1957

1) ஓர் இலக்கிய அல்லது நாடகப்படைப்பின் முதலாவது வெளியீட்டிலிருந்து, ஏழு ஆண்டுகள் முடிந்தபிறகு, அப்படைப்பின் மொழிபெயர்ப்பை, எம்மொழியிலும் ஆக்கவும் வெளியிடவும் ஓர் உரிமத்திற்காக நபர் ஒருவர் பதிப்புரிமைக் குழுவுக்கு விண்ணப்பிக்கலாம்.

1(அ) உட்பிரிவு (1)ல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் நபர் எவரும், இந்தியப் படைப்பில்லாத வேற இலக்கிய அல்லது நாடகப்படைப்பின் மொழி பெயர்ப்பை, அந்தப் படைப்பின் முதல் வெளியீட்டிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்கு பின்பு, இந்தியாவில் பொதுப்பயன்பாட்டிலிருக்கும் எம்மொழியிலும், அச்சிலோ அல்லது மீண்டும் பதிப்பிப்பதற்கான அதனையொத்த வடிவத்திலோ வெளியிடுவதற்கான உரிமத்திற்காக அத்தகைய மொழிபெயர்ப்பு, கற்பிக்கும், நிபுணத்துவம் பெறும் அல்லது ஆய்வுசெய்யும் நோக்கங்களுக்காகத் தேவைப்படுமானால், பதிப்புரிமைக் குழுவுக்கு விண்ணப்பிக்கலாம்.

வரம்புரை 1) முன்னேற்றமடைந்த நாடெதிலும் பயன்பாட்டில் இல்லாத மொழியொன்றில், அப்படைப்பு இருக்கும் பட்சத்தில் அவ்விண்ணப்பம் வெளியீட்டிலிருந்து ஓராண்டு காலத்திற்குப் பின்பு செய்யப்படலாம்.

2) இப்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படும் படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும், மற்றும், அந்தப்படைப்பினுடைய மொழி பெயர்ப்புப் பிரதிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள சில்லறை விலையும் தெரிவிக்கப்படவேண்டும்.

3) இப்பிரிவின்கீழ் விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும், தனது விண்ணப்பத்துடன் வகுத்துரைக்கப்படும் கட்டணத்தையும் பதிப்புரிமைகளுக்கானப் பதிவாளரிடம் செலுத்துதல் வேண்டும்.

4) இந்தப் பிரிவின் கீழ், பதிப்புரிமைக்குழுவிற்கு விண்ணப்பம் செய்யப்படும் சூழலில், அக்குழு விசாரணை செய்தபிறகு, விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள மொழியில், படைப்பின் மொழிப்பெயர்ப்பைச் செய்யவும், வெளியிடவும் தனிப்பட்ட உரிமம் அல்லாத உரிமமொன்றை விண்ணப்பதாரருக்கு வழங்கலாம். அந்த விண்ணப்பம்

(1) விண்ணப்பம் செய்பவர், படைப்பின் பதிப்புரிமையாளருக்கே பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படவிருக்கும் படைப்பின் மொழிப்பெயர்ப்பின் பிரதிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பதிப்புரிமைக்குழு ஒவ்வொரு சமயத்திலும் நிர்ணயித்தளிக்கும் உரிமயூதியங்களை (Royalty) அளிக்க வேண்டும் என்ற கட்டுறுதிக்கு உட்படடிருக்கும், மேலும் (ii)உட்பிரிவு 1(அ)ன்படியான விண்ணப்பத்தின்பேரில் அதற்கான உரிமம் வழங்கப்பட்டுள்ள சூழலில், இந்தியாவிற்கு வெளியே, படைப்பின் மொழிபெயர்ப்புப் பிரதிகளை ஏற்றுமதி செய்ய அவ்வுரிமம் அனுமதிக்காது என்ற கட்டுறுதியையும், மொழிப்பெயர்ப்பின் பிரதி, எம்மொழியில் மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளதோ அம்மொழியில் மட்டுமே இந்தியாவிற்குள் மட்டுமே கிடைக்கும் என்ற அறிவிப்பையும் கொண்டிருக்க வேண்டும்.

வரம்புரை கூறு (ii)ல் கூறப்பட்டுள்ள எதுவும் அரசு அல்லது அரசின் கீழ் இயங்கும் அமைப்பென்றால், அம்மொழிபெயர்ப்பு ஆங்கிலம், பிரெஞ்ச் அல்லது ஸ்பானிஷ் அல்லாத வேறொரு மொழியில், எந்நாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்படுவதற்கு 1) அத்தகைய பிரதிகள் இந்தியாவிற்கு வெளியே குடியிருக்கும் குடிமக்களுக்கு அல்லது இந்தியாவிற்கு வெளியே உள்ள அத்தகைய மக்களின் அமைப்புகள் எதற்கும் அனுப்பப்பட்டால் அல்லது (2) அத்தகைய பிரதிகள் வணிக நோக்கம் எதற்காகவும் அல்லாமல் கற்பிக்கும், நிபுணத்துவம் பெறும் அல்லது ஆய்வு செய்யும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துப்படுவதற்கென்று கருதப்பட்டால்,

(3) இரண்டு சூழல்களிலும் அத்தகைய எந்றுமதிக்கு அந்நாட்டின் அரசு இசைவு வழங்கியிருந்தால் பொருந்தாது.

மேலும் வரம்புரை : இப்பிரிவின் கீழ் உரிமம் எதுவும் - படைப்பின் முதலில் வெளியீட்டிலிருந்து, சூழலுக்கேற்றவாறு ஏழாண்டு அல்லது மூன்றாம் காலத்திற்குள் அல்லது ஓராண்டு படைப்பிற்கான பதிப்புரிமையாளரால் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டவரால் விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள மொழியில் அப்படைப்பின் மொழிப்பெயர்ப்பு வெளியிடப்படாமல் இருந்தாலன்றி அல்லது வெளியிடப்பட்டிருந்து அதன் அச்சிட்ட பிரதிகள் கிடைக்காமலிருந்தாலின்றி (ஆ) அந்த மொழி பெயர்ப்பை வெளியிட, பதிப்புரிமையாளரை விண்ணப்பதாரர் அனுமதி கேட்ட பதிப்புரிமையாளரால் மறுக்கப்பட்டிருந்தது என்றும் அல்லது தன்னாலியன்ற முயற்சிகளுக்குப் பின்பும் அப்பதிப்புரிமையாளரைக் கண்டுபிடிக்கமுடியவில்லை என்றும் பதிப்புரிமைக் குழு தெளிவுற நம்பும் வகையில் விண்ணப்பதாரர் மெய்ப்பித்திருந்தாலன்றி,

இ) பதிப்புரிமையாளரை விண்ணப்பதாரர் கண்டுபிடிக்க முடியாமலிருக்கும் பட்சத்தில் உட்பிரிவு (1)ன் கீழ் உரிமத்திற்கான விண்ணப்பத்தினைப் பொறுத்த நேர்வில் அந்த விண்ணப்பத்தைச் செய்வதற்கு முன்பு இரண்டு மாதங்களுக்குக் குறையாத காலஅளவுக்குள், படைப்பிலிருந்து தெரிய வருகிற பெயரைக் கொண்ட பதிப்பகத்தார்க்கு, அத்தகைய அதிகாரம் வழங்குவதற்கான தமது வேண்டுகோளின் பிரதியை வான்வழிப் பதிவஞ்சல் வாயிலாக அனுப்பிவைத்திருந்தாலன்றி, இந்த வரம்புரையின் கூறு (ஆ)ன் கீழாக வேண்டுகோள் விடுத்த தினத்திலிருந்து, அல்லது இந்த வரம்புரையின் கூறு (இ)ரண்டின் கீழ் வேண்டுகோளின் பிரதியொன்று அனுப்பிவைக்கப்பட்டிருக்கும்போது அது அனுப்பப்பட்ட தேதியிலிருந்து உட்பிரிவு 1 (அ) ன் வரம்புரையின் கீழான விண்ணப்பமாக இல்லாது, அந்த உட்பிரிவின் கீழான விண்ணப்பமாக இருக்கும் பட்சத்தில், ஆறு மாத கால அளவு அல்லது அந்த உட்பிரிவின் வரம்புரையின் கீழான விண்ணப்பத்தை பொறுத்த சூழலில் ஒன்பது மாத கால அளவு முடிந்திருந்தாலன்றியும், விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள மொழியில் அப்படைப்பின் மொழிபெயர்ப்பு பதிப்புரிமையாளரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவரால், கூறப்பட்ட ஆறுமாதம் அல்லது, சூழலுக்கேற்ப, ஒன்பதுமாத கால அளவிற்குள் வெளியிடப்படாமலிந்தாலன்றியும் (இஇஇ) உட்பிரிவு 1 (அ) இன் கீழான விண்ணப்பத்தைப் பொறுத்து

(1) மொழிப்பெயர்ப்புப் பிரதி ஒவ்வொன்றிலும் மூலநூலின் ஆசிரியர் பெயர் மற்றும் நூல்தலைப்பு அச்சிடப்பட்டிருதால் அன்றியும்

(2) படைப்பு பெரும்பகுதி விளக்கப்படங்களைக் கொண்டதாக இருக்கும்பட்சத்தில் பிரிவு 32(அ)ன் வகையங்களுக்கு ஏற்பவும் இருந்தாலன்றியும் பதிப்புரிமைக்குழு படைப்பின் சரியான மொழிபெயர்ப்பை ஆக்கிவெளியிடுவதற்கு விண்ணப்பதாரர் தகுதியும் திறமையும் உடையவர் எனவும், இப்பிரிவின்கீழ் பதிப்புரிமையாளருக்குச் செலுத்தவேண்டிய உரிமையூதியங்களைச் செலுத்திடும் தகுதிப்பெற்றவர் எனவும் தெளிவாக மனநிறைவு அடைந்தாலன்றி,

2) படைப்பின் பிரதிகளை விநியோகத்திலிருந்து பதிப்புரிமையாளர் திரும்பப் பெறாமலிந்தாலன்றி

(ஊ) படைப்பின் பதிப்புரிமையாளருக்கு இயன்ற அளவு கேட்கப்படுவதற்கான வாய்ப்பை அளித்தாலன்றி வழங்கப்படமாட்டாது.

5. ஒலிபரப்பு செய்ய அதிகாரம் பெற்ற எந்தவொரு அமைப்பும் (அ) உட்பிரிவு 1 (அ)ல் கூறப்பட்டுள்ளதும் அச்சு அல்லது அதைப்போன்ற மறுஉருவாக்க வடிவங்களில் வெளியிடப்பட்டதுமான படைப்பொன்றின் அல்லது

(ஆ) முறையான அறிவுறுத்தல் வகை செய்யப்பட்டுள்ள நோக்கத்திற்காக மட்டுமே தயாரித்து வெளியிடப்பட்ட காட்சி கேள்வி ஒருங்குசார்ந்த அமைப்புகளில் உள்ளடக்கப்பட்டவையான உரை ஒன்றின் மொழிப்பெயர்ப்பை, எந்தவொரு தனிப்பட்ட துறையிலும் உள்ள நிபுணர்களுக்கும், சிறப்புத் தொழில் நுட்ப அல்லது அறிவியல் ஆய்வுமுடிவுகளைக் கற்பிப்பதற்கு அல்லது பரப்புவதற்காக அத்தகைய மொழிப்பெயர்ப்பை ஒலிபரப்பும் நோக்கத்தில் மொழியாக்கம் செய்து வெளியிடுவதற்கான உரிமம் வேண்டி பதிப்புரிமைக்குழுவிடம் விண்ணப்பிக்கலாம்.

(6) உட்பிரிவுகள் (2) முதல் (4) வரையான வகையங்கள் உட்பிரிவு (1)ன்படியான விண்ணப்பத்திற்கு எவ்வளவுதொடர்புடையதாக இருக்கிறதோ, அந்த அளவிற்குத் தேவைப்பட்ட மாற்றமைவுகளுடன் உட்பிரிவு (5)ன்படி ஓர் உரிமம் வழங்குவதற்கும் பொருந்தும் மற்றும் அத்தகைய உரிமம்

(அ) மொழிப்பெயர்ப்பு சட்டப்படி பெறப்பட்ட ஒரு படைப்பிலிருந்து ஆக்கப்பட்டதாக இருந்தலான்றி,

(ஆ) ஒளிபரப்பு ஒலி மற்றும் பார்க்கக்கூடிய சாதனங்களைக் கொண்டு, அவைமூலம் செய்யப்பட்டிருந்தாலன்றி

(இ) அப்பதிவு, விண்ணப்பதாரரால் அல்லது வேறு ஒலிபரப்பு முகவாண்மை எதன் மூலமாகவும் இந்தியாவில் ஒலிபரப்பும் நோக்கத்துடன், சட்டப்படியாகவும் அதற்கென மட்டும் செய்யப்பட்டிருந்தாலன்றி மற்றும்

(ஈ) அந்த மொழிப்பெயர்ப்பும், அந்த மொழிப்பெயர்ப்பின் ஒலிப்பரப்பும், வாணிபநோக்கம் எதற்காகவும் உபயோகப்படுத்தப்படாமல் இருந்தாலன்றி, வழங்கப்படமாட்டாது.

விளக்கம் இப்பிரிவின் நோக்கங்களுக்கேற்ப.

(அ) முன்னேற்றமடைந்த நாடு என்பது ஒரு முன்னேற்றமடைந்து வருகிற நாடாக இல்லாத நாடென்று பொருள்படும்.


(ஆ) முன்னேற்றமடைந்து வருகிற நாடு, என்பது ஐக்கியநாடுகளின் சபையின் நடைமுறைகளுக்கேற்ப, அப்போதைக்கு முன்னேற்றம் அடைந்துவிடுவதாக கருதப்படும் நாடென்று பொருள்படும்.

(இ) ஆராய்ச்சி நோக்கத்திற்காக என்பது தொழில்துறை ஆய்வு நோக்கங்களையோ அல்லது அரசிற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படுகிற கூட்டுருமக்குழுமங்கள் அல்லாத) கூட்டுருமக் குழுமங்களின் ஆய்வு நோக்கங்களையோ உள்ளடக்காது.

(ஈ) கற்பிக்கும் ஆராய்ச்சி செய்யும் அல்லது புலமைபெறுவதற்கான நோக்கங்கள்

1) பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தனிப்பயிற்சி கல்வி நிறுவனங்கள் உள்ளடங்கிய கல்வித்துறை அமைப்புகளின் அனைத்துநிலைகளிலும் அறிவுறுத்தும் நடவடிக்கையான நோக்கங்களை, மற்றும்

2) முறைப்படுத்தப்பட்ட வேறு அனைத்து வகையான கல்விசார் நடவடிக்கைக்கான நோக்கங்களை உள்ளடக்கும்.



நரன் கவிதைகள்

வகுப்பறை

காலையில் சமீரா தன் பிறந்தநாளுக்கு
வகுப்பறையில் எல்லோருக்கும்
மிட்டாய் வழங்கினாள்.
ஆரஞ்சு நிறத்தில்
நீள் சதுரமான ஆனால்
சுவையற்ற மிட்டாய் அது.
அடுத்த நாள் காலையில்
மிட்டாய் வாங்க வசதியற்ற பால்யன்
தன்னுடைய பிறந்தநாளுக்கு வகுப்பறையில்
எல்லோருக்கும் கைபிடியளவு
சீனியை வழங்கினான்
வகுப்பறையில் எல்லோரும்
சுவைத்துக் கொண்டிருந்தோம்
24 மணி நேர நீளமுடைய மிட்டாயை.

சிகரெட்

ஒரு சிகரெட் வாங்க
தன் பையில் பணம் இல்லாதவன்
தன் வீடெங்கும் பதுங்கியிருக்கும்
சில்லறைகளைத் தேடி சேகரிக்கிறான்
அப்போது
நகரின் எங்கெங்கோ விழுந்துக் கிடக்கும்
துண்டு சிகரெட்டுகள் இணைந்து
ஒரு முழுநீள சிகரெட்டாக உருமாறுகிறது.
3ரூபாயின் முனையில் பற்றவைக்கிறான்.
2.85... 2.40... 2.15... 1.95
கொஞ்சம் சாம்பலைத் தட்டுகிறான்.
... 1.40... 95... 55...
நிறைய சாம்பலைத் தட்டுகிறான்
....40......15 7 பைசா
வேகமாக உறிஞ்சுகிறான்
செல்லாத நாணயத்தை போன்றிருக்கும்
பஞ்சைக் காலில் போட்டு
மிதித்தப்படி கடந்து செல்கிறான்.

ஞானிகள்

தியானத்திற்குப் பின்
மூன்று ஞானிகளும்
ஒரே கிணற்றுக்குள் இறங்கி குளித்தனர்
குளிந்து முடித்து வெவ்வேறு
கிணறுகளிலிருந்து வெளியே வந்தனர்.

முதல் ஞானி சொன்னார்
நான் குளித்த கிணற்றில் பாசிபடர்ந்திருந்தது
இரண்டாவது ஞானி
நான் குளித்த கிணற்றில் நீர் உப்புகரித்தது
மூன்றாவது
நான் குளித்த கிணற்றில்
27 தவளைகளும்
நீர்பாம்பொன்றும் இருந்ததென
பின் எல்லோரும் ஒரே கிணற்றின்
கரையில் நின்று
தத்தம் ஈர உடலை துடைத்துக்கொண்டனர்.

பஞ்சவர்ணக்கிளி

பஞ்சவர்ணக்கிளியின்
உடலிலிருந்து
அதன் வர்ணங்களை
தனித்தனியே
பிரித்தெடுக்க முயலும் குழந்தை
அதன் வர்ணங்கள்
ஒவ்வொன்றையும்
உருவி உருவி தனித்தனியே
வரிசைப்படுத்துகிறது
அம்மாவரும் நேரமாகிவிட்டது
உறங்கிக் கொண்டிருக்கும்
பூனையின் அருகே கிளியைப்
போட்டுவிட்டு போய்விட்டது
குழந்தை

நிலைக்கண்ணாடி

எதிர்வீட்டில் நிலைகதவின் நேர்எதிர்புறம்
மாட்டி வைத்திருக்கும் / மிகப்பெரிய நிலைக்கண்ணாடியில்
தினமும் கதவை திறந்துக் கொண்டு
கண்ணாடிக்குள் சென்று
மறைந்துவிடுகின்றனர்.
யாரேனும் அழைப்பு மணியை
அழுத்தும்போது
கண்ணாடியை திறந்துக் கொண்டு பார்கிறார்கள்
பின் மீண்டும் கண்ணாடிக்குள் சென்று
மறைந்துவிடுகிறார்கள்.
ஒரு நாள் அவ்வீட்டை காலி செய்து
சாமான்களையெல்லாம் எடுத்துப்போனார்கள்
வாகனமொன்றில் ஏற்றி
மிகப்பெரிய அந்நிலைக்கண்ணாடியை பிடித்தப்படி
அமர்ந்திருந்தான் வேலையாள்
மெல்ல நகரும் வாகனத்தில்
கண்ணாடிக்குள் சென்று மறைந்துக்கொண்டிருந்தது
அவ்வீதியிலுள்ள வீடுகள் எல்லாம்.

பயணி கவிதைகள்

களவு போகும் உள்ளாடைகள்

மொட்டை மாடியில் உலர்த்தப் போடும் உள்ளாடைகள்
மாயமாகும் காரணம் அவளுக்குப் புரிவதேயில்லை
திருடன் தன் வீட்டிலேயே இருக்கிறானா அல்லது
வெளியிலிருந்து வருகிறானா என்பதும் அவளுக்கு விளங்கவில்லை
முதலில் இதைக் கண்டு அதிர்ச்சியும் எரிச்சலும் அடையும் அவள்
நாளடைவில் இதை விளையாட்டென அறிகிறாள்
உள்ளாடைத் திருடனை காதலிக்கத் தொடங்கும் அவள்
இரவில் அவனைக் கனவு கண்டு சுயஇன்பம் கொள்கிறாள்.
உள்ளாடை களவு போகாத நாட்களில்
மிகவும் மனக்கிலேசம் அடையும் அவள்
தான் உள்ளாடை அணிவதே
களவு போகத்தான் என்பதாக எண்ணிக் கொள்கிறாள்
உள்ளாடை, களவு போவது கொஞ்சங் கொஞ்சமாக குறைந்து
ஒரு கட்டத்தில் நின்றுவிடுகிறது
இதனால் உடைந்து நொறுங்கும் அவள்
அதன்பின் உள்ளாடை அணிவதே இல்லை

சிட்கோ நகர் 96வது தெரு

தெருவுக்குள் நுழைகிறேன்
சிட்கோ நகர் 96வது தெருவுக்குள்
இரவில் தெரு வேறு முகமாய் காட்சியளிக்கிறது
அதன் அமைதியின் ஆழத்திற்குள் அழைத்துச் செல்லப்படுகிறேன்
நான் விரும்பும் அமைதியல்ல அது
புன்னகைக்கும் அதன் ஆன்மாவை நிராகரித்துவிட்டு
சிகரெட் ஒன்றை பற்றவைக்கிறேன்
தெரு விழித்துக்கொள்கிறது
இந்த மேல்மாடியில்தான் என் கள்ளக்காதலி வசிக்கிறாள்
அது இப்பொழுது முக்கியமல்ல
நாயொன்று இடைவிடாது குரைத்துக்கொண்டிருக்கிறது
அதுவும் இப்பொழுது முக்கியமல்ல
இதை வாசிக்கும் காலமும் ஒன்றல்ல
காரணம் இரண்டுக்குமிடையில்
பல கருங்கோடைக் காலங்கள் நடந்து போயிருக்கின்றன.

வேளாண்மையில் ஓர் அணுகுண்டு ஒப்பந்தம்
(இந்திய-அமெரிக்க வேளாண்மை அறிவு முனைப்பு ஒப்பந்தம்)

மு. வெற்றிச்செல்வன்



123 ஒப்பந்தம் குறித்தான சர்சை முடிந்தே போய்விட்டது. அணுசக்தி துறையில் நாட்டின் இறையாண்மையை அடகு வைத்த இந்த ஒப்பந்தம் பற்றி பரவலாக விவாதம் எழுந்தது. ஆனால் அதே 123 ஒப்பந்தத்தோடு நாட்டின் உணவு இறையாண்மையை அமெரிக்காவிற்கு அடகு வைத்த மற்றொரு ஒப்பந்தம் குறித்து இடதுசாரிகள் உள்பட யாரும் விவாதிக்கவில்லை. இந்திய அமெரிக்க வேளாண்மை அறிவு முனைப்பு ஒப்பந்தம் என்கிற அந்த ஒப்பந்தம் 123 ஒப்பந்தத்தோடு கடந்த ஜூலை 2005ம் ஆண்டு இந்திய பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங், அமெரிக்க அதிபர் புஷ் இடையே கையெழுத்தானது.

இந்தியாவில் அரை மணி நேரத்திற்கு ஒரு விவசாயி கடன் தொல்லையால் தற்கொலை செய்து கொள்ளும் அவல நிலையும் நிலவுகிறது. மத்திய அரசு அமைப்பான தேசிய குற்றத்தகவல் ஆவண மையம் அளிக்கும் தகவலின்படி கடந்த 1997 முதல் 2006ம் ஆண்டு வரையான 10 ஆண்டுகளில் (1,82,936) ஒரு லட்சத்து எண்பத்திஇரண்டாயிரத்து தொள்ளதாயிரத்து முப்பத்திஆறு விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அரசுத்துறை புள்ளி விவரம் அளிக்கும் தகவல் இது என்றால் உண்மையான புள்ளிவிவரத்தை நாமே அனுமானித்துக்கொள்ள வேண்டியதுதான்.

நவீன அறிவியல் அடிப்படையிலான விவசாயமே இதற்கும் தீர்வாக இருக்க முடியும் என்று பல அறிஞர்கள் கூறுகிறார்கள். அத்தகைய அறிவியல் அறிவு பெற அமெரிக்காவுடான இத்தகைய ஒப்பந்தங்கள் அவசியம் என்று இவர்கள் வாதிடுகின்றனர். இத்தகைய அறிஞர்கள் உயிரியல் தொழில் நுட்பத்தின் ஒரு பிரிவான மரபணுமாற்று தொழில்நுட்பத்தின் மூலம் விவசாயிகளின் வாழ்வில் அதிரடி மாற்றங்களை கொண்டு வரலாம் என்றும், விவசாயிகளின் தற்கொலைகள், பட்டிச் சாவுகள் போன்றவற்றை தடுத்துவிடலாம் எனவும் நமக்கு ஆசை காட்டுகின்றனர். அதிக மகசூலையும் லாபத்தையும் தரக்கூடிய விதைகளை மரபணுமாற்று தொழில்நுட்பத்தின் மூலம் உண்டாக்கலாம் என்றும், பூச்சி எதிர்ப்பு சக்தி தன்னுள்ளே

பெற்று இந்த பயிர்கள், மாறிவரும பருவநிலைக்கு ஏற்ப வளரக்கூடியது என்றும் பிரச்சாரம் செய்கின்றனர் இவர்கள் நிலவுக்கே செயற்கைகோள் அனுப்பினாலும் இத்தகைய தொழில்நுட்பத்தை அமெரிக்க தான் நமக்கு தர முடியும் என்றும் அதற்கு இத்தகைய ஒப்பந்தங்கள் அவசியம் என்றும் இவர்கள் நம்மை நம்ப சொல்லுகிறார்கள்.

இந்திய-அமெரிக்க வேளாண்மைக் அறிவு முனைப்பு ஒப்பந்தம்

இந்திய அமெரிக்க வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி சேவை மற்றும் வணிகதொடர்பிற்கான அறிவு முனைப்பு என்கிற இந்த ஒப்பந்தம். பலவகை பயிர்முறையை அழித்து ஒற்றை பயிர் முறையையும், அரிசி உணவுத் தவிர் மற்ற வகை உணவை மறக்க செய்து நீரிழிவு நோய்க்கு நம்மைஇட்டு சென்று பசுமைப்புரட்சியை தொடர்ந்து என்றென்றும் பசுமைப்புரட்சியை ஏற்படுத்துவதற்காக வரையப்பட்டுள்ளது. ஆனால் பழைய பசுமைப் புரட்சி போல முற்றிலும் அரசே ஏற்று நடத்தாமல் இந்த புதிய என்றென்றும் பசுமைப் புரட்சியானது தனியாருக்கும் இடம் கொடுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வகை ஆர்ச்சர் டேனியல்ஸ் மிட்லேண்ட், வால்மார்ட், மான்சாண்டோ போன்ற அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்கள் முதல் நாம்நாட்டு வெங்கடேஸ்வரா மாசானி. ஐ.டீ.சி ரிலையன்ஸ் நிறுவம் வரை இந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளன.

விவசாயத்தோடு மட்டும் நில்லாமல் மீன் வளர்ப்பு கால்நடை வளர்ப்பு போன்றவற்றிலும் தொடரும் இந்த ஒப்பந்தத்தின் முக்கிய கூறுகளாக இரண்டு அம்சங்களைக் கூறலாம்.

உயிரி மற்றும் மாபணுமாற்று தொழில்நுட்பத்தின் பயண்பாட்டை விவசாயம். மீன் வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு போன்ற துறைகளில் அதிகப்படுத்துதல்.

வேளாண்மையில் துறையிலும் அறிவுசார் சொத்துரிமையைப் பாதுகாத்தல்.

மரபணுமாற்று தொழில் நுட்பத்தின் இந்திய விவசாயமும்

ஒவ்வொரு உயிரிலும், அதன் குரோமோசோம்களில் மரபுத் தன்மையை (கறுப்பு மயிரா, கருப்பு விழியா, பழுப்புத் தோலா, குட்டையா, நெட்டையா, எனும் உண்மைகளைக்) கொண்டிருக்கும் குழுமத்தை மரபணு என்கிறார்கள். எனும் நான்கு வித புரதங்களால் இரண்டை பிளைவு முறையில் தொகுக்கப்பட்டிருக்கும் இப்புதக்கூட்டுதான் நம் வாழ்வின் அடிப்படை ஆதாரம். அதே போல் ஒரு தாவம் குட்டையாக வளர வேண்டுமா? மஞ்சள் பூ பூக்க வேண்டுமா? என அத்தனையும் அம்மரபணுவின் புரப் புரோகிராம்கள் தான் நிர்ணயிக்கின்றன. சந்தைக்கு வேண்டிய பயிரை உற்பத்தி செய்ய, பயிரின் மரபணுவை மாற்றம் செய்தோ, சிதைத்தோ அதே குடும்பப் பயிர் அல்லது வேறு உயிரின் (அது பாக்டீரியாவோ, டைனசரோ எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்) மரபணுவினை வெட்டி ஒட்டியோ, புதிய பயிரை உருவாக்குவது தான் இந்த மரபணு மாற்றப்பயிர்.

பசுமைப்புரட்சி என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட பல தாவரங்கள் பூச்சிகளை எதிர்க்கொள்ளும் திறன் அற்றவையாக இருந்தன. எனவேபூச்சிக்கொல்லி மருந்துகள், விவசாயிகளின் கூடுதல் சுமையாக இருந்தன. இவற்றை எதிர்க்கொள்ள பூச்சிகளை கொல்லும் திறன் பெற்றதாக கூறப்படும் பாக்டீரியம் துரெஞ்ஜெரிஸ் என்ற நச்சுப்பொருளை தாவரத்தின் மரபணுவில் மரபணு மாற்று தொழில்பட்த்தில் செலுத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. என்று பரவலாக அழைக்கப்படும் இந்த முறை பருத்தியில் அறிமுகம் செய்யப்பட்டு தற்போது கத்திரிக்காய், பருத்தி. அரிசி

உட்பட பல்வேறு பெயர்களில் இந்த உயிரிதொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இப்படி நச்சை தாவரங்களின் மரபணுயோடு கலக்கும் போது அவை நச்சாக வளரும் என்றும இவற்றை பூச்சிகள் உட்கொண்டால் அவை மரணம் அடையும் என்றும் அதன் பயனாக அதிக விளைச்சல் கிடைக்கும் என்பது சில அறிஞர்களின் வாதம். இப்படி விஷமாக வளரும் தாவரங்களை நாம் உண்ணலாமா? அவ்வாறு உட்கொண்டால் என்னாகும்? போன்ற கேள்விகளுக்குத்தான் பதில் இல்லை இவர்களிடம்.

தற்போதைய காப்புரிமை சட்டப்படி இப்படிப்பட்ட பயிர்களக்க காப்புரிமையும் பெற முடியும். அவ்வாறு இந்தியாவில் மான் சான்டோ, பாயர், மஹிகோ உள்ளிட்ட பல நிறுவனங்கள் காப்புரிமைகளை பதிவும் செய்துள்ளன.

காப்புரிமை அரசியல்

அறிவு சொத்துரிமையின் ஒரு பிரிவான காப்புரிமை மற்ற அறிவு சொத்துரமைகளை போலவேஒரு வகையான எதிர்மறை உரிமையாகும். அதாவது இவை உரிமை பெற்றவரை தவிர்த்து மற்ற அனைவரையும் உற்பத்தி செய்ய/ விற்பனை செய்ய தடைவிதிக்கிறது. ஒரு பொருளையோ, அதன் பயன்பாட்டையோ முதன்முறையாக கண்டறியும் ஒருவர் அரசிடம் பதிவு செய்து பெறும் உரிமை காப்புரிமை எனப்படுகிறது. இவ்வாறு இந்தியாவில் காப்புரிமை பெற்ற அப்பொருளை பதிவு செய்தவர் மட்டுமே தயாரித்து விற்பனை செய்ய முடியும். அவரைத்தவிர வேறு யாரும் அப்பொருளை 20 ஆண்டுகளுக்கு உற்பத்தி செய்வதை இந்திய காப்புரிமைச் சட்டம் தடை செய்கிறது. இத்தகையஎதிர்மறையான உரிமைதான் பன்னாட்டு நிறுவனங்களுக்கு தேவைப்படுகிறது. இந்த அளவற்ற உரிமை மூலம் மருந்து, விவசாயம், கணினி தொழில்நுட்பம், உள்ளடங்கிய எல்லா துறைகளையும் தன் கைக்குள் வைத்துக்கொள்கின்றன பன்னாட்டு நிறுவனங்கள்.

எனப்படும் உலக வர்த்தக நிறுவனத்தில் இந்தியா உறுப்பு நாடானதன் தொடர்ச்சியாக அந்த அமைப்பு ஏற்படுத்தும் அனைத்து ஒப்பந்தங்களையும் கட்டாயமாக ஏற்றாக வேண்டிய அவல நிலையில் இந்தியா உள்ளது. இவ்வாறு உலக வர்த்தக நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட அறிவுச் சொத்துரிமை குறித்த ஒப்பந்தத்தில் இந்தியா கையொப்பமிட்டதை தொடர்ந்து, அறிவு சொத்துரிமை தொடர்பாக ஏற்கனவே உள்ள சட்டங்களில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் பல புதிய சட்டங்களும் இயற்றப்பட்டு வருகின்றன. ஒப்பந்தத்தில் இந்தியா கையொப்பம் இட்டதை தொடர்ந்து உணவு பொருட்கள் மீதான காப்புரிமைக்கான தடைகளும் நீக்கப்பட்டன.

இயற்கையாக தோன்றும் தாவரங்கள் மற்றம் விலங்குகளுக்கு காப்புரிமை வழங்கத் தேவையில்லை என ஒப்பந்தம் கூறுகிறது. ஆனாலும் இயற்கையில் அமையாத மனித முயற்சிகளால் மேற்கொள்ளப்படும் உயிரியல் சாராத முறை மற்றும் நுண்ணுயிர் முறை போன்றவற்றின் மூலம் மரபணுமாற்று பயிர்கள் மற்றம் விதைகளுக்கு காப்புரிமை வழங்கவேண்டும் என்று ஒப்பந்தம் வலியுறுத்துகிறது.

இதன்படி இந்தியாவும் தனது காப்புரிமை சட்டத்தை தலைகீழாக மாற்றி அமைத்துள்ளது. இந்தியாவின் காப்புரிமை சட்டத்தின் கீழ் நேரடியாக தாவரம், விதைகள், பயிர்வகைகள், போன்றவற்றிற்கு காப்புரிமை வழங்குவதில்லை. தாவரத்தின் இயற்கையான போக்கில் அமையாமல் மனித செயல்பாடுகள் மூலம் ஏற்படும் மாற்றங்களை என்று வகைப்படுத்துகின்றனர். இது போன்ற செய்முறைகளுக்கு இப்பொழுது காப்புரிமை இந்தியாவில் பெற முடியும். உயிரியல் அற்ற முறை என்பது மறைமுகமாக எனப்படும் மரபணு மாற்றப்பயிர்களுக்கு

காப்புரிமை வழங்கவே உதவுகிறது. மேலும் ஒப்பந்தத்தின்படி காப்புரிமை பதிவு செய்யப்பட்ட பயிர்களை 20 வருட காலத்திற்கு ஒப்பந்தத்திற்கு முன் இது 7 வருடமாக இருந்தது) வேறு யாரும் உற்பத்தி செய்யவோ, விற்பனை செய்யவோ இச்சட்டம் தடை விதிக்கிறது.

காப்புரிமை போன்ற அறிவுச்சொத்துரிமை சட்டங்கள் விதைகளை தனிநபரின் உரிமையாக வாழ்நாள் முழுவதும் வைத்திருக்க வழிகாட்டுகிறது. குறிப்பிட்ட காலத்திற்கு பின் காப்புரிமை பதிவுபெற்ற எந்த பொருளும், எந்த தடையுமின்றி பொதுமக்கள் உபயோகத்திற்கு வந்துவிட வேண்டும் என்பதை அந்த சட்டத்தின் அடிப்படை விதி. இருப்பினும் புதிதாக திருத்தம் செய்யப்பட்டுள்ள காப்புரிமை சட்டம் சில பின் வழிகளின் மூலம் காப்புரிமை பெற்ற பொருள், ஒரு தனி நபரின் கட்டுப்பாட்டிலே தொடர்வதற்கு உதவுகிறது. எந்த ஒரு கண்டுபிடிப்பையும் அதன் தொழில் நுட்பரீதியாக மேம்படுத்தியிருந்தாலோ, அல்லது பொருளாதார முக்கியத்தும் ஏற்பட்டிருந்தாலோ அந்த கண்டுபிடிப்பிற்கு மீண்டும் காப்புரிமை பெறலாம். எனவே மரபணு மாற்றப்பட்ட தாவரப்பொருட்களின் காப்புரிமையை பன்னாட்டு நிறுவனங்கள் எளிதில் நீடித்துக் கொண்டே போகக்கூடும்.

தாவரங்களுக்கு அவற்றின் இயல்பான தன்மையில் காப்புரிமை வழங்க முடியாத சூழ்நிலையில் ஒப்பந்தத்தின்படி தாவரங்களை பதிவு செய்வதற்காக கொண்டுவரப்பட்ட தாவர வகைகள் பாதுகாப்பு மற்றும் உழவர்களின் உரிமைக்கான சட்டம்,ஏறக்குறைய காப்புரிமை சட்டத்தின் மறு வடிவமாகவே உள்ளது. முன்பே தெரிந்த ஒரு பயிர் வகையின் மூலக்கூறை அறிவியல் வளர்ச்சியின் மூலம் சிறிது மாற்றம் செய்தாலே அதை இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்து அந்த தாவரத்தை தனி உடைமை ஆக்கிக்கொள்ளலாம். இந்த சட்டத்தின் கீழ் ஒரு தாவரவகையை பதிவு செய்து கொண்டால் 15 ஆண்டுகாலம் அவரே அதற்கு முழு உரிமை பெறுகிறார். அவற்றின் உற்பத்தி, விற்பனை போன்றவை அந்த உரிமையில் அடங்கும்.

அக விதை, தாவரங்கள், மரம் எனத் எந்த வடிவமாக இருந்தாலும் ஏதாவது ஒரு சட்டத்தின் கீழ் அவற்றை பதிவு செய்துக் கொண்டு நிறுவனங்களின் தனி சொத்தாக மாற்றிக்கொள்ளும் வகையில்தான் இந்தியாவில் சட்டங்கள் உள்ளன.

இந்த பின்புலத்தில் தான் நாம் இந்திய-அமெரிக்க வேளாண்மை அறிவு முனைப்பு ஒப்பந்தத்தை அணுகவேண்டியுள்ளது.

இயற்கைவளங்களை கொள்ளை போக அனுமதித்தல்

உலகில் வேறு எங்கும் காண முடியாத அரிய குணங்கள் கடைத்த பல கோடி தாவரங்கள், மூலிகைகள், உயிரினங்கள் இந்தியாவில் உள்ளன. நம்முடைய மூதாதையர்கள் இக்குணங்களை கண்டறிந்து காலகாலமாக பலவிதங்களில் பயன்படுத்தி வந்து உள்ளனர். இதுபோன்ற இயற்கை வளங்கள் முதலாம் பசுமைப் புரட்சி காலக்கட்டங்களில் அமெரிக்காவால் திட்டமிட்டு கொள்ளையடிக்கப்பட்டன. தன்நாட்டில் விளையாத மஞ்சள், வேம்பு, புளி பாசுமதி போன்றவற்றுக்கு அமெரிக்க காப்புரிமை வழங்கியதை இதற்கு சான்றாகக் கூறலாம்.

உலகில் உள்ள மொத்த கால்நடை வகையில் 20 சதவீதம் இந்தியாவில் உள்ளன. இந்திய அமெரிக்க வேளாண்மை ஒப்பந்தம் கால்நடை வளர்ப்பிலும் மரபணுமாற்று தொழில் நுட்பத்தை பகுத்த பல கோடி ஒதுக்கியுள்ளது. குறுகிய காலத்தில் வளரும் மீன்கள், கொழுப்பு சத்தின்றி பால் சுரக்கும் பசுக்கள் எனப் பல ஆராய்ச்சிகள் இதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மரபணுமாற்றப்பட்ட பசுக்கள், மீன்கள், பன்றிகள்,கோழிகள் என பலவை ஏற்கனவே

உலகெங்கிலும் பன்னாட்டு நிறுவனங்களால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தான் விற்பனை செய்யும் இத்தகைய மரபணுமாற்று உயிரினங்களுக்கு இந் நிறுவனங்கள் காப்புரிமையும் பெற்றுள்ளன. இப்படிமரபணு மாற்றப்பட்ட கோழிகள் மூலம்தான் பறவைக் காய்ச்சல் பிற உயிரிகளுக்கும் மனிதனுக்கும் பரவுகின்றன.

மூன்றாம் உலக நாடுகளிலிருந்து இயற்கை வளங்கள் கொள்ளை போவதை தடுப்பதற்கும், இயற்கை வளங்கள் மீதான ஆராய்ச்சிகளை முறைப்படுத்தவும் 1992ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அவை தலைமையில் மாநாடு ஒன்று நடைபெற்றது. ஒரு நாட்டின் இயற்கை வளங்களை மற்றொரு நாடு ஆராய்கின்ற போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை உள்ளடங்கிய பல உயிரின ஒப்பந்தம் ஒன்று அந்த மாநாட்டில் வரையறுக்கப்பட்டது. இன்றுவரை இந்த ஒப்பந்தத்தை ஏற்காத அமெரிக்காவிடமிருந்து, இந்தியா எப்படி தன்னுடைய வளங்களை காக்க போகிறது என்பதை காலம்தான் கூறவேண்டும்.

பல்உயிரின ஒப்பந்தத்தின் அடிப்படையில் இயற்கை வளங்களையும், மூதாதையர்களின் அறிவுச் செல்வங்களையும் பாதுகாத்திட. இந்திய உயிரினவகை வேறுபாட்டுச் சட்டத்தை இயற்றியது. இந்த சட்டத்தின் சிறப்பம்சங்களாக இரண்டினை கூறலாம்.

நம்நாட்டு இயற்கை வளங்களுக்கு அறிவுசார் சொத்துரிமை வழங்குவதை முழுவதுமாக தடை செய்வது.

நம் மூதாதையர்களின் அறிவுச் செல்வங்களை ஆராய நினைப்பவர்கள் இந்த சட்டத்தின் கீழ் அமைந்துள்ள கமிட்டியிடம் அனுமதி பெற வேண்டும். இப்படி அனுமதி பெற்று ஆராய்ந்து கண்டுபிடிக்கும் பொருட்கள் மூலம் பெறப்படும் லாபத்தில் குறிப்பிட்ட பகுதியை இந்த செல்வங்களை இதுநாள் வரை பாதுகாத்து வந்த மக்களிடம் பகிர்ந்துகொள்ளவேண்டும்.

மறைமுகமாக இந்த சட்டம் நம் இயற்கை வளங்கள் கொள்ளை போவதை அனுமதித்தாலும் குறைந்தபட்சம் மக்களுக்கு இழப்பீடு என்ற கருத்தையாவது ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்விரு முக்கிய அம்சங்களையும் கண்டுகொள்ளாத இந்திய-அமெரிக்க வேளாண்மை ஒப்பந்தம் குறைந்தபட்ச இழப்பீடு கூட மக்களுக்கு கொடுக்க மறுக்கிறது.

இந்திய அமெரிக்க வேளாண்மை ஒப்பந்தத்தில் முக்கிய பகுதியாக இரு நாடுகளை சார்ந்த பல்வேறு பல்கலைக்கழகங்கள் கூட்டாக சேர்ந்து இயற்கை வளங்களின் உயிரியல் மரபணுவை ஆராய போகினறன. அமெரிக்காவின் இயற்கை வளங்களை இநதியப் பல்கலைக்கழகங்கள் ஆராய்வதற்கான வழிகள் எதுவும் ஒப்பந்தத்தில் இல்லாத நிலையில் இந்தியாவின் இயற்கை வளங்களே ஆய்வுகளுக்கு பயன்படுத்தப்படும் என்பதை கூறத் தேவையில்லை. இந்த ஆராய்ச்சி செய்கின்ற போது கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் கொண்ட பல்உயிரின ஒப்பந்ததை பற்றி ஒரு வரிகூட இந்திய அமெரிக்க வேளாண்மை ஒப்பந்தத்தில் இல்லை.

இப்படி நம்நாட்டு சட்டங்கள் மற்றும் பன்னாட்டு ஒப்பந்தங்களுக்கு எதிராக இயற்கை வளங்களை எளிதில் ஆராய்ச்சி செய்ய அனுமதி அளிப்பதன் மூலம் காலம்காலமாக இவற்றை பாதுகாத்து வரும் நம் மக்களிடமிருந்து இவற்றை அமெரிக்கா கொள்ளையடிக்க இந்த ஒப்பந்தம் துணைபோகிறது. அது மட்டுமல்லாமல் இப்படி ஆராய்ந்து (?) கண்டுபிடிக்கப்படும் பொருட்களுக்கு காப்புரிமை வழங்குவதன் மூலம் தற்போது பொதுச்சொத்தாக உள்ளஇயற்கை வளங்களை, அமெரிக்க மற்றும் பன்னாட்டுதனியார் நிறுவனங்களின் தனிச்சொத்தாக மாற்றுவதற்கு இந்த ஒப்பந்தம் அனுமதியளிக்கிறது.

நிறுவனமயமாகும் வேளாண்மை

இந்திய-அமெரிக்க வேளாண்மை அறிவு முனைப்பு ஒப்பந்தம் வேளாண்மை துறையை வணிகமயமாக்க அறிவுசார் சொத்துரிமையின் தேவையை வலியுறுத்துகிறது. குறிப்பாக வேளாண்மை துறையில் காப்புரிமையின் அவசியத்தை முன்வைக்கிறது. இந்திய-அமெரிக்க வேளாண்மை அறிவு முனைப்பு ஒப்பந்தம் நம் நாட்டு வேளாண்மை விஞ்ஞானிகளுக்கு அமெரிக்கா மரபணுமாற்று தொழில்நுட்பத்தின் அடிப்படையில் விவசாயம் செய்ய மட்டுமல்ல எப்படி காப்புரிமை பெறுவது என்பதையும் கற்றுக்கொடுக்க போகிறது. காப்புரிமை பெறுவது மட்டுமல்ல அதனை பன்னாட்டு மற்றும் இந்நாட்டு நிறுவனங்களிடம் எப்படி விற்பது என்பதையும் கற்றுக்கொடுக்கப்போகிறது.

இதற்காக அமெரிக்காவில் மட்டுமல்லாமல் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி மையம் கூட அறிவு சொத்துரிமைக்கான மேலாண்மை என்ற சிறப்புப் பிரிவை ஏற்படுத்தியுள்ளது. மேலும் காப்புரிமை உள்ளிட்ட அறிவு சொத்துரிமைச் சட்டங்கள் மீறப்படாமல் இருப்பதை கண்காணிக்க இந்தியா அமெரிக்கா இடையே ஒரு தனி ஒப்பந்தமும் ஆம் ஆண்டு கையெழுத்து ஆகியுள்ளது.

ஆக இந்திய விஞ்ஞானிகள் நம்நாட்டு விதைகளை எடுத்து அதன் மூலக்கூறுகளைஆராய்ந்து புதிய பொருட்களை கண்டறிந்து அதற்கு காப்புரிமை பெற்று அமெரிக்க நிறுவனங்களிடம் விற்பதற்கான இந்த ஒப்பந்தத்திற்கு நம் நாட்டு மக்களிடம் பெற்ற வரிப்பணம் சுமார் ரூபாய3500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.



இந்திய அரசியல் அமைப்பு சட்டம் குடிமக்களுக்க வழங்கி உள்ள பல அடிப்படை உரிமைகளில் உயிர் வாழ்வதற்கான உரிமை மிகவும் முக்கியமானது. உயிர் வாழ்வதற்கான உரிமை என்பது சத்தான உணவை உள்ளடங்கியது என்று உச்ச நீதிமன்றம் 80 களிலேயே கூறிவிட்டது.

இந்த ஒப்பந்தம், வேளாண்மை நிறுவனமயமாவதற்கு மட்டுமே உதவும். மரபணுமாற்று பயிர்களை பெரு நிறுவனங்கள் சிறப்பு பொருளாதார மண்டலங்களில் பயிரிட்டு ரிலையன்ஸ், பிரிஷ், வால்மார்ட் போன்ற விற்பனை கூடங்களுக்கு விற்பனைக்கு வைக்கப்போகின்றன. பல மாதங்கள் ஆனாலும் கெடாமல் இருக்க செய்கையாக நிறமூட்டப்பட்ட இந்த காய்கறிகளைத்தான் இனி நாம் உண்ணப்போகிறோம். இந்த விவசாய சிறப்பு பொருளாதார மண்டலங்களின் விவசாயம் செய்ய புாதய வகை விவசாய கூலிகளையும் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்போகிறது. காப்புரிமை பெற்ற இப்பயிர்களை விவசாயிகள் அதிக விலைகொடுத்து பயிர் செய்யவேண்டும். மேலும் மலட்டுத்தன்மை மிக்க இந்த பயிர்கள் மீது விவசாயிகளுக்கு எந்த உரிமையும் இருக்கபோவதில்லை. ஆக உணவு உற்பத்திக்கே நாம் இனி நிறுவனங்களை தான் நம்பியிருக்க வேண்டும்.

அகமத் ஃபராஸ்


சிறந்து உருதுக்கவிஞர்களுள் ஒருவரான அகமத் ஃபராஸுக்கு எழுதப்பட்ட திறந்தநிலை கடிதம் இது.

1931ல் பாகிஸ்தானில் பிறந்த ஃபராஸ் ஒரு விரிவுரையாளர். கஜல்கள் இயற்றுவதில் வல்லவர். ஃபராஸ் என்றும் புனைப்பெயர் கொண்டுள்ள இவரின் இயற்பெயர் சையத் அஹ்மத் ஷா.

அமெரிக்க மருத்துவமனையொன்றில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தபோது, எழுதப்பட்ட கடிதம் இது. ஆகஸ்டு 25, 2008ல் இஸ்லாமாபத்தில் அவர் மரணமடைந்தார்.

இக்பால் மற்றும் ஃபையஸ் அஹ்மத் ஃபையஸ் ஆகியோருக்கு இணையாகக் கருதப்படும் ஃபராஸ் பொதுமக்கள் வெகுவில் புரிந்து கொள்கின்ற கவிஞர். அவருக்கு கிஷ்வர் நகித் (பெண் கவிஞர்) எழுதிய திறந்த நிலை கடிதம்

தமிழி ல் - சா.தேவதாஸ்.



24 ஆகஸ்டு 2008

அன்பான ஃபாரஸ்,

1964இல் யூஸஃப் லோதியின் (சில ஆண்டுகளுக்கு முன் இறந்து போன பெரும் கேலிச்சித்திரக்காரர்) பெஷாவர் அலுவலகத்தில் நாம் சந்தித்தோம். அன்றிரவு அரசியல், இலக்கியம், குறித்து பேசினோம். சமகால எழுத்தாளர்களைக்

கிண்டலடித்தோம். அதுதான் நமது நட்பின் தொடக்கம். நீங்களும் என் கணவர் யூஸுஃப் காம்ரனும் நெருக்கமாக வளர்ந்தீர்கள். நீங்கள் இருவருமே மிகவும் வசீகரமானவர்கள். உங்கள் இருவருக்கும் பெண்கள் எப்படிக் கடிதங்கள் எழுதுவார்கள் என்பது எனக்குத் தெரியும். அப்போது தொலைபேசி பரவலாக இல்லை. பாகிஸ்தான் தொலைக்காட்சியில் மற்றும் என்னும் புகழ்பெற்ற நிகழ்ச்சிகளை யூஸுஃப் நடத்திக்கொண்டிருந்தார். தொலைக்காட்சியில் "சுகன்வார் மற்றும் தஸ்தன் கோ" நீங்கள் தலைசிறந்த கவிஞராக அறிமுகப்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தீர்கள். புகழ்வாய்ந்த பாடகர் ஒருவர் உங்களது கஜல் "யே ஆலம் கா தேகா ந ஜய்" யை பாடியபோது, வெட்கங்கொண்ட இளைஞராக நீங்கள், தோற்றமளித்ததைப் பார்வையாளர்கள் இன்னம் நினைவு வைத்துள்ளனர். மோதிரங்கள் அணிந்த விரல்கள் கொண்டிருந்த பாடகி தன் சாதனையில் பெருமிதத்துடன் தோற்றமளித்துக்கொண்டிருந்தார். ஆம். அச்சிறிய பொறியினை சீக்கிரமே அவளது தாய் சாம்பலாக்கிவிட்டார்.

ஃபராஸ் தேசிய மையத்தில் (அரசின் கலாசார மையம், இப்போது செயல்படவில்லை) என் சகாவாக இருந்தீர்கள். நான் லாகூரிலும், நீங்கள் பெஷாவரிலும் நியமிக்கப்பட்டோம். 1974இல் இஸ்லாமாபாத்திற்கு மாற்றிக்கொண்டீர்கள். மீண்டும் தீவிரமும் திளைப்பும் மிக்க காதல்பொறி. ஒரு மஜ்னுவாக இருந்த போதிலும், ஒரு கவிஞன், கண்ணியத்துடன் இருக்கவேண்டும் என்னும் பிரக்ஞை கொண்டிருந்தீர்கள்.

ஒரு பக்கத்தில், உங்கள் இரண்டாவது கவிதைதொகுதி "தர்த் ஆசாப்"ற்குப் பின் உங்கள் செல்வாக்கு அதிகரித்துக்கொண்டிருந்தது. இன்னொரு பக்கத்தில், உங்களுக்கு ஒரு வீடு கட்டிக்கொள்ள தீர்மானித்தீர்கள். கவிதை உங்களைச் செல்வந்தராக்கியதில் நீங்கள் அதிருஷ்டசாலி. வேறெந்த கவிஞரும் அவ்வளவு அதிருஷ்டசாலி இல்லை என்று நீங்கள் அடிக்கடி கூறிக்கொண்டது போல. முப்பதாண்டுகளில் அதிகபட்சமான பதிப்புரிமைத் தொகையினைப் பெற்றீர்கள் உங்கள் கவிதைகள் நன்கு விற்றன. கூட்டத்திலுள்ளவர்கள் உங்கள் கவிதை வரிகளை திரும்பத்திரும்ப உச்சரிக்க, உங்கள் கவிதையை எடுத்துரைத்தபடி, உலகினை வலம் வந்துள்ளீர்கள். பதின்பருவப் பையனோ, பெண்ணோ உங்கள் கவிதையை அனுபவிப்பது போலவே, முதியவனும் அனுபவிக்கின்றான்.

ஒருமுறை, சர்வதேச மகளிர் தினத்தின்போது, நீங்களும் நானும் தலைமை விருந்தினர்கள். எனக்குப்பின் நீங்கள் கவிதை வாசிக்கத் தொடங்கியதும், ஆவேசமிக்க தாஹிரா அப்துல்லா ஆட்சேபித்தார். பெண்கள் குறித்த கவிதை எங்களுக்கு வேண்டும் என்றார். எல்லாக்கவிதையும் பெண்களைப் பற்றியதே என்று சட்டென்று குறிப்பிட்டீர்கள். ஃபராஸ் தலைச்சிறந்த நகைச்சுவையாளர் முஸ்டாக் யூஸுஃப் கூட உங்கள் வேடிக்கைப் பேச்சு மற்றும் பதிலடிகளால் ஈர்க்கப்பட்டுவிடும் அளவுக்கு உங்கள் நகைச்சுவை உணர்வு குறிப்பிடத்தக்கது.

இரண் காரணங்களுக்காக என்னால் 1977னை மறக்கவே முடியாது. இஸ்லாமாபாத்தில் ஒரு நிகழ்ச்சியின்போது கொலைகார அடியாட்கள் (பெஷாவர க்வாடிலோ) னை நீங்கள் வாசித்த வேளை ஒரு காரணம். அதிகாலை இரண்டு மணிக்கு, வெள்ளை உடை உடுத்தியவர்கள் (அவர்கள் ஏன் எப்போதும் வெள்ளை உடையில் வருகின்றனர் என்று எனக்குத் தெரியவில்லை) வீட்டுக்குள் நுழைந்து உங்களை இராணுவ ஜீப்பில் தூக்கிப்போட்டு விரைந்தனர். சில தினங்களுக்குப்பின் வழக்குரைஞர்ஆபித் ஹாஸன் மிண்டோவுடன் ஆலோசித்துவிட்டு 15 நாட்களாக ஃபராஸைக் காணவில்லை என லாகூர் நீதிமன்றதல் வழக்குப்பதிவு செய்தோம். அன்று நீதிபதி ஸஃல்லா வழக்கினை விசாரித்தார். இரண்டு தினங்களில் இராணுவம்

ஃபராஸை ஆஜர்படுத்தவேண்டும் என்று உத்தரவிட்டார். எங்களால் எவ்வளவு எழுத்தாளர்களைத் திரட்ட முடியுமோ அவ்வளவு பேரையும் அன்றைக்குத் திரட்டுமாறு என்னையும் சைஃபையும் கேட்டுக்கொண்டார். ஃபராஸ், யாரும் நம்பமாட்டார்கள் காஸ்மி சாஹிப்பிலிருந்து எழுத்தாளர் என்று சொல்லத்தக்க ஒவ்வொருவரும், அன்றைக்கு உயர்நீதிமன்றத்தில் இருந்தனர். பொலிவிழந்தும் மெலிந்தும் போயிருந்த, உங்களைக் கண்டதும் அன்றுநான் அலறிவிட்டேன். இராணுவப் பாதுகாப்புடன் அழைத்துவரப்பட்டீர்கள். நீங்கள் ஏன் காவலில் அடைக்கப்பட்டீர்கள் கைது செய்யும் ஆணை எதனையும் பார்த்தீர்களா என்று நீதிபதி வினவினார். நீங்கள் இல்லை என்றதுமே, ஃபராஸ் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று சீற்றத்துடன் அறிவித்தார். பாகிஸ்தனின் இராணுவ தளபதி ஜெனரல் ஜியாவுல் ஹக் முன் அத்தீர்மானம் வைக்கப்பட்டது. அது ஜுன் *27, 1977*

ஃபராஸ், உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? பூட்டோவை ஆதரிப்பது எவ்வளவு முக்கியமானது என்று உங்களை நம்பச் செய்வதற்காக ஜெனரல் உங்களிடம் பேசினார். இரண்டு வாரங்களுக்குள் ஜுலை *5, 1977* அன்று அதே ஜெனரல் பாகிஸ்தானை இராணுவ ஆட்சிக்குள் கொண்டுவந்தார் *1977*னை மறக்க முடியாததற்கு இது இன்னொரு காரணம்.

அட்டாக் கோட்டைச் சிறையில் நீங்கள் இருந்தபோது, இருண்டதும், மோசமானதுமான கீழ்த்தளத்தில் வைக்கப்பட்டிருந்ததையும், முகம் புலப்படாத வகையில் ஒரு கையினால் நீட்டப்படும் சாப்பாட்டுத் தட்டையும் பற்றியும் எங்களுக்கு கூறினீர்கள்.

உங்கள் கைதுக்கு பூட்டோவின் அனுமதி இருந்தது என்று எங்களுக்கு தெரிய வந்ததால் நான் பேஹம் பூட்டோவிடம் பேசினேன். கணவருடன் இதுபற்றி பேசுவதாக அவர் உறுதியளித்தார். மறுநாள் தொலைபேசியில் அவரை நான் அழைத்தபோது, அவரும் ஆத்திரங்கெண்டார். நாங்களனைவரும் தனது ஆதரவாளர்களாய் இருந்ததை பூட்டோ குறிப்பிட்டதை அவர் தெரிவித்தார். பிறகேன் ஃபராஸ் அவரை இத்தகு நெருக்கடிக்குக் கொண்டுவந்திருந்தார்? உங்களை விடுவிக்குமாறு பூட்டோவை சம்மதிக்க குழம்பிப் போனோம். நூர்ஜஹான் சீமாட்டி உங்களின் அபிமானி என்பதால், மசூத் அஸாருடன் சேர்ந்து அவரைப் பார்க்கப்போனேன். அவர் கருப்பு ராணி பூட்டோவுடானான அவரது நெருக்கம் ஒவ்வொருவரும் அறிந்ததே நெருங்கிய தோழி என்பதும் எங்களுக்குத் தெரியும். நிறைய விவாதித்த பிற்பாடு சீமாட்டி கராச்சி சென்று உங்களை விடுவிக்க பூட்டோ உத்தரவிட வேண்டுமாறு கருப்பு ராணியை மன்றாடினார்.

ஃபராஸ், *1978*ல் கராச்சியில் உங்களின் கீர்த்திமிகு கவிதை முஷைராவில் வினை எடுத்துரைத்துக் கொண்டிருந்தீர்கள். அன்று நள்ளிரவே கராச்சியிலிருந்தும், சிந்துவிலிருந்தும் உடனடியாக நீங்கள் நாடு கடத்தப்பட்டிருந்தால் உங்களை எழுப்பிக் கிளப்புமாறு செய்தனர். நீங்கள் விரக்தியுற்று நாடு நீங்கிச் சென்று, உங்கள் சகோதரருடன் லண்டனில் ஆறுவருடங்கள் தங்கினீர்கள். நீங்கள் இங்கிலாந்திலிருந்தும், ஃபெஹ்மிதா ரியாஸ் இந்தியாவிலிருந்தும் திரும்பி வந்ததை லாகூரில் நாங்கள் கொண்டாடினோம். திரும்பவும் நாம் சேர்ந்திருந்தோம். ஆனால் அரசாங்கப் பணிகளின் நிமித்தம். புது வித உறவுநிலைகள் உண்டாயின. நீங்கள் அரசின் ஒரு துறைத் தலைவராகவும், ஃபெஹ்மிதா தேசிய புத்தக நிறுவனத்தின் நிர்வாக இயக்குனராகவும் நியமிக்கப்பட்டீர்கள்.

அதே நிறுவனத்தில் அதன் நிறுவனர் ஸுல்பிஹார் அலி பூட்டோவால் நீங்கள் தலைவராக்கப்பட்டது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? நீங்கள் இராணுவத்திற்கு

எதிராகப் பேசியதால் பர்வேஸ் முஷாரப் ஆத்திரப்படும்வரை அரசாங்க வேலைக்கான நாட்டம் உங்களிடம் இருந்தது. அப்போது சாதாரண மனிதன் போல நீங்களும் உங்கள் உடைமைகளும் உங்கள் இல்லத்திலிருந்து தூக்கி எறியப்பட்டீர்கள். பத்திரிகைளும் எழுத்தாளர்களும் எதிர்ப்பு தெரிவித்தும் எதுவும் நிகழவில்லை.

2007-08ல் நீதிபதிகளை மீண்டும் நியமிப்பதற்கான ஊர்வலத்தில் நாம் சேர்ந்து சென்றது நினைவிருக்கிறதா? சார்புநிலை இல்லாத பல இளம் எழுத்தாளர்கள் உங்கள் அறிவுரைப்படி, ஊர்வலங்களில் பங்கேற்றனர். ஃபராஸ் உங்களைப்பற்றியோ வெவ்வேறான பிரச்சினைகள் குறித்தோ, சர்சைகளைக் கிளப்பிவிடுவதில் உங்களுக்கு நாட்டம் இருந்திருக்கிறது. திருமணத்திற்கு எதிராக நின்று ஓர் ஒப்பந்தம் மூலமான வேசித்தனமே அதுவும் என்று நீங்கள் பேசியது ஞாபகமிருக்கிறதா? எவ்வளவு பத்திரிக்கைகளும் அடிப்படை வாதிகளும் உங்களுக்கு எதிராய்பேசினர் நீங்கள் தொடங்கிய இன்னொரு சர்ச்சை, உருதுமொழி தொடர்பானது. உருது இறந்து கொண்டிருக்கும் மொழி என்றீர்கள். ஒட்டுமொத்த முட்டாஹிட குவாமி இயக்கமும் (பாகிஸ்தானில் உருதுபேசுவோர் கட்சி) பல எழுத்தாளர்களும் உங்கள் மீது ஆத்திரப்பட்டனர். இராணுவத்திற்கு எதிராகவும் பேசினீர்கள். ஆனால் நான் ஆளும் குப்பலுக்கு எதிரானவனே அல்லாமல், இராணுவ வீரனுக்கு எதிரானவன் இல்லை என்று உங்கள் வார்த்தைகளை மாற்றிக்கொண்டீர்கள்.

நீங்கள் சர்வதேச அளவில் செல்வாக்குப் பெற்றுள்ளீர்கள். உலகின் எந்த மூலையில் கவியரங்கத்திற்கு அழைத்தாலும், மறுதலிக்காது உங்களுக்குரிய விதத்தில் ஏற்றுக்கொள்கிறீர்கள். பதிப்பகங்களிடமிருந்து பதிப்புரிமைத் தொகை பெறுவதை எழுத்தாளர்கள் உணர்ந்து கொள்ளுமாறு செய்துள்ளீர்கள். சட்ட விரோதப் பதிப்பாளர்கள் மீது போலீஸ் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தியுள்ளீர்கள். எழுத்தாளர்கள் தம் சுயமரியாதையினை உணரச் செய்திருக்கிறீர்கள். நீங்கள் போலியானவர் என யாரும் உங்களைக் குற்றஞ்சாட்ட இயலாது. உங்களின் காதல் விவகாரங்கள் குறித்து ஒருபோதும் நீங்கள் அவமானங்கொண்டதில்லை, அதுபோலவே உங்களின் குடி விருந்துகள் தொடர்பாகவும் சமாதானங்கள் சொன்னதில்லை.

ஃபாரஸ் நீங்கள் பாடகர்களுக்குப் பிடித்தமானவராக இருந்திருக்கிறீர்கள். கல்லூரிகள் அனைத்திலும், கவிதையே வாசித்திராத பெண்கள் உங்கள் பாடல் வரிகளை எடுத்துரைத்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் உங்கள் ஆட்டோகிராபை விரும்பினர். உங்கள் வயதைக் கருத்தில்கொண்டு உங்களை மாமா என்று யாரும் குறிப்பாக பெண்கள் - அழைப்பதை விரும்பியிருக்க வில்லை. ஒவ்வொருவருக்கும் நீங்கள்ஃபராஸ் சாஹிப். உங்களை விரும்பாதவர் யார் மற்றும் ஒவ்வொருமாலையிலும் கையில் கிளாஸுடன் இருக்கும் உங்களை ஞாபகத்தில் வைத்திருக்காதவர் யார்? என் சிநேகிதரே சியர்ஸ்! உங்கள் ஆட்டங்கள் ஒருபோதும் கீர்த்தியும் நேர்த்தியும் இல்லாது இருந்ததில்லை. இன்னும் நீங்கள் எங்களின் பிரியமானவரே.



அன்புடன்
கிஷ்வர் நஹீத்

14.06.08 அன்று இறந்து போனவனை நினைவுப்படுத்துவதற்கு ஒருவருமில்லை...

லக்ஷ்மி சரவணகுமார்



வெறும் உடல்தான். ஆறுமணி நேரத்திற்கு முன்பாக தன் இயக்கத்தை நிறுத்துக் கொண்ட அவ்வுடலின் நிறம் இன்னதென்று அனுமானிக்கவியலாதபடி அடர்த்தியாகிக் கொண்டிருந்தது. கருமையும், சாம்பலும் கலந்த ஒரு வினோத வர்ணத்தில் முன்பாக அவ்விடத்தினை முழுமையாய் ஆக்கிரமித்து விட்டிருந்த துர் வாடையில் சவமாகிப்போன இவ்வுடலின் வீச்சமும் கரைந்து போய்விட்டிருந்தது. இறந்து கிடந்தவனின் முகத்தில் பல நாட்களாக மழிக்காமலும், பராமரிக்கமாலும் விட்டுப்போன சிண்டு பிடித்த மயிர், குருவிக்கூட்டினை நினைவுப்படுத்துகிறபடி சுருள் மயிர்கள் அடர்ந்த தலை சற்றே சப்பணிந்ததாக இருந்தது.

மாநகரின் நெரிசல்மிக்கப் பகுதியினை இணைக்கும் அந்த பாதாள நடைபாதையில் அதற்கு முந்தைய தினம் வரையிலும் அவன் மகிழ்ச்சியாகவே இருந்தான். உடன் தன் சகாக்கள் இரண்டு பேரோடு. அந்த நடைபாதையின் இடதுபக்க எல்லையில் ஒரு மருத்துவக் கல்லூரி இருந்ததால் பதின் பருவப் பெண்களும், பையன்களும் மிக அதிகமாக நடமாடியபடியே இருப்பார்கள். அவசரம் நிறைந்த மனித முகங்களையே அதிகம் பார்க்க முடிந்தவர்களால் மனம் வருந்துபவன், எதற்காக இவ்வளவு அவசரம்? என யாரையாவது நிறுத்துக் கேட்கலாமாவென நினைப்பான். மனித எண்ணிக்கையின் எந்த அடிப்படையிலும் சேராதவர்களாய் சராசரி மனிதர்கள் அவ்விடத்தை கடந்து போவார்களேயன்றி நின்று பேசிவிட்டுப் போகிற அளவிற்குப் பைத்தியக்காரர்களில்லை.

அவனும், அவனுடைய நண்பனொருவனுமாய் இனி இவ்விடமே கதியென தஞ்சமடைந்தது சரியாக என்ன தேதி, வருடம் என்கிற விவரங்களேதும் இருக்கவில்லை. சுங்கு என்றுதான் இவன் அவனைக் கூப்பிடுவான். சுங்குவால் கொஞ்சம் நடக்கமுடியும், கை சரியாக வராது. சுங்கு இவனை சப்பட்டை என்றுதான்

கூப்பிடுவான. தலையின் அமைப்பு காரணமாய் இந்தப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். சப்பட்டைக்கு ஒரு கண்ணில் பார்வையில்லை என்பதோடு கால்களும் ஊனம். இருப்பினும் நெரிசல் மிகுந்த அந்த நடைபாதைக்கு அவர்கள் இருவர் மட்டுமே அதிபதியாய் இருந்தனர் நெடுநாட்கள் வரையிலும். துவக்கத்தில் சில நாட்கள் பெரு வியாபாரிகள் சிலர் மாங்காய், வெள்ளரி விற்பதற்காகவோ, கைக்குட்டைகள் விற்பதற்காகவோ நடைபாதைக்குள் கடைவிரிப்பதுண்டு. நாளுக்கு நாள் நாற்றமெடுக்கத் துவங்கின. அவ்விடத்தில் வியாபாரம் செய்வது அவ்வளவு எளிதல்ல என்பதை உணர்ந்தவர்களாய் யாவரும் அங்கு வருவதை நிறுத்திக் கொண்டனர். அதன்பிறகு இவர்கள் இரண்டு பேருக்கு மட்டுமேயான இடமாக அவ்விடம் மாறிவிட்டிருந்தது. இரண்டு பக்க படிகளுக்கும் அருகாமையில் இல்லாமல் மையமான ஓரிடத்தில் போகிற வருகிறவர்களை எல்லாம் பார்க்கிற விதமாக நியூஸ் பேப்பரை விரித்து அமர்ந்துகொள்வார்கள்.

முன்னால் ஒரு துணி விரிக்கப்பட்டிருக்கும் விருப்பப்பட்டவர்கள் பிச்சையிடுவதற்காக. சுங்கு சங்கீதக்காரன். ஆண்டிகள் பாடும் பாடல்கள் அரையும் குறையுமாய் சில தெரியும். எப்பொழுதாவது சந்தோசமாக இருந்தாலோ, அல்லது சோகமாய் இருந்தாலோ உரத்த குரலில் பாடுவான். தனியாக சென்றிருந்தால் ஆண்டிகளைப் போன்ற தகுதியான பிச்சைக்காரர்களில் ஒருவனாயிருக்கலாம். சப்பட்டையின் மீது கொண்ட ப்ரியத்தின் காரணமாய் அவனை விட்டு எங்கும் செல்லவில்லை.

சராசரி மனிதர்களின் வாழ்க்கை குறையைப் பற்றின எந்தவித அக்கறையும் கொள்ளாதவர்களுக்கு, தங்களுக்கெனஓர் வாழ்க்கை முறை இருந்தது. அதில் அவர்கள் சிரத்தையாகவும், உண்மையாகவும் இருந்தனர். விருப்பப்பட்ட நேரத்தில் உறங்கி, விருப்பப்பட்ட நேரத்தில் விழித்து என எல்லாவற்றையும் இஷ்டம் போல் செய்பவர்கள். மலங்கழிப்பதை மட்டும் அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் முடித்து விடுவதுண்டு. சுவற்றையொட்டி ஒரு நீளமான காகிதத்தை விரித்து அதன் மேல் முதலில் சப்பட்டை மலம் கழிப்பான். அவ்வளவு எளிதில் அவனால் மலங்கழித்துவிட முடியாது. சுங்குவின் தோளைப்பற்றியபடியே முக்கி, முக்கி இருந்து கொண்டிருப்பான். அவன் மலம் கழித்த காகிதத்தை மடித்து வைக்கிற போதே இன்னொரு காகிதத்தால் பிருஷ்டத்தைத் துடைத்துக்கொள்வான். பிறகு அதே போல் இன்னொரு காகிதத்தினை விரித்து சுங்கு மலங்கழித்து மடித்து வைப்பான். பின்பு இரண்டையும் எடுததுக்கொண்டு வெளியேறிச் சென்று சிறிது தூரத்தில் உள்நோக்கிச் செல்லும் ஒரு தெருமுனையில் கொட்டப்பட்டிருக்கும் குப்பையில் போட்டு வருவான். சிறுநீர் கழிப்பதை பற்றி பெரிதாக பிரச்சினை ஒன்றமில்லை. நடைபாதையின் ஒரு எல்லையில் போய் கழித்துவிடுவார்கள். சுங்குவின் உதவியின்றி தன்னால் எந்த வேலையும் செய்ய முடியாது என்கிற அளவிற்கு சப்பட்டை முழுக்க அவனின் சரிபாதியாகிப் போனான். எப்பொழுதாவது சோகமாய் இருக்கும் பொழுது சப்பட்டை தன் சிறுவயதுக் கதைகளை அவனிடம் சொல்வான். அவனை பிச்சை எடுக்க வைப்பதற்காக வாங்கிப் போனவன் அவ்வப்பொழுது காசு திருடுகிறான் என்பதற்காக கண்டிக்கும் விதமாய் குண்டியில் சூடு போட்டான். அதற்கும் கட்டுப்படாமல் திருடவே ஒரு கண்ணை மட்டும் நோண்டி எடுத்துவிட்டதை துயரம் படர்ந்த குரலில் கூறுவான். குண்டியில் பட்ட தழும்பும் கூட இன்றும் மாறாமல் அப்படியே இருக்கிறது. சுங்குவைப் போல் அவனொன்றும் அனாதையுமில்லை. அப்பா குதிரை வண்டி ஓட்டுபவராய் இருந்தார் ராமேசுவரம் ரயிலடிக்கும் கோயிலுக்குமாய் அம்மா, அப்பாவிற்கு தெரிந்து கூலி வேலை பார்த்தது. அவருக்குத் தெரியாமல் தாசி வேலை பார்த்தது. வீட்டிலேயே கிடக்கிற இவனால்

அவ்வப்பொழுது ஏராளமான பிரச்சினைகளை சந்திக்க நேர்ந்ததால்தான் மதுரைக்கார ஏஜெண்ட் ஒருவனிடம் விற்றுவிட்டது.

பிறகு பழநிக்கும், திருவண்ணாமலைக்கும் மாறி, மாறி அனுப்பப்பட்டவன் ஒரு கட்டத்தில் திருவண்ணாமலையிலே இருந்துவிட, அதன்பிறகுதான் சுங்குவை சந்திக்க நேர்ந்தது.

சுங்குவிற்கு தான் பிறந்தது, வளர்ந்ததைப் பற்றியெல்லாம் அதிகமாக ஒன்றும் தெரியாது. மூன்று, நான்கு வயதில் திருச்சி தில்லைநகர் பேருந்து நிலையத்திற்குப் பின்புறம் அழுகிப்போன குப்பை மேட்டிற்கு அருகில் குப்பையோடு குப்பையாகக் கிடந்தவனை சாமி ஒன்று தன்னுடன் தூக்கி வந்து திருவண்ணாமலையில் போட்டுவிட்டது. அடிக்கடி அவன் ஆயிருந்து வைத்து இடத்தை அசுத்தப்படுத்துகிறானென்று சாமியுடன் இருந்தவர்கள் சங்கடப்பட, வழியின்றி அவனைப் பிச்சைகாரர்களிடம் கொடுத்துவிட்டார். அதன்பிறகு சகல ஊட்டச்சத்துக்களும் கொடுத்து அவன் வளர்க்கப்பட்டான். அதன்பிறகும் கூட அவ்வப்போது சாமி இவனை வந்து கவனித்துவிட்டுச் செல்ல தவறுவதில்லை. சாமியுமே கூட முழுமையான சாமியெலலாம் ஒன்றுமில்லை. படுமோசமான ஆசாமிதான். இரவுகளில் தன்னை மறந்து உறங்கும் பிச்சைக்காரர்களின் தட்டிலிருந்து சில்லரை திருடுகிற பழக்கம் அவருக்கு இருந்ததை இவன் மட்டுமே அறிவான். அங்கிருந்த சாமிகள் பாடி, பாடிக் கேடடவைதான் இவன் பாடுகிற பாட்டுகளனைத்தும். சப்பட்டையும் வந்த பிறகு அவனுக்காகவே காத்திருந்தது போல் அவனோடு சங்கமித்துவிட்டான்.

பதிமூன்று, பதினாலு வயதிருக்கும் முதல்முறையாக அவர்கள் சந்தித்துக்கொண்ட பொழுது. அதன்பிறகு இரண்டு, மூன்று வருடங்கள் இரண்டுபேரும் ஒன்றாகவே திரிந்தனர். ஒரு வெள்ளிக்கிழமையன்று குடும்பத்தோடு கோயிலுக்கு வந்திருந்த இளம்பெண்ணொருத்தி வரிசையாக ஒவ்வொரு ஆளிற்குமாய் சில்லரைப் போட்டுககொண்டு வந்தாள். அவளுக்குப் பின்புறமாக அவளுடைய தங்கை என்று சொல்லக் கூடிய அளவிற்கு இன்னொரு பெண்ணும், இரண்டுகுழந்தைகளும், உடன் துணைக்கு இரண்டு ஆண்களுமாய் வந்து கொண்டிருந்தனர். சப்பட்டையை நெருங்கி அவள் குனிந்த போது, எதிர்பாராத விதமாய் இவன் அவள் முலைகளில் ஒன்றைப் பிடித்து அமுக்கிவிட்டான். சில நொடிகள் என்ன நடக்கிறதென்பதை யூகிக்க முடியாமல் யாவரும் திகைத்து நிற்க ஆ ஊவென அப்பெண் கத்தத் துவங்கிவிட்டாள். சுற்றியிருந்த யாவரும் ஓடிவந்து சராமரியாக உதைக்கத் துவங்கிவிட்டனர். அருகிலிருந்த சுங்கு அவனைப் பாதுகாக்கும் பொருட்டு குறுக்கே போக சரிபாதி அடியில் இவனுக்கும் விழுந்தது. வந்தவளின் முலையைப் பிடித்து இழுத்தது இவன் குற்றமா என்ன? கனத்த, உருண்ட உடலோடு குனிந்து, குனிந்து வந்த அப்பெண்ணின் உடலில் மயங்கிப் போனவன் இப்படிச் செய்துவிட்டான். இரண்டு பேருக்கும் உடல் முழுக்கக் காயம்பட்டு உதிரம் வழிந்து கொண்டிருந்தது. சோர்ந்து போகும் வரை அடித்துத் துவைத்துவிட்டு சுற்றியிருந்தவர்கள் சென்றுவிட்டனர். உடனிருந்த தொழிலாள நண்பர்களும் இவர்களைப் புறக்கணித்து ஒதுங்கிவிட அன்றைய இரவில் வலியையும் மீறி சுங்கு சப்பட்டையிடம் கேட்டான்.

உனக்கேன்டா இப்பிடியொரு கெட்ட எண்ணம்? அவளோடத புடிக்கப் போறயின்னு முன்னயேசொல்லியிருந்தேன்ன, பின்னாடி வந்தவளோடது நான் புடிச்சிருப்பேனுல்ல என்று சப்பட்டை வெட்கப்பட்டு சிரித்துக் கொண்டான்.

செரி. எப்படி இருந்திச்சி பிடிச்சப்பம்? எனக் கேட்கவும்,எளவு ஒரு கையில அடங்கல பாத்துக்க. நல்ல பெருசா மொசக் குட்டியாட்டம் வெது வெதுன்னு சூடா

இருந்திச்சி. இப்படிச் சொல்லவும் அதிர்ஷ்டக்காரண்டா நீ அவன் தொடையில் தட்டிச் சிரித்தான். பாதி இரவு தாண்டிய பிறகும் உறக்கம் பிடிக்காமல் அடிக்கடி கையை விரித்துப் பார்த்துக்கொண்டே இருந்தான் சப்பட்டை.

அடுத்த நாளிலிருந்து அவ்வளவு பெரியக் கூட்டத்தில் அவர்கள் மட்டும் விலக்கப்பட்டவர்களாகிப் போனார்கள். இப்பொழுதுதான் அவர்கள் தங்களை சுதந்திரமானர்களாக உணர்ந்தனர். தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிற அளவிற்கு வந்த வருமானத்தில் மிச்சம் பிடிக்கவும் பழகியிருந்த அவர்களுக்கு மிச்சப்படுத்துகிற பணத்தில் செய்வதற்கென ஏராளமான கனவுகள் இருந்தன. ஒரு நாளேனும் பெரிய ஹோட்டலுக்குச் சென்று சேரில் உட்கார்ந்து சாப்பிடுவது. தியேட்டரில் போய் படம் பார்ப்பது. வாய்ப்பிருந்தால் ஒரு விபச்சாரியை புணர்வது என சிறியதும், பெரியதுமாய் நிறையவே இருந்தன அந்தக் கொஞ்சப் பணத்தை செலவழிப்பதற்கு, சாப்பிடுவதற்கு கடைகளில் சென்று மிச்சம் மீதிகளை வாங்கி வருவதும், தண்ணீர், பீடி, டீ போன்றவற்றை வாங்கி வருவதும் சுங்குதான். சப்பட்டை வெளியில் எங்கும் போகமாட்டான். மிக அரிதாக குளிக்கப் போகும் நேரங்களைத் தவிர. அவர்களிருவருக்குமான உலகம் அவர்களிலிருந்து துவங்கி அவர்களுடனேயே முடிந்துவிடுவதாய் இருந்தது.

பகல் நேரங்களில் கோயிலுக்கு வந்து போகிற பெண்களின் உடலை பார்வையாலேயே புணர்வதும், அதைப்பற்றின உரையாடல்களை வளர்ப்பதும்தான் அவர்களின் பிரதான ஜோலி. உடைகளையும் மீறி உடல்கள் ஏற்படுத்தி விடுகிற தாக்கம் ஒருபோதும் அவர்களால் புரிந்து கொள்ள முடியாதவொன்று. ஒரு பெண்ணின் வாசனை, சேலை நுனிதீண்டல், வசீகரமான புன்னகை என எவ்வளவோ விஷயங்களை மிகத் தீவிரமாகக் கவனித்து அவர்கள் பதிவு செய்தபடியே இருந்தனர் மனவெளியில். ஒரு நாள் மாலையில் கடைக்கு சென்று திரும்பின சுங்கு ஏழெட்டு மடிப்புகளாக ஒரு புத்தகத்தை ரகசியமாக அவனிடம் எடுத்துக்காட்டினான். எழுத்துக்கள் எதுவும் இல்லாத அப்புத்தகத்தில் முழுக்க, முழுக்க உருவங்கள்தான். நிர்வாண நிலையில் இணைந்தும், பிணைந்தும் கிடக்கிற ஆண், பெண் உருவங்கள். பல நாட்கள் வரை அந்தப் புத்தகம் நிறம் மங்கிப் போனபிறகும் கூட பாதுகாத்து வந்தனர். அந்தப் புத்தகம் கிடைத்திருந்த மூன்றாவது நாளில்தான் அவர்களிருவருக்குமான வேறு ஒரு உறவு துவங்கிவிட்டிருந்தது. சக தொழிலாளி நண்பர்கள் படுத்திருந்த இடத்திற்கு சற்றுத் தள்ளிப் படுத்திருந்த இவர்கள் பேசியபடியே ஒருவர் மாற்றி ஒருவர் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தனர். சுங்குவின் உடலைத் தடவிக் கொண்டிருந்த சப்பட்டை மிகுந்த ஆர்வத்தோடு அவன் குறியினைப் பிடித்து அமுக்கிவிட்டான். இவன் கைபட்ட சில நொடிகளிலேயே எதிர்பாராத பிரம்மாண்டத்தினை பெற்றுவிட்டிருந்தது அவனுடைய குறி. நெருக்கம் அதிகமாகிவிட இருவரும் மூர்க்கமாக அணைத்து முத்தமிட துவங்கினர். மிகுந்த தீவிரத்தில் அவர்கள் புணர்ந்து கொண்டிருந்த சப்தம் அருகில் படுத்திருந்தவர்களின் தூக்கத்தினை கலைத்துவிட்டது.

அடச்சீ என்னடா செய்றீங்க கோயில் ஸ்தலத்தில.. என குண்டி நோண்டி துரைச்சாமி கேட்கும் நேரத்திற்கெல்லாம் முக்கால் வாசிக்கும் மேலாக சுங்குவின்குறி சப்பட்டையினுடைய பிருஷ்டத்தில் இறங்கிவிட்டிருந்தது. அவசரமாக இருவரும் உடலைப் பிரித்து எழுந்ததும் சுற்றியிருந்தவர்கள் இவர்களை என்ன செய்வது? என வெறி எழுந்தவர்களாய்ப் பார்த்தனர். ஒவ்வொருவரும் எசியதை கண்டுகொள்ளாதவாறு அவர்களிருவதும் அங்கிருந்து நகர்ந்து சென்றுவிட்டனர். அதன்பிறகு அங்கிருப்பதற்கு அவர்களை மற்றவர்கள் அனுமதிக்காததால் அங்கிருந்து திருத்தணிக்குச் சென்றுவிட்டனர். அங்குதான் முழுக்க அவர்களுக்கான புரிந்து

கொள்ளப்பட்ட ஓர் உறவு பலப்பட்டுவிட்டிருந்ததோடு உடல்களைத் தாண்டின ஓர் உறவு நிலையினை எட்டிவிட்டிருந்தனர். முதல் முறையாக ஒரு பெண்ணினுடனான புணர்ச்சியை மேற்கொண்டதும் இங்குதான். நாற்பத்தேழு வயதாகிப் போயிருந்த அந்தப் பெண் குளிப்பது, பல் துலக்குவது போன்ற வழக்கமான வேலைகளில் விருப்பம் கொண்டிருக்காதவள். சற்று மனநிலைப் பாதிக்கப்பட்டவளாய் தோன்றும் அவள் பிச்சையெடுக்கவும் விரும்பியிருக்கவில்லை. எங்காவது ஓரமாகப் போய்ப் படுததுக்கொள்ளும். விருப்பப்பட்டவர்கள் அதற்கு உணவோ, டீயோ வாங்கிக் கொடுக்கலாம். இப்படி அரைகுறையாக உணவு உட்கொண்ட போதுங்கூட உடல் மட்டும் பூசணிக்காயாட்டமாய் பெருத்திருந்தது. சப்பட்டை முதலில் அவளைப் புணர்வதைப் பற்றிய யோசனையை சுங்குவிடம் சொல்ல ஓர் இரவில் இருவரும் அவளை அணுகினர். அவள் மறுப்பேதும் சொல்லாததோடு கட்டணமும் கேட்கவில்லை என்பதால் அன்றையதினமே அவர்களிருவரும் அவளுடலில் சங்கமித்து எழுந்தனர். இன்னதென்று சொல்லமுடியாத துர்வாடையொன்று தீவிரமாக அவளுடலில் அடித்தபோதும் எதையும் பொருட்படுத்தாமல் சுங்கு எளிமையாகவே முடித்துவிட்டான். சப்பட்டைக்குத்தான் அவளைப் புணர்வது பெரும் சவாலாகவும், சிரமமாகவும் இருந்தது. எந்தவிதமான அசைவுகளிமின்றி படுத்துக் கிடந்தவளின் பிரம்மாண்ட உருவமும், வீச்சமும் புணர்ச்சியின் தீவிரத்திலும் கூட சகிக்கமுடியாததாய் இருந்தது. அன்றோடு அவளைப் புணர்வது பற்றின விருப்பங்கள் சப்பட்டைக்கு நீர்த்துப் போனாலும் சுங்கு மட்டும் அவ்வப்போது புணர்ந்துவிட்டு வருவான்.

கோயில் ஸ்தலங்களே வேண்டாம் எனகிற முடிவுடன் இம்மாநகருக்கு வந்த பிறகு அவர்களுடைய வாழ்க்கை முறை மிகச் சுருக்கமானதாய் மாறிப்போனதோடு புணர்ச்சி எனபது அவர்களிருவருக்குமானதாக மட்டுமே சுருங்கிப்போனது. காதலின் தீவிரம் மிகுந்த நாட்களில் ஒரு ஆணும் ஆணும் புணர்வதை விட சுவாரஸ்யமானதில்லை, ஒரு ஆண் பெண்ணுடன் புணர்வது என்பதைத் தான் நிஜமென இருவருமே அழுத்தமாக உணர்ந்தனர். இதனை சலனப்படுத்துகிறப்படி அந்நடைபாதையே தஞ்சமென இன்னொரு ஜீவன் ஒரு நாள் அங்கு வந்து சேர்ந்தது. பிற்பகலைத் தாண்டி அவள் வந்தபோது அவ்வளவு பெரிய இடத்தில் அவர்கள் இரண்டுபேர் மட்டுமே இருப்பதை பார்த்ததும் அவர்களைப பகைத்துக்கொள்ள வேண்டாமென்கிற எண்ணத்தில் தானாகவே போய் அறிமுகப்படுத்திக்கொண்டாள். வடிவம்மை என்று தன் பெயரைச் சொன்னவளை வட்டாமை வட்டாமை என்றுதான் இவர்களிரண்டு பேரும் கூப்பிட்டார்கள். மொத்தமே முப்பது நாற்பது கிலோவிற்குள்தானிருக்கும அவளுடல். எழுந்தெல்லாம் நடக்க முடியாது கால்களைப் பரப்பி, கைகளை ஊண்டி, ஊண்டிதான் நடக்கும். அவள் பேசுவதில் பாதிக்கும் மேல் புரியாததாய் இருந்தது. ஆந்திராக்காரியாக இருக்கலாம். நிறம் மங்கிப் போன பச்சைநிற சட்டையொன்றை அணிந்து அதற்கு மேலாக பெயருக்கு ஒரு துணியைப் போர்த்தியிருந்தாள்.

ஒரே குடும்பமாகிப் போன அவர்கள் அன்று மாலைக்குள்ளாகவே நிறைய பேசிவிட்டனர். அன்றைய இரவில் மூவருக்குமாக சேர்த்து சுங்கு உணவு எடுத்துவந்தான். நிறம் மங்கி, உலர்ந்து இட்லியென்று சொல்லமுடியாத கொஞ்சம் இட்லிகளையும், ஒரு பிளாஸ்டிக் கவரில் சாம்பாரும் இருந்தது. சாம்பாரில் மூத்திரம் இருந்து குடிப்பார்கள் போல, நுரை நுரையாய் அப்படியொரு வீச்சம். அருகருகே அமர்ந்து மூவரும் பேசியபடியே சாப்பிட வந்ததிலிருந்தே ஒட்டித் தொங்கிப் போன அவளின் முலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த சப்பட்டை விசுக்கென பிடித்துக் கசக்கினான். ஒரே ஏமீரா நுவ்வு தேவுடியாப்பயலே வுட்றா... வுட்றா... என

தெலுங்கிலும், தமிழிலுமாய் மாறி, மாறி கத்தத் துவங்கினாள். பொறுத்துப் பார்த்து சுங்கு முடியாமல் போகவே அவளைப் பின்னால் இழுத்து சாய்க்க எதுவும் செய்ய முடியாதவளாய் வீழ்ந்தாள். வன்மத்துடன் அவள் மேலேறி சப்பட்டை அவளுடலைப் புணர்ந்தான். சுங்குவிற்குப் பார்க்க, பார்க்க சிரிப்பாக வந்தது. ஒன்றும் செய்ய முடியாதவளாய் அய்யோ ஏன் சாமி அவசரப்படுறீங்க? பொறுமையா ஒருத்தொருத்தரா செய்ய வேண்டியதான.. என முனகினாள். சிரித்தவனாய் சப்பட்டை அவளுடலிலிருந்து விலகி சுங்குவிற்கு வழிவிட்டான். சுங்குவின் மூர்க்கத்தினைப் பொறுக்க முடியாமல் பல்லை கடித்து கண்ணை இறுக்கிக்கொண்டாள். அவன் விலகிச் செல்லும் நொடியினை எதிர்ப்பாத்தபடி இவ்வளவையும் கவனித்தபடியோ, கவனிக்காதபடியோ வேகமாக விடிந்து கொண்டிருந்தது அன்றைய இரவு. மறுநாள் பிற்பகல் வரையிலும் உறங்கிக் கொண்டிருந்த வட்டாமையை சாப்பிடுவதற்கு சப்பட்டை எழுப்பிய போது ஒன்றும் புரியாமல் பேந்த விழித்தாள். பிறகு சிரித்தப்டியே நகர்ந்து போய் சுவற்றை ஒட்டி மூத்திரம் பெய்யப் போய்விட்டாள். கறை படிந்த அவள் பற்கள் சிரிக்கும்போது வசீகரமாயிருப்பதாகவேப் பட்டது சப்பட்டைக்கு.

சந்தோஷமும், இணக்கம் நிறைந்த அவர்கள் நாட்களில் துவக்கத்தில் சிங்குவைப் பார்த்து இருந்த பயங்கூட அவளுக்கு நாளடைவில் மறைந்துவிட்டிருந்தது. சப்பட்டைக்கு செய்வதைப் போலவே சகல காரியங்களையும் சுங்கு அவளுக்கும் செய்ய பழகிவிட்டான். அருவருப்பின்றி தன் மலத்தினை அவன் தொட்டு எடுத்துப் போடுவது வட்டாமைக்கும் பிடித்துவிட்டிருந்தது. அடுத்த சில தினங்களிலே அவர்கள் எதிர்ப்பார்த்திருக்காத ஓர் சம்பவம் நடந்தது. பால்வினை நோயின் தீவிரத்தில் சுங்குவின் குறியைச் சுற்றி வெண்படலமாய் சீழ் படியத் துவங்கிவிட்டிருந்தது. கடும் வீச்சத்தினையும் கசியவிட்டபடி. அவனும் தனக்குத் தெரிந்த வைத்தியங்களை எல்லாம் செய்து பார்த்தப் பிறகும் கூட அதிகரித்ததே ஒழிய குறைவதற்கான வழியில்லை. சப்பட்டையே கூட சில சமயங்களில் பயப்படும் அளவிற்கு மாறிப்போன இதனால் அவனைஅருகில் விட மறுத்துவிட்டாள் வட்டாமை. ஆதரவாக சப்பட்டையும் பேசியபோதுதான் சுங்குவிற்கு ஆத்திரமாகிவிட்டது. வழியின்றி சில நாட்கள் அவனும் அவர்களைத் தவிர்த்துவிட்டான். கொஞ்சமாய் அந்தப் பாதிப்புகள் குறைந்ததைப் போன்று மாறிவிட மீண்டும் அவளைப் புணரவேண்டுமென தீவிரமாய் இருந்தான். இனி ஒருபோதும் அவனோடு படுக்க முடியாதென மறுத்துவிட்டவளை என்ன செய்யலாமென்கிற வெறி எழுந்தது அவனுக்கு. அந்நாட்களிலெல்லாம் சப்பட்டை தன்மன முழுமையான பெண்ணாய் மாற்றிக் கொண்டு அவனுக்குக் கொடுத்தான். அவள் உடல் மீதிருந்த ஆத்திரம் முழுக்க சப்பட்டையைப் புணரும் போது வெளிப்பட்டுக்கொண்டிருந்தது. வெறி சூழ்ந்த அவனை சமாளிக்க முடியாதவனாய் ஒரு கட்டத்திற்கு மேல் சப்பட்டையும் அவனைப் புறக்கணிக்கத் துவங்கிவிட்டான். தான் தனிமைப்படுத்தப்பட்டு விட்டதான வெறுமை சுங்குவிற்கு நாளுக்கு நாள் அதிகரிக்கத் துவங்கிவிட்டிருந்தது.

எங்கே அவனோடு மறுபடியும் நெருங்கிப் பழகினால் தங்களைப் புணரக் கேட்பானோ என்கிற பயத்தில் அவர்களிருவரும் மிகக் குறைவாகவே சுங்குவிடம் பேசினர். இவன் எப்பொழுதும் போல் அவர்களுக்கு சாப்பாடு வாங்கி வந்து கொடுப்பது. கழித்து வைக்கிற மலத்தினை எடுத்துப்போய் போடுவது என சகல வேலைகளையும் செய்து வந்தான். விருப்பமற்ற அவ்விடத்திலிருந் வேறெங்காவது சென்றுவிடலாமென அவள் அடிக்கொருதரம் தூண்டிக் கொண்டிருந்தாள். சுங்குவின் மீது கோபமும், வருத்தமும் இருந்த போதும் முழுமையாக விட்டுப் பிரிய மனமில்லாததால் தயங்கியபடியே சப்பட்டை மறுத்து வந்தான். சுங்குவிற்குபே

புணர்ச்சி பற்றிய எண்ணங்கள் வடியத் துவங்கிவிட்டிருந்ததோடும் உடலும் சோர்வடைந்து போனது.

ஒரு நாள் காலையில் வழக்கம் போல் வட்டாமை கழித்த மலத்தை எடுக்கப் போன சுங்கு சாதாரணமாக அவள் குறியைத் தொட்டு தடவிவிட கோபம் கொண்டவளாய் அவள் அவனைத் தள்ளிவிட்டாள். சப்பட்டையும் வெறிகொண்டு திட்டத் துவங்க எதுவும் பேச முடியாதவனாய் அவன் வெளியேறிப் போனான். அன்று பகல் முழுக்க அவன் உள்ளே திரும்பவில்லை. சாலையில் ஒரு ஓரத்தில் அமர்ந்து கடந்து போகும் வாகனங்களையும், மனிதர்களையும் வெறுமையோடு பார்த்துக் கொண்டிருந்தான். உயர்ந்தும், தாழ்ந்தும்,குறுகியும், நெடுகியும் நிறைந்து இம்மாநகரின் கட்டிடங்களுக்குள் எங்காவது ஒரு சிறு மூலையில் போய் வாழ்ந்துவிட முடியாதா என்கிற ஏக்கம் முதல்முறையாக அவன் மனதில் எழுந்தது. ஏதுமற்ற தம் உலகின் துவக்கமும், முடிவும் தெரியாமல் பயணிப்பது எதற்காகவோ? யாருக்காகவோ? என்கிற வெறுப்பு எழுந்தது. மீண்டும் அவன் தம் இருப்பிடத்திற்குள் திரும்புகிற நேரத்தில் மாநகர இயக்கம் பெருமளவு குறைந்து போய்விட்டிருந்தது. கீழே வழக்கம்போல் சப்பட்டையும், அவளும் புணர்தலின் தீவிரத்தில் பிணைந்து கிடந்தனர். திரும்பிச் சென்றுவிடலாமென ஒருபுறம் தோன்றினாலும், இன்னொரு புறத்தில் வேதனை மிகுந்த தம் மனதினை மேலும் காயப்படுத்துவதற்காகவே இவர்கள் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்கிற வெறி எழுந்தது. சாதாரணமாக அவர்கள் புணருகையில் இவன் விழித்திருப்பதை காண நேர்ந்தால் ஏற்படுகிற சலனம் கூட இன்று அவர்களிடத்தில் இல்லை. மெதுவாக இறங்கி வந்தான். கால்களை பரப்பிப் போட்டபடி சப்பட்டையின் உடலுக்கு மேலாக அவள் ஏறியிருந்தாள்.

சப்பட்ட என தயங்கியபடியே கூப்பிட்ட சுங்குவை இயக்கத்தினூடாகவே பார்த்தவன் என்னடா? என்றான் நான் ஒரு தடவ செஞ்சிக்கிறண்டா.. என இவன் கேட்கவும் கோபமுற்றவனாய் சப்பட்டை அவளைத் தம் உடலிலிருந்து விலக்கி சுங்குவைப் பிடித்துகீழே தள்ளினான். பதிலுக்கு இவனை எட்டி உதைக்க வந்த சுங்குவை குறுக்காகப் புகுந்து வட்டாமை கீழே தள்ள சப்பட்டையும் நகர்ந்து வந்து சேர்ந்து கொண்டான். இருவரையும் ஏதாவது செய்ய வேண்டுமென அவனுக்கு மனம் வெறி கொண்டது. ஒருபுறம் சப்பட்டை மாறி மாறி சுங்குவின் முகத்தில் அறைய, அவள் வலிமையற்ற தம் கரங்களால் அவனுடைய வயிற்றில் சீராகக் குத்துவதும், குரல் வளையைப் பிடித்து நெரிப்பதுமாக இருந்தாள். அந்த இரவில் அய்யோ அம்மா வென சுங்கு அலறுகிற சப்தமும், கெட்ட வார்த்தையால் சப்பட்டை திட்டுகிற சப்தமும் விகாரமாய் எதிரொலித்தபடியிருந்தது. அவனை விலக்கி சப்பட்டை திரும்பிய நேரத்தில் வலிமை முழுக்கத் திரட்டி தம் காலால் சுங்கு ஒரு உதைவிட்டான். தடுமாறிப் போய் உருண்டு விழுந்த சப்பட்டையின் குரல்வளையில் ஏறிவிட்டிருந்தது பாதியாய் உடைந்திருந்த ஒரு பியர் பாட்டில். அசைவேயில்லாமல் சாய்ந்துவிட்ட சப்பட்டைக்கு உண்மையில் என்ன நிகழ்ந்துவிட்டது என்பதையே இவர்கள் இருவராலும் உணர்ந்துகொள்ள முடியவில்லை. சில நொடிகளுக்குப் பின் சத்தம்போட்டு அலறியபடியே வட்டாமை வேகவேகமாக அங்கிருந்து நகர்ந்து போனாள். இவ்வளவு நாட்களும் தம்மோடு, தம்மில் பாதியாய் இருந்தவனின் உடலுக்கு அருகில் அடுத்த சில நொடிகளுக்குமேல் சுங்குவால் நிற்கமுடியவில்லை. அவள் சென்ற திசைக்கு எதிர்த் திசையில் அவனும் அவசரஅவசரமாக வெளியேறி ஓடிப்போனான்.



செல்மா பிரியதர்ஸன் கவிதைகள்

தீராதபசி

திசை தப்பிய ஆடாய்
புற் பூண்டுகளை மேய்ந்து கொள்கிறேன்
பின்னரும் அடர்ந்த வாசனையும்
மேலும் செறிந்த நிறமுமாய்
யாவும் முளைவிடுகின்றன
புழுக்கைகளை வெளித்தள்ளும்
மேய்ச்சல் காட்டில்
என் சருமம் வற்றி வறள்கிறது
தடித்த நாக்கில்
ருசியின் பசியின் பேதங்குழைத்து
சுழன்று சுழன்று மேய்ந்த
சற்றே என் நீர்ப்பசையற்று வெடிப்புற்ற சருமம்
குடைக் காளான்களின்
தூய வழவழப்பில்
ஊறி முளை விடுகிறது

நீர் பருகி
உன் நிலவடுக்குகளெங்கும் வேர் துழாவி
அடர்ந்து வளர்கிறது
உப்புக் கரிக்கும் கடலாய்
உன் நிலம் மாறத் தொடங்குகையில்
கடற்பாசிகளில் கழியும் மீன் குஞ்சுகளென
உன் பவளப் பாறைகளில் கருக் கொள்கிறேன்
நீ ஈனுகிறாய்
வளர்ந்து மறுபடி உன் மேனித் தாவரங்களை
அசைபோடுகிறேன்
புழுக்கைகளை ஈனுவதால்
எனது பசி தீராதாகிறது

தெய்வத்தைப் புசித்தல்

குயிலின் பாடலை உப்பிட்டு வாட்டுகையில்
விரிவாக்கப்பட்ட புதிய சாலைக்கு
நெடுங்கால குலசாமி ஒன்றினை பலியிடுவது யார்
கூவும் சேவலின் குரல்வளை இரத்தங் குடித்து
எல்லோரிடமும் எனது காதலைச் சொல்லும்போது
ஆட்டின் கொழுத்த தொடை நெய்யை
கனலும் நெருப்பு உருக்குகிறது
உதிரும் குருதி துடைத்து புணர்ந்த காதலி
மயிலிறகும் மான் எழும்புகளும் உரமாகிய நிலத்தில்
ஓடி மறைந்தாள்
உடும்புக் கறியும் பனங்கள்ளும்
கிளர்த்திய கனவில்
ஒரு தெய்வத்தைத் தின்ற
அவன் பத்தினியை புணர்ந்தேன்
நல்லது
தீராத பசியோ
தணியாத காமமோ
வன தெய்வங்கள் காப்பற்றட்டும்
இல்லையேல்
பன்றிகளும் கன்றுகளும் தப்பியோட
நான் விரட்டி நின்று திரிந்த நிலத்தின் மீது
புணர்ந்த தெய்வம்
எனைக் கொன்று போடட்டும்
(கோணங்கிக்கு)

நிர்வாணபலி

மலையின் மகளே
உனக்கு குறிஞ்சாப் பூக்களின் தைலம் வடிப்பேன்
நீ வயல் வெளியின் குழந்தை
மூங்கில்கள் முற்றி நெக்குருகும் மொழியில்
உனை அறிந்தேன்
நீ நெய்தலின் குமரி
அலை முகத்தில்
உன் விரல் நகங்கள் சேகரிப்பேன்
நீ பாலையின் தெய்வம்
என் நிர்வாணத்தைப் பலியிடுவேன்
நிலங்கள் உன் யோனிலிருந்தே தோன்றின
உனது மகன் நான்
உன் கனிகளை விழுங்கி
சதுப்பு நிலமெங்கும்
ஒரு பறவையாய் எச்சமிடுவேன்
உன் விதைகளை



ஒளி எழுப்பும் தேசம்

யுகங்களுக்கிடையே
ஓடும் இப்பேருந்து
பல பார்வையாளர்களைக் கொண்டது
இரவு நடனம் ஆடும் ஒரு பெண்ணும்
அவளது காதலன் அல்லது இணை ஆட்டக்காரனும்
தங்களுக்குள் ஒத்திகைத்து
பாடிக் கொள்கிறார்கள்
அத்தேசத்தின் நீதி வாசகத்தின் கீழ்
இருக்கையில்
ஓட்டுனர் ஒலி எழுப்புகிறார்
அப்போதெல்லாம் நடனக்காரியை
தொட முயலும் முகம் மழித்த
சுருட்டை மயிர்க்காரன்
கைகளை பின்னுக்கு
இழுத்துக் கொள்கிறான்
சாலையின் இருபக்கமும்
சவுக்கு மரங்கள் இரைச்சலுடன் விரைகின்றன
நகரம் நெருங்கியவுடன்
ஆசை தீர்ந்து விட்டதா என அவள் கேட்டாள்
தங்கள் செவிகளில் இருந்து அவர்கள்
இசையொலிப் பொத்தான்களைக் கழற்றினார்கள்
ஒன்றும் நேராததாகத்தான்
இப்பயணத்தைக் குறித்துக் கொள்கிறேன்
காலமும் இடமும் கடந்துபோனதாக
அச்சிறுபெண்ணிற்கு பல்வரிசை
தடுமாறி இருப்பதாக
அப்பாடகன் உறங்கி விட்டதாக
இத்தேசத்தில் பலமுறை
ஒலி எழும்பப்பட்டதாக.

கைகாட்டி மரங்கள்

பொறுப்பற்ற இடத்தில்தான்
உன்னோடு எனக்கு ஏதேனும் நேர்கிறது
கண்ணதாசனின் செம்பருத்தை மலர்கள் உருண்ட
அல்லது மகிழம்பூக்கள் உதிர்ந்த தடங்களை
இந்நகரங்கள் தொலைத்து
நெடுநாளாகிவிட்டது
என்காதலை ஒரு சாலை விதியைப் போல
நீ கடைப்பிடிக்கிறாய்
யார் பார்த்து என்ன ஆகப்போகிறது
தொலைதூரம் செல்லும் ரயில்கள்

சீற்றமுடன் உந்திக் கொண்டிருக்கின்றன
பழைய போர்ட்டர்களைக் கொண்டிருந்த
என் இளமைக் கால ரயில்நிலையம்
குடும்பத்தை தவறவிட்ட குட்டிநாயைப்போல
கீச்சிடும் கருவி கொண்டு
என் கவட்டைச் சோதிக்கிறது
அடுத்த இரயிலோ
இன்னொரு முத்தமோ
அபத்தத்திற்கிடையில்
உன் கைபேசியில் புதிய காதல்
நுழைந்திருக்க வேண்டும்
அதோ கைகாட்டி மரங்கள் இறங்கிவிட்டன
பச்சை நிறங்கள் ஒளிர்கின்றன
இரவின் மதுவால் உனது வாந்தியை
துடைத்த கைக்குட்டையை ஆட்டுகிறேன்
அதே நெடிய உயரம் வட்டமான முகம்
அதே கண்ணாடி வழியே
என்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறார் ஒருவர்
எல்லாம் பொறுப்பற்ற இடத்தின்
தலைவிதி போன்றே இருக்கிறது.

●

ஒரு கடல் மீனுக்கு ஐம்பதுபேர்
ஒரு கடவுளுக்கும் ஐம்பது பேர்
ஒரு ஏக்கர் நெல்வயலுக்கு ஐயாயிரம் நபர்கள்
ஒரு கோழிப் பண்ணையும் ஆடு மாடுகள் திரியும்
மேய்ச்சல் நிலமும் பத்தாயிரம் பேருக்கு உத்திரவாதம்
ஒரு குளக்கட்டு ஏரிக்கரை மேலும் பருவகால நதி
ஒரு லட்சம் பேரைச் சமாளிக்கும்
ஒரு ஏறிகுண்டிற்கு ஐம்பதுபேர்
ஒரு ஏவுகணைக்கு ஐயாயிரம் நபர்கள்
ஒரு விமானத்திற்கு ஒரு பள்ளத்தாக்கே தாங்காது
ஒரு அணுகுண்டு ஐந்துலட்சம் பேருக்கு உத்திரவாதம்
ஒரு லிட்டர் பெப்சி அறுபது ரூபாய்
ஒரு கேமே குளியல் சோப் எழுபது ரூபாய்
ஒரு திரைப்படம் பார்க்க நூற்று இருபத்தைந்து
ஒரு லிட்டர் பெட்ரோல் ஐம்பதுக்கு மேலும்
மேலும் எது நூறு கோடியைச் சமாளிக்கும்

வதை முகாம்

எழுதுதல் என்பது
வெகுதூரம் ஓடிவந்த ஒரு நாயின்
நாக்கு வியர்ப்பது
அல்லது தாவரங்களின் விதைகளில் இருந்து
அர்த்தத்தை துண்டிப்பது
எழுதுதல் என்பது இளம்பெண்ணின்
இனப்பெருக்க உறுப்புகள் வளர்ந்து வருவது
அல்லது பறவைகள் வந்தடையும்
இரவு நேர மரத்தை வரைய முயல்வது
எழுதுதல் என்பது
பழங்கால மதத்தின் எதிர்காலத்திற்கான
நிகழ்க்காலக் குற்றம்
அல்லது இறைச்சிக்காக காயடிக்கப்பட்ட
பன்றிகளின் கொட்டிலில் ஒரு முனகல்
எழுதுதல் என்பது
தொழிற்சாலைகளில் உறுப்பிழக்கும் ஆடத்து
அல்லது அலைகள் மட்டும் சப்தமிடும்
தீவின் நடுவில் ஒரு வதை முகாம்
எழுதுதல் என்பது
மொழியின் தோற்றுவாயில் ஒரு பிழையான மூர்க்கம்
அல்லது இறந்த மண்டை ஓட்டின் பல்வலி
மேலும் எழுதுதல் என்பது
வரலாற்றில் இருந்து தானியக் கூடங்களை பாதுகாப்பது
இல்லையெனில் விலங்குகளுடன் வனங்களில்
உடலுறவிற்கு முயல்வது

பதினாலாவது அத்தியாயம்

நீர்
வாழ்வதன்ஆதாரம்
நானதன் பாலையில் ஒரு ஒட்டகம்
எதையடுத்தும் பிறருக்கும் மழை
அதில் துளிர்க்கும் பேரீட்சை
காதலின் பதினாலாவது அத்தியாயம்
சிறிய மகளைக் கவர்ந்து சென்ற தந்தை
ஒருவன் உலகத்தைப் படைத்தான்
எத்தனை விபரீதம்
எல்லாம் பெருகி விட்டபிறகு
கேள்வி ஒரு பழந்துணியாய்
கைவிடப்படுகிறது
பச்சையம் சுத்த மாமிசம்
கடல் என்ற சொல்லில் நிலம் வெறும் அர்த்தம்
ஒட்டகம் தன் நாவால்
சூரியனைத் துழாவும் தாகத்தை
படிமமாக்கினால்
கடல் மட்டம் உயர்ந்து வரத்தான் செய்யும்.

1. மரத்தின் பெயரை மரத்திற்கும்
விலங்கின் பெயரை விலங்கிற்கும்
கடவுளின் பெயரை கடவுளுக்கும்
வழங்கியது போக
தனக்குப் பெயர் இல்லை
என்று வரைகிறான்
ஒளியை நெய்யும் ஓர் கிழவன்

அவன் விலாவில் வழியும்
முத்தில்
பிரதிபலித்துக் கொண்டிருப்பது
தான் தான்
எனத் துள்ளுவது
அவனும்
அவளும்
முத்து விழுந்து
ஊறும் மண்ணில்
ஆனது
எவன்
எவள்
வருகிறது புற்றீசல்
பெய்த மழை
காண



2. கதைப்படி
இதைத்தான் முதலில்
சொல்லியிருக்க வேண்டும்

அதற்குள்
ஓடும் ரயில் வந்து
நின்றுபோனது முதல் செய்தி ஆனது

பரபரப்புடன் ஓடி வந்தவர்கள்
எட்டிப் பார்த்து திகைத்தனர்
கொழுத்தவர்களே இடம் பிடித்து
இருந்தனர் உள்ளே

இறங்கக்
காத்திருந்து
சூடு குறைந்து
மெல்ல மெல்ல நகர்கிறது

என
இப்படியல்லோ
போய்க்கொண்டிருக்கிறது ரயில்
போய்க் கொண்டிக்கிறது கதை...

3. எனக்கு நீந்தத் தெரியாது
கடல் தெரியும்
அதனால்
கால்கள் மட்டும் நனைத்துக் கொள்கிறேன்
அலைகளின் இடையே

நல்முத்து
வேண்டிய பொழுதில்
நேராக ஆழம் தொடுகிறேன்
நீர்
உப்புக் கரித்தாலும்

எப்பொழுதாவது
எதுவும் தட்டுப்படாத ஆழத்தில்
ஒன்றைப்
பதிய வைத்துப் பார்க்கிறேன்
பிரகாசிக்கக்
கடல்
அக் கணம் முதல்

இருந்தும்
பழகிக் கொள்ளவில்லை
மனதில் நீச்சல்

4. கண் அயரும் வேளை
பக்கம் 268ல்
நெஞ்சில் படிந்த மணல் பரப்பில்
ஓடிக் கொண்டிருக்கிறது
ஆறு

உள் பக்கம்
புரளப்
புரள
அங்கங்கே நிற்கும் பாறையின் அடியிலும்
கரையின் சில ஓரமும்
படிகிறது
பாசி

பாசியைச் சுற்றி
விரியும் நீர் எப்பக்கமும் பிரிந்து
ஒற்றையாய் ஒழுகும்
துளியில்
மூடிக்கொண்டது பின்னிதழ்

அப்போதும்
நாவலின் ஏதோவொரு
ஏழாம் பக்கத்தில்
கூழாங்கற்களின் குறுகுறுப்பில்
திளைத்துக் கொண்டிருக்கிறது
நதி

இசை கவிதைகள்

ஏழு கொலைகள்

இது வரையிலுமாக
நான் செய்த கொலைகள்
மொத்தம் ஏழு
முதலில் ஒரு இரட்டைக் கொலை
சூரியன் அஸ்தமிக்காத முகங்களை உடைய
இரு இளைஞர்கள்...
அவர்களை நான் தினந்தோறும்
கவனித்து வந்தேன்
அவர்களின் சிரிப்பு..
அந்தச் சிரிப்பை இப்போது நினைத்தாலும்
மீண்டும் ஒரு முறை கொல்லத் தோன்றுகிறது அவர்களை
அடுத்து ஒரு பெண்
அவளைப் பார்த்த மாத்திரத்தில்
பேரழகி என்று முணுமுணுத்தேன்
காற்றில் அலைந்த சிகையை
அவள் ஒதுக்கிய பாவனை கண்டு
அவளைக் கொன்று விடுவது என்று தீர்மானித்தேன்

உணவு விடுதியொன்றில்
ஒரு கனவானைக் கண்டேன்
அவனது பரிமளதைலத்தின் சுகந்தம்
என்னைக் கிள்ளி எழுப்பியது
அவ்வளவு பெரிய வாயுடைய பர்சிலிருந்து
அவன் நோட்டுக்களை எடுத்து நீட்டினான்
அன்றிரவே அவனைக் காரோடு சேர்த்து எரித்தேன்

ஒரு கவிதை
அது சோதிமிக்கதாய் இருந்தது
எத்தனை முறை வாசித்த போதும்
அது ஒளி குன்றாதிருக்கவே
அதை எழுதிய என் நண்பனை
நஞ்சூட்டிக் கொன்றேன்
யாரையாவது கொன்றால்
கொஞ்சம் நிம்மதி கிடைக்கும் எனும் பட்சத்தில்
மீதி இருவரையும் கொன்றேன்.

குத்துப்பாட்டின் அனுபூதி நிலை
இந்த வீட்டின் ஜன்னல்களை மூடினேன்
கதவுகளைச் சாத்தினேன்
மறவாமல் இவ்வுலகை வெளியே தள்ளி தாழிட்டேன்
இசை துவங்கியது
பேழையிலிருந்து வெளிப்பட்ட
குரலுருவும் நானும் கைகோர்த்து
ஆடத் துவங்கினோம்.
ஆட்டம்
குதியாட்டம்
பேயாட்டம்
மொழ மொழன்னு யம்மா யம்மா
மொழ மொழன்னு யம்மா யம்மா
தலை வழி பீறிட்டு
விண் முட்டி அடிக்குதொரு நீரூற்று

தட தடன்னு நடக்குறா..
மட மடன்னு சிரிக்குறா..
வெட வெடன்னு இருக்குறா..
கொட கொடன்னு கொடையிறா
மொழ மொழன்னு யம்மா யம்மா
மொழ மொழன்னு யம்மா யம்மா



ஆயிரம் கரங்கள் கூடி
ஆனந்தக் கொட்டடிக்க
அதிரும் நானொரு
களி கொண்ட பேரிகை
பஞ்சு மிட்டாய் இடுப்பழகி
ஓலக் கொட்டாய் உடுப்பழகி
ப்பெப்பர் முட்டாய் பல்லழகி
க் கொட்டப்பாக்கு கண்ணழகி
ராங்கீ.. மனச வாங்கீ..
எனதுடலா இது எனதுடலா
இப்படி பூரிப்பில் துடிதுடிக்கும்
இது என்ன
எனதுடலா எனதுடலா
எனதுளமா இது எனதுளமா
ஈனக் கவலைகள் எரியும் நெருப்பில்
ஜொலிப்பது என்ன
எனதுளமா எனதுளமா
(ராங்கி அனுராதா ஸ்ரீராமுக்கு)

அதற்கே

ஒரே ஒரு மதுப்போத்தல்
அதற்கே நான் வந்தேன்
நகரெங்கும் படுகளம்
ஊரே பிணக்காடு
ஆனாலும் வந்தேன்
அதற்கே நான் வந்தேன்

நிலமெங்கும் கொடு நாகம்
நீளும் வழி பாதாளம்
ஆனாலும் வந்தேன்
அதற்கே நான் வந்தேன்

குன்றெங்கும் எரிமலை
குறும்புதிரில் கொள்ளிவாய்கள்
ஆனாலும் வந்தேன்
அதற்கே நான் வந்தேன்

கடலெங்கும் பேய் அலைகள்
கரையெல்லாம் முதலை
ஆனாலும் வந்தேன்
அதற்கே நான் வந்தேன்

வனமெல்லம் புலிக்கூட்டம்
மரந்தோறும் வேதாளம்
ஆனாலும் வந்தேன்
அதற்கே நான் வந்தேன்

வானெங்கும் விஷக்காற்று
திசையெல்லாம் மின்னல்
ஆனாலும் வந்தேன்

ஒரே ஒரு மதுப்போத்தல்
அதற்கே நான் வந்தேன்.

நேற்றைய விண்மீன்

நேற்றைய விண்மீனில்
சோபை குறைவு நண்பா
நேற்றை விடவும்
தார்சாலை பெயர்க்கப்பட்ட
இப்பாதையில் எவ்வளவு சுலுவாய்
வழுக்கிச் சென்றது என் வாகனம்
திசையெங்கும் திரிந்தது களியில்
சிறகிழந்த பறவை
கிளையெங்கும் மின்மினியாய் ஒளிர்ந்த
மரத்தின் வெறுமை
ஒரு இனிய முத்தத்திலிருந்து கடந்தேன்
சில தேசங்களும் சில வருடங்களும்
இந்த விண்மீன் மட்டும்
அங்கேயே நிற்கிறது நண்பா
தூரங்களை மீண்டும் கடப்பேன்
எளிது மிக எளிது
என்முன் இவ்வளவு இயல்பாய்
இவ்வளவு உண்மையாய்
நிற்கும் இவ்விண்மீன்
நேற்றைய விண்மீன் நண்பா

19ம் நாள் யுத்தம்

இரவு வெகுநேரம்
கதவு தட்டப்பட
திறந்தேன்
நின்றிருந்தது
என்பிரேதம்
இன்றைய யுத்தத்தின்
வரவு செலவு அறிக்கையை
விவாதிக்க துவங்கினோம்
இறுதியில் எஞ்சியிருந்தன
மாலைசூரியனும்
கொஞ்சம் கையெறி குண்டுகளும்
குற்றுயிரான நம்பிக்கையும்
சில முளைக்காத சொற்களும்
தீக்கிரையான நகரத்தில்
பிணங்களின் சென்செக்ஸ்
இன்று சரிந்திருந்தது
இன்றைய டிகாரின் சூத்திரம்
என்ன என்றேன்
நமது திருவிழாக்களை
வழிப்பறி செய்யும்
ஆரலைக் கள்வர்கள்
என் மதுக்குடுவையை
பிடுங்கிக் கொண்டார்கள் என்றது
பிறகு யுத்தத்தின் முடிவைப் பற்றி
வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தோம்
நாங்கள் இறக்கும் வரை

வா.மணிகண்டன் கவிதைகள்

1. குரூரத்தின் கிளைகளுடைய
மரமொன்றில் வசித்துவரும்
உங்களிடம் பனி ஊசி ஒன்றிருக்கிறது.

வெளிக்காற்றில் உருகிவிடாத
அதை
உங்களிடம் அகப்படுபவர்களிடம்
பரிசோதிக்கிறீர்கள்

அது
உருகுவதில்லை
என்னும்
ஆணவத்தோடு

முன்னொரு நாள் ஒருவனின் நகக்கண்ணில் நுழைத்தீர்கள்
ஆணாலு
பிறகு அ[illegible] ஆசனவாயில் ஒருமுறை
நேற்று கிடைத்தவனின் ஆணுறுப்பிலும் முயன்று பார்த்தீர்கள்

உங்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை
மூன்று இரவுகளாக
உறக்கம் விழித்தவனின் சிவந்த
கண்களை
நீங்கள்
பாக்கி வைத்திருக்கும் வரை
அந்த ஊசியின்
ஆயுள்
என்று

2. மழை பெய்து
தெளிந்திருந்த வானத்தில்
மூன்று பறவைகள்
பறந்து சென்று கொண்டிருந்தன
ப்ரனீதா
வேறு ஊருக்குச் செல்வதாகச் சொன்னாள்
காரணம் எதுவும் சொல்லவில்லை
புன்னகை
கண்ணீர்
துக்கம்
எதுவுமில்லாமல்
மௌனமாயிருந்தேன்

நனைந்திருந்த செடியில்
இலைகளை பறித்துக் கொண்டிருந்தவள்

நேரமாகிவிட்டது
என்று
நகரத் துவங்கினாள்

மூன்று பறவைகள்
இருந்த இடத்தில்
மேகத்திட்டு
வந்திருந்தது

3. நான் வசிக்கும் ஊர் பயம் தருவதாயிருக்கிறது
நான் பார்க்கும் முகங்கள் நடுக்கமூட்டுகின்றன
குளிர் விறைக்கச் செய்யும்
என்
இரவுகள் பதட்டமடையச் செய்கின்றன

புகைத்திரைக்கு பின்னால் நிற்கும்
மரணம்
சிரிக்கிறது
எனக்கு பயமில்லை என்பது தெரியாமல்



1. கோழியை சுற்றிய நூல்கண்டு

நூறுமுறை சொல்லியிருப்பேன்
முதுகில் ஊர்ந்து கொண்டிருக்கும்
என் பிச்சைப் பாத்திரம்
உங்கள் யார் கண்களுக்கும் தெரியாது

மனப்பூச்சியை எழுப்பி
பூமியை மொய்த்துக் கொண்டிருந்தேன்
நான் தனியாக சென்று கொண்டிருந்த
என் இறக்கையை வர்ணம் பூசிய என் குடும்பம்

ஆயிரம் வெள்ளைக் குருவிகள்
என் தலையை கொத்திக் கொண்டிருந்தது
ஒரு பச்சைக் குருவி மட்டும்
கருவிழி இமையை ஒரு திராட்சை போல்
விழுங்கிக் கொண்டிருந்தது.
வலியின் சுகங்களை வெண்கலப் பாத்திரத்தில்
ஊற்றிக் கொண்டிருந்தேன்
என் கனவுகளின் ஊசி
நூலில்லாமல் தைத்துக் கொண்டிருந்தது
வணக்கங்களின் தலைவாசல்
என் கிரீடங்களில் கணத்துக் கொண்டிருந்தது.

ஆகவே,
இறுக்கங்களில் கோழியை சுற்றிய நூல்கண்டு
என்னை திணற வைத்துக் கொண்டுதான் இருக்கிறது



மழைத்துளி பொம்மை

1. என் வட்டாரத்தில்
மழை பெய்து கொண்டிருந்தது
மழை துளியெல்லாம் சேகரித்து
ஒரு ஊசியும் நூலும் எடுத்து
மழைத் துளியை கோர்த்து
ஒரு பெண் பொம்மை செய்தேன்
ஒரு அழுத்தமான முத்தம் கொடுத்து

2. யாரோ ஒருவன்
மரம் வெட்டிக் கொண்டிருந்தான்
மழைத்துளி பொம்மை
பக்கத்தில் சென்று
ஏதோ ஒரு பாஷையில் பேசிய
அந்த சொற்களோடு
கோடாரியை எறிந்துவிட்டு
நகர்ந்து சென்றான்

3. மழைத்துளி பொம்மை
என் வீட்டுக் கூரையில் ஞாபகார்த்தமாய்
ஒரு மழைத் துளியை மட்டும் விட்டுச்சென்றது
அந்தஒரு மழைத்துளியில் வைரக்கல்
பிரகாசமான ஒளியில்
அவன் உடல் நிறங்கள் மாறி
ஒரு கடவுளாய் நிறைந்து கொண்டிருந்தான்

4. மழைத்துளி பொம்மை
கருணை நிறைந்த பாறையில் தேங்கிக் கிடந்தது
ஒவ்வொரு மனிதனும், மிருகங்களும்
பாறைகளில் நீர் அருந்தும் போது
மழைத்துளி பொம்மையாய்
மாறிக் கொண்டிருந்தார்கள்

தேவேந்திர பூபதி கவிதைகள்

நகமற்ற விரல்கள்


1. பசியாறட்டும் என
விரல்களை நீரில் ஆழ்த்தினேன்
நேரம் தாழ்ந்த என் விரல்களில்
நட்சத்திரங்களை தீட்டியிருந்தன வண்ண மீன்கள்
பிரபஞ்சத்தின் அல்லது பால் வெளிகளில்
ஒரு நாவற்பழத்தின் நிறத்தை மறைப்பது யார்
மேலும் பழத் துண்டுகளை பாலில்
ஊற வைத்த ஈச்சம் பழங்களை
காலம் என் கைகளில் வழங்கும்போது
யாவும் நிறமற்றப் போன
பசியின் பாதை மறந்துவிட்ட
நான் அல்லது மீன்
நகமற்ற எனது விரல்கள்
மேலும் கடலின் ஒரு சிறிய சம்பவம்

2. விடுபடும் சம்பவம்

வெகு தொலைவில் அல்ல
மிக அண்மையில் கேட்கிறது
நீ செய்து முடித்தவற்றின் குரல்
என்னால் காத்திருக்க முடியாது
என் யாசிப்பின் கடைசி நொடியில்
மகிழம்பூக்களின் வெப்ப வாசனை
மற்றுமொரு குளிரூட்டம் பெற்ற அறை
வலியற்றுப் போய்விட்டன யாவும்
வாத்சல்யமற்ற உன் குரலின் தொலைவு
நான் தொடும் கணம்
அல்லது ஒரு விடுபடும் சம்பவம்
மிக அண்மையில் இதோ நெருங்கிவிட்டது
உனக்கு கேட்கிறதா

3. சமைத்த உணவின் முன்

உன் வருகை நிகழும் நாட்களை
அல்லது என் இரவை நீ விசாரிக்கும்
சம்பவம் இவையன்றி
தவிக்குமென் சுவாசம்
நேற்றின் நகரில்
பெருங்காற்றாய் விசிறியடித்தது
சமைத்த உணவின் முன் நெடுநினைவாய்
வெறித்திருந்தேன்
ஏதும் சொல்லியனுப்பினாயா?
அல்லது வந்தடையாத செய்திகளை
விபரீதமாய் பெருக்கும்
நம் முன்னாட்களின் இதயம்
போதும் போதுமென்றிருக்கிறது
ஒரு நகரத்தின் பரபரப்பும்
அதன் மாலைச் செய்திகளும்
ஒரு போதும் பூத்துக் காணாத
வாசல் தொட்டியில்
குறுமலர்கள் அடர் மஞ்சளில்
தலையாட்டிப் புன்னகைக்கின்றன.



இன்பா சுப்ரமணியன் கவிதைகள்

1. பூவாத்தாவரம்

வசந்தகாலம் மண்டபசாலையில்
அதிகமாய் உதிர்ந்துக் கிடக்கும்
மஞ்சள் நிறப்பூக்களை
அள்ளிக் கொண்டுப் போய் கொட்டுகிறது
காற்று.
ஒரு பூவாத்தாவரத்தின் காலடியில்

2. அஇலை

மரத்திலிருந்து
எல்லா இலைகளும்
உதிர்ந்து கொண்டிருந்தன
அதன் இறுதிஇலை உதிரும்போது
உதிர்தலென்னும்
அ இலையும்
உதிர்ந்து விழுந்தது
அம்மரத்திலிருந்து

3. சிற்றாறு

பாலைவனத்தின் மணல்வெளியெங்கிலும்
ஓடுகிறது சிற்றாறு
தரையில் படாமல் ஓடுகிறது
அதன் நீர்
நிலவும் மிதக்காது
சூரியஒளியும் பரவாத
அச்சிற்றாறு
ஒட்டகங்களின்
கூனல் முதுகுகளில்

4. கண்ணாடி றெக்கைகள்

கிழிபட்டு வேலியோரத்தில்
இறந்துக்கிடக்கும் தும்பியை
புரட்டிப்புரட்டிப்
பார்க்கிறது காற்று
எழுப்பும் விதமாய்



ஸ்ரீராம்பொன்ஸ் கவிதைகள்

1. நிசப்த கூட்டிலிருந்து
கிறீச்சிட்டு மேலெழும்புகிறது இருள் பறவை
ஆகமங்களின்படி எழுப்பப்பட்டவையிலும்
கோபுரச் சிதிலங்களுள்
பேயுறையும் மர்மம்
தாவர நெடி அப்பிய சுவர்களில்
நம் நிழல்களைப் பிணைத்துப் பிரித்து
எதிரெதிர்த் திசையில் கடக்கும்
பேருந்துகளின் விளக்கொளியில்
பார்வைப் பூச்சிகளாகி
இலக்கின்றி அலைக்கழிகிறோம்
கற்பூரக் கரைசல் போலல்லாது
கல்மழையாகி
நெஞ்சை அறைகிறது பிரிவு
மனமோ நெடுநேரமாகியும்
நீ உதிர்த்துச் சென்ற
நீள் ரோமங்களையே பின்னிக் கொண்டிருக்கிறது
வாங்கித் தந்த மாத்திரைகளை
இன்றிரவு நீ விழுங்குகையில்
அந்த பின்னலின் முதல் கண்ணியை
நான் அவிழ்க்கத் தொடங்கியிருப்பேன்

2. பிற பெண்களைப் போலன்றி
உனதிரு தோள்களிலும் சிறகுகள் முளைத்ததன்
அளப்பரிய ஆனந்தத்தின் துணுக்கு
என் உதட்டோரங்களில்
உனதாடை ஜிகினாத் தூசிகளென மினுமினுத்தன
திராட்சை நிறச் செழுமையுடன்
அடர்ந்திருந்த இரவின்
வெளிச்சமின்மையினூடாக
உன் உயிர்க் கலம் தளும்ப
விந்தாய் உருகினேன்
கற்பலன பழுதுபட்டு எனது
காமம் துவளுகையில்
பெருங்கருணை பாகங்களால் உணவளித்தாய்
தேவதைக் கதைகள் முடிவுறும் கணங்களை
அறியாமல் இருந்துவிட்ட பின்
ஞாபகங்களைப் பின்னிமுக்கும் நிகழ்வுகளின் விசையில்
கைநீட்டி உனைத் தொட முயல்கிறேன்
கனவுகள் சூழ் உறக்கத்திலும் கூட
நிகழ்வின் முரணை முள்ளாய் வலிக்கச் செய்கிறது
நகு நிகு நிறத்தில் எரியும் நிலவு

பாம்பாட்டிச்சித்தன் கவிதைகள்

1. ஒளிவிலகல்

ஒளி காற்றிலிருந்து கண்ணாடிக்கு
கண்ணாடியிலிருந்து நீருக்குள் பாய்ந்தது
நீரில் வெயில் மிதக்கும்
கண்ணாடிக் கலத்தில் ஒற்றைமீன்
நனைந்து நைந்த
காகிதம் போன்றதன் மடல்கள்
நீரினுள் அசைகின்றன
சுற்றுலாய் பயணியாய்
அவ்வழியே வந்த பூனை
தன் கரத்தால் கலத்தினுள்
துழாவத் துழாவ
எப்போதும் பூனையின் கரத்தைவிடச்
சற்றே ஆழத்தில் இயல்பாக
சுழன்றோடியது மீன்
ஒளிவிலகலின் மாயத்தில்
சிக்கிய பூனைவசம் சிக்காத மீன்

2. ஏரியின்கண்

பேருந்து பாலத்தின்
மீது ஊர்ந்தது
கீழே இருந்த
கரிய ஏரியில்
ஓர் ஆணும், பெண்ணும்
அரைநிர்வாணிகளாய்
அருகருகே நீராடிக்கொண்டு
வாளிப்பான அவர்களது
உடல்களை பொலிவூட்டியது நீர்
பேருந்து பாலத்தைக்
கடந்தபோது
ஏரியில் எண்ணற்று மிதந்தன
இமைக்காத விழிகள்

கவிஞன் என்கிற அடையாளம் அற்றுப் போதல்

வீட்டின் அங்கத்தினரை கவிஞன் தனது
வார்த்தைகளில் கழுவேற்றல்
இல்லம் விட்டகலல்
நண்பர்கள் மறுதலிக்க
எதிரிகளிடம் குறுவாட்களையளித்தல்
ஆளுயரப் பலகையின் முன்
இரு கரங்களையும் விரித்து
விழிகளைத் திறந்தவாறு
கத்திவீச்சுக்கு இலக்காதல்

ஒரே வீச்சில் சாய்த்துவிட
விருப்பமற்ற அவர்கள்
வதையில் தேர்ந்த நிபுணர்களாக
அவன் மீது எறிதல்
காயங்களை ரசித்துத் தருகிற
சொற்பத் தொகையை ஏற்றுக்கொள்ளல்
தினசரி மதுத்தேவையை
இவ்வாறாக சமாளித்தல்
'டாஸ்மாக்' செல்லும் வழியில்
தபால்காரனை சந்தித்தல்
பத்திரிக்கைகள் பிரசுரிக்காமல் அனுப்பிய
கவிதைகளைத் திரும்பப்பெறுல்
உணவிற்காக சில நாய்க்குடைகளை வாங்கல்
'டாஸ்மாக்கி'ல் அமர்ந்து
தசைபுதைந்த கத்திகளை
போதையில் வலியுணராது அசைத்தெடுத்தல்
வெளியே மண் குளிரப் பெய்யத்துவங்கும் மழை ரசித்தல்
கோழையென்று, முத்திரையிட்டுப் பிரிந்த
காதலைக் குறித்து விசனப்படல்
அனிச்சையாய் அலைபேசி இயக்கி
சிநேகிதகளிடம் கையேந்தத் துடிப்பதை
அவனிலியங்கும் எதுவோ தடுத்தல்
அதீத வேட்கையில் விசுவாசங்கள் இடற
சக கவிஞன்
மனை விழைய முயற்சித்ததை ஓர்மித்தல்
அதிகாரமையங்களின் நிழற்குடையினை
அணுகாததை எண்ணல்
அதிகப்பிரசங்கியின் கவிதையென
நெருப்பிலிடப்பட்ட தொகுப்புகளை
நினைவில் மீட்டெடுத்தல்
பிரசுரம் மறுக்கப்பட்டுத் திரும்பிய
கவிதைகளின பக்கங்களைக்
கிழித்து மதுவில் தோய்த்தல்
அவற்றை குருதி கசியும்
காயங்களின் மேல் ஒட்டுதல்
மறுநாள் பயனாகப் போகும்
ஆயுதங்களின் கூர்மையை சரிபார்த்தல்
உணவிற்கென கைவசமிருந்த காளான்களில்
ஒன்றை குடையெனப் பிடித்து மழைக்குள் நுழைதல்
தடயமற்றுப் போதல்

ஒரு அழைப்பிதழைப் போல கையில் கிடைத்த

ஞாபகமறதியில் புதைந்திருந்ததின்
அச்சம் கலவரமூட்டுகிறது.
நானற்ற உலகத்தின் எல்லாவற்றிலும் மரணவாசனை
முகம் தெரியாமல் தொலைத்த அன்பை
காணவியலாமல் போகும் என் தலைமுறை
தொப்புள் கொடியை
அதனுள் தெறிக்கும் மரணவலியை
கல்லறை வாசகத்தோடு
என் சிதைவுகளை சட்டமிடுகிறேன்.
சுயமைதுனத்தில் கழன்ற ரூப அரூப பிம்பங்களில்
மோகித்த பிரார்த்தனைகளை செவிமடுக்கும் கற்கடவுளர்
பூட்டுகிற பகல் வெறியேற்றின இருளில்
விபத்து மரணங்கள் சமீபிக்கும்
துக்கத்தின் எறும்புகள் சாரையாய் என் புற்றுக்கு இடம் பெயர்கின்றன
சலித்த வாழ்வில் புலப்படாத பதட்டம்
சுழித்து கொண்டோடும்
நீர் பரப்பில்
சாம்பல் புலர துவங்குகிறது
சுவடுகளில் நினைவழித்து எழுதும்
அலை வார்த்தைகளில்

முதலில் வீட்டை வரைந்து கொண்டோம்

அதில் பாடம் செய்வித்த விலங்கு முகங்கள்
கம்பீர வேட்டையாடின ஆயுதங்கள்
தலைவாயிலின் ஒரு நதி
வீட்டை சுற்றி மரங்களும் ஆகாயமுமாய்
பிணைந்தன
நடுவில் தவறுதலாய் வந்து
உறைந்து நிற்கும் பறவைகள்
கோட்டிலிருந்து மறைந்து வளர்கிற நிழல்
வீட்டின் கதறலில் முதலில் சன்னல்களை திறந்தோம்
நாங்களிருப்பது புலனாக
நகர நெரிசலின் ஒரு வீதியை
அதன் வியாபார வளாகங்களோடு உருவாக்க
வாயில் சுற்றுச்சுவர்கள்
கார்களின் வசதிக்கேற்ப எழும்பின
வண்ணங்கள் உரையாட
பலூன் குழந்தைகளுக்கு விளையாட்டு காட்டும்
நாய்க்குட்டி
காவலாளி, ஆளற்ற கடித பெட்டி

மிக மெல்லிய வறிய தேகி நடைவாசியின் கண்கள்
விழுங்கும் பாவனைகளை
வீட்டின் மேற்புற சன்னல்வழியே
ஒருவன் மிக துல்லிதமாக வரைந்து கொண்டிருக்கிறான்
வரவேற்பறையில் வரவேற்கும் வண்ணம்

நதியின் மீது எத்தனை வண்ணங்கள்

நதியினுள் எத்தனை முகங்கள்
எனக்கு நானே ஒரு சூரியன்
நான் திரும்பி படுக்க ஒரு திசைபோதும்
என் படுக்கையில்
எதற்கு இவ்வளவு விண்மீன்கள்
ஒரே ஒரு பால்விதி எல்லையற்ற
கணங்களை தோற்காது
நத்தை கூடுகளை உடை
வெண்கரையான் குஞ்சுகளின்
புற்றுக்கண் திற
பாம்புக்குட்டிகளை தின்று செரி
வாசனை நுகர்ந்து பழகும்
பூனையின் தோழமையில் ஒரு வீடு
யாரும் பாராது மூடி மறைக்கும் கழிவுகளின்
திருப்தியின்மையில்
நாசியில் பிறாண்டி கொண்டிருக்கிறது
வீடு வீடாய் வீதிகள் தாவி
ஒரு குழந்தையாய் அழுகிறது
பற்களினிடையில்
பசி நீங்கிய முதலையின் எஞ்சிய துணுக்குகளை
கொத்தி உண்ணும் சிறுபறவை
ஒரு நதியென துவங்கி நகரும்
ஆகாயத்தில் எதுவுமற்று

மனப்பாடின் உறுதியின் மீது நின்றேன்

விறைக்கும் குளிர்நடுங்க
விளக்குகளில் பனி மூடிக் கொண்டிருந்தது
பச்சை தவளை புணர்வென கவிந்து
குறுகும் நிலமென
கண்களில் புலனாக வெளி
திறந்து ஊடுருவி கலையும்
காற்றில் அலைக்கழிகிறேன்
அவன் திசையெல்லாம்
இனி திரும்பவியலா என் கலவரங்கள்
விலக புலனாகிறது

மூடுபனி ஒளிரும் வெளிச்ச சிதறல்
முகம் சிதைக்க
கத்தி வெப்பம் வரைகிற கித்தானில்
என் கூடாரம்
மிகக் குட்டையான மலை ஆடுகள்
அவள் நிழலுருவம்
ஊனில் கசியும் நீள் கோடுகளில்
நடன பிரியம்
மழைத்துளிகளென கடவுளின் கண்கள்
எல்லாவற்றையும்
அடித்து கொண்டோடும் கூழாங்கல்லின் நதி
எப்போதுமான பிரக்ஞையில்
குருதி
கூர்வாள் அழுத்த நழுவுகிறது

முத்த சாகரம்

கலைஞனின் சூனிய முத்தம்
இது கோழி முத்தம்
இல்லை சேவல் யுத்தம்
இது மீனு முத்தம் நீரு முத்தம்
கத்தி முத்தம் உயிர் சொட்டும்
கலவர பூ பூக்கும்
கனவத்தனையும் காளியின் கைகளாய் நீளும்
செவ்வரி இதழெல்லாம் செம்பருத்தி முத்தம்
உலர்ந்த நிலத்தின் உப்பு போல
உதட்டில் உலர்ந்து கிடக்கிறது
அதை காதலில் ஆவி போக்குவது
நீரா.. சுவை முத்தம்
சித்தம் தீப்பிடிக்கும் முத்தம்
நீரா காற்றா விலகாமலிருக்கும்
உடலா உயிரா... உணர்வல்லவே முத்தம்
ரெட்டை நாக்கு நாக முத்தம்
உயரங்களை அமிழ்த்தும் கழுகு முத்தம்
கண்ணீர் உகுக்கும் பிரிவு முத்தம்
காதலனின் கல்லறை சுவாசம்
காதலியின் புத்த முத்தம்
வாழும் காலமெல்லாம் கழுவேற்றும்
எதிரோலிக்கும் மலை முழுவதும் அன்பு முத்தம்
படுக்கை வரிகளால் நிரம்புகிறது
பக்கங்கள் ஒட்டிக் கிடக்கும் புத்தக முத்தம்
மார்பில் முண்டும் பசி முத்தம்
உருவழியும் காட்டின், விலங்கு பிரதேங்கள் அழுகும்
முத்தம் ஏகும் வெறுமையுள்
அச்சிறுவன் எல்லாவற்றுமாக விளையாடிக் கொண்டிருக்கிறான்.

அந்நகரத்தில் எதிர்பாராத மழை

தங்க நேர்ந்தது விடுதி அறை ஒன்றினுள்
வேகத்தின் சாலைகளில்
வாகனங்கள் பின் தங்க துவங்கிவிட்டது
பயணவாசிகளை போல
வலுக்கும் மழையில்
மறதி குடைகளை நனைந்தபடி
அவிழ்கிறாள் பூக்காரி
சர்ப்பமென அந்தரங்களில் நீந்தும்
பூ வாசனைகள்
உதிர்க்கும் மழை
படுக்கை விளிம்பின் உலர்ந்த மல்லிகை
யாருமற்ற அறையுள் அவதானிக்கும் கண்கள்
என்ன முயன்றும் வரைந்து கொள்ள முடியாத
நீள் கரும் ஒற்றை சிகை நெளிவோடி கொண்டிருக்கிறது
இருள் பூத்துதிரும் கண்ணாடிகள்
இப்போதும் மௌனித்திருக்கின்றன
ஸ்டிக்கர் பொட்டு வர மறுக்கிறது போர்வையின் முகமாகி
உருவி உருவி எறிகிறேன்
அழித்தெழும்பும் அண்மித்தவளின் நெடி பற்றிட
உலரத் துவங்குகிறது மழை ஈரங்கள்
இம்முறையும்
அவளின் மகிழ்ச்சிக்கு பெயரில்லை
சலனமற்று அவளை பூட்டி
நடைமேடைகளுக்கு நடக்கு துவங்குகிறேன்

குன்றின் மேல் நிறம் பெயர்ந்து

மலைவாகட குறிப்புகள் அலைந்தோய்ந்த
வைத்தியன் கண்களெல்லாம்
அவன் தேடாத அரியவகை மூலிகைகள்
மலையேற வழிகாட்டும் பளியன்
கால்கள் கிளரும் கிழங்குகளம்
நாசி நுகரும் விலங்கரவம்
பாறை தொப்பூள் நீர் செழி தாண்டி
கண்கள் ஊடுருவும் தேனடைத் தேனீக்களின்
இமிலொலி உடனழைகிறான்
அடையாளங்களை நகர்ந்தும்
பிடிபடவேயில்லை தேடும் மூலிகை
கணு உடல்கள் நுகர்ந்து திரியும் கானக வாசம்
வேட்கைமுடையும் விலங்கினங்களை பளியன்
சைகைளில் விரட்டும் மிரட்சிகளை
அவதானித்தபடி
யுகமரங்களினூடே

எழு தகுனி சமம் மீதேறிட
செறிந்த மரநிழல் விலகி
உதிர்பொன்னிற புற்களினிடையில் வைத்தியன் அதிசயிக்கிறான்
நிரம்புதலும் அகலுதலும் இல்லாத
யானைக்கால் வட்டை உதகை நீர்
உற்றுநோக்கும் முகம், வான் விழாமலும் தனமுகமாய் அசைவற்ற நீர்.
ஒவ்வொன்றாய் வினவ
கணத்தில் மரம் தாவுகிறான் பளியன்
கலவரம் படர வார்த்தைகள் பயம் பூக்கிறது
அவன் அச்சக்கண்களில் அசையாமல் எச்சரிக்கிறான்
சுற்று வந்த சுவடில் நீர் மேல் விலகி வரச்சொல்கிறான்
வைத்தியனுக்க அச்செயல் புதிராயிருக்கிறது
வயமிழக்கும் புலன் சரிவினில் அமைதியாய்
நடக்க துவங்கினர்
மொழியற்றமை கவிழ்ந்து விரைகிறது
இரவெல்லாம் பளிச்சி பாறையில் ஆயிரம் சலனங்கள்
அந்நீர் தொட்டதும் எப்படி பாறையாக இயலும்
யாமத்தில் மலையேற துவங்கும் வைத்தியன்
பிற்பகலில் வந்தடைகிறான்
ஏழுதகுனி சமதளத்திற்கு
முற்றிலும் வேறு வண்ணம் முகம் காட்டுகிறது
உடல் நடுங்க செய்யும் பாழிடங்கலாயின
யானைக்கால் வட்டை நீர் சுனை
காணாமல் திகைத்த பூ சமைய,
வைத்தியன் பிரக்ஞ்ஞை பிரண்டை கொடிகள் படர்கிறது
மழை அழிந்து வரையும் வெளியோடு
நனைந்தபடி மனவெழுச்சி அழிய
வைத்தியன் இறங்கி வர பளியன் வெறுமே முறுவல்



சொற்களில்..

நேற்றின் மிகச்சிறிய மிச்சமென விடிகின்றது
நீ பார்த்து ரசித்திடாத பறவைகளுடனான
இன்றுன் நீல வானம்
வாசனைகளேதுமற்றுன் அரையில்
கரையத் தொடங்கியிருக்கின்றன எனக்கான பரிசுகள்
பறவைகள் சூழ்ந்த வெளியில் நீ தவறவிட்ட
உன் சொற்கள்
சாலையோர மரங்களாகிவிட்டன
உடல் மொழிகளின் சூட்சமங்கள்
மேலும் மேலும பழுதடைந்து விட்டன
அன்புகளை பகிர்ந்து கொள்ளும்
உன் வெளியீட்டு முறைகள் நேற்றுடன்
முடிந்து விட்டதையெண்ணி சொற்களற்ற வொரு
பிரபஞ்சத்தில் மிகப்புதிதாக அழுது தொலைக்கிறாய்
மற்றெல்லா வெளியீட்டு முறையிலும் மிகுந்த
ஒழுங்குடனிருக்கிற தது
மேலும் ரகசியமானதாக வுமிருக்கிறது

புரிதலின் எளிமையற்ற செயல்

உன்னை நெருங்கிக் கொண்டிருப்பதென்பது
உன்னை மட்டுமே நெருங்கிக் கொண்டிருப்பதல்ல
உறங்க முடியாத குளிரொன்றில்
சொற்களின் பகுத்தல்களுக்கிடையில்
அப்பொழுது நிகழ்ந்து கொண்டிருப்பதைப் போலல்லாமல்
என்னலகில்
உன் ஸ்பரிசம் தேடுவதென்பதைப் போல்
நீ விரித்த வானில் நட்சத்திரங்களற்ற யிரவில்
உதிரும் முதல் துளி
பிரிக்க வியலாத அவ்வுதடு முத்தத்தின் எச்சிலெனப்படுகையில்
சேகரிக்கத் தொடங்கிய குடங்களில்
வால் ளைத்த தவளைகள் ளைக்கத் தொடங்கின
யின்னும் சிலபெரிய மீன்கள் அந்நீரினிறுதி
வடிவங்களை உடைக்கவும் துணிந்துவிட்டன
முலைகள் வளரும் தேகமொன்றின் இரகசிய முடிபோல்
உன்னை நெருங்கிக் கொண்டிருப்பதென்பது
உன்னை மட்டுமே நெருங்கிக்கொண்டிருப்பதல்ல
மேலும்
என்னையும் நெருங்குவதல்ல,
அதுவொரு புதிர் அல்லது அதுவொரு
நேசங்களடர்ந்த மரங்களின் புதர்,

நீ விரித்த வானில் சூரியனற்ற வெளியில்
மேகங்களுக்கு மேல் பறக்கும் வானூர்தியின்
இறகுகளின் முனைகளில் விதைத்த ஒளிபோல்
மீயொலி புரிந்த வெளவார்கள்
உடல்குறுக்கிச் செல்லும் சிறுதுளைப்போல்
வேலிகளற்ற சொற்கள் இசைகளற்றிருப்பது போல்
உதடுகளசையாத உன் நுட்பங்களைப் புரிந்துகொள்வதைப் போல.
உன்னை நெருங்கிக் கொண்டிருப்பது
ஒற்றைச் செயலல்ல.

உறுப்பற்றுப் போதல்

முலைகள் வரைந்து குவிக்கும் விரல்கள் உடைந்துவிட்டன.
மீன் வலையின் ஓட்டைகளென மாற்றியிருந்தது அவ்வுலகம்
அவைகளில் ஒவ்வொரு நொடியும் நழுவியபடி
கனவுகளைப் போல் வந்தடைந்த முலைகளற்ற பெண்கள்
இலைகளின் பச்சையமென மாறியிருந்தனர்
கற்சுவர்களைப் போலிருந்த சொற்களைப் பேசினர்
யாருமற்ற நிலங்களில் தங்களின் மொழியறிந்த அவர்கள்
கடவுளின் புத்தகங்களின் பக்கங்களில்
மயிலிறகென வசிக்கத் தொடங்கினர்
குழந்தைகளின்மொழியறியாத தேசமதில்
குழந்தைகளுக்கான பாடல்களையும் பறவைகளையும்
நிறைய்யவே வரைந்து தீர்த்தனர்.
வெற்றுடம்பில் பரவிய நிலவொளியின் பாடலில்
யோனிகளைத் தடவிய
முலைகளை யுருவாக்கும் கடவுள்களின் கைகளை வெட்டிய
அப்பெண்கள் தேகங்களையிழந்தனர்
கடவுள்களின் புத்தகங்களிலிருந்து ஆப்பிள்களைத் திருடி
முலைகளென வைத்துக்கொண்ட அப்பெண்கள்
கடவுள்கள் விரித்த ஆகாயத்தில் தொடர்ந்து சிறுநீர்கழித்தபடி
கடவுள்களின் கைசொருகிய யோனிகளுடன்
சுற்றிக் கொண்டிருக்கின்றனர்
ஒழுங்கள் கலைந்திடாத வொரு உலகின் தெருக்களில்.

ஒரு கோடைக் காலம்
பொம்மைகளைத் திருடி விற்கும் விரல்கள்
பூக்களை வரைந் உமுடித்த போது
ஒரு கோடைக்கால காலை மதியமாகியிருந்தது.
வண்ணத்துப்பூச்சியை வரைந்து முடித்த போது
அக்கோடை கால மதியம் மாலையாகிவிட்டிருந்தது
மலைகள் நிறைந்த பள்ளத்தாக்குகளை வரைந்து முடித்தபோது
அக்கோடைகால இரவு பகலாகிவிட்டிருந்தது.
கால்களை வொரு பொருளென நகர்த்திக் கொண்டிருக்கும்
அவனின் ரகசியமறிய கூடி நின்ற மக்களின் கேள்விகளுக்க

பதிலேதும் சொல்லாமல்
கசப்பானதொரு காபியை அருந்திவிட்டு
மீண்டும் வரையத் தொடங்கியிருந்தான்
பறவைகளை, சமவெளிகளை, மரங்களை
வானவில்களை, நட்சத்திரங்களை, விலங்குகளை
பிரியங்களின் பாடல்களை, இன்னும் அதிகமானவற்றை
வரைந்து முடித்து அவன் வெளியேறுகையில்
அந்நிலத்தில் எக்குழந்தைகளுக்கும் யில்லாமல் போயிருந்தன
பொம்மைகளும் அவைகளிலிருந்து தடங்களும்.

பூனைகளைக் கொல்லும் பகல்

நீண்ட யிரவிற்கு பிறகான பகல்பொழுதுகளை
சரிபாதியாக பிரிக்கும் அவனுடல் பறவையை ஒத்திருந்தது
மேலும் அவற்றை சில கூறுகளாகவும்
மிகச்சில உட்கூறுகளாகவும் பகுக்கத் தெரிந்தவனவன்
இரடியிலொன்று விரைந்த தடமிருந்து பகுத்தல்களின் ஆழங்களில்
சற்று கவனிக்கத் தொடங்கினான்
இரவென்பதே கலந்திடா பகலை மீட்டெடுக்க
அவற்றை பிரிக்குமிடத்தில் பரவசமேதும் தோன்றாதிருக்கவென
துயரங்களின் விசும்பல்களை கூறுகளான சிறுபகலிலும்
சேகரித்து மூடினான்.
திறக்கவியலாத அப்பெட்டி வெளியேறும் விழியற்றிருந்தது
பெரும்பாலும் கறுப்பு மற்றும் செந்நிறப் பூனைகளே
அவனது பகலில் அழைந்து கொண்டிருந்தன
அவைகளின் கனவுகளில் வந்து தொங்கிய பகல்முழுவதும்
சிறு சிறு அறையாயிருப்பதை யறிந்த அவன்
அப்பூனைகளை நேசித்தான்
அவற்றின் கழுத்தை பகல்போல் சரிபாதியாக
வெட்டுமளவிற்கு நேசித்தான்

சொற்களைப் புசிப்பது போல் அவற்றை புசித்தான்
பகல், ஞானம் போல் குழப்பிக்கொண்டிருந்தது அவனை
சரிபாதியாக வெட்டப்படாத அவனது பகல்கள்
அவனது உறவினர்களின் மரணங்களை அழைத்து வந்தது
அதுவும் அவனுக்கு மிகப்பிடித்திருந்தது.
தொலைபேசி அழைப்புகள் வராத யிரவைப் போல் கடந்தது
சற்று நீண்ட அரைடஜன் ஒரு பாதி பகல்கள்
அவனது புது மனைவி வரிசையாகப் பெற்றெடுத்தாள்
கறுப்பு மற்றும் செந்நிப்பூனைகளை மறுபாதி பகல்களில்
கனவுகளை கைவிட்ட அவனுடல் மனிதனினுடல் போலானது
பிரித்தலில் விருது பெற்ற அவன்
குழந்தைகள் நிரம்பிய ஓரிரவைக் கூட சரிபாதியாகவோ
சரியற்ற பாதியாகவோ பிரிக்க முடிந்ததேயில்லை.

ஃபைஸ் அஹ்மத் பைஸ் (1911 - 1984)

இக்பாலுக்கு பிறகு பாகிஸ்தானின் புகழ் பெற்ற கவிஞர். படித்த வசதியான நிலப் பிரபுகளின் குடும்பத்தில் பிறந்தவர். ஆனாலும் மார்க்சியவாதி. ஆங்கிலத்திலும் அராபிய மொழியிலும் முதுகலைப் பட்டம் பெற்றவர். ராணுவ அதிகாரி, பத்திரிகையாளர், கல்லூரி விரிவுரையாளர், தொழிற்சங்கவாதி என பலவேறு துறைகளில் பணியாற்றியவர். 1951-ஆம் வருடம் ராணுவ ஆட்சியால் கைது செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப் பெற்றார். நான்கு வருட சிறைவாசத்துக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டார்.

1963ஆம் ஆண்டு லெனின் அமைதிப் பரிசு கவிஞருக்கு வழங்கப்பட்டது. 1984ஆம் ஆண்டு நோபல் பரிசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. 12 கவிதைத் தொகுப்புகள் மற்றும் கசல் பாடல்களை வெளியிட்டுள்ளார். இங்கு தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள கவிதைகள் இந்திய பாகிஸ்தான் பிரிவினையின் போது நிகழ்ந்த கலவரங்கள், சிறைவாசம், காதல் போன்ற விஷயங்களைச் சொல்கின்றன.

அழகு என்பது கலைக்கான மதிப்பீடு மட்டுமல்ல அழகு என்பது சமுதாய தார்மீக மதிப்பீடும் கூட என்பது கவிஞரின் கவிதைப் பார்வை.

அஃப்சர் ஹுசைன் — ஆங்கிலத்தில்
லாவண்யா — தமிழில்

1) பேசு, பேசு உன்னுடய உதடுகள் சுதந்திரமானவை

பேசு, பேசு உன்னுடைய நாக்குத்தான்.
பேசு, உன்னுடைய உடல்தான்
பேசு, உன் வாழ்க்கை
இன்னமும் உன்னுடையதுதான்
கருமானின் கடையில்
தீக்கொழுந்து மூர்கமாயெரிவதை
இரும்பு சிவந்து மின்னுவதைப் பார்
பூட்டுகள் தாடைகளைத் திறக்கின்றன.
ஒவ்வொரு சங்கிலியும்
உடையத் துவங்குகிறது.
பேசு, இந்தக் குறுகிய நேரம்
போதுமான அளவு நீண்டது
உடலும் நாவும் மரணமடையுமுன்
பேசு. ஏனெனில் உண்மை இன்னும் சாகவில்லை
பேசு. எதை நீ பேச வேண்டுமோ அதைப் பேசு.



3) என் உயிரைவிட அதிகமான பணம்

தீர்ப்பு நாள் வந்துவிட்டது
அவர்களின் பிரகடனத்துக்காக
கும்பல் கூடியிருக்கிறது
நான் உங்களை நேசித்ததற்காக
குற்றம் சாட்டப்பட்டிருக்கிறேன்

மது எதுவும் மீதமில்லை
குடிகாரர்களின் தாகம்
மதுக்கடைகளை எரித்துக் கொண்டிருக்கிறது

கொடுங்கோலனின் வாள்
யாரைத் தேடிக் கொண்டிருக்கிறது?
அது எல்லா மயானங்களையும் நிரப்பி
எல்லா மௌனங்களையும் குடி வைக்கிறது.

நான் இப்படித வாழ்ந்திருக்கிறேன். உண்மை.
மரணத்துடன் விளையாட்டுகள் ளையாடியபடி
ஆனால் இந்த முறை என் உயிரைவிட
அதிகமானவை பணயமாய் வைக்கப்பட்டிருக்கின்றன

அதனால் என்னைத் தூக்கிலிடும் ஆணையைக் கொண்டு வா
என்னைக் குற்றம் சாட்டுவது யாரெனப் பார்க்கிறேன்
என் மரணத்துக்கு யார் கையொப்பமிடுவதெனப் பார்க்கிறேன்

முடிவில்
என் வாழ்க்கை இப்படியானதும்
ஒரு கொலைகாரனுக்கும் அவன்
வாளுக்குமிடையிலான சூதாட்டத்திற்கு
பரிசாகிறது என் ரத்தம்.

4) மாயமான ரத்தத்திற்கான தேடல்
இரத்தத்தின் சுவடுகளில்லை, எங்குமில்லை
நான் எல்லா இடத்திலும் தேடி விட்டேன்
தூக்கிலிடுபவனின் கைகள் சுத்தமாக இருக்கின்றன
அவனுடைய நகல்கள் ஒளிர்கின்றன
ஒவ்வொரு கொலையாளியின்
முழுக்கைச் சட்டையும் கறைகளில்லாமலுள்ளன.
இரத்தத்தின் குறிகளில்லை. சிவப்பின் சுவடுகளில்லை.
குறுங்கத்தியின் நுனியிலும் வாளின் கூரிலும்
தரை வெள்ளையாக இருக்கிறது. கூரை வெள்ளயாக இருக்கிறது.
சுவடில்லாமல் மறைந்த இரத்தம்
எழுதப்பட்ட வரலாற்றின் ஒரு பகுதியல்ல.
யார் அதைக் கண்டறிய எனக்கு வழிகாட்டுவார்கள்?
சக்கரவர்த்திகளின் சேவைக்காக அது சிந்தப்படவில்லை.
அது எந்த கௌரவத்தையும் பெறவில்லை.
அதன் எந்தக் கோரிக்கையும் தீர்க்கப்படவில்லை.
அது எந்தச் சடங்குக்கும் பலிதரப்படவில்லை.
அது எந்தக் கோயிலிலும் புனிதக் கோப்பையில் வைத்திருக்கப்படவில்லை.
அது எந்தப் போரிலும் சிந்தப்படவில்லை.
அதை யாரும் வெற்றிக்கொடிகளில் பொறிக்கவில்லை
ஆனால், கேட்கபடாமல், கேட்கப்படவேண்டுமென்று
அது இன்னமும் அழுது கொண்டிருந்தது.
அதைக் கேட்க யாருக்கும் நேரமில்லை.
யாருக்கும் விருப்பமில்லை.
அநாதை ரத்தம் அழுது கொண்டிருந்தது.
ஆனால் சாட்சிகள் யாருமில்லை.
எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை.
துவக்கத்திலிருந்து இந்த இரத்தம்
புழுதியில்தான் ஊட்டம் பெற்றது.
பிறகு அது சாம்பலாயிற்று, சுவடற்று மறைந்தது.
புழுதிக்கு இரையானது.

5) கேட்காதே....

நீ மட்டுமே இவ்வுலகை ஒளிர்விக்கிறாயென
உன்முன் வாழ்வின் துயரங்கள் ஒரு பொருட்டல்ல
என் நானெண்ணிய பழைய காதலை
என்னிடம் கேட்காதே.
வசந்தத்தின் நிறங்களுக்கு
உன் அழகு நிரந்தரத்துவத்தை தருகிறாதென்றும்
பிரபஞ்சத்தின் நட்சத்திரங்கள் உன் கண்கள் மட்டுமே
என்றும் நான் நினைத்தேன்.
உன்னை எனக்கு சொந்தமாக்கிக் கொண்டால்
விதி நிரந்தமாயென் வசமிருக்குமென
நான் நினைத்தேன்
துன்பங்களுக்கும் விருப்பங்களுக்கும் தொடர்பில்லையென்றும்
அதீதக் களிப்புக்கும் காதலுக்கும் உறவில்லையென்றும்
இப்போது நானறிவேன்
பட்டெனவும், டமாஸ்கெனவும், தங்கச்சரிகையென்றும்
திரிக்கப்பட்ட நூற்றாண்டுகளின்
கருப்பு நிழலில் உள்ளது நம் வாழ்வின் துன்புறுத்தும் புதிர்,
இரத்தத்தில் நனைத்து புழுதியில் துடிதுடிக்க
கடைவீதிகளிலும் பள்ளத்தாக்குதல்களிலும், எங்கும்
விற்கப்படுகிறது மனித மாமிசம்.
வறுமையும் நோயுமான உலை
உடல்களை ஒன்றப் பின் ஒன்றாய் உருக்குகிறது.
உன் உடல் இன்னமும் ரத்தினங்கள் நிறைந்த நதிதான்.
ஆனால் துன்பங்களுக்கும் விருப்பங்களுக்கும்
அதிதக் களிப்புக்கும் காதலுக்கும் உறவில்லையென
இப்போது நானறிவேன்.



6) இலையுதிர்காலம் வந்தபோது

இப்படித்தான் இலையுதிர்காலம் மரங்களுக்கு வந்தது.
தோல் தெரிய உடைகளை உரித்து அவைகளின்
கருத்த உடல்களை நிர்வாணமாக்கிற்று.
அவைகளின் இதயங்களை உலுக்கி, மஞ்சள் இலைகளை
தரையெங்கும் சிந்தியது.
யாரும் அவற்றை மிதித்து வடிவிழக்கச் செய்யலாம்
எதிர்ப்பின் முனகலை சட்டை செய்யாமல்.
கனவுகளை அறிவிக்கும் பறவைகள்
அவற்றின் பாடல்களிலிருந்து நாடு கடத்தப்பட்டன.
ஒவ்வொரு குரலும் அதன் தொண்டையிலிருந்து கிழிக்கப்பட்டது.
அவை புழுதியில் விழுந்தன
வேடன் தன் வில்லை வளைக்குமுன்,
ஓ, கடவுளே, கருணை காட்டுவீராக!
புத்துயிர்ப்பிக்கும் பேராவாவுடன்
நலிந்த இந்த உடல்களை ஆசீர்வதியுங்கள்.
இறந்துபோன அவற்றின் நரம்புகளில்
புதுரத்தம் ஓடச் செய்யுங்கள்
ஏதேனும் ஒரு மரத்துக்கு
பசுமையைப் பரிசாய் தாருங்கள்.
ஒரு பறவை பாடட்டும்.

போரில் என் பங்கு : ஓர் ஒப்புதல் வாக்குமூலம்

—குந்தர் கிராஸ்

தமிழில் ஜி.குப்புசாமி



1943-ம் வருடம் டான்ஸிக்கில் பதினைந்து வயது பள்ளி மாணவனாக நான் இருந்தபோது ராணுவத்தில் சேருவதற்கு நானாக முன் வந்தேன். எப்போது? ஏன்? சரியான தேதியையும், அப்போது நிலவிவந்த யுத்தத்தின் தடுமாற்றமான சூழலையும், ஆர்க்டிக்கிலிருந்து காக்கஸ்வரை இருந்த அதன் பதற்றமான பகுதிகளையும் என்னால் நினைவுகூர முடியாததால், என்னை ராணுவத்தில் பதிவு செய்து கொள்ளத் தூண்டியிருக்கலாம் என்றும் அந்தக் கனவை வளர்த்ததென்றும் நான்

உத்தேசிக்கக்கூடிய சந்தர்ப்பங்களை ஒன்றாக கோர்ப்பதுதான் என்னால் இப்போது செய்யமுடிந்தது. ஆசுவாசப்படுத்தும் அமை மொழிகளுக்கு அனுமதியில்லை. நான் செய்தது இளமைப்பருவ மடமை என்று நிறுத்திவிட முடியாது. மேலிருந்து எந்தக் கட்டாயமும் இல்லை. பியூரரின் (ஹிட்லர் ஜெர்மனியில் ஃபியூரர் என்றே வாஞ்சையுடன் அழைக்கப்பட்டார்) பிழையாத்தன்மையை சந்தேகப்பட்டதற்காக, ராணுவத்தில் சேர்வதற்கிருந்த வேட்கைக்காக இப்போது உணரும் குற்றவுணர்வை ஆற்றுப்படுத்த அவசியமிருப்பதாகவும் நான் கருதவில்லை.

லூஃப்ட்வாஃப்பே ஆக்ஸிலரியில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது அது நிகழ்ந்தது. கட்டாய ராணுவ நியமனத்திற்கு தகுதி அடைந்திடாதவர்களுக்கு சிறிய வயது பையன்களைக் கொண்ட படைப்பிரிவான அது ஜெர்மனியை வான்வழித்தாக்குதலிலிருந்து பாதுகாக்க நியமிக்கப்பட்டிருந்தது. இந்தப்பணி தன் விருப்பச் சேவையல்ல, என் வயதொத்த சிறுவர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டிருந்த பணி. ஆனால் இது எங்களது பள்ளிக்கூட நடைமுறைகளிலிருந்து கிடைத்த சுதந்திரமாகத்தான் எங்களுக்கு இருந்தது. பயிற்சிகளும் அந்தளவுக்கு கடுமையாக இல்லை. முரட்டுத்தனமான இளவயதுத் துடிப்பில் தாய்நாட்டு ராணுவத்தின் பிரதான பிரிவே எங்களுடையதுதான் என்று கருதிக்கொண்டிருந்தோம். கைஸர்ஹாஃபென் படைத்தொகுதி எங்களது இரண்டாவது தாய்வீடாகிவிட்டது. ஆரம்பத்தில் பள்ளிப்படிப்பையும் தருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், களப்பயிற்சிகள் வகுப்புகளை இடையூறு செய்து கொண்டேயிருந்தால் ஒல்லியான வயதான ஆசிரியர்கள் அந்த மேடு பள்ளமான புழுதிச்சாலையில் பயணித்து எங்கள் தொகுதிக்கு வந்து வகுப்பெடுக்க மறுத்தனர்.

எங்களது 88 மி.மீ. துப்பாக்கிகளை இரண்டு அல்லது மூன்று முறை மட்டுமே சில எதிரி விமானங்கள் ஸர்ச்லைட்டுகளின் கதிர்வெளிச்சத்தில் தென்பட்டபோது உபயோகப்படுத்த வேண்டியிருந்தது. கொலோன், ஹாம்பர்க், பெர்லின், ரூர் பேஸின் நகரங்கள் சந்தித்ததைப் போன்ற பெரும் தாக்குதல்களை நாங்கள் எதிர்கொள்ளவில்லை. சொல்லிக்கொள்ளும்படியான அழிவுகளோ, உயிர்ச்சேதங்களோ இல்லை. நான்கு இன்ஜின்கள் கொண்ட லங்காஸ்டர் குண்டுவீச்சு விமானம் ஒன்றை சுட்டு வீழ்த்தியதுதான் எங்களது பெருமைக்குரிய சாதனை. கருகிப் போயிருந்த அந்த விமான வீரர்கள் கனடா நாட்டவர்கள் என்று சொல்லப்பட்டது. லூஃப்ட் வாஃப் ஆக்ஸிலரியில் வேலை களைப்பூட்டுவதாகத்தான் இருந்தது. ஆனால் பள்ளிக்கூடக் களைப்பிலிருந்து மாறுபட்ட விதத்தில் இருந்தது. குறிப்பாக இரவு நேர ரோந்துப்பணியும், முடிவேயின்றி அழுக்கு வகுப்பறைகளில் நடத்தப்படும் பாலிஸ்டிக்ஸ் என்ற எறிபடையியல் வகுப்புகளும் எங்களை கசக்கிப்பிழிந்து அயர்ச்சியுறச் செய்தன. ஒன்றுவிட்ட வார இறுதிகளில் எங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. அவர்கள் கூறுகிற மாதிரி "அம்மா கிட்டே" போய்க்கொள்ளலாம். ஒவ்வொருமுறையும் வீட்டுக்குப்போகும் சந்தோஷம், எங்களது அடைத்துக்குறுகலான ஒண்டிக்குடித்தன குவார்டர்ஸை நினைத்து கலைந்துபோகும் என் பெற்றோர்கள் நடத்திவந்த பலசரக்கு கடையையொட்டி அமைந்திருந்த அந்த இரண்டு அறை குடியிருப்பில் எனக்கென்று ஒதுக்கப்பட்ட இடமாக இருந்தது, வஸ்தூக்க அறையின் சன்னலுக்கடியில் இருந்த இடம்தான்.

வீட்டில் இல்லாத விஷயங்களுக்காகவும், உதாரணத்திற்கு குளியலறை, கழிப்பறை-இருந்த விஷயங்களுக்காகவும் நான் சண்டை போட்டுக்கொண்டே இருப்பேன். படைத்தொகுதியில் எங்களுக்கு இருந்ததெல்லாம் ஒரு பொதுவான குளியலறையும், ஒரு பொது கழிப்பிடமும்தான். வரிசையாக உட்கார்ந்து வெட்டி வைக்கப்பட்டிருந்த ஒரு பள்ளத்திற்குள் கழிப்போம். அது எனக்கு சங்கடமாகவே இல்லை. ஆனால் என் குடியிருப்பில் நான்கு வீடுகளுக்குப் பொதுவாக அரைத்தளத்தில் அமைக்கப்பட்டிருந்த கழிப்பறையை நினைத்தாலே எனக்கு சகிக்க முடியாதிருந்தது. அண்டைவீட்டுக்குழந்தைகள் அசுத்தப்படுத்தி வைத்திருக்கும். அல்லது உங்களுக்குத் தேவையாக இருக்கும்போது யாராவது உள்ளே இருப்பார்கள். துர்நாற்றமிருக்கும். அதன் சுவர்களிலெல்லாம் விரல் அடையாளங்கள் காணப்படும்.

இரண்டு அறை பொந்து, குடும்பப்பொறி, அங்கிருந்த எல்லாமே வார இறுதி விருந்தாளியை முடக்கிப் போடுவதாகவே இருந்தன. அம்மாவின் கரம் கூட மகனின் எரிச்சலைத் தணிவிப்பதாக இல்லை. அவனுடைய தங்கையைப்போல அவனுக்கு பெற்றோர்களின் அறையில் தூங்க இப்போது அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் வெளியறையில் அவனுக்காக அமைக்கப்பட்டிருந்த படுக்கையில் கூட சனிக்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமைக்கு இடைவெளியின்றி தொடர்ந்த தாம்பத்திய வாழ்க்கைக்கு ஒரு சாட்சியாக அவன் இருக்க வேண்டியிருந்தது. அதாவது என்னால் கேட்க முடிந்த அல்லது கேட்க முடிவதாக நான் நினைத்த - அந்த சப்தங்கள், அடங்கியொலிப்பதாக இருந்தாலும், குழந்தைப்பருவத்திலிருந்தே கேட்டு மனதில் பதிந்து போயிருந்த மிருகத்தனம் கலந்த தாம்பத்திய சடங்கின் ஒலிகள் எதிர்ப்பார்புடன் கிசுகிசுப்புகள், உதடுகளின் சப்புக்கொட்டல்கள், முனகும் கட்டில் ஸ்பிரிங்குகள், குதிரைரோம மெத்தையின் பெருமூச்சொலி, வேதனையும், கேவலும், புணர்தலின் அனைத்துவிதமான முயங்கொலிகளும் குறிப்பாக இருட்டில் வீரியத்துடன் கேட்கின்றன. தாம்பத்திய உறவின் எல்லாவிதமான நிலைகளையும் தெளிவாக கற்பனை செய்திருந்தன. திரைப்படத்தனமான என மனச்சித்தரிப்பில் அம்மாதான் எப்போதுமே பலியாளாக இருந்தார். அவர் பணிந்து போனார். அவர் ஒப்புக்கொடுத்தார். களைத்துப்போய் சோர்வின் எல்லைவரை தாக்குப்பிடித்தார்.

அம்மா பிள்ளையின் அப்பா மீதிருந்த வெறுப்பையும், கிரேக்க துன்பியல் படைப்புகளின் போக்கை நிர்ணயித்த புலப்படாத்தூண்டுதலின் போர்க்களத்தையும் டாக்டர் ஃபிராய்டும் அவருடைய சீடர்களும் திறமையாக பதிவு செய்துள்ளனர். இவ்வாறாக முதன்மையான காரணமாக இல்லாவிட்டாலும், வீட்டை விட்டு என்னை வெளியே விரட்டியதற்கு காரணமாயிருந்த பற்பல காரணக்கூறுகளில் இதுவும் ஒன்று. விமானப்பயணத்தடங்களுக்கா என் மூளையைக் கசக்கினேன். அவையெல்லாம் ஒரே திக்கில் சென்றன. போர்முனை அல்லது பல போர்முனைகளில் ஏதாவதொன்றிற்கு, எவ்வளவு விரைவாக முடியுமோ அந்தளவுக்கு.

என் அப்பாவுடன் சண்டை வளர்க்க முயற்சித்தேன். அது எளிதாக இல்லை. அபாண்டமான குற்றச்சாட்டுகள் தேவைப்பட்டிருக்கலாம். ஆனால் அமைதியை விரும்பும் குடும்பஸ்தரான அவர் உடனடியாக பணிந்து போய்விடுவதாக, இணக்கம் ஏற்படுவதற்காக எங்கும் சமாதானமாகிவிடுவார். அந்த மூதாதையருக்கு தன் பிள்ளைகளிடம் கூறுவதற்காக நிரந்தர லட்சியம் ஒன்று ஸ்திரமாக உதடுகளின் மீதிருந்தது. உன் வாழ்க்கை சிறப்பானதாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். நம்முடையதை விட உன் வாழ்க்கை சிறப்பதானதாக இருக்கும். அவரை மிரட்டுவதற்கு எவ்வளவு முயற்சித்தாலும் அதற்கு தயாராக இல்லாதவராகவே இருந்தார்.

திடீரென்று சகிக்கமுடியாமல் போய்விட்டிருந்து இரண்டு அறை குடியிருப்புகளும், நான்கு குடும்பங்களுக்குப் பொதுவாக அடித்தளத்தில் அமைந்திருக்கும் கழிப்பறையும் மட்டுமே ராணுவத்தில் சேர்வதற்கு ஒரே காரணம் என்று கூற முடியாது. என் வகுப்புத்தோழர்கள் ஐந்து அறை குடியிருப்புகளில், அவர்களுக்கென்று தனி கழிப்பறைகளோடும், செய்தித்தாட்களை சதுரமாக வெட்டி நாங்கள் பயன்படுத்தி வந்ததைப் போலில்லாமல், டாய்லட் பேப்பர் உருளைகளோடும் வளர்ந்து வந்தனர். அவர்களில் சிலர் நவீனமான தனி வீடுகளில் அவர்களுக்கென்று தனியறை ஒதுக்கப்பட்டும் இருந்தனர். இருந்தும் அவர்களும் கூட வீட்டைவிட்டு வெளியேறி (இராணுவத்தில் சேர துடித்துக் கொண்டிருந்தனர். என்னைப் போலவே) அவர்களுக்கும் அச்சமின்றி அபாயத்தை எதிர்நோக்குவதில் விருப்பமும், கப்பல் மாற்றி கப்பலாக மூழ்கடிக்கவும் டாங்கிகள் மாற்றி டாங்கிகளை சிதறடிக்கவும் அல்லது வானில் நவீனரக மெஸ்ஸர்ஷ்மிட்ஸ்களில் பறந்து எதிரி விமானங்களை வீழ்த்தவும் இச்சை இருந்தது.

ஆனால் ஸ்டாலின்கிராடிற்குப் பிறகு போர்முனை நிலவரம் சரியத் தொடங்கியது. விசேஷமாக பெரிதுபடுத்தப்பட்ட, கார்ட்போர்டில் பொருத்தப்பட்ட வரைபடங்களில் கலர் கலரான ஓவிய குண்டூசிகளைக் குத்தி துருப்புகளின்



முன்னேற்றத்தைப் பின்பற்றி வந்து கொண்டிருந்த என் மாமா ஃபிரீடலைப் போன்றவர்களுக்கு கிழக்குலகிலும் வட ஆப்பிரிக்காவிலும் ஏற்பட்டிருந்த நிலவரங்களை அனுமதிப்பதில் சிரமம் இருந்தது. அதிகபட்சமாக எங்களுடைய கூட்டாளி ஜப்பான் கடற்போரிலும் பர்மாவிலும் கண்டிருந்த வெற்றிகளை மட்டும்தான் கொண்டாட முடிந்தது. எங்களது நீர்மூழ்கிக்கப்பல்களை அபூர்வமாக மூழ்கடித்த கப்பல்களின் எண்ணிக்கையையும், எடை விபரத்தையும் செய்திக்குறிப்புகளாக வெளியிடும் அட்லாண்டிக்கிலும், ஆர்க்டிக்கிற்கு அருகிலும் வாணிகக்கப்பற் கூட கூட்டங்களைத் தாக்குவார்கள்.

தனிமனித நாயக வழிபாட்டிற்கு என்னைத் தூண்டியது செய்தித்தாட்களல்ல. செய்திப்படச்சுருள்கள்தான். கருப்பு வெளுப்பில் ஜோடிக்கப்பட்டு அவர்கள் வழங்கிய உண்மைகளுக்கு நான் இரையாகினேன். வெற்றிகரமாக நீர்மூழ்கிக்கப்பல்கள் தாய்நாடு திரும்புவதைக் காட்டாத செய்திச்சுருள் ஒன்று கூட இல்லை. விடுமுறையில் வீட்டிற்கு வருகிற நான் மணிக்கணக்காக முன்னறையில் விழித்துக் கொண்டு அவர்களைத் திரையில் பார்த்திருப்பேன். எண்ணெய் கவச உடுப்புகளில் கசடு படிந்திருக்க, ஒற்றர்களைக் கண்காணிக்கும் தொலைநோக்கு கண்ணாடிகளை அணிந்து தொடுவானத்தை புயல்வீசும் நேரத்தில் கப்பலின் மேற்தளத்தில் நின்று கண்காணிக்கும் கற்பனைகளுக்கு நிறைய சந்தர்ப்பங்கள் கிடைத்தன...

லூஃப்ட்வாஃப் ஆக்ஸிலரிக்கு வாராந்திர விடுமுறையை புதனுக்கோ மாற்றித்தருவது சாத்தியமாக இருந்திருக்க வேண்டும். எப்படியோ ஒரு விஷயம் தெளிவு. நெடுநேரம் அணிவகுப்பு ஒருநாள் நடந்து முடிந்த பிறகு ஹியூட்டிலிருந்து சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு டிராம் பிடித்துச்சென்று அங்கிருந்து லாங்ஃபா. ஜோப்போட வழியாக கடற்படை பயிற்சியாளருக்கு நீர்மூழ்கிகளைக் கையாள பயிற்சியளிக்கும் தோத்தன் ஹோஃபனுக்கு ரயில் ஏறிச்சென்றேன். என் வீரப்பிரதாப கனவுகளின் இலக்கைச் சென்றடைய வெறும் ஒரு மணிநேரமே பிடித்தது. ஆள் சேர்க்கும் அலுவலகம் ஒரு தாழ்வான போலிஷ்-காலகட்டக் கட்டிடத்தில் பல்வேறு சங்கேத அடையாளக் குறிகள் கொண்ட கதவுகளின் வரிசைக்குப் பின்னால் இருந்தது. ஐவ்வாக இழுத்துச் சென்ற அரசு அலுவலக அதிகாரத்தின் செயல்முறைகள் ஒருவழியாக முடிந்து கையெழுத்திட்டதும், என் பெயர் அழைக்கப்படும் வரை காத்திருக்கச் சொல்லப்பட்டது. எனக்கு முன்னால் இரண்டு மூன்று பெரிய பையன்கள் இருந்தனர். அவர்களிடம் பேசுவதற்கு அதிகம் எண்ணமில்லை.

என்னை பேட்டி கண்ட ஸார்ஜன்ட்டும், முதல்நிலை காற்படை அதிகாரியும் எடுத்த எடுப்பிலேயே என்னை நிராகரித்தனர். எனக்கு மிகக்குறைந்த வயது. என் வயதொத்தவர்களுக்கு நியமனம் இன்னும் ஆரம்பிக்கவில்லை. விரைவிலேயே அழைப்பு வரும். அதிகப்படியான அவசரத்திற்கு அவசியமில்லை.

அவர்கள் புகைபிடித்துக்கொண்டு, பெரிய உருண்டையான கோப்பைகளிலிருந்து பால் சேர்ந்த காபி குடித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் வயதான கனவான (ஸார்ஜென்ட்?) நான் பேசும்போது பென்சில்களைத் தேர்ந்தெடுத்து சீவிக் கொண்டிருந்த ஞாபகம் இருக்கிறது. அல்லது இத்தகைய நாடகத்தனமான விவரணைகளை ஏதாவது திரைப்படத்திலிருந்தோ அல்லது வேறெங்கிருந்தோ பெற்றுக்கொண்டேனா?

நீர்மூழ்கிப் படைப்பிரிவுக்கு தறபோதைக்கு ஆள்தேவையில்லை யென்ற பிறகும்கூட நான் விடாப்பிடியாக நின்று கொண்டிருந்தேன் போலிருக்கிறது. அவர்கள் பொறுமையாக சமாதானம் கூறினர். விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்வதை நிறுத்தி விட்டோம். யுத்தம் கடலில் மட்டும் நிகழ்த்தப்படுவதல்ல. என் பெயரை அவர்கள் குறித்து வைத்துக் கொள்வார்கள். ராணுவத்தின் இதர பிரிவுகளுக்கு தேவைப்படும் போது பரிந்துரை செய்வார்கள். புதிய கவசப்படைப்பிரிவுகள் தயாராகிக்கொண்டிருக்கின்றன. பொறுமை இளைஞனே பொறுமை, சீக்கிரத்திலேயே உன்னைச் சேர்த்துக்கொள்கிறோம்.

இறுக்கமாக பெல்ட் கட்டி எச்சில் போட்டு பளபளப்பாக்கிய ஷூக்களும், கோடு போட்ட ஸாக்சும் அணிந்து அரை நிஜாரில் நின்ற பையனான என்னைக் கண்டு அந்த இரு சீருடை அதிகாரிகளும் நக்கலாக சிரிப்பது எனக்குக் கேட்பதைப் போலிருந்தது. இன்னும் அரை நிஜாரில் இருக்கும் இந்தப் பையனுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்க வேண்டும் என்று நினைத்திருக்கலாம் அந்த ஸர்ஜென்டின் இடது சட்டைக் கையில் காலியாக இருந்தது.


காலம் கடந்தது, வீட்டில் விஷயங்கள் யுத்த காலத்தின் போக்கில் சென்று கொண்டிருந்தன. எனது வார இறுதி விடுமுறை கால எல்லைகளுக்குள் என் அப்பாவின் மீதான வெறுப்பையும் பத்திரமாகப் போற்றி பாதுகாத்து வந்திருந்தேன். அவரை அனுமதித்து ஒதுக்குவதில் எனக்கு சந்தோஷம் இருந்திருக்க வேண்டும். முதலாவதாக அவர் உயிரோடு இருந்து வந்தது. அடுத்ததாக சூட்டும் டையும் மிருதுவான ஃபெல்ட் ஸ்லிப்பர்களும் அணிந்து நடுக்கூடத்தில் நின்று கொண்டிருந்தது அல்லது உட்கார்ந்து கொண்டிருந்த, அடுத்ததாக.

எப்போது பார்த்தாலும் ஒரே ஏப்ரனை அணிந்து கொண்டு, அதே பீங்கான் பாத்திரத்தில் பாஸ்ட்ரி பிசைந்து வருவது, அடுத்ததாக எப்போதுமே செய்தித்தாட்களை கவனமாக வெட்டி டாய்லட் பேப்பர் செய்பவராக இருந்தது, இறுதியாக ராணுவ சேவையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டவர் என்பதால் போர்முனைக்கு அவர் எப்போதுமே போகப்போவதில்லை. அதனால் என்னை விட்டுத் தொலையப் போவதுமில்லை என்பது ஆனால் என் அப்பா என் பிறந்தநாளுக்கு ஒரு கீன்ஸில் கைக்கடிகாரம் வாங்கிக் கொடுத்தார்.

இந்தப்பொதுவான நிலவரம் குறித்து அம்மாவின் அபிப்பிராயம் இப்படியாக இருந்தது. எனக்கென்னவோ சந்தேகமாக இருக்கிறது. ஒருமுறை அவர் இவ்வாறு கூறுவதையும் கேட்டேன். ஹெஸ் போய்விட்டது பெருத்த நஷ்டம்தான் நம்முடைய ஃபியூரரை விட அவனை எனக்கு அதிகம் பிடிக்கும். மேலும் சிலமுறை, எதற்காக யூதர்களை இவர்கள் இப்படி விரட்டுகிறார்கள் என்று எனக்கு புரியவில்லை. சில்லறை சாமான் கடையில் ஸக்கர்மன் என்றொரு விற்பனையாளன் இருப்பான். ரொம்பவும் நல்லவன். எப்போதுமே தள்ளுபடி செய்து தருவான். என்று கூறுவார்.

குளிர்காலம் முழுவதிலும் துருப்புகள் தாயத்தை நோக்கி பின்னகர்ந்து கொண்டேயிருந்தன. வெர்மாக்ட்டின் உயர் அதிகாரமட்டம் இந்தப் பின் வாங்கலை படையை நேர்ப்படுத்தும் நடவடிக்கை என்றே பெயரிட்டு வந்தது. வெற்றி அறிக்கைகள் ஏறக்குறைய நின்றுபோய்விட்டன. குண்டு வீச்சுகளிலிருந்து தப்பித்த அகதிகள் மேலும் மேலும் எங்கள் நகரிலும் சுற்றுவட்டாரங்களிலும் குவியத் தொடங்கினர். எந்தவொரு

படைப்பிரிவிலாவது சேர்ந்து போர்முனைக்கு ஓடவேண்டுமென்ற எனது உந்துதல் வலுவிழந்து போனது. என் ஆர்வம் வேறொரு திசையில் நகர்ந்து கொண்டிருந்தது. ஐஹென்டார்ஃபையும் லெனாவ்வையும், க்ளைஸ்ட்டின் ‘கோஹ்லாஸ்ஸையும், ஹோல்டர்லின்னின் ‘ஹைபீரியனை’யும், வாசித்துக்கொண்டு, கையில் ஆக்-ஆக் துப்பாகிகளோடு காவலில் நின்றுகொண்டு, உறைந்திருக்கும் சமுத்திரத்தின் மேல் பார்வையை நிலைகுத்தியிருக்கும் கற்பனை மட்டுமே இருந்து வந்தது.



இந்த சாவகாசமான போக்கு வேனிற்பருவம் முழுக்க தொடர்ந்திருக்கும். இறுதியில் கோடை தொடங்கி கொஞ்சநாட்களிலேயே ராணுவ ஆள் சேர்ப்பிற்கு உடற்தகுதி சோதனைக்காக அழைப்பு வந்தது. உள்ளூர் ராணுவ அதிகார மையக்கட்டிடத்தில் நடந்த அத்தேர்வில் நான் ரெய்ஷார்பீட்ஸ்டைன்ட் என்ற தொழிலாளர் பிரிவில் சேர்க்கப்பட்டிருப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. அது சிவிலியன் பகுதிகளில் போருக்கு உதவுகிற ஒரு துணைப்படைப்பிரிவு. இந்தப் பதிவுத்தபால் வந்தது எனக்கு மட்டும் அல்ல. அல்லாமே கடிகாரத்துல்லியத்தில் நடைபெற்றன. வயது வாரியாக பிரிக்கப்பட்டோம். பணியின் கால அளவு மூன்று மாதங்கள். நான் ஏப்ரல் கடைசியிலோ அல்லது மே துவக்கத்திலோ சேர வேண்டும்.

கிழக்கிலும் (கீவ்விலிருந்து அனைவரும் வெளியேற்றப்பட்டுவிட்டனர்) ஜப்பானியர்களுக்கும் அமெரிக்கர் இடையே பசிபிக் தீவுகளுக்காக நடைபெற்ற யுத்தங்களிலும் நிகழ்வுகளிலும் துருப்புகளின் பங்கு பற்றிய செய்தி அறிக்கைகளால் என் பூகோள அறிவு விரிவடைந்து கொண்டிருந்தது. எமது கூட்டணி நாடான இத்தாலி எங்களுடன் உறவை முறித்து கொண்ட பிறகு (அதை பச்சை துரோகம் என்று நாங்கள் கருதினோம்) அப்ரூஸி அப்பெனைன்ஸில் சிறை வைக்கப்பட்டிருந்த முசோலினி (இரண்டாம் டியூஸ் என்று அழைக்கப்பட்டார்.) இரண்டாம் டியூஸை எமது பாராசூட் வீரர்கள் விடுவித்த பிறகு... (ஸ்கோர்லெஸனி என்பது சமகால நாயகனின் பெயராயிற்று) மான்டி கேஸினோ அபேவின் சிதைவுகளுக்காக யுத்தம் தொடங்கியது. ரோமிற்கு கொஞ்சம் தெற்கே பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கத் துருப்புகள் இறங்கி, கடும் குண்டுவீச்சுக்கு நடுவிலும் கடற்கரையோரமாகவே முன்னேறிச் சென்றபோது எனது கச்சிதமான லாப்ட்வாஃப் ஆக்ஸிலரி சீருடையைத் துறந்து மிகவும் கவர்ச்சியற்ற பணியாளர் சேவை உடுப்பிற்கு மாற வேண்டியிருந்தது. அதன் பழுப்பு நிறத்தைப் பார்த்தால் மலம் தானம் நினைவிற்கு வரும். எங்களையே ஒரு கழிவுக் கூளமாக இச்சீருடை மாற்றிவிட்டதாகப் பேசிக்கொள்வோம். இதில் சகிக்க முடியாத ஓர் அம்சம் இதன் தலைக்கவசம். பிருதுவான அத்தொப்பியை அணிந்தால் ஏதோ தலை வீங்கியிருப்பதைப்போலத் தெரியும். அதைக் கழற்ற முடியாது.

உரித்தெடுக்கத்தான் முடியும் போலத்தோன்றும். மத்தியில் ஒரு மடிப்பு வேறு இருக்கும். 'கைப்பிடி வைத்த பிட்டம்' என்று அதற்கு பெயர் வைத்தோம்.

வெளியிலிருந்து பார்க்கையில் ராணுவத் தொழிலாளர் பிரிவில் எனக்களிக்கப்பட்டிருந்தது. ஓர் இலகுவான வேலைதான் என்று தெரிந்தது. ஓவியம் வரைவதிலும் வண்ணங்கள் பயன்படுத்தும் உத்திகளிலும் நான் சிறந்த விளங்கியது தனிச் சலுகைககளை எனக்குக் கொண்டு வந்தது. எங்கள் கான்டீனின் சுவர்களில் இயற்கை காட்சிகள் வரைய ஏற்பாடாகியிருந்தது. ஜூனிபர் மலர்ப்புதர்கள் நீர்நிலைத் தேக்கத்தில் பிரதிபலிக்கும் மேகங்கள். மேட்டிலும் பள்ளத்திலும் அடர்ந்திருக்கும் மரங்கள், பிறகு தண்ணீரில் துள்ளி விளையாடும் நீர்நங்கை, அது கட்டாயம் ஒன்றுமில்லை. விரும்பத்தக்கது.

வழக்கமான காலை உடயற்பயிற்சிக்குப் பிறகு துப்பாக்கிப் பயிற்சி முதலில் ஒரு ஸ்பேட், அதன்பின் ஒரு 98 கார்பைனை வைத்துக் கொண்டு இயற்கை காட்சிகளை வரைவதற்கு விழுவிக்கப்படுவேன். பின் மதியம் முழுவதும் கேம்ப்பிலிருந்து விலகி எனது வாட்டர் கலர்கள், நீர் குடுவை, டிராயிங் பேட் சகிதம் அழகான மேகங்கள், வழவழவென்று கருத்திருக்கும் குளங்கள், ஒழுங்கற்ற மாபெரும் கற்பாளங்களுகு முன்னால் அல்லது பின்னால் வளர்ந்திருக்கும் மரக்கிளைகள், அவற்றின் மலர்கள் என அடர்ந்த வண்ணங்களில் எனது படங்கள் வரைதாளில் உருப்பெற்றன. கேன்டீனின் வெள்ளைச் சுவர்களில் டிஸ்டம்பரில் வரைவதற்கு என்னிடம் வரைபடங்கள் அதிகமாகவே சேர்ந்துவிட்டன.

ஒவ்வொரு நாளும் காலை உடற்பயிற்சிக்குப் பின் ஆயுதங்கள் வழங்கும் பிரிவின் அதிகாரி ஒருவர் நிறைவேற்றும் சடங்கு ஒன்றில் ஈடுபடுத்தப்படுவோம். சிரிக்காமல் தீவிரமான முகத்துடன் இருப்பார். அவர் வழங்கும் ஆயுதங்களை பெருமிதத்தோடு பெற்றுக் கொள்வோம். எங்கள் தொழிலாளர் பிரிவின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் துப்பாக்கியின் மரப்பிடியும், உலோகக் குழலும், குண்டுகளும் கைகளில் வாங்கும் போது அவற்றின் தீண்டுதலில் உணரும் பெருமிதம் அலாதியாக இருந்தது.

சிறுவாகளான எங்களுக்கு துப்பாக்கிகளை பக்கவாட்டில் பிடித்துக் கொண்டு அட்டென்ஷனில் நிற்கும் போது அவற்றை பெற்றுக் கொள்ளும் போதும், அணி வகுத்துச் செல்லும் போதும் வயது ஏறி பெரிய ஆட்களாகிவிட்டது போல பிரமை ஏற்படும். ''ஒரு போர்வீரனின் துப்பாக்கிதான் போர்வீரனின் மனைவி'' என்ற சொற்றொடரை அப்படியே வரித்துக் கொண்டோம். 98 கார்பைனோடு திருமணம் ஆகாவிட்டாலும் கூட நிச்சயமானது போல நினைத்துக் கொண்டோம்.



இவற்றையெல்லாம் கூறும் போதும் நாங்கள் என்று பன்மையில் விளித்துக் கொண்டாலும் எமது பொதுநிலை படை வீரர்களின் பிரிவில் விதிவிலக்காக ஒருவன் இருந்தான். பொன்னிறக்கேசமும், நீல விழிகளும் கொண்ட அந்த ஒல்லியான பையனுக்கு நீண்ட முகம், பக்கவாட்டில் பார்த்தால் நார்டிக் இனத்திற்கு பிரச்சாரம் செய்யும் விளம்பரத்தில் காணப்படுவது போல ''முகவாய், மூக்கு, வாய், நெற்றி''



ஒவ்வொன்றும் ''கலப்படமற்று தூய்மையான இனத்தின்'' அடையாளமாக இருக்கும். அவன் களங்கமற்று இருந்தான். கழுத்திலோ நெற்றியிலோ ஒரு மரு ஒரு மச்சம் என எதன் தடயமும் இருக்காது. அறிக்கை வாசிக்கச் சொல்லும் போது குழறவோ, திக்கவோ மாட்டான். நெடுந்தூர ஓட்டத்தில் அவனை ஜெயிக்க தைரியமும், சுவரேறும் பயிற்சிகளில் அவன் காட்டும் சுறுசுறுப்பும் வேறு எவருக்கும் கிடையாது. சோர்வேயடையாமல் அவனால் ஐம்பது முறை பஸ்கி எடுக்க முடியும். அவனிடம் எந்த ஒரு குறையும் இல்லை. ஆனால் அவனை ஒரு விதிவிலக்காக ஆக்கியது எதுவென்றால் அவன் பெயர் என் ஞாபகத்தில் தப்பிக்கிறது. அவன் ஒரு கீழ்படியாதவன். துப்பாக்கிப் பயிற்சியில் பங்கெடுக்க அவன் மறுத்தான். அதைவிட மோசம் துப்பாக்கியையோ பேரலையோ கையில் எடுக்கவே மறுத்தான். எல்லாவற்றையும் விட மோசமாக பயிற்சியாளர் அவன் கையில் கார்பைனைத் திணித்தால் அதை அவன் கீழே போட்டுவிட்டான். அது அவனை அல்லது அவன் விரல்களை குற்றவாளியாக்கியது.

தொழிலாளர் பணிப்பிரிவில் உள்ள அனைவருக்கும் இருக்கும் ஓர் அடிப்படையின கருவியான மண் வெட்டியை வைத்துக் கொண்டு கட்டளையிடப்பட்ட அனைத்து வேலைகளையும் செய்து முடிப்பான். தோழமையுணர்வில் அவன் முழு மதிப்பெண்கள் பெறுவான். நட்பார்ந்த, நற்குணமுள்ள எப்போதும் உதவிக்கு வரக்கூடிய எதற்கும் புகார் செய்யாத பையன் அவன். அவனிடம் கேட்டுக் கொண்டால் அவனுடைய தோழர்களின் பூட்ஸ்களுக்கு கண்ணைப் பறிக்கும்படி பாலிஷ் போட்டுத் தருவான். இருப்பதிலேயே மிகக் கண்டிப்பான என்.சி.ஓ. கூட ரோல்காலின் போது

அவன் போட்டிருந்த பூட் பாலீஷை அங்கீகரித்துவிடுவார். பிரஷ், அழுக்குத்துணி இவையெல்லாம் அவனுக்கு பிரச்னையேயில்லை. ஆயுதங்களைத்தான் அவன் தொட மறுத்தான்.

சாத்தியப்பட்ட அனைத்துத் தண்டனைகளும் அவன்மீது விதிக்கப்பட்டன. ஆனால் எதுவும் பயனளிக்கவில்லை. கடமையுணர்வோடு அவன் மணிக்கணக்காக, சிறு முணுமுணுப்புமின்றி விதிக்கப்பட்ட வேலையைச் செய்வான். பெரிய கழியில் கட்டப்பட்ட புழுக்கள் நெளியும் பக்கெட்டை தூ;க்கிக் கொண்டு கழிப்பிடங்களை சுத்தம் செய்வான். (படை வீரர்களின் கொச்சை வழக்கில் அதற்கு தேனடை எடுப்பது என்று பெயர்) பின் சுத்தமாகக் குளித்துவிட்டு உடற்பயிற்சிக்கு வந்து மறுபடியும் ஆயுதங்களை ஏந்த மறுப்பான். அவன் ஆயுதங்களைக் கீழே போடுவது ஸ்லோமோஷனில் எனக்குத் தெரியும்.

முதலில் அவனிடம் பேசி சரி செய்ய முயற்சித்தோம். உண்மையில் அந்த விநோதனை, பிடிவாதக்காரனை எங்களுக்குப் பிடித்திருந்தது. அதைப் பிடிடா, கெட்டியாகப் பிடி! ஆனால் அவன் பொருட்டு எங்களுக்கும் தண்டனை கிடைத்து மயங்கி விழும் வரை சுட்டெரிக்கும் வெயிலில் சித்தரவதை கிடைத்த பிறகு அவனை நாங்கள் எல்லோருமே வெறுக்கத் தொடங்கினோம். நான் அவன் மீது வெறுப்பை வளர்க்கத் தொடங்கினேன். அவன் மீது நெருக்கடியை ஏற்படுத்த நாங்கள் எதிர்பார்க்கப்பட்டோம். எனவே நாங்களும் பதிலுக்கு செய்ய வேண்டும். யாருடைய பூட்ஸ்களுக்கு கண்ணாடிப் போல பாலீஷ் போட்டுக் கொடுத்தானோ அதே பையன்கள் அவனை பேரக்ஸில் வைத்து அடித்தார்கள். அனைவரும் சேர்ந்து அந்த ஒருத்தனை அறைகளை தடுத்துப் பிரித்திருக்கும் பலகைகளின் ஊடாக அவனது கேவல்களும், தோல் பெல்ட்டுகளின் சொடக்கொலியும், சத்தமாக அடியை எண்ணுவதும் கேட்கும். இந்த ஒலிகள் என் ஞாபகத்தில் பதிந்து போயின. எவ்வளவுதான் அவனை நசுக்கும்படியாக வேலைகளைத் தந்து துன்புறுத்தினாலும் அடித்தாலும் வேறு என்ன செய்து பார்த்தாலும் அவனை ஆயுதங்களை ஏந்த வைக்க முடியவில்லை.

ஒவ்வொரு நாள் காலையிலும் ரோல்காலிற்கு நாங்கள் கூடி பயிற்சியாளர் ஆயுதங்கள் விநியோகிக்கத் தொடங்கியதும், இந்த சகிக்க முடியாத பிடிவாதக்காரன் தன் முறை வந்ததும் நெருப்பை மாதிரி அவனுக்கு வழங்கப்பட்ட ஆயுதத்தை வாங்கியவுடனேயே கீழே போட்டுவிட்டு தன் பொஸிஷனில் கைகளை கால்சராயின் பக்கவாட்டுத் தையலின் மீது அழுத்தி கண்களை அனந்தத்தில் பதித்து விறைப்பாக நின்று கொள்வான்.

அவனது மந்திரத்தை, அந்த மறக்க முடியாத சொற்றொடரை எத்தனை முறை அவன் உச்சரித்திருப்பானென்று கணக்கே கிடையாது. "நாங்கள் அதைச் செய்யமாட்டோம்." பன்மையில்தான் குறிப்பிடுவான். உரக்கவோ, மெதுவாகவோ இல்லாத குரலில் அவனையும், அவனது மறுப்பையும் உச்சரிப்பான். நான்கு வார்த்தைகளும் ஒன்றாகக் கலந்து நாங்களதைச் செய்யமாட்டோம்."

அதன்மூலம் அவன் என்ன சொல்ல வருகிறான் என்று கேட்டால் அவன் கையால் தீண்டக்கூட மறுக்கும் அப்பொருளின் பெயரைக்கூட உச்சரிக்க மறுத்து வரையறைப்படாத அது என்பதை மீண்டும் சொல்வான்.

அவன் நடத்தை எங்களை மாற்றியது. அதுவரை திண்மையாக இருந்தவை ஒவ்வொரு நாளும் நொறுங்கின. முதலில் எங்கள் வெறுப்பு வியப்பிலும், பின் அந்த "முட்டாள் எப்படி இதை தொடர்ந்து சமாளிக்கப்போகிறான்?" இவ்வளவு பிடிவாதம் அவனுக்கு எப்படி வந்தது? "அவன் மருத்துவ விடுப்பு கேட்க வேண்டியதுதானே?" "ஏற்கனவே பார்ப்பதற்கு பிசாசைப்போல வெளுத்துப் போயிருக்கிறான்." என்ற கேள்விகளில் வெளிப்படும் பாராட்டிலும் கலந்திருந்தது.

பின்பு அவனை விட்டுவிட்டோம். பின்னாடி அழைத்துப்போய் அடிப்பது நிறுத்தப்பட்டது. அந்தப் பிடிவாதக்காரன் எங்கள் அனைவருக்கும் மேலாக, பீடத்தில் நிற்பது போல நின்றிருந்தான்.

இறுதியில் அந்தக் காலை நேர ஒத்துழையாமைச் சடங்கு அவனைக் கைது செய்ததன் மூலம் முடிவுக்கு வந்தது.

அங்கிருந்து ஒழுங்கும், கட்டுப்பாடும் திரும்பின. அவ்வப்போது அந்தக் கவைடனைக் கைதி எங்கள் உரையாடல்களில் வருவான். யாரோ ஒருவர் அது எங்களுடைய உடற்பயிற்சியாளரா அல்லது எங்களில் யாராவது ஒருத்தனா? "அவன ஜெஹோவாவின் சாட்சியாக இருக்க வேண்டும்." என்றோ, அல்லது "அவன் ஒரு பைபிள் பைத்தியம். சந்தேகமேயில்லை" யென்றோ கூறுவர். ஆனால் அந்தப் பொன்நிறக் கேசமும், நீலநிற விழிகளும், கலப்படமற்ற தூய்மையான இன அடையாளங்களும் உருவத்தில் கொண்ட அவன் எப்போதுமே பைபிளையோ, ஜெஹோவாவையோ, அல்லது வேறெந்தக் கடவுள் பெயரையோ குறிப்பிட்டதில்லை. வெறுமனே "நாங்களதைச் செய்ய மாட்டோம்." அவ்வளவுதான்.

ஒருநாள் அவனது லாக்கர் ரூம் திறக்கப்பட்டு அவனது உடமைகள் அப்புறப்படுத்தப்பட்டன. அப்புறம் அவனை நாங்கள் பார்க்கவில்லை. இடமாறுதல் செய்யப்பட்டதாக கூறப்பட்டது. எங்கே என்று நாங்கள் கேட்கவில்லை. நானும் கேட்கவில்லை. ஆனால் எங்கள் அனைவருக்கும் தெரிந்திருந்தது: ராணுவச்சேவைக்கு தகுதியிழந்தவன் என்று அவன் நீக்கம் செய்யப்படவில்லை. அது அல்ல. வெகுநாட்களாகவே கான்ஸன்ட்ரேஷன் கேம்ப்பிற்கு அனுப்பப்படுவதற்காகத்தான் இருந்தான் என்று கிசுகிசுத்துக்கொண்டோம்.

ஸ்டுத்தாஃப் என்ற அந்த கேம்ப்பைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தோம். அந்த "நாங்களதைச் செய்யமாட்டோம்"- அப்படித்தான் அவனை நாங்கள் ரகசியமாகப் பேசும்போது குறிப்பிட்டுக் கொள்வோம் - பையன் நல்ல இடத்தில்தான் சேர்க்கப்பட்டிருப்பதாக நினைத்தோம். அவர்கள் அந்த "நாங்களதைச் செய்ய மாட்டோமை" காயடித்து விடுவார்கள்.

அது அவ்வளவு எளிதான விஷயமா?

யாருமே ஒரு துளி கண்ணீர்கூட சிந்தவில்லையா?

முன்பைப் போலவே எல்லாமே சென்றிருக்கிறதா?

என்னைப் பொறுத்தவரை சந்தோஷப்படவில்லையென்றாலும் அந்தப் பையன் காணாமல் போனதும் நிம்மதியாகவாவது இருந்தது. அசைக்க முடியாத நம்பிக்கையை நான் வைத்திருந்த அனைத்தின் மீதும் சந்தேகப்புயல் மேகங்கள் சேகரமாகி, அதனால் விளைந்த மயான அமைதி மேற்கொண்டு என் தலைக்குள்



எந்த சிந்தனைக்கும் சிறகு முளைக்காமல் தடுத்தது. சிந்தனையற்றத்தன்மை வெளியை நிரப்பியது. என்னளவில் திருப்தியாக நிறைவாக இருந்தேன். அக்காலகட்டத்தைய என் சுயத்தோற்றம் நான் ஊட்டமாக இருப்பதைக் காட்டியிருக்கும்.

அறிவிப்புப்பலகையில் தினமும் ஒட்டப்படும் வெர்மாக்ட் உயாமட்டக்குழுவின் செய்தி மலர். அட்லாண்டிக் கரையோரத்தில் பிரிட்டிஷ், அமெரிக்கத்துருப்புகள் இறங்கி விட்டன என்று அறிவித்தபோது அந்த அட்லாண்டிக் சுவருக்கான யுத்தம் அதற்குமுன் வியாபித்திருந்த எல்லா செய்திகளையும் பின்னுக்குத்தள்ளியது.

கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டது. எங்கள் கடமைகளில் ஒன்று பதுங்கு குழிகள் வெட்டி, மின்வேலிகள் அமைப்பதாக இருந்தது. ஒரு சிக்கலான அலாரம் சிஸ்டத்தையும் நாங்கள் அமைக்க வேண்டியிருந்தது. அபாய அறிவிப்பு எதுவும் எப்போதுமே நிகழ்வில்லையென்றாலும் ஒரு ஞாயிற்றுக்கிழமை அணி வகுப்பு மைதானத்திற்கு முழுவதுமாக ஆயுதம் தரித்து நாங்கள் 250 பேரும் எங்களது மலப்பழுப்பு நிறச் சீருடையோடு ஒட்ட முடி வெட்டப்பட்டிருந்த தலைகளில் கைப்பிடி வைத்த பிட்டம் போன்ற தலைக்கவசத்துடன் அணிவகுக்க உத்தரவிடப்பட்டோம்.

கொடிகக் கம்பத்திற்குப் பக்கத்திலிருந்த மேடையின் மத்தியில் இறுக்கமான ராணுவ உடுப்பில் ரைகலேபர் சர்வீஸ் தலைவர் ஒருவர் எங்கிருந்தோ தோன்றி துண்டுத்துண்டான பிரகடனங்களாக அவமானம். கடைந்தெடுத்த துரோகம் ஆகியவற்றைப் பேசினார். அதாவது நல்ல அந்தஸ்ததில் இருக்கும் அதிகாரிகளில் சிலர் கூட்டாகச் சேர்ந்து எங்களின் அன்பிற்கும் பாசத்திற்கு உரிய ஃபியூரரைச் கொல்லத் தீட்டியிருந்த திட்டத்தைப் பற்றியும் கடவுளுக்கு நன்றி. அந்த முயற்சி தோல்வியுற்றது - இந்த இழிப்பிறவிக் கும்பலைப் பூண்டோடு ஒழித்துக்கட்டி இரக்கமின்றி பழி வாங்குவதைப் பற்றியும் கூறிவிட்டு, இதிலிருந்து தப்பிப் பிழைத்த எங்கள் ஃபியூரரைப் பற்றி ''உண்மையிலேயே அது தெய்வாதீனம்'' - மேலும் மேலும் முழங்கிக் கொண்டிருந்தார்.

எங்களிடையே ஒரு நடுக்கம் ஓடி மறைந்தது. பக்தியைப் போன்ற ஏதோவொன்று எங்களிடம் வியர்வை துளிர்க்க வைத்தது. ஃபியூரர் காப்பாற்றப்பட்டார் கடவுள் மீண்டும் ஒருமுறை அல்லது இன்னமும் எங்கள் பக்கத்தில்தான் இருக்கிறார். எங்களுடைய இரு தேசிய கீதங்களையும் பாடினோம். Sieg heil! என்று மும்முறை முழங்கினோம். இன்னமும் பெயர் அறிவித்திராத அந்த துரோகிகளின் மீது வெஞ்சினமும் ஆத்திரமும் கொண்டிருந்தோம்.

அந்தப் படுகொலை முயற்சிக்குப் பிறகு, எங்களது பயிற்சிக்காலம் நிறைவடைந்ததால் லேபர் சர்வீஸிலிருந்து நாங்கள் நீக்கம் செய்யபட்டோம். ஃபேட்டிக்குத் திரும்பியதும் என் மூடப்படாத கால் முட்டிகளையும், எப்போதும் தொள தொளவென்றிருக்கும் சாக்ஸ்களையும் பார்த்து கூனிக் குறுகினேன். இவையெல்லாவற்றையும் நான் தாண்டியாகிவிட்டது. இன்னமும் நான் ஒரு பள்ளிச் சிறுவன் அல்ல.

சேர்கைக் கடிதம் எனக்கு இரண்டு மாதங்களுக்குள் வந்து சேர்ந்தது. சமையலறை மேஜையில் பளிச்சென்று கையொப்பமிட்டு, தேதியிட்டு, முத்திரையிட்டு இருந்தது. 1944ம் வருடம் செப்டம்பரில் எனது ரயில் டான்ஸிக் சென்ட்ரல் ஸ்டேஷனை விட்டு பெர்லினை நோக்கிக் கிளம்பியது.

அம்மா ஸ்டேஷனுக்கு வர மறுத்துவிட்டார். நடுக்கூடத்தில் அம்மா என்னை ஆரத் தழுவிய போது என்னைவிடச் சிறியவராக, அந்த பியானோவிற்கும் தாத்தாவின் சுவர் கடிகாரத்திற்குமிடையில் கண்ணீர் கரைந்து போய்விடுவார் போலிருந்தது. ''நான் உன்னைக் கேட்டு கொள்வதெல்லாம் முழுசாகத் திரும்பி வா என்பதுதான்'' என்றார். அப்பா உடன் வந்தார். ட்ராமில் நாங்கள் ஒருவருக்கொருவர் ஒரு வார்த்தை கூட பேசிக் கொள்ளவில்லை. அவர் பிளாட்பாரம் டிக்கெட் வாங்கச் சென்றார். அவரது வெல்வெட் தொப்பி அவருக்கு ஒரு நேர்த்தியான பூர்ஷ்வா தோற்த்தை அளித்தது. ராணுவத்தில் சேராமல் சிவிலியனாகவே இருந்து, உயிரை இழந்துவிடாமல் பாதுகாத்து வரும் ஒரு மத்திய நாற்பதுகளில் உள்ள மனிதர்.

எனது அட்டை சூட்கேஸை அவரே தூக்கிக் கொண்டு வருவதில் பிடிவாதமாக இருந்தார். நான் வளரத் தொடங்கிய கணமே நான் பிடித்துத் தள்ளிவிட்ட அந்த மனிதர். என் அப்பாவாகவே இருந்தாலும் சண்டை போடும் நேரத்தைத் தவிர வேறெப்போதும் நான் நெருங்கியிராத அந்த மனிதர் எதையும் லேசாக எடுத்துக் கொள்கிற உற்சாகமான எளிதில் உணர்ச்சிவசப்படுகிற சுத்தமாக உடையணிந்து கச்சிதமாகத் தோற்றமளிப்பதில் இச்சை கொண்ட அவரது ஃபேஷன்களுக்கு அடுத்ததாக என்னை நேசித்த, உதாரண கணவனான இந்த மனிதர் நீராவிப் புகை மேகத்திற்கிடையில் ரயில் வந்து நின்ற போது எனக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார்.

நான் அழவில்லை. அவர் அழுதார். என்னைத் தழுவினார். நானும் அவரைத் தழுவினேன். அல்லது ஆண் பிள்ளைத்தனமாக வெறுமனே கையை மட்டும் குலுக்கிக் கொண்டோமோ? ஜாக்கிரதையாக இரு மகனே. ''போய் வருகிறேன் அப்பா'' என்ற எங்கள் வார்த்தைகளில் கூட நாங்கள் சிக்கனமாக ஏன் கட்டுப்பாட்டுடன் கூட இருந்தோமோ?

எனக்கு ஞாபகத்தில் இருப்பதெல்லாம், மாலை வானத்தின் பின்னணியில் நகரத்தின் கட்டிடங்கள் தொலைவில் தெரிந்ததுதான். அருகிலிருந்த செயிண்ட் காதரீன் தேவாலய மணிகளைக்கூட கேட்டதாக நினைக்கிறேன். "கல்லறைக்கு நீ செல்லும்வரை எப்போதும் உண்மையானவனாக, நேர்மையானவனாக இருப்பாயாக." அவ்வப்போது நின்று, நின்று இரவு பூராவும் தொடர்ந்த பயணத்திற்குப்பிறகு இறுதியாக ரயில் பெர்லினுக்குத் தாமதமாக வந்து சேர்ந்தது. பயணிகளை மடியில் வைத்து எதையாவது எழுதக் கேட்டுக்கொள்ளும்படியாக, அல்லது காலத்தைத் தாண்டி கற்பனையை நிரப்பிக் கொள்ளும்படியாக ஒரு மிக மெதுவான பயணம்.

எனக்கு ஞாபகத்தில் தங்கியிருப்பது இவை. இருப்புப்பாதையின் இருமருங்கிலும் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள், மேல் மாடி சன்னல்களிலிருந்து வெளிக்காட்டிக் கொண்டிருந்த தீ நாகங்கள், இருட்டில் புதைந்திருக்கும் சாக்கடை போல அவ்வப்போது கண்ணில் தென்பட்ட தெருக்கள், மரங்கள் நிறைந்த வளாகங்கள் கண்ணில்பட்ட மனிதர்களெல்லாம் தனித்தனியாக நிழலுருவங்களாகத் தெரிந்தனர் ஜனக்கூட்டமே இல்லை.

நெருப்பு அதற்குள் சாதாரணம் என்று பழகிவிட்டது. பெர்லின் அழிவின் வசாலில் இருந்தது. நாளுக்கு நாள் நிலைமை சீரழிந்து வந்தது. அப்போதுதான் நகரம் குண்டுவீசப்பட்டிருந்தது. ஆல்கிளியர் சிக்னல் ஒலித்தது. ஏதோ சுற்றுலா வண்டிபோல எங்கள் ரயில் அவ்வளவு மெதுவாக ஊர்ந்து வந்ததற்கு அதுதான் காரணம்.

ஸ்டேஷனில் இருந்த மனிதர்கள் வெளியே தீப்பற்றி யெரிவதைப்பற்றி கவலைப்படாதவர்கள் போலிருந்தனர். எல்லாம் வழக்கம் போலவே நடக்கின்றன. முட்டித்தள்ளிக்கொண்டு முன்னேறும் ஜனங்கள், வசைகள், திடீரென எழும்பும் உரத்த சிரிப்பொலிகள், விடுமுறை முடிந்து போர்முனைக்கு விரையும் படை வீரர்கள், அவசரமாக வீட்டிற்குத் திரும்பும் படை வீரர்கள், சூடான பானங்களை விநியோகித்துக் கொண்டு படைவீரர்கள் சீண்டும்போது கிளுகிளுத்து சிரித்துக்கொண்டிருந்த லீக் ஆஃப் ஜெர்மன் கேர்ல்ஸ் எனப்படும் ஹிட்லரின் இளைஞர் படையினர் மகளிர் பிரிவினர்.

பயணச்சீட்டு சாளரங்கள் கொண்ட ஹாலில் என் வயதொத்த புதிய ரெக்ரூட்டுகளுடன் சேர்ந்து கொண்டேன். சிறிது நேர காத்திருப்புக்குப்பின் மார்ச்சிங் ஆர்டர் கிடைத்தது. எனது தலைமையிடம் டிரெஸ்டன்.

என் சகாக்கள் குதூகலத்தில் உளறிக்கொண்டிருந்தது நினைவில் இருக்கிறது. ஏதோ சாகசத்திற்குச் செல்வது போல துடிதுடிப்புடன் இருநதோம். வழக்கத்திற்கு மாறாக எனக்குத்தெரியாத எதற்காகவோ நான் உரக்க சிரித்துக் கொண்டிருந்தேன்.

திடீரென வான் வழித்தாக்குதலுக்கான அபாயச்சங்கு ஒலித்து எங்களனைவரையும் அருகிலிருந்த பாதுகாப்பிடமான நிலையத்தின் அடித்தளத்திற்கு விரட்டியது. படைவீரர்களும், சிவிலியன்களும், ஏராளமான சிறுவர்களுமாக ஒரு

கதம்பமான கூட்டம் நெருக்கியடித்துக்கொண்டு கூடியது. காயமுற்ற படை வீரர்கள் ஸ்ட்ரெச்சரிலும், கவட்டுக்கட்டை களிலும் அங்கிருந்தனர். கலைநிகழ்ச்சி நடத்தும் குழுவினரும் அங்கிருந்தனர். அவர்கள் அனைவரும் ஒப்பனை உடைகளிலேயே இருந்தனர். சைரன் கேட்டதும் நேராக மேடையிலிருந்து இறங்கி ஓடிவந்திருக்கிறார்கள். வெளியே தொடர்ச்சியாக கேட்டுக்கொண்டிருந்த துப்பாக்கிச் சத்தத்திற்கு நடுவே குண்டுகள் தொலைவிலும் அருகிலுமாக விழுந்து வெடித்துக்கொண்டிருக்க, அந்தக் கலைஞர்கள் அவர்களது நிகழ்ச்சிகளை அங்கே தொடர்ந்தனர். ஒரு குள்ளன் ஒன்பது பந்துகளையும் வண்ண வளையங்களையும் ஒரு சேர தூக்கிப்போட்டு ஒவ்வொன்றாக பிடித்து அம்மானை ஆடி அனைவரையும் மெய்மறக்க வைத்தான். ஒயிலான சின்னப்பெண் ஒருத்தி தன்னுடலை முறுக்கி, முடிச்சிட்டு, பின் சுலபமாக வெளிவந்து கைத்தட்டுகிற கூட்டத்தை நோக்கி முத்தங்களை பறக்க விட்டாள்.

போர்முனைக்குச் செல்லும் வீரர்களை உற்சாகப்படுத்தி கேளிக்கை அளிப்பதுதான் தமக்கு ஒதுக்கப்பட்ட பணியாக இருந்தது. அக்குழு, கோமாளியாக வேடம் கட்டி வந்த ஒரு குள்ளமான கிழவனால் தலைமையேற்று நடத்தப்பட்டது. கண்ணாடி கோப்பைகளை காலியாக ஆரம்பித்து வெவ்வேறு நிலைகளில் நிரப்பி, விளிம்பு வரை நிரப்பியிருந்த வரிசையில் கோப்பைகளின் ஓரத்தை விரல்களால் தட்டி ஓர் இனிமையான, துயர சங்கீதத்தை ஏற்படுத்தினான். அவன் சாயமிட்ட உதடுகளிலிருந்து புன்னகை விலகவே இல்லை. என்னைவிட்டு எப்போதும் அகலாத பிம்பம் அது.

அமைதி திரும்பி விட்டதற்கான மணி ஒலித்ததும் நான் டிராம் பிடித்து வேறொரு நிலையத்திற்குச் சென்றேன். டிரெஸ்டனுக்கு செல்லும் ரயில் காலை நேரத்து சாம்பல் வெளிச்சத்தில் புறப்படத்தயாராக நின்றிருந்தது.

யுத்தம் இன்னும் தீண்டியிராத டிரெஸ்டனை அடைவதற்கு முன்பு நான் எந்தப் பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கிறேன் என்பதை நான் அறிந்துகொள்ளவில்லை. என் புதிய மார்ச்சிங்க ஆர்டரில் என் பெயரைக்குறிப்பிட்டு, நான் அடிப்படை பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டிய இடம் என்று வாஃபென் S'S' அணிவகுப்பு மைதானத்தில் என்று குறிப்பிட்டிருந்தது. எங்கோ தூரத்தில் பொஹிமியன் காடுகளில் கவசமணிந்த துப்பாக்கி வீரனாக.

பணி நியமன அலுவலகத்தில் அந்த இரட்டை 'எஸ்' களைப்பட்டவர்தனமாகப் பாத்தபோது அறுபது வருடங்கள் கழித்து இப்போது இதை எழுதுகிறபோது நான் நடுக்கமுறுவதைப்போலவே அப்போதும் பயந்தேனா? அதுதான் கேள்வி.

என் ஞாபகத்தின் வெங்காயச் சருகுகளில் அதிர்ச்சி என்பதற்கோ, பயம் என்பதற்கோ அடையாளமாக ஏதும் பதிந்திருக்கவில்லை. முன்னணி வரிசையில் ஏதேனும் உடைப்பு ஏற்பட்டால் அதைச்சரிசெய்து பலப்படுத்த அனுப்பப்படும் விஷேஷப்பிரிவு என்று வாஃபன் SSஜ கருதியிருந்தேன். சீருடையின் காலரில் மின்னல் குறிகளாக இருந்த இரட்டை ரூன்கள் எனக்கு வெறுப்பளிக்கவில்லை. தன்னை ஒரு முதிர்ந்த இளைஞனாக நினைத்துக் கொண்டிருந்த பையனுக்கு தன்னை பணியமர்த்தியிருக்கும் பிரிவைப் பற்றிதான் ஏமாற்றமாக இருந்தது. நீர்மூழ்கிக் கப்பற்படையில் சேர அவனுக்கு விதிக்கப்படவில்லையென்றாலும் ஜோர்க்வான் பிரண்ட்பர்க்கின் பெயரைச் சூட்டியிருந்த பீரங்கிப் படை பிரிவிலாவது அவன் சேர்ந்திருப்பான். பிராண்டபர்க் 16ம் நூற்றாண்டின் குடியானவர்களின் யுத்தங்களில் ஃபிரான்கோனியன் அணிக்கு தலைவராக இருந்தவர். சுதந்திரத்திற்காகவும் விடுதலைக்காகவும் குரல் கொடுத்தவர். இதைத் தவிர வாஃபென் SS என்பதில் ஒரு ஐரோப்பிய வாடை அடிக்கிறது. இதில் தன்னார்வலர் பிரிவுகளில் பிரெஞ்சு மற்றும் வாலூன், டச்சு மற்றும் பெய்ஜியன், பல நார்வீஜிய, டேனிஷ் படை வீரர்களுக்கு தனித்தனியாக பிரிக்கப்பட்டிருக்கிறது. போல்ஷ்விக் வெள்ளததிலிருந்து மேற்கு நாடுகளை காப்பாற்றுவதற்காக நடுநிலையான ஸ்வீடன் கூட கிழக்கத்திய கூட்டணியில் சேர்ந்துவிட்டதாகப் பேசப்பட்டது.

எனவே ஏராளமான சமாதானங்கள் இருந்தன. இருந்தும் பல பத்தாண்டுகளாக அந்த இரட்டை எழுத்துக்களை அந்த வார்த்தையை அறுமையாக மறுத்து வந்தேன். இளமையின் முட்டாள்தனமான பெருமிதத்தில் நான் ஒப்புக் கொண்டது. என்னவென்றால் தொடர்ந்து வந்த அவமானத்தின் காரணமாக என்னை அதிலிருந்து மறைத்துக் கொண்டது. ஆனால் அந்தச் சுமை தொடர்ந்து இருந்தது. யாராலும் அதனை நகர்த்தி வைக்க முடியாமல்.

அந்த இலையுதிர்காலம். குளிர்காலம் முழுக்க என்னை மரத்துப் போக வைத்திருந்த பீரங்கிப்படை பயிற்சி காலத்தில் பிற்பாடு வெளிச்சத்திற்கு வந்த போர்க்கால குற்றங்களைப் பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை என்பதுதான் உண்மை. ஆனால் இந்த அறியாமை என்பது திட்டமிட்டு ஒருங்கிணைத்து லட்சக்கணக்கான மனிதர்களை படுகொலை செய்த ஒரு அமைப்பில் நான் கூட்டிணைவாக்கப்பட்டிருந்தேன் என்ற உண்மையை என்னிடமிருந்து மறைக்க முடியாது. அந்தப் படுபாதகக் குற்றங்களுக்கு நானும் உடைந்தையாக இருந்ததாக கூற முடியாவிட்டாலும், கூட்டுப் பொறுப்பு என்று பொதுவாக அழைக்கப்படுகிற ஒரு எச்சம் இன்று வரை மிச்சமிருக்கிறது. மீதமிருக்கும் என் வாழ்நாள் முழுவதும் இதனோடுதான் நான் வாழ்ந்ததாக வேண்டும்.

பேன்ஸர் III, பேன்ஸர் IV டாங்கிகளில் எங்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. நாங்கள் அடிமைகளைப் போல நடத்தப்பட்டோம். இப்படித்தான் இது இருந்தாக வேண்டுமென்று முதலில் நான் நினைத்தேன். ஆனால் என் ஆரம்ப உற்சாகம் விரைவிலேயே சுருங்கியது. என் வயதொத்த பயிற்சியாளர்களுக்க வாஃபென் SSக்கு மாறுதல் செய்யப்பட்டிருந்த பழைய வீரர்களும் ஹெர்மன் கொயரிங் ஃபண்ட் என்று வினோதமாக அழைக்கப்பட்டது. காலை முதல் மாலை வரை பிழிந்தெடுக்கப்பட்டோம். முதலிலிருந்தே நாங்கள் எச்சரிக்கப்பட்டிருந்ததால் பழைய ஞாபகங்களில் தொடர்ச்சியாக குளிர்காய ஆரம்பித்தோம்.

இதைப் பற்றி புத்தகங்களில் படித்திருக்கிறேன். அடிமைகளை மேற்பார்வையிடுகிறவர்களின் பெயர்களை மிக மோசமானவர்களின் பெயர்களைக் கூட வேண்டுமென்றே மறைத்திருக்கிறேன். அந்த அனுபவத்திலிருந்து நான் கற்றுக் கொண்டதெல்லாம் ஊமையாக அடிபணிவதையும், கெட்டிக்காரத்தனமாக வித்தைகள் செய்து ஏமாற்றுவதையும்தான் உடற்பயிற்சியிலிருந்து தப்பிக்க ஒருமுறை மஞ்சள் காமாலை வந்துவிட்டதைப் போல நடித்தது - ஸார்டைன் மீன் டப்பாக்களிலிருந்த சுட்ட எண்ணெய்யைப் போல கொஞ்சம் குடித்துவிட்டு வாந்தியெடுத்து காண்பித்தேன். உடல் முழுக்க கொப்புளங்கள் வந்துவிட்டதாக நடித்ததும் அதிகம் பலனளிக்கவில்லை. எப்போதும் நெருக்கியடித்துக் கொண்டிருக்கும் மருத்துவமனை தற்காலிகத் தீர்வைத்தான் கொடுத்தது.

எங்களுடைய பயிற்றுனர்கள் வயதில் இளையவர்களாக இருந்தாலும் ஓரிரு வருடங்கள் போர்முனையில் கழித்ததில் ஈவிரக்கமற்ற முகடுகளாக மாறியிருந்தனர். கூபன் பிரிட்ஜ்ஹெட்டிலும், குர்ஸ்க்கில் பீரங்கிப் போரிலும் ஈடுபட்டு அடைந்திருந்த அனுபவத்தை எங்களிடம் வழங்குவதில் ஆர்வமாக இருந்தனர். அதைக் கடுமையான முனைப்பினாலும் கருணையற்ற சாமர்த்தியத்தாலும் அல்லது அவர்கள் மனம் போன வகையிலும் நிறைவேற்றினர். உரக்கமும் மெதுவாகவும் ராணுவ வழக்கு மொழிகளை எங்களுக்குள் நிரப்பி, புதிதாக கண்டுபிடித்த அல்லது கால காலமாக வழக்கத்திலிருக்கிற ராணுவ சித்ரவதைகளை ஒருவருக்கொருவர் போட்டிப் போட்டுக் கொண்டு எங்கள் மீது நிகழ்த்தினர்.

எனக்கு உத்தரவிடப்பட்ட அனைத்தையும் இரண்டாவது சிந்தனைக்கு இடமில்லாமல் நிறைவேற்றினேன். எங்கள் பயிற்சி டாங்கியின் கட்டுக் தொட்டுக்கடியில் வளர்ந்த கொண்டே மெஷர் கிரவுண்ட் கிளியரன்ஸ் மையம் வரைச் சென்றேன். மூவிங் டார்கெட்டுகளை குறிபார்த்து சுட்டேன். இரவு நேர தாக்குதலுக்கு அணி வகுத்துச் சென்றேன். ஒரு கை நீளத்திற்கு உள்ள துப்பாக்கியை சுமந்து கொண்டு முட்டியை மடக்கி பதுங்கி ஓடினேன். இவையெல்லாம் என்னை முதிர்ச்சியான மனிதனாக்குவதற்காக என்று கூறப்பட்டது.

என் பதினேழாவது பிறந்த நாளுக்கு காலம் தாழ்த்தி ஒரு பரிசு தபாலில் வந்தது. உல்லன் சாக்ஸ்கள் கொண்ட ஒரு பெட்டி, தூள் தூளாகிவிட்ட ஒரு கேக், இரண்டு பக்கத்திலும் அப்பா அழகான கையெழுத்தில் அர்த்தமற்ற அவரது கவலைகளை நிரப்பியிருந்த ஒரு கடிதம். அப்போதிலிருந்து கிறிஸ்துமஸ் வரை வெறும் கடிதங்கள். கிறிஸ்துமஸ்ஸிற்குப் பிறகு எதுவுமே இல்லை.

அறிவிப்புப் பலகை ஆர்டென்னஸ் தாக்குதல் - The Battle of the Bulge - வெற்றிகரமாகச் சென்று கொண்டிருப்பதாகவும், நிலைமை வரைவில் மாற்றம் அடைந்து சீராகிவிடுமென்றும் நம்ப வைத்துக் கொண்டிருந்தது. ஆனால் கிழக்கு பிரஷ்யாவதற்கு ரஷியர்கள் நுழைந்து விட்டதை ஒப்புக் கொண்டு செய்தி அறிக்கை விரைவிலேயே வந்தது. கம்பின்னன் பகுதியில் ஜெர்மானியப் பெண்களை வன்புணர்ச்சி செய்வதும், கொலை செய்வதுமாக வந்த செய்திகள் தியரி வகுப்புகளில் என் சிந்தனையை நிரப்பியிருந்தன. நாள் முழுக்க எதிரி ஸ்குவாட்ரன்கள் வானத்தில் புகைத்தடங்களை அமைத்துக் கொண்டு தடுப்பார் யாருமின்றி சுதந்திரமாக வளைந்து வளைந்து சென்று கொண்டிருப்பதைப் பார்த்தோம் - எங்கே செல்கின்றன? உண்மையில் பார்ப்பதற்கு வெகு அழகாக இருந்தது. ஆனால் எங்கள் பைட்டர் பைலட்டுகள் எங்கே போயினர்?

வி1, வி2 ராக்கெட்டுகளைப் பற்றி இன்னமும் பேசிக் கொண்டிருந்தனர். நாங்கள் கண்டுபிடித்திருக்கும் ஏதோ ஓர் அற்புதமான ஆயுதம் எந்த நிமிடத்திலும் முழுமை பெற்று களத்திற்கு வந்துவிடும் என்று ஒரு பேச்சிருந்தது. பிப்ரவரி இறுதியை நெருங்கும் போது டிரெஸ்டன் மீது குண்டு வீச ஆரம்பிக்கப் போவதாக வதந்திகள் பரவின. நாங்கள் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டோம். நிலா முழுசாக இருந்தது. உறைய வைக்கும் குளிரில் இரவு. மற்றவர்கள் பொய்யாகிப் போனும், உறுதியாய் என்று நாங்கள் நிற்போம் என்ற வாஃபென் SS-ன் கீதத்தை கோரஸாகப் பாடினோம்.

அதற்கு அடுத்து கொஞ்ச நாட்களிலேயே ஜெர்மானிய ரைக் சாம்ராஜ்ஜியம் தோல்வியின் ஒருங்கிணைந்த பிரளயம் மெதுவாக நெருங்கி, பின் துடிப்போடு, பிறகு கண்மூடித்தனமான வேகத்தில் வீழ்ச்சியடைய வைககப்போகும் ஒரு நிகழ்வை நான் கண்டேன். நடக்கப்போகும் விஷயங்கள் என்னவென்பதை நான் அறிந்திருந்தேனா? ஓய்வு ஒழிச்சலற்ற முடிவேயின்றி நடக்கும் பயிற்சிகளும், ஒரு குவளை சூப்பிற்கும், ராணுவ ரொட்டி அடுக்கிற்கும் ஆலாய் பறக்கும் வேட்கையும், வெவ்வேறு ரூபங்களில் பிரசன்னமாகும் பயங்களும் உண்மையான நிலவரத்தை கூர்ந்து அவதானிக்க வாய்ப்பளித்திருந்ததா?

பொஹிமியன் வனங்களிலிருந்து பயிற்சி முகாமிலிருந்து குழுக்குழுவாக தொலை ஒதுக்கமான பாசறைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டோம். ஓர் அணி வியன்னாவின் திசை நோக்கிப் புறப்பட்டது. மற்றொன்று ஸ்டெட்டின்னை பாதுகாக்க அனுப்பப்பட்டது. என்னுடைய குழு டெட்ஷன், போடன்பாக வழியாக டிரஸ்டென் சென்று அங்கிருந்து மேலும் கிழக்காக லோயர் ஸிலிசியாவில் போர்முனைக்குச் செல்லும் ஒரு இரவுநேர சரக்கு ரயிலில் ஏறியது. டிரெஸ்டனைப் பற்றி என் மனதில் மிச்சமிருப்பதெல்லாம் எரிகிற வாடையும் அந்தக்காட்சியும். சரக்கு ரயிலின் லேசாகத் திறந்திருந்த ஸ்லைடிங் கதவு வழியாகத் தெரிந்த காட்சி. ரயில் பாதைகளுக்கு நடுவிலும், கருகிப்போன கட்டிட முகப்புகளுக்கு முன்னாலும் ஒன்றின் மே ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த எரிந்துத் தீய்ந்து போன நீளநீளமான மூட்டைகள், சிலர் சுருங்கிச் சருகான சடலங்களைப் பார்த்ததாகக் கூறினர். மற்றவர்கள் கூறியவை, அய்யோ வேண்டாம். எங்கள் பீதியை மறைத்துக்கொள்ள என்ன நடந்திருக்கும் என்று இன்றுபோலவே சச்சரவிட்டுக்கொண்டோம். டிரெஸ்டனில் என்ன நடந்ததோ அது மிகை வழக்குகளுக்குள் புதைந்திருக்கிறது.

அந்ததிக்கிலும் இந்தத்திக்கிலுமாக மாற்றம் செய்யப்பட்டு கடைசியில் எங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த கம்பெனியை கண்டுபிடித்து அதில் இன்னும் முழுமைபெற்றிராத அணியாக, மாணவர்கள் வெளியேற்றப்பட்டிருந்த பள்ளி ஒன்றில் சேர்ந்தோம். வெளியே குவித்து வைத்திருந்த பள்ளி பெஞ்சுகளை சமையல்

பிணைமாகனை விறகுகளாக அறுத்துக்கொண்டிருந்தனர். நாங்கள் தலைநகரத்துக்கு ஏற்பாடு செய்திருந்த முற்றம் எனது லாஃப்டவாஃப் ஆகாயவெளி நினைவுகளுக்கு இன்னமும் விமோசனம் கிடைக்கவில்லை என்பதை உணர்த்தியது.

எங்களது புகழ்பெற்ற டைகர் டாங்கிகள் வந்து சேர்வதற்காக அங்கேயே அமர்ந்திருந்தோம். காத்திருப்பு நீண்டு கொண்டே போனாலும் நேரத்திற்கு சாப்பாடும், அதிகம் கண்டிப்பற்ற சூழலும் அதை சகித்துக்கொள்ளும்படியாக்கின. சினிமாவிற்குக் கூட சென்றோம்.

இறுதியாக எங்களுக்கு வாக்களிக்கப்பட்டிருந்த கோனிக்ஸ் டைகர்களுக்கு பதிலாக மூன்று அல்லது நான்கு ஜேகட் பாந்தர்களும், ஹெண்டிங் பாந்தர்களும் வந்தன. கோனிக்ஸ் என்ற கிங்க டைகர்ஸில் சுழலும் டார்ரட்டுகள் இல்லாத துப்பாக்கிகள் இருக்கும். அவற்றை செயல்படுத்த எங்களுக்குப் பயிற்சி இல்லாவிட்டாலும் கூட பாரக்ஸிலிருந்து வெளியேறி துப்பாக்கிகள் மற்றும் இதர தாக்குதல் ஆயுதங்களைப் பொருத்தி அவற்றை நிறுவியாக வேண்டும்.

ஸைலீசிய நகரமான ஸாகன்தான் போர்க்களம் என்று கூறப்பட்டது. அது மீட்டெடுக்கப்பட்டாலும் இன்னமும் தாக்குதலுக்குட்பட்டிருந்தது ரஷியர்கள் முற்றுகையிட்டிருந்த பிரஸ்லாவை விடுவிக்க ஸாகனிலிருந்து ஒரு தாக்குதலைத் தொடங்க உத்தேசிக்கப்பட்டிருந்தது. அல்லது அப்படித்தான் எங்களிடம் கூறி வந்தனர். இந்தக்கட்டத்தில் என் ஞாபக பட்சுருள் அறுந்துபோகிறது. அதை ஒட்டியெடுத்து, புரொஜக்டரை இயக்கிப்பார்த்தால் எனக்குக் கிடைப்பது கதம்பமான பிம்பங்கள், வழியில் காலிசெய்யப்பட்டிருந்த ராணுவ ஸ்டோர் ஹவுஸ் ஒன்றில் கிடைத்த உல்லன் சாக்ஸ்களை எடுத்து கொண்டு எனது நைந்துபோன காலுறைகளை கழற்றி எங்கேயோ வீசுகிறேன். வண்டல் நிலப்பரப்பு ஒன்றில் நாங்கள் நிறுத்தியிருக்கிறோம். வில்லோக்களின் மென்மயிர் போன்ற முதல் விதைத் கொத்துக்களை நான் துழாவுகிறேன். அவ்வளவு காலையில் குயிலைக் கேட்டேனோ? அதன் கூவலை எண்ணினேனா?

அதன்பிறகு முதன் முறையாக சடலங்களைப் பார்க்கிறேன். வெர்மாக்ட் சீருடையில் இளைய, முதிய ராணுவ வீரர்கள், அங்காடிப்பகுதிகளில் மரங்களிலிருந்து நிர்வாணமாகத் தொங்கவிடப்பட்டிருந்தார்கள். கோழைகள், கீழறுப்பு ஆசாமிகள் என்று எழுதி அவர்களின் கழுத்தில் மாட்டிவிடப்பட்டிருந்த அட்டைகள், பதவி கணிக்க முடியாத அல்லது கோர்ட் மார்ஷலில் துறக்கப்பட்ட, ஒரு நடுத்தர வயது அதிகாரிக்குப் பக்கத்தில் என் வயதொத்த பையன் ஒருவன், அவனுக்கும் என்னைப்போலவே இடதுபக்கம் வகிடு பிரிந்திருந்தது, தொங்கிக் கொண்டிருந்தான்.

காதை செவிடாக்கும் டாங்கிகளின் தடதடப்புகளின் நடுவே அந்தச் சடலங்களின் அணிவகுப்பைக் கடந்து சென்றோம்.

பக்கவாட்டில் திரும்பிப்பார்க்கையில் உழவர்கள் வயல்வெளிகளில் உழுது கொண்டிருந்தனர். எதுவுமே நிகழாதது போல். ஒருவனது கலப்பையில் பசுமாடு கட்டப்பட்டிருந்தது.

அகதிகள் மேலும் மேலும் தெருக்களை நிரப்பிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறேன். மாட்டு வண்டிகளோடு அளவிற்கதிகமாக சுமையேற்றப்பட்ட கைவண்டிகளை கிழவிகளிலிருந்து இளைஞர்கள் வரை இழுத்துக்கொண்டு செல்கின்றனர். வண்டிகளின் மேல் கயிற்றில் கட்டப்பட்ட மூட்டைகளுக்கும், சூட்கேஸ்களுக்கம் மத்தியில் சிறுவர்கள் கையில் பொம்மைகளை பற்றிக்கொண்டு தொத்திக்கொண்டிருப்பதை பார்க்கிறேன். ஒரு கிழவன் இரண்டு செம்மறியாடுகளை ஏற்றிக்கொண்டு யுத்தத்தைக் கடந்துவிட முடியுமென்ற நம்பிக்கையில் கைவண்டியை இழுத்துச் செல்வதும் தெரிகிறது.

இந்தக் கட்டத்தில் எதிரியோடு எனக்கு நிகழ்ந்த முதல் சந்திப்பின் பட்சுருளை மனப்போக்கான பிம்பங்களின் தொடர் கோவையிலிருந்து தனியாக பிரித்தெடுக்க வேண்டும். ஃபோர்ஸ்ட்டுக்கும் மஸ்காவிற்கும் நடுவே ஓடர், நெய்ஸே ஊடாக ஜெர்மன் எல்லையை ரஷிய ராணுவம் கைப்பற்றவும், இலட்சக்கணக்கில் கொல்லப்பட்ட அவர்கள் நாட்டினருக்காக பழிதீர்க்கவும் பலத்த குண்டு வீச்சிற்குப்பிறகு

முறித்துவிட்டு முன்னேறிய ஏப்ரல் மத்தியில்தான் அந்தச் சந்திப்பு நேர்ந்ததாக நினைக்கிறேன்.

எங்கள் ஜாகட் பேந்தர்களும், ஆயுதம் தரித்த தனிப்பிட்ட வாகனங்கள் சிலவும், ஏராளமான லாரிகளும், காலாட்படை வீரர்களும் பீரங்கிப்படையினரும் ஒன்று கலந்து மரத்தோப்பு ஒன்றில் எதிர்தாக்குதலுக்காகவோ, அல்லது பாதுகாப்பிற்காகவோ நிலை கொள்ளத் தொடங்கினர்.

மரங்களில் மொட்டுகள் நிரம்பியிருந்தன. பிர்ச் மரங்கள் மற்றவையோடு கலந்திருந்தன. இதமான வெயிலில் சூரியன், பறவைகளின் கிறீச்சிடல்கள். நாங்கள் காத்திருந்தோம். பாதி தூக்கநிலையில்.

யாரோ ஒருவன் ஹார்மோனிக்கா வாசித்துக்கொண்டிருந்தான். அதிகாரி ஒருவர் முகத்தில் சோப்பு நுரை பொங்க முகச்சவரம் செய்யத்தொடங்கினோம். திடீரென, யாரும் எதிர்பார்த்திராத கணத்தில் - பறவைகள் திடீரென்று அமைதியாகி விட்டதே ஓர் உரத்த அபாய எச்சரிக்கைதானே? - தலைக்கு மேலே ஒரு ஸ்டாலின் ஆர்கன் சீறிப்பாய்ந்தது.

இந்தப்பெயர் எங்கிருந்து வந்திருக்குமென்று வியப்பதற்கு நேரமில்லை. அது ஊளையிட்டு, சீறி, அழுகுரலில் ஓலமிடுகிற விதத்தினால் இருக்குமோ? இரண்டு மூன்று ராக்கெட் லாஞ்சர்கள் அந்தத் தோப்பிற்குள் செலுத்தப்பட்டன. ஈவிரக்கமற்ற வகையில் அவை கச்சிதமாகச் செயல்பட்டன. பாதுகாப்பாக இருந்த இளம் மரங்களை வெட்டிச் சாய்த்துக் கொண்டு சென்றன. ஒளிந்து கொள்ள இடமே இல்லை. இருக்கிறதா? எனக்கு பயிற்றுவிக்கப்பட்டதைப் போலவே ஒரு ஜாகட் பேந்தருக்கடியில் ஊர்ந்து ஒளிந்து கொண்டேன். அங்கே வேறொருவரும் பதுங்கியிருந்தனர். அவர் டிரைவரா, துப்பாக்கி வீரரா அல்லது கமாண்டரா? எங்கள் பூட்ஸ்கள் தொட்டுக்கொண்டன. இரண்டு பக்கங்களிலும் எங்களுக்கு டிராக்குகள் பாதுகாப்பாக இருந்தன. ஆர்கன் அங்கே விளையாடியது மூன்று நிமிடங்களுக்குத்தான் இருக்கும். உயிர் போகுமளவு மளவிற்கு பீதியுற்றத்தில் என் கால் சாரயிலேயே மூத்திரம் கழித்தேன். பின் அமைதி.

எனக்கு அருகில் பற்கள் கிகிடுத்துக்கொண்டிருந்தன இல்லை. அந்த கிடுகிடுப்பு ஆர்கன் விளையாடத் தொடங்குவதற்கு முன்பே ஆரம்பித்து விட்டிருந்தது. காயமுற்றவர்களின் ஓலங்கள் சுற்றிலும் சூழ்ந்து மற்றெல்லா ஓசைகளையும் அமுக்கிவிட்ட பின்பும் கிடுகிடுப்பு நிற்கவில்லை.

ஜாகட் பேந்தரின் அடியிலிருந்து வெளியே ஊர்ந்து வந்ததும் காட்சிகள் என் முகத்தில் அறைந்து தாக்கின. எல்லா இடங்களிலும் உடல்கள். ஒன்றிற்கு பக்கத்தில் மற்றொன்று ஒன்றின் மேல் ஒன்று, இறந்து, இன்னும் உயிரோடு, வலியில் துடித்துக்கொண்டு, மரக்கிளைகளால் குத்தப்பட்டு, குண்டுகளின் ஓடுகள் வெடித்துத் தெறித்ததில் கிழிபட்டு, பலரும் சாத்தியமில்லாத சர்க்கஸ் வித்தை கோணத்தில் கிடந்தனர். உடல் பாகங்கள் சிதறியிருந்தன.

ஹார்மோனிக்கா வாசித்துக் கொண்டிருந்த பையன்தானே இது? இதோ அந்த அதிகாரி. அவர் முகத்தில் சோப்பு நுரை இன்னும் உலர்ந்திருக்கவில்லை... பிழைத்தவர்கள் இங்குமங்கும் ஊர்ந்து கொண்டிருந்தனர். அல்லது என்னைப்போல ஒரே இடத்தில் ஸ்தம்பித்து நின்றிருந்தனர். காயமுறாவிட்டாலும் சிலர் அழுதனர். என்னிடமிருந்து எந்தச் சத்தமும் இல்லை. மூத்திரம நனைத்த பேண்ட்டோடு அங்கேயே நின்றுகொண்டு, என்னுடன் காற்றாட உலாவச் சென்றிருந்த ஒரு பையனின் உள்ளுறுப்புகளை வெறித்துக்கொண்டிருந்தேன். அவன் வட்டமான முகத்தை மரணம் சுருக்கி விட்டதைப் போலிருந்தது.

நான் இங்கே எழுதுவது எல்லாவற்றையும் ஏற்கனவே ரெமார்க், அல்லது செலின்னில் படித்ததுதான். விட்ஸ்டாக் யுத்தத்தில் ஸ்வீடுகள் கெய்ஸரின் படையை துவம்சம் செய்ததை கிரிம்பெல்ஷாஸன் இதற்க முன் வர்ணித்திருந்தது போலவே அவர்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த பயங்கரத்தின் காட்சிகளை மட்டும் வெறுமனே மேற்கோள் காட்டியிருக்கின்றனர்.

பல் கிடுகிடுத்துக் கொண்டிருந்தவர் திடீரென என்னருகே வந்தார். உடம்பை நிமிர்த்தி, வாஃபென SS காலரை உயர்த்தி, கழுத்தில் கோர்லாக இருந்த நைட்ஸ் கிராஸ் பதக்கத்தை நோக்கிவிட்டு, சிறுவயதில் செய்திப்படங்களில் பார்த்திருந்த ஹீரோவைப் போலவே விரைப்பாக நின்றார்.

அவருடைய பயத்திற்கு சாட்சியாக "முன்னேறிச் செல் படைவீரனே என்று கத்தினார் காயம்படாதவர்கள் அனைவரையும் திரட்டு, வேகமாக. அவர்களை அணிவகுத்து நிற்க வை. எதிர்தாக்குதலுக்கு தயாராவோம்".

குற்றுயிரும் குலை உயிருமாக அங்கே சிதறியிருந்த உடல்களைத் தாண்டித்தாண்டி அவர் செய்வதை பார்த்துக் கொண்டிருந்தேன். கைகளை மிகையாக ஆட்டிக்கொண்டு அபத்தமாக அவர் வீறு நடை போட்டுச்சென்றது செய்திப்பட நாயகர்கள் போலில்லை.

இதற்குப்பின் நான் பணியாற்றிய அலகுகளுக்கு பெயர் இல்லாமலிருந்தன. பட்டாலியன்களும் கம்பெனிகளும் கலைந்து கொண்டிருந்தன. ஃபிரான்ட்ஸ்பர்க் இல்லமற்போனது - எப்போதாவது இருந்ததா? சோவியத் ராணுவம் ஓடர், நெஸ்ஸேயைத் தாண்டி முன்னேறி ஒரு வலுவான அணியை ஏற்படுத்தியது. எங்களது பிரதானமான படைவரிசைகள் முறியடிக்கப்பட்டு துடைத்தெறியப்பட்டு விட்டன. அவை வெறும் காகிதத்தில்தான் காணப்பட்டு வந்தாலும் அந்தப்படை வரிசைகளைப் பற்றி எனக்குத் தெரிந்திருந்தது என்ன? அவை என்ன, எதற்காக உருவாக்கப்பட்டிருந்தன.

பின்வாங்கலின் களேபரத்தில் என்னைப்போலவே தத்தமது அலகுகளைத் தேடி சிதறியிருக்கும் படைவீரர்களுடன் சேர்ந்து கொள்ள முயற்சித்தேன். எதிரியோடு நேரடித்தொடர்பு இல்லாவிட்டாலும் உயிர் போகுமளவிற்கு பயமாக உணர்ந்தேன். குறிப்பிட்ட கம்பெனி ஒன்றைச் சேர்ந்தவர் என்று நிரூபிக்க முடியாதவர்களுக்கும், ஒரு குறிப்பிடட அலகைச் சேர்ந்தவர் என்று ஒப்பமிட்டு சீலிட்ட பயண உத்தரவு இல்லாதவர்களுக்கும் தெருவோர மரங்களில் தொங்கவிடப்படும் அபாயம் இருந்து கொண்டேயிருந்தது.

கிழக்குப்படைப்பிரிவின் பிரதானமான பிரிவினர் இன்னும் வசப்படாத மேற்கு நோக்கி மிகக்கொடுரன் என்று பெயர் பெற்ற ஜெனரல் ஸ்கோர்னரின் தலைமையில் பின் வாங்கிக் கொண்டிருந்தன. ஸ்கோர்னரின் உத்தரவின்படி அனுமதிக்கடிதம் அல்லது பயண ஆவணம் இல்லாத படைவீரர்கள் யாராக இருந்தாலும், பதவி என்னவாக இருப்பினும், அவர்களை ராணுவக்காவலர்கள் (அவர்களில் பெரும்பான்மையோர் வேட்டை நாய்கள்) கைது செய்து நடமாடும் ராணுவ நீதிமன்றங்களுக்கு கொண்டு வந்து 'இழிபெயரை ஏற்படுத்தியவர்கள்.' 'கோழைகள்', 'ஓடுகாலிகள்' என்று கோர்ட் மார்ஷல் செய்யப்படுவர். பின் அவர்கள் ஒட்டுமொத்தமாக, பட்டவர்த்தனமாக எல்லோருக்கும் தெரியும்படி தூக்கிலிடப்படுவர். ஸ்கோர்னரும் அவரது உத்தரவுகளும் எதிரிகளைவிட அச்சமூட்டுபவையாக இருந்தன.

ஏப்ரல் மத்தியில் இரண்டுமுறை பலமிழந்த பிரிவினரோடு சேர்ந்து ரஷிய ராணுவத்தினரிடம் சிக்கிக் கொண்டேன். இரண்டு முறையும் தெளிவற்ற இலக்கோடு சென்றுகொண்டிருந்த வேவுப்படை ஒன்றோடு இணைந்திருந்தேன். இரண்டு முறையும் நான் தப்பித்தது அதிர்ஷ்டத்தால் தானே தவிர திறமையால் அல்ல.

இயந்திரத்துப்பாக்கிகளின் குண்டுகளுக்கு இரையாகவும் அல்லது சிறைப்பிடிககப்பட்டு சைபீரியாவில் கொண்டு விடப்படுவதற்கும் முதல் வாய்ப்பு சார்ஜன்ட் ஒருவரின் தலைமையில் ஆறேழு வீரர்கள் ஒரு மாடிவீட்டின் நிலவறையிலிருந்து தப்பித்துச் செல்ல முயற்சித்த போது எனக்கு கிடைத்தது. அந்த வீடு ரஷிய ஆக்கிரமிப்பில் இன்னமும் எல்லைப் பிரச்சனைகளில் இருந்த ஒரு கிராமத்தில் இருந்தது.

ரஷியப் படைகளுக்குப்பின்னால் எப்படிச்சென்று அந்த வீட்டின் நிலவறைக்குச் சென்றோம் என்பது தெளிவாக நினைவிலில்லை. அங்கிருந்து தெருவின் எதிர்பக்கத்தில் இருக்கும் ஜெர்மானியர்களின் கட்டுப்பாட்டில் உள்ள வீடுகளின் வரிசைக்கு தப்பி ஓட வேண்டும். அதுதான் எங்களைக் காப்பாற்றக்கூடிய

ஒரே உபாயம். கோணலான தொப்பி அணிந்த, ஒரு ஒல்லியான சார்ஜண்ட். "இப்போது இல்லையேல் எப்போதும் இல்லை." என்றார்.

நிலவறையின் சன்னல் வழியாக துப்பாக்கிச் சத்தங்கள் கைத்துப்பாக்கி இயந்திரத் துப்பாக்கி வெடிகள் முன்னும் பின்னுமாக இடைவெளி விட்டு கேட்டுக் கொண்டிருந்தன. நிலவறை அலமாரிகளில் சாப்பிடுவதற்கு எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் அங்கே வாழ்ந்திருந்தவன் ஒரு சைக்கிள் கடைக்காரன் என்பது அந்த நிலவறையை நல்ல கிராக்கி இருக்கும் அவனது சைக்கிள்களை அடுக்கி வைத்திருப்பதில் தெரிந்தது. முன சக்கரங்களை எடுத்து ஓட்டத்தயாராக பர ரேக்குகளில் கட்டி, டயர்களில் காற்று அடிக்கப்பட்டு எடுத்து ஓட்டத்தயாராக சைக்கிள்கள் தொங்கிக கொண்டிருந்தன.

தடாலடியாக முடிவெடுப்பதில் அந்த சார்ஜண்ட் தேர்ந்தவர் போல. "இப்போது இல்லையேல் வேறெப்போதும் இல்லை." என்று சொல்லி முடித்த கையோடு உத்தரவாக இல்லாமல் கெகிகெப்பாக, கிளம்புங்கள் ஆளுக்கொரு சைக்கிளை எடுத்துக் கொள்ளுங்கள்." ஏறி மிதித்து காற்றாக பறந்து விட வேண்டும்." என்றார்.

எனது சங்கடமான, ஆனால் சுருக்கமாக வடிவமைக்கப்பட்ட ஸாரி, ஸார்ஜென்ட் எனக்கு சைக்கிள் ஓட்டத்தெரியாது. என்ற எனது பதில் அவருக்கு ஒரு மோசமான ஜோக்காக கேட்டிருக்க வேண்டும். யாரும் சிரிக்கவில்லை. எனது அவமானகரமான தோல்விக்கு ஆழமான காரணங்களைக் கூறுவதற்கு நேரமில்லை என் அம்மா நடத்தி வந்தது மிகக்குறைவாக லாபமீட்டி வந்த ஒரு பலசரக்கு கடை ஐயா. துரதிருஷ்டவசமாக அவரிடம் மோசமான பணத்தட்டுப்பாடு இருந்து வந்ததால் புதுசாகவோ, பழசாகவோ ஒரு சைக்கிள் வாங்கித்தர அவரால் முடிந்ததில்லை. சைக்கிள் மட்டும் நான் கற்றுக்கொண்டிருந்தால் அது என் உயிரைக் காப்பாற்றியிருக்கும்.

நான் மேலும் பேசுவதற்குள் சார்ஜன்ட் மற்றுமொரு தடாலடி முடிவை எடுத்தார். ஆல்ரைட் மெஸின் கன்னை எடுத்துக் கொண்டு சன்னலில் நின்று கொண்டு நாங்கள் கடக்கும் போது பாதுகாப்பாக துப்பாக்கியை பயன்படுத்து. பிற்பாடு நாங்கள் வந்து உன்னை அழைத்துச் செல்கிறோம்.

கடமையுணர்வோடு சைக்கிள்களை ரேக்கிலிருந்து கழற்றிக்கொண்டிருந்த அந்த பிரைவேட்களில் ஒருவர் என அச்சத்தைப்போக்க முயற்சிப்பது போலிருந்தது. அவர் வார்த்தைகள் எந்த பலனையும் அளிக்கவில்லை. இயக்குவதற்கு பயிற்சி எடுத்திராத ஓர் ஆயுதத்தை கையில் ஏந்தியபடி நிலவறையின் சன்னிலில் காவலுக்கு நின்றேன். ஆனால் திறமைக்குறைவான அந்தப்படை வீரனுக்கு சுடுவதற்கு வாய்ப்பே ஏற்படவில்லை. நிலவறையிலிருந்து அந்த ஐந்நூறு வீரர்கள் சைக்கிளில் ஏறி வெளியே தலைகாட்டியவுடனேயே எங்கிருந்து வருகின்றனவென்று தெரியாமல் தெருவின் ஒரு பக்கத்திலிருந்தா, அல்லது எதிர்பக்கத்திலிருந்தா அல்லது இரண்டு பக்கங்களிலிருந்துமா? இயந்திரத்துப்பாக்கிகள் சீறத்தொடங்கின.

அவர்கள் கொத்தாக துடிதுடிப்பதைப் பார்த்தேன் என்று நினைக்கிறேன். அடுத்து அவர்கள் அனைவரும் முறுக்கிக்கொண்டு குவியலாக வீழ்ந்திருந்தனர். யாரோ ஒருவர் அந்த ஒல்லியான சார்ஜென்ட்டா? தலைகீழாக பல்டி அடித்து விழுந்தார். அதன்பிறகு எதுவும் அசங்கவில்லை. அந்தக்குவியிலிருந்து ஒரு சைக்கிளின் முன் சக்கரம் மட்டும் வெளியே நீட்டிக்கொண்டு திரும்பித் திரும்பி ஆடிக்கொண்டிருந்ததைக்கூட நான் பார்த்திருக்கலாம்.

என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த அந்த இலேசான இயந்திரத்துப்பாக்கியைத் துறந்துவிட்டு சைக்கிள் கடைக்காரர் வீட்டிலிருந்து பின்பக்கத் தோட்டக்கதவை திறந்து கொண்டு எனது ரைஃபிளை மட்டும் எடுத்துக்கொண்டு ஓடினேன். தோட்டங்ளுக்குப் பின்னாலும் இடையிலும் புகுந்து, புதர்களில் மறைந்து அந்தக் கிராமத்தைவிட்டு, வெளியே ஓடும்போது இன்னமும் துப்பாக்கிச் சத்தங்கள் ரீங்கரித்துக்கொண்டிருந்தன. எதிர்பாராத கணத்தில் என்னெதிரே ஒரு நேரோ- கேஜ் இருப்புப்பாதை தென்பட்டது. அடர்ந்த மரங்களும் புதர்களும் இருமருங்கிலும் வரிசையிட்டிருந்த அந்த இருப்புப்பாதை எங்கள் துருப்புகள் இருக்கும் திக்கை நோக்கித்தான் செல்வதாகத்

தோன்றியது.

ஒரு கிலோ மீட்டருக்கும் மேலாக சரளைக்கற்களுக்கும் மரக்கட்டைகளுக்குப் பிறகு இன்னமும் சேதமுறாத ஒரு சிறிய பாலத்தின் வளைவுகள் அந்த ரயில் தடத்தில் தெரிந்தன. காலாட்படையினரைச் சுமந்து கொண்டு ஜீப்களும் டிரக்குகளும் அந்தப் பாலத்தின் மீது கடந்து கொண்டிருந்தன. குதிரை இழுத்துச் செல்லும் ஒரு ஹெளவிட்ஸர் பீரங்கிக்குப் பின்னால் சந்தேகமேயில்லாமல் அணிவகுத்துச் சென்று கொண்டிருந்த ஜெர்மானிய ராணுவத்தினர். கண்மூடித்தனமான அவர்கள் வரிசையில் என்னையும் துருத்திக் கொண்டேன்.

*****

அந்தக்குழுவில் பனிரெண்டிலிருந்து பதினைந்து பேர் இருந்தனர். கனரக ஆயுதங்கள் எதுவும் இருந்திராத அக்குழுவினருக்கு வேட்டை அணி என்று பெயர். ராணுவக்கொச்சையில் அஸென்ஷன் கமாண்டோ தற்கொலைப் படையினர் - என்று அழைக்கப்பட்டனர். எனது ரைபிளை வழியில் எங்கேயோ தொலைத்து விட்டதால் இத்தாலியத் தயாரிப்பான ஒரு சப்மெஷின்கள் - ஐக் கொடுத்தனர். அதைப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருந்தால் குளறுபடியாகியிருக்கும்.

எங்களுக்கு உத்தரவு முன்னேறிச்சென்று எதிரியை நேருக்கு நேராக தாக்குவதாக இருந்தது.

பொழுது வேகமாகச் சாய்ந்து கொண்டிருந்தது. பல்வேறு தட்டுத்தடுமாறலுக்குப்பின், பீரங்கித் தடங்களால் சின்னாபின்னமாகியிருந்த ஒரு காட்டு வழியைக் கண்டுபிடித்தோம். எங்களுக்கு முன்னால் பாதுகாப்புக்காகச் சென்று கொண்டிருந்த டைகர்கள், ஆயுதப் படையினரிடமிருந்து அந்தத் தடங்கள் ஒருசில மணி நேரத்திற்கு முன்பாகவே உண்டாகியிருக்க வேண்டுமென்று அறிந்து கொண்டோம். அவர்களோடு எவ்வளவுதான் சிரமப்பட்டு ரேடியோ தொடர்பு ஏற்படுத்த முயற்சித்தாலும் எங்களது வாக்கி-டாக்கிகளில் தெளிவற்ற ஒலிக்குறிப்புகள் தான் கேட்டன.

சாலையின் இருமருங்கிலும் பைன் மரங்களாக அடர்ந்திருந்தது. எங்களுக்குச் சுமந்து செல்ல கனத்த சுமைகள் எதுவுமில்லாவிட்டாலும் வழியில் ஒரு வயதான மனிதரை எங்கள் மீது ஏற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. அவரது கைக்காப்பு அவர் ஹோம் ஃபிரண்ட் ஆர்மியான வோல்க்ஃடர்ம்மைச் சேர்ந்தவர் என்று காட்டியது. அவரைத்தவிர வேறு இரண்டு காயமுற்ற வீரர்களும்- அவர்களுக்கு ஒன்றுபோல இடதுகால்கள் செயலிழந்திருந்தன- சேர்ந்து கொண்டனர். அந்த வோல்க்ஸ்டார்ம் ஆசாமி தொடர்ச்சியாக எதைப்பற்றியோ பிதற்றிக்கொண்டு கடவுளோடு சச்சரவிட்டுக்கொண்டு, அவருடைய அண்டை வீட்டுக்காரரை சபித்துக்கொண்டு வந்தார். காயமடைந்த அவ்விருவரை கைத்தாங்கலாக ஏறக்குறைய தூக்கிக்கொண்டு செல்ல வேண்டியிருந்தது. நாங்கள் மிக மெதுவாக முன்னேறினோம்.

பீரங்கி பிரிகேடுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள முயன்றது தொடர்ந்து தோல்வியடைந்த பிறகு சார்ஜென்ட் எங்களை நிறுத்தினார் அந்த நொண்டிகளையும், ஹோம் பிரண்ட் அறுவையையும் ஏற்றிச்செல்வதற்காகவாவது ஆயுத வாகனத்தினர் வந்து சேரும்வரை காத்திருக்கலாம் என்று முடிவெடுத்திருந்தார். எப்படியும் ஒரு நாள் முழுக்க காத்திருக்க வேண்டும். அதிருஷ்ட வசமாக என்னைத் தேர்ந்தெடுத்து காவலுக்கு நிற்கும்படியும், விழிப்பாக இருக்கவும் உத்தரவிட்டார்.

******

இன்னொரு சித்திரம் எனக்குத் தெரிகிறது. என் கற்பனையில் இருக்கும் நான். சாய்வான் தலைக்கவசம் அணிந்த நான். உத்தரவு ஒன்றை நிறைவேற்றும் நான். சிறப்பபக பணியாற்ற ஆர்வம் மிகுந்திருக்கும் நான்.

களைப்புற்றிருந்தாலும் அதனை நிறைவேற்றினேன். கொஞ்ச நேரத்திலேயே இப்போது கும்மிருட்டாக கருத்திருந்த அந்தக் காட்டுப்பாதையில் தூரத்தில் ஒரு வெளிச்சத்துணுக்கு தென்பட்டதை கவனித்தேன். நெருங்க நெருங்க அது இரண்டாக பிளந்தது. மோட்டார் வண்டி ஒருவேளை ஆயுதப்படையினராக இருக்கலாம். நேராக வருகிறது - என்று எனக்கு உத்தரவிட்டிருந்ததற்கிணங்க அறிவித்துவிட்டு பாதையின்

மத்தியில் என்னை சுலபமாக பார்க்கும்படியாக நின்று கொண்டேன். எனக்களிக்கப்பட்ட உத்தரவின்படி அந்த டாங்கியை நான் இடக்கை பழக்கமுள்ளவன் என்பதால் என் இடது கையை உயர்த்தி நிறுத்துவதற்கு தயாராக இருந்தேன்.

எனது முதல் ஆச்சரிய சமிக்ஞை படுவேகமாக வந்து கொண்டிருந்த அந்த வண்டியின் மிகப்பிரகாசமான ஹெட்லைட்டுகள் ஃபுல் பீமில் ஒளிர எனக்கு இரண்டடி முன்னால் நின்றபோது கிடைத்தது. ரஷ்யர்கள்தான் இதுபோல விளக்குகளை வீணடிப்பார்கள்...

இது இவான்கள்! என்று சாலையோரத்தில் குழுமியிருந்த எம் அணியினரிடம் கத்திக்கொண்டே அந்த எதிரி டாங்கியின் மேல் நெருக்கியடித்து உட்கார்ந்திருந்த துப்பாக்கி வீரர்களை, எனது முதல் ரஷிய எதிரியின் முகத்தை நேருக்கு நேர் உற்றுப்பார்க்க நேரமின்றி பாதையின் பக்க வாட்டுச்சரிவின் பைன் மரக்கூட்டத்தின் இருட்டில் அவர்கள் சுடத்துவங்குவதற்கு முன் பாய்ந்தேன். பார்வையிலிருந்து ஒளித்தாலும் அபாயம் நீங்கவில்லை.

துப்பாக்கிச்சத்தங்களுக்கு மேலாக இரண்டு பாஷைகளில் கூச்சல்கள் கேட்டன. பின் ரஷிய துப்பாக்கிகள் மட்டும் ஆதிக்கம் செலுத்தி ஆகிக்ரமித்தது.

பைன் மரங்களின் வேர்ப்பின்னல்களின் மேல் இருட்டில் துழாவித்துழாவி நான் ஊர்ந்து செல்ல, எனக்கு இடமும் வலமும் துப்பாக்கிக்குண்டுகள் வெடித்தன. எதுவும் மேலே படவில்லை ஆனால் சார்ஜெண்ட்டோடு இருந்த குழுவினருக்கு அந்த அதிருஷ்டம் இல்லை. அந்தக் கிழவர் கடவுளை பக்கத்து வீட்டுக்காரனை சபிப்பதும் பழிவாங்குவதைப் பற்றி பிதற்றுவதும் அடங்கியது. காதில் விழுந்த ஒரே குரல்கள் ரஷியர்களுடையது அதிகம் தூரத்தில் இல்லை. யாரோ உரக்க சிரிப்பது கேட்டது. குதூகலமான மனநிலையில் இருக்கிறார்கள் போல.

உலர்ந்த மரக்குச்சிகள் உண்டாக்கிய மிதிபடுகிற சத்தத்தில் தனித்துவிடப்பட்டிருந்த அந்த டேங்க் கன்னர் முழங்கையால் ஊர்ந்து செல்வதை நிறுத்தி, பயிற்சியளித்திருந்ததைப்போல அசைவேயின்றி குப்புறப்படுத்து செத்தவன் போல நடிக்கத்தொடங்கினான். சரித்திரத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து அதன் மூலம் தப்பிக்கமுடியுமென்று அவன் கருதியிருக்கலாம். எதிரிகளின் டாங்கி, மற்றவை பின் தொடர முன்னேறத் தொடங்கிய பிறகே அவன் மீண்டும் ஊர்வதற்குத் தொடங்கி பைன் பரப்பு மாறி ஒழுங்கான ப்ரூஸ்ஸிய வரிசையில் தொடங்கி முதிர்ந்த வனமரங்கள் ஆரம்பிப்பது வரை ஊர்ந்தான். இல்லை மறுபடியும் திரும்பிச் சென்று சடலங்களை மட்டும் தரிசிப்பதில் எனக்கு விருப்பம் இல்லை. அதுமட்டுமின்றி சாலையிலிருந்து கிளம்பியிருந்த மெலிதான வெளிச்சத்திலும், இன்ஜின் ஒலிகளிலும் எதிரிகளின் முன்னேற்றம் உறுதிபட்டிருந்தது.

அந்தத் தனியான டேங்க் கன்னரை பாதி நிலா வெளிச்சத்தில் வரவழைத்து என் மனச்சித்திரத்தில் பார்க்கையில் எனக்குத் தென்படுவதென்ன? வரப்போகும் முதிர்ந்த மனிதனின் ஆரம்பக் கூறுகள் அவனிடம் தெரிந்ததா?

அவரைப் பார்க்க கிரிம்ஸின் தேவதைக்கதை ஒன்றிலிருந்து தப்பித்துவந்த ஒரு பாத்திரத்தைப் போலிருந்தது. அவன் அழுவதற்குத் தயாராக இருந்தான். அவன் தோன்றுகிற கதை அவனுக்கே பிடித்திருக்கவில்லை. அவன் இன்னமும் ஆயுதம் தரித்திருந்தான். அவனது சம்மெஷின் கன்னை தயாராகப் மெடித்திருந்தான். ஒரு விஷவாயு முகமூடி, ஒரு நீளமான டிரம்மைப்போல் பலனில்லாமல் அவனிலிருந்து தொங்கிக் கொண்டிருக்கிறது. அவனது உணவுப்பையில் மிச்சமிருந்தது கடைசியாக ரேஷனில் கொடுத்திருந்த சில ஸ்வீபேக் ரொட்டித்துண்டுகள் மட்டுமே. அவனது பானக்குடுவையான கேன்டீன் பாதி காலியாக இருந்தது. அவன் அப்பா பரிசளித்திருந்த கியன்ஸில் கைக்கடிகாரம் எப்போதோ நின்று போயிருந்தது.

இப்போது அவன் ஒரு மரத்தில் சாய்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறேன். இப்போது பகல் என்பதலால் அவனது நிழல் அடிமரம் போலத் தெரிகிறது. காட்டிலிருந்து வெளியேற அவனுக்கு வழி தெரியாமல் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறான். உணவுப் பையிலிருந்து சில துண்டுகளை எடுக்கிறான். குவளையின் மூடியைத் திறந்து, தலைக்கவசத்தை பின்னங்கழுத்திற்குத் தள்ளி

அருந்துகிறான்.

இப்போது மீண்டும் இருட்டிவிட்டது. ஆந்தை அலறுகிறது. குமாரராக வேங்கை கண்ணீரோடு வனத்திற்குள் தனித்து விடப்பட்டிருந்தவன் பசியோடு, அவனது கடைசி ரொட்டித்துண்டுகளை எடுத்து மெல்கிறான்.

இருட்டின் கைதியாக இருந்த அவன் சிறுவனாக இருந்தபோது கூறிய பிரார்த்தனைகளை ஞாபகப்படுத்திக் கொள்ள முயல்கிறான். அன்புமிக்க இறைவனே, தயவு செய்து என் பக்கத்தில் வந்து நின்று சொர்க்கத்தை இசைவாக்கு. அம்மா, அம்மா என்று கூப்பிடுவது கேட்... வா மகனே வா! உனக்கு ஒரு கிளாஸில் பாலும் முட்டையும் சக்கரையும் தருகிறேன்! தூரத்திலிருந்து அவன் அம்மாவின் குரல் அவனை அழைக்கிறது. ஆனால் நின்ற இடத்திலேயே நின்றிருக்கிறான். தனியாக பிறகு ஏதோ நிகழ்கிறது.

காலடி சத்தங்களை கேட்டேன். அல்லது காலடிகளைப் போல ஒலித்த வேறு ஏதோ மரச்சுள்ளிகள் மிதிபடுவதில் முறிகின்றன. ஏதாவது மிருகமா? காட்டுப்பன்றியா? அல்லது யூனிகார்னாக இருக்குமோ?

அசையாமல் நின்று, சத்தம் எழுப்பாமல் கவனித்தேன். அவனோ அல்லது அதுவோ, அந்தக் காட்டில் நடந்து வருவது விலங்கோ, மனிதனோ அல்லது கற்பனை மிருகமோ, நெருங்கியது. பிறகு வேகமாக பின்வாங்கியது. நெருங்கி, பின்னகர்ந்து, மீண்டும் நெருங்கியது. மிக நெருக்கத்தில்.

ஜாக்கிரதை! சத்தமாக முழுங்காதே. மரத்திற்குப் பின்னால் ஒளிந்து கொள். ராணுவப்பயிற்சியில் கிடைத்த பாடங்கள். ஆயுதத்தின் ஸேஃப்டி கிளிப்பை விடுவி. எதிரியின் ஸேஃப்டி கிளிப் நிச்சயமாக இதற்குள் விடுவிக்கப்பட்டிருக்கும்.

ஒருவரையொருவர் எதிரிகள் என்று அனுமானித்திருந்த இரண்டு பேர். பல வருடங்கள் கழித்து யோசிக்கையில் அது ஒரு பாலே நடனத்திற்கோ, அல்லது ஒரு திரைப்படக்காட்சிக்கோ உகந்த ஐடியாவாகத் தோன்றுகிறது எல்லா வெஸ்டர்ன் கிளாஸிக்குகளிலும், கிளைமாக்ஸிற்கு கொண்டு வருகிற காட்சிகள். இறுதியான துப்பாக்கிச் சூடு கட்டத்திற்கு முந்திய நாட்டிய சடங்கு.

சீழ்க்கையடிப்பது இருண்ட காட்டில் பயத்தைப்போக்கும் என்று கூறப்படுகிறது. நான் சீழ்க்கையடிக்கவில்லை. ஏதோவொன்று, ஒருவேளை வெகு தூரத்திலிருக்கும் என் அம்மாவின் ஞாபகம், அதற்கு பதிலாக என்னைப்பாட வைத்தது. அணிவகுப்பின்போது ஒலிக்க கற்றுக்கொடுத்த மெலடிகளில் எதையும் பாடவில்லை. இல்லை. அது ஒரு நர்ஸரி ரைம். எனது நிலைமைக்குப் பொருத்தமான அந்தப்பாட்டு தற்போக்காக என் உதடுகளுக்கு வந்து சேர்ந்து, அதன் முதல் அடியை மட்டும் Hans leeft home, on his own- பாடினேன். திடீரென்று அதற்கு ஒரு துணை ஒன்று கேட்டது. Went into the world alone.

எவ்வளவு நேரத்திற்கு இந்த எதிர்ப்பாட்டு சங்கீதம் தொடர்ந்ததென்று என்னால் கூறமுடியாது. அந்த வார்த்தைகளின் பின்னால், இருந்த செய்தி ஜெர்மன் மொழி பேசுகிறவர்கள் இரண்டு பேர் கும்மிருட்டான காட்டில் அலைந்து கொண்டிருக்கின்றனர். இப்போது ஒருவரையொருவர் கண்டடைந்து விட்டதால் ஒளிந்திருப்பதிலிருந்து வெளியே வந்து ஜெர்மனிய ராணுவ மொழியில், ஆயுதங்களை கீழிறக்கி, கைகுலுக்கும் நெருக்கத்திற்கு வந்து நின்று, பின் மேலும் நெருங்கிக் கொள்ள வேண்டும்.

எனது சக பாடகருக்கு ஒரு ரைஃபிளும், ஒருசில கூடுதல் வருடங்களும், ஒரு சில கூடுதல் சென்டிமீட்டர்களும் என்னைவிட இருந்தன. அவருடைய ஃபீல்டு தொப்பிக்கு கீழே அவரிடம் ஹெல்மெட் இல்லை. இருந்தது ஒரு ஒல்லியான சின்ன ஆள். நான் கேட்ட அந்த போரின் கோர்வையை ஒரு கத்தியால் வெட்டியாற் போலிருந்தது. எதையும் வெளிக்காட்டாத அந்த பூடகமான முகத்தின் மீதிருந்த பயம் ஒரு சிகரெட்டை பொருத்தி பற்றவைத்தபோது விலகியது.

பிற்பாடு போர் நீடித்து, போலந்து படையெடுப்பு தொடங்கி, பிரான்ஸிற்கும் கிரீஸிற்கும் சென்று ரஷ்யாவை நோக்கிப் பட்டாளம் முன்னேறிச் சென்ற காலங்களில் அவர் புதுக்கதையை பிறைவோ அனலிறங்கு பகல் உயர்ந்தார் அதுபோல பேச

உயர்த்திக்கொள்ள அவருக்கு விருப்பமில்லை. எதுவும் அவரை நிலைகுலையச் செய்யாது. நாங்கள் இருந்த அந்த இடர்பாடான நிலைமையில் அவரது துணையாக பெரும்பாலமாக இருந்தது. என்னை வழிநடத்தும் தேவதையாகிப்போனார் அவர். காட்டிலிருந்து என்னைக்காப்பாற்றி, வயல் வெளிகளை, ரஷியத்துருப்புகளைக் கடந்து என்னை வெளியே அழைத்து வந்துவிட்டார்.

என்னைப் போலன்றி அந்த பிரைவேட் பர்ஸ்ட்கிளாஸ் காட்டின் விளிம்பில், வெட்டவெளிகளில் நெருப்பு மூட்டி படைவீரர்கள் இராத் தங்குவதைப் பார்த்திருந்தார். அது எதிரிகளின் பிரதேசம் என்று கணித்து நெருப்பு மூட்டப்பட்ட அடையாளம் இல்லாத இடத்தைத் தேடினோம். அதாவது அவர் தேடினார். நான் அவருக்கு இரண்டடி பின்னல் நடந்தேன்.

ஓரிடத்தில் நின்றபோது நிலா வெளிச்சத்தில் முகத்திற்கு சோப் நுரை தடவி மூன்று நாள் வளர்ச்சியை சவரம் செய்தார். நான் என் உயர் அதிகாரியின் பாக்கெட் கண்ணாடியை முன்னால் பிடித்துக் காட்டினேன்.

இருட்டினூடே மேற்கு நோக்கிச் செல்லும் உழுசால் தடத்தோடு தென்பட்ட ஒரு வயல். அதுவரை மரப்புதர்களில் ஒளிந்து மறைந்து வந்த எங்களுக்கு தைரியமூட்டியது. அந்த வயல் புதிதாக உழப்பட்டிருந்தது.

ஒரு மேட்டிற்குப்பின் முடிவடைந்த அந்த வயலைத் தாண்டிய பிறகு புதர் வரிசையிட்ட ஒரு மண்பாதை புறப்பட்டு ஓடை ஒன்றின் மீதிருந்த பாலத்தில் முடிந்தது. அந்தப்பாலம் காவலின்றி இருந்தது. எங்கள் கான்டீன்களை நிரப்பி, அருந்திவிட்டு, மீண்டும் நிரப்பிக்கொண்டோம். அவர் புகைபிடித்தார்.

அடுத்தடுத்த இரு பாலங்களுக்குப்பின் - அவை ஸ்ப்ரீயின் கிளை ஆறுகளோ? தூரத்தில் நெருப்புச்சுவாலை ஒன்றைப்பார்த்தோம். சிரிப்பும் பேச்சுத்தணுக்குகளும் காற்றில் மிதந்து வந்தன. நிழலுருவங்கள் முன்னும் பின்னும் இடம் பெயர்ந்து கொண்டிருந்தன.

பாலத்தைக் கடந்ததும், ஸ்டாய்! என்று கேட்டது, உடனே அடுத்தது.

மூன்றாவது "ஸ்டாய்" கேட்டதும் பாலத்தைவிட்டு வெகுதூரம் கடந்து வந்து விட்டிருந்தோம் - என் பிரைவேட் ஃபர்ஸ்ட் கிளாஸ் அவரது உத்தரவை வழங்கினார். ஓடு, எவ்வளவு வேகமாக முடியுமோ ஓடு!

எனவே நாங்கள் ஓடினோம். ஆனால் போருக்குப்பிறகு நான் கண்ட பல கனவுகளில் போல மெதுவாகத்தான் ஓடினோம். வயலில் இறங்கி ஓடுகையில், களி மண்ணும் சேறும் எங்களது பூட்களின் அடிப்பாகத்தில் ஒட்டிக்கொண்டு, மேலும், மேலும் சேர்ந்து, உதிர்ந்து, மீண்டும் ஒட்டிக்கொண்டு ஸ்லோமோஷன் போல ஓடிக்கொண்டிருந்தோம்.எங்களுக்கு மேலாக குடைபிடிப்பது போல சப்மெஷின் கன்களின் குண்டுகள் சீற, சிக்னல் ராக்கெட்டுகளோடு வானம் சிவப்பாக வெடிக்க, வெகுநேரம் போல் நீடித்த அந்த திரைப்படக்காட்சி வயலின் மறுமுனையில் ஒரு கால்வாயின் நாங்கள் குதித்து அமிழ்ந்து கொண்டதும் முடிந்தது.

ரஷியர்கள் எங்களைத் துழாவி வெளியே கொண்டுவர எந்த முயற்சியும் எடுக்கவில்லை. துப்பாக்கிச் சூடு தணிந்தது. ராக்கெட்டுகள் நின்றன. வானத்தை நிலவு மீண்டும் வியாபித்தது. எங்களைப் பார்த்து பயப்படுவதற்கு எதுவும் இல்லை என்பதைப்போல முயல் ஒன்று நிதானமாக குதித்துச் சென்றது.

மேலும் எந்த பாலங்களுமின்றி வயல் வெளிகளின் வழியே உலைந்து நடந்தோம். சூரியன் எழுந்தபோது இன்னமும் ஆக்கிரமிக்கப்படாத ஒரு கிராமம் கண்ணுக்குத் துலங்கியது. காலை நேர பனி மூட்டத்தில் அமைதியாக, ஒரு சர்ச்சைச்சுற்றிஅமைதியாக, ஏதோ கால ஓட்டத்திலிருந்து நழுவி விட்டிருப்பதைப்போல சமைந்திருந்தது. அந்தக்கிராமம்.

கிராமத்தின் வாசலில் அதிகம் காவலில்லாத சோதனைச் சாவடியைத்தாண்டி எங்களை எதிர்கொண்ட அந்த சிடுசிடுப்பான ஆஸ்திரிய வம்சாவளி குதிரைப்படை காப்டனையும் அவருடனிருந்த ஹோம் ஃபின்ட் வீரர்களையும், ஒரு நிமிடத்திற்கு மட்டுமே பார்த்திருந்தாலும் அவருடைய முகமும் கண்களின் குளுப்பையும், நீத்பிரஷ் மீசையும் இன்னும் என் நினைவில் பதிந்திருக்கிறது. பார்ப்பதற்குள பதற்றமானவர்

போலத்தெரிந்தார். எங்களது விரிவான விளக்கத்தை தடுத்து நிறுத்தி, உங்களுடைய மார்ச்சிங் ஆர்டரைக் காட்டுங்கள். என்றார், ஏதோ அதுவொரு சங்கேதக் குறியீடுபோல.

மார்ச்சிங் ஆர்டர் இல்லாத நாங்கள் கோர்ட் மார்ஷலுக்கான தீனி என்பதால், வேட்டைத்துப்பாக்கிகளும் ஆண்டி-டாங்க் கன்களும் வைத்திருந்த மூன்று வயதான வர்களை அழைத்து எங்களை அழைத்துச் செல்ல உத்தரவிட்டார். அவர்களில் ஒருவர் உள்ளூர் விவசாயிகள் சங்கத்திற்கும் உள்ளாட்சி மன்றத்திற்கும் தலைவர் என்று பெருமையாக அலட்டிக் கொண்டிருந்தார். எங்களை ஒரு பண்ணை வீட்டின் நிலவறையில் அடைத்தனர். வினோதமாக எங்களிடமிருந்த ஆயுதங்களைப் பிடுங்கிக் கொள்ளவில்லை.

அந்த நிலவறை முழுக்க பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள் பாட்டில் பாட்டிலாக இருந்தன. லேபிள்களில் பாட்டில்களைப்போல ஸட்டர்லின் எழுத்துகளில் ஆஸ்பாரகஸ், கடுகு, பூசணி, பச்சைப்பட்டாணி சேர்த்த வெள்ளரிக்காய் ஊறுகாய், மினுங்கும் கொத்துக்கறியும், வாத்து ஈரல் என்றிருந்த அந்த பாட்டில்களில் தூசு கூட படிந்திருக்கவில்லை. இவற்றைத்தவிர ஆப்பிள், எல்டர்பெர்ரி, ஜூஸ் பாட்டில்களும், கால்விரல் கனத்திற்கு சீவப்பட்டிருந்த உருளைக்கிழங்கு குவியலும் ஒரு மூலையில் இருந்தன.

ஜாடியிலிருந்த பன்றி மாமிசத்தை ஸ்பூனில் எடுத்து, வெள்ளிரிக்காயை சேர்த்து மென்றோம். அதற்கு மேல் ஜூஸ்களை எடுத்துக்குடித்தோம். ஏறக்குறைய வாந்தியெடுக்கும் நிலைக்கு வந்த பின்னரே சாப்பிடுவதை நிறுத்தினோம். பிறகு பிஎஃப்சி (பிரைவேட் ஃபர்ஸ்ட் கிளாஸ்) ஒரு சிகரெட்டை எடுத்துப் புகைத்தார். என் அம்மாவைப் போலவே புகை வளையங்கள் விடுவதில் அவர் சமர்த்தராக இருந்தார். என் விஷவாயு முகமூடியை அதன் பெட்டியிலிருந்து எடுத்துவிட்டு பெட்டியில் ஜாமை நிரப்பினேன்.

கோர்ட் மார்ஷலுக்கு அழைத்துச் செல்லப்படுதவதற்காக இரண்டு மணிநேரங்களுக்கும் மேலாக காத்திருந்த பிறகு - அந்த விசாரணையில் என்ன தீர்ப்பு எங்களுக்கு கிடைக்கும் என்பதை நாங்கள் விவாதிக்க விரும்பவில்லை - உண்ட மயக்கத்தில் கண்ணயர்ந்து விட்டோம். அதன்பிறகு நடந்தவை தெளிவாக நினைவிலில்லை. பிஎஃப்சி நிலவறை கதவை சோதித்தார். அது பூட்டப்படாமலிருந்தது. வெளியிலிருந்து சாவி துவாரத்தில் சாவி தொங்கிக் கொண்டிருந்தது. யாரும் எங்களுக்கு காவல் இல்லை.

இந்த இடைப்பட்ட நேரத்தில் அந்த கிராமம் வெளியேறி விட்டிருக்க வேண்டும். அந்த அதிகாரி எங்களை மறந்துவிட்டாரோ அல்லது வெறுப்பில் விளையாட்டுத்தனமாக எங்கள் தலைவிதியை சந்திக்க விட்டு விட்டுச் சென்றாரோ. சாலைத்தடுப்புகளில் புதிதாக வெட்டப்பட்டு போட்டிருந்த மரக்கட்டைகளின் மீதமர்ந்து சிட்டுக்குருவிகள் அழகுப் பயிற்சிகள் செய்து கொண்டிருந்தன. வெயில் இதமாக இருந்தது. எங்களுக்குப் பாடவேண்டும் போல் உற்சாகமாக இருந்தது.

சாலைத் தடுப்பின் ஒருபக்கத்திலிருந்து பயல் வெளிகள் மறைக்கப்படாமல் முழுதாகத் தெரிந்தன. அவற்றிடையாக எதிரிகள், ரஷிய காலாட்படையினர், பாதுகாப்பு கவசங்களோடு முன்னேறிக் கொண்டிருந்தனர். முகங்களை என்னால் தெளிவாகப் பார்க்க முடியவில்லை. ஆனால் தூரம் படிப்படியாக குறைந்து கொண்டே வந்தது. இடமிருந்து வலமாக ஒவ்வொருவரையும் எண்ணிவிடலாம். ஒவ்வொரு இலக்கு.

இருந்தும் நான் என் சப்மெஷின்கன்னை எடுத்து குறிபார்க்கவில்லை. என் பிஎஃப்சியும் அக்கிராமத்தைக் காப்பாற்ற அவரது ரைஃபிளாஸ் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. நாங்கள் பின் வாங்கினோம். சத்தமில்லாமல் பின் வாங்கினோம். உத்திரவிடப்பட்டோ, அல்லது பழக்கத்தின் காரணமாகவோ இவர்கள் எங்களைச்சுட்டிருந்தால் கூட நாங்கள் திருப்பிச் சுட்டிருக்க மாட்டோம்.

நாங்கள் ஒன்றும் சகோதர பாசத்தில் அதுபோலச் செய்யாமலில்லை. எங்களுக்கு எந்தப் பாராட்டும் தகுதியில்லை. துப்பாக்கியை குறி பார்த்து, குதிரையை இழுப்பதிலிருந்து எங்களைத் தடுத்ததற்கு விவேகமும், அத்தகைய சாகசத்திற்கு

அவசியமில்லாமையும் தானிருக்க வேண்டும். அதனால்தான் யுத்தம் அதன் பிடியில் இறுக்கமாக என்னைப் பற்றியிருந்த அந்த ஒரு வாரத்தில், ஒரேயொரு முறை கூட நான் துப்பாக்கியை எடுத்து சுடவில்லை. என்ற எனது பிரகடனத்தை அவ்வப்போது முழங்கி வந்திருக்கிறேன். அதற்கு காரணம் இன்னமும் மிச்சமிருக்கும் அந்த அவமானத்தை இவ்வளவு காலம் கழித்து திசைதிருப்புவதற்காகத்தான். எனவே உறுதியாக சொல்லக்கூடிய விஷயம் இதுதான். நாங்கள் சுடவில்லை. உறுதியாகச் சொல்ல முடியாதது என்னவென்றால் எப்போது எனது யூனிபார்ம் ஜாக்கெட்டைக் கழற்றி விட்டு அதைவிட இலேசான ஒன்றிற்கு மாறினேன் என்பது. என் சொந்த விருப்பத்தின்படிதான் அதைச் செய்தேனா?

என் காலரில் இருந்த ரூன் இலச்சினையைப பார்த்துவிட்டு பிஃப்சிதான் அந்த ஜாக்கெட்டை மாற்றச் சொல்லியிருக்க வேண்டும். எனது இலச்சினைகளைப் பார்த்து அவர் சந்தோஷப்பட்டிருக்க முடியாது. அவர் அப்படிக் கூறாவிட்டால் கூட என்னோடு சேர்ந்திருப்பது மோசமான துணையோடு இருப்பதாக அவருக்குப்பட்டிருக்கும். எப்போதோ ஒருமுறை, அந்த நிலவறையின் உணவுக்கிடங்கிலோ, அல்லது சவரம் செய்து கொண்டிருக்கும் போதோ, அல்லது சிகரெட் பிடித்துக் கொண்டிருக்குமபோதோ கூறியிருந்தார். இங்கே பார் பையா! இந்த திவான்களின் கையில் நாம் சிக்கிக்கொண்டால் நீதான் முதல் பலி. உன் காலரில் இருக்கிற இந்த அலங்காரங்களைப் பார்த்தால் கழுத்திலேயே சுட்டுவிடுவார்கள். எந்தக் கேள்வியும் கேட்க மாட்டார்கள்.

எப்படியென்று நான் அறியாவிட்டாலும், எங்கிருந்தோ ஒரு சாதாரண வெர்மாக்ட் ஜாக்கெட்டை - ராணுவத்தினர் பாஷையில் ஏற்பாடு செய்து விட்டார். புல்லட் துளைகளோ, இரத்தக்கறைகளோ இல்லாதது. அது அளவு சரியாகக்கூட இருந்தது. இரட்டை ரூன் சின்னங்கள் இல்லாமல் என்னை அவருக்குப் பிடித்திருந்தது. எனக்கும் என்னைப் பிடித்திருந்தது.

****

பிறகு என்பது எப்போதுமே முன்னது, நிகழ்காலம் என்று நாம் கூறுகின்ற, இந்த விரைந்தோடும் இப்போது இப்போது தொடர்ந்தேர்த்தியாக கடந்த காலம் ஒன்றால் நிழலடிப்பு செய்யப்பட்டே வருகிறது. இதனால் தப்பிக்கும் வழி என்று அறியப்படும் எதிர்காலத்திற்கு நொண்டியடித்துத் திணறித்திணறித்தான் செல்ல முடியும்.

இவ்வாறாக சுமையேற்றப்பட்டு, அறுபது வருடங்களும் கடந்த பிற்பாடு அந்த பதினேழு வயதுப் பையன், அசிங்கமாக வீங்கிப்பருத்த விஷவாயு முகமூடி பக்கவாட்டில் தொங்க, புதுசுபோல தைக்கப்பட்டிருந்த யூனிஃபார்ம் ஜாக்கெட் அணிந்து பின் வாங்கிச் செல்லும் ஜெர்மன் படையோடு சேர்ந்து கொள்ள ஒரு முரட்டுத்தனமான திருட்டுப்போர்வழி பிஃப்சி ஒருவரோடு அவர் தொழிலால் ஒரு நாவிதர் என்று கூறவே முடியாது. எந்த வழியாவது கிடைக்குமா என்று தவித்துக் கொண்டிருந்ததைத்தான் பார்க்கிறேன். அவ்விருவரும் அந்த வேட்டை நாய்களின் பார்வையிலிருந்துள தொடர்ந்து தந்திரமாகத் தப்பி வந்தனர். எப்போதுமே ஏதாவது ஓட்டை தென்பட்டுக் கொண்டே இருந்தது. அந்த துருப்பினரை எளிதில் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. தமது அணியிலிருந்து தொலைந்துபோன ஆயிரக்கணக்கான வீரர்களில் அவர்கள் இரண்டு பேர் மட்டுமே.

செண்ஃப்டன் பர்க்கிலிருந்து ஸ்பரெம்பர்க் செல்லும் சாலை குதிரைகளாலும் அகதிகள் வண்டிகளாலும் நிரம்பியிருந்தது. அந்த இருவரும் அதே போர்கள சாம்பல் நிற உடையில் இந்த நெருக்கடியை உபயோகப்படுத்திக்கொண்டு தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த ஒரு அவசர அஸெம்ப்ளி பாயின்ட்டில் அதிகாரபூர்வமான சர்ச்சிங் ஆர்டர்களை வாங்கிவிட முயற்சித்தனர். சாலையோரத்தில் வெறும் டேபிளும் ஒரு ஸ்டூலும் இருந்தன. மேஜையின் மீது சில அச்சடித்த காகிதங்கள். ஏராளமான விழுப்புண்கள் கொண்டிருந்த அந்த சார்ஜெண்ட் கேள்விகள் எதுவும் கேட்கவில்லை. வேகமாக எழுதி அவரது முத்திரையை குத்தினார்.

இப்போதுதான் எங்களுக்கு பாதுகாப்பு. புதிதாக கூட்டப்பட்ட ஒரு தாக்குதல்

அணியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறோம். இப்போதைக்கு அது வெறும் பேப்பரில் மட்டுமே இருந்தாலும், அந்த மேசைக்குப் பின்னால் புல்வெளியில் ஒரு நடமாடும் கீனிபீ சமையலறை ராணுவ வீரர்கள் பானையில் கொத்துக்கறி பீரங்கி - அமைக்கப்பட்டு அங்கிருந்து சூடான சமையலும் புகையும் வந்து கொண்டிருந்தது.

வரிசையில் சேர்ந்து கொண்டோம். அனைவரும் ஒன்றாக, அதிகாரிகள் கூட ஒன்றாகக் கலந்து நின்றனர். முடிவை நெருங்கும்போது விதி அதிகாரத்தின் படி வரிசைகளை கலைத்து விடுகிறது.

இறைச்சித் துண்டுகள் மிதக்கும் உருளைக்கிழங்கு சூப் கொடுத்தனர். மென்மையான பாத்திரத்தின் அடியிலிருந்து ஒரு கரண்டியும், மேற்பகுதியிலிருந்து அரை கரண்டியும் ஊற்றினர். ஹெல்மெட் உறைபைகளில் மாட்டிக்கொண்ட எங்களது கோப்பைகள் சரியான அளவில் இருந்தன. மனநிலை சோர்வாகவோ உற்சாகமாகவோ இல்லை. சாதாரண ஏப்ரல் வானிலை சூரியன் வெளியில் வந்திருந்தது.

இப்போது நாங்கள் எதிரெதிரே நின்றுகொண்டு, ஸ்பூன்கள் ஒரே கதியில் இயங்க சூப் உறிஞ்சிக்கொண்டிருக்கிறோம். சில தப்படிகள் தூரத்திலிருந்து ஸ்பூன்களின் தாளலயத்தை சிதைக்காமல் ஒரு குரல் ஹேய்! இன்று அடால்ஃபின் பிறந்தநாள் இல்லையா? எங்கே கூடுதல் உணவு? சாக்லெட், சிகரெட், பிராந்தி? Heil, mein fuhre!

இப்போது யாரோ ஜோக் சொல்ல முயல்கிறார்கள். ஆனால் எல்லாம் கலந்து சிரிப்பு தோற்றிக்கொள்கிறது. ஒரு அமைதியான காட்சி இப்போது அககார்டியன் வாசிக்கத்தான் ஒருவன் தேவை.

ஒரு தெருவிற்கருகில் நின்றுகொண்டிருந்தோம். முன்னேறித் தாக்குவதற்கு டாங்கிப்படை ஒன்று அணிவகுத்துச் சென்று கொண்டிருக்க எதிர்த்திசையிலிருந்து கூட்டம் கூட்டமாக அகதிகள் வழியை மறித்துக்கொண்டு வந்தனர்.

சாலையின் ஒரு பக்கமாக திருப்பிக்கொள்ள இடமே இல்லை. அப்போதுதான சோவியத் டாங்கிகளின் முதல் குண்டு வெடித்தது. ஒரு ஸ்பூனுக்கும் மற்றதற்கும் இடையில் என் பிஃப்பி, இவை T-34 என்றது T-34 என்றது அவரது எதிரொலி. நான்.

காட்டிலிருந்து டாங்கிகள் வரிசையாக வெளிப்பட்டு சாலையின் எதிர்ப்பக்கத்திற்கு மேடேறி வந்தன. தூரத்திலிருந்து பொம்மைகள் போலத் தெரிந்த அவை நின்றன. பின் கட்டன எதிரியின் துண்டுகளுக்கு சுலபமான இலக்காக சாலையின் போக்குவரத்து நின்றது. வெடிப்பது நெருங்கின. எங்களது ஜாகட் பேந்தர் டாங்கிகளுக்கு நிலையாகப் பொருத்தப்பட்ட குழல்கள் என்பதால் அவற்றை முதலில் திருப்பி நிற்க வைத்துவிட்டுத்தான் பதிலடி கொடுக்க வேண்டும். உத்தரவுகளைக் கத்தியபடி எங்களது டாங்கிகள் பயணிகள் நிறைந்த அந்த வண்டிகளையும், அகதிகளையும், குதிரைகளையும் அச்சாலையின் விளிம்பிலிருந்து கீழே கற்சுரங்கத்தின் பள்ளத்திற்கு தள்ளின.

இப்போது மிக அழகான லெப்டினன்ட் ஒருவர் பீரங்கி மேடையின் மீதேறி வெறும் கைகளினாலேயே பேரல்களின் திசையை மாற்ற முயல்வது போல ஆவேசமாக கையாட்டுகிறார். ஸ்லீசிய குடியானவர்கள் தமது உடமைகளைத் துறக்க மறுப்பதைப் பார்க்கிறேன். பொம்மைகளைப் போல வண்டியிலிருக்கும் சிறுவர்கள் சாலையிலிருந்து கீழே பள்ளத்தாக்கிற்கு சரிவதைப் பார்க்கிறேன். பெண்கள் கதறுவதைப் பார்க்கிறேன். ஆனால் அவர்களது ஒலிகள் என் காதில் கேட்கவில்லை. பீரங்கி குண்டுகள் சிலமுறை தூரத்திலும் சிலமுறை அருகாமையிலும் வெடிக்கின்றன. தமது இலக்குகளை சத்தமேயின்றி அடைகின்றன. மேலும் பார்ப்பதற்கு விருப்பமின்றி என் கோப்பையில் மிச்சமிருக்கும் சூப்பை வெறித்துப்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஒரு பக்கத்தில் நான் இன்னமும் பசியோடும் மறுபக்கத்தில் திரைப்பட காட்சிகளுக்கு சாட்சியைப்போல, ஸ்தம்பித்துப்போன பார்வையாளனாகவும் இருக்கிறேன்.

நான் கனவு கண்டுகொண்டிருப்பதைப் போலிருக்கிறது. ஆனால் விழிப்புடன்தான் இருக்கிறேன். திடீரென என் ஹெல்மெட்டின் வார் அறுந்து தலைக்கவசம் கழன்று தெறித்து விழுகிறது. என் உணர்வுகள் அழிந்து போகின்றன.

எங்கே என் பிஎஃப்சி? எங்கே எனது சப்மெஷின் கன்னும் இரண்டு பாகங்களின் துண்டுகளும்? ஏன் நான் இன்னும் நின்று கொண்டிருக்கிறேன் - அல்லது மறுபடியும் நிற்கிறேன்?

என் வலது தொடை காயத்திலிருந்து பெருகிய ரத்தம் என் காற்சட்டையை தொப்பலாக நனைத்தது. ஹெல்மட்டின் தோல்பட்டை என் முகவாய் கட்டையில் காயம் ஏற்படுத்தியிருந்தது. என் இடது தோளிலிருந்து செயலிழந்து தொங்கிக்கொண்டிருந்த கரம் என் உத்தரவுக்கு கீழ்படிய மறுத்தது. வேறு யாரோ ஒருவருடைய உதவியுடன் கீழே விழுந்திருந்தவரை - ஹா! இங்கே இருக்கிறார்! என் பிஎஃப்சி! தூக்க முயற்சித்தேன்.

அவருடைய கால்கள் அறுபட்டு கிழிந்திருந்தன. மார்பும் வயிறும் சேதமில்லாதமலிருந்தது. அவர் கண்கள் அகலமாக திறந்திருந்தன. ஆச்சரியத்துடன், நம்ப முடியாமல்..

திடீரென சுழன்றடித்த மணற்காற்றுக்கு தலையைத் திருப்பியபோது எந்தச்சேதமும் இன்றி தற்காலிக சமையலறை இன்னமும் நறுமணத்தோடு புகை எழுப்பிகொண்டிருந்தது கண்ணிஃபட்டது. அங்கே அவரை நாங்கள் இல்லை அந்த மற்றொருவர் தூக்க, நான் கைத்தாங்கலாகக் கொண்டு சென்றோம். காயமுற்றிருந்த இன்னொருவரையும் பிஎஃப்சியையும் ஆம்புலன்ஸில் ஏற்றினோம். ஒரு ஆர்டல்லியும் ஏறிக்கொண்டான். காயமுற்றிருந்த மற்றவர்கள் எங்களைத்திட்ட, அவர்களை விட்டுவிட்டு கிளம்பினோம். அவர்களில் ஒருவன் ஊர்ந்து வந்து தன்னையும் அழைத்துச் செல்லும்படி கத்தியபடி ஆம்புலன்ஸின் பின்கதவை பற்றிக்கொண்டான். இறுதியில் கதவு மூடப்பட்டு தாழிடப்பட்டது.

நாங்கள் நிதானமாக உருண்டு சென்றோம். மருத்துவ முகாமிற்கு என்றுதான் தோன்றியது. லாஸாலின் மணம். ஆம்புலன்ஸில் நான் பத்திரமாக உணர்ந்திருக்க வேண்டும். போர்நிறுத்தம ஏற்பட்டிருக்கிறது. எப்படியிருப்பினும், எதிலும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. வழியைக் கண்டுபிடிப்பதில் எங்களுக்கு வெகுவாக தாமதம் நேர்ந்திருக்கிறது. பிஎஃப்சி மல்லாந்து படுத்திருந்தார். அடிக்கடி சவரம் செய்யப்படுவதால் எப்போது மழமழப்பாக, மென் சிவப்பில், பளபளப்பாக காணப்படும் அவருடைய முகம் முள்ளு முள்ளாக இருந்தது. அவரைப்பார்ப்பதற்கு சுருங்கி விட்டிருப்பதைப் போலிருந்தார். அவர் கால்கள் பேண்டேஜ் இடப்பட்டு மென் துணி வலையால் கட்டப்பட்டிருந்தன.

மரப்படுக்கையின் மீது முழுவதும் விழித்திருந்தார். ஓரக்கண்ணால் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார். வார்த்தைகளை சேகரித்து உருவாக்க பெரும் முயற்சியெடுத்து, மெதுவான குரலில் இழுத்து இழுத்து சிகரெட் என்று கேட்டுவிட்டார். அவரது கசங்கிய சட்டப்பையிலிருந்து ஒன்றை லைட்டரோடு எடுத்தேன்.

புகைபிடிக்காதவனாகிய நான் சிகரெட்டை பற்றவைத்து அவர் உதடுகளுக்கிடையில் பொருத்தினேன். உதடுகள் திடீரென துடித்துக் கொண்டிருந்ததை நிறுத்தின. பேராசையோடு ஆழ இழுத்து, கண்களை மூடி, உடனே தனது நிலையை அப்போதுதான் உணர்ந்ததைப்போல பயத்துடன் திறந்தார். இப்போது அவர் முகத்தில் பரவியிருந்த பீதி என்னை அச்சுறுத்தியது. சுற்றிலும் காயமுற்றவர்களின் முனகல்கள் பரவியிருந்த பீதி என்னை அச்சுறுத்தியது. சுற்றிலும் காயமுற்றவர்களின் முனகல்கள், ஓலங்கள், ஆர்டர்லி கத்திக்கொண்டிருந்தான். அவனிடம் போதியளவுக்கு வலைத்துணிச்சுருள் இல்லை. எனக்குப்பட்டிருந்த காயங்கள் ஏன் வலிக்கவில்லையென்று வியப்பாக இருந்தது. சிறிது நேரம் கழித்து பிஎஃப்சி, அவரது காற்சட்டையை கழற்றி, அண்டர்வேரையும் கழற்றிவிட்டு அவருடைய கால்களுக்கிடையே இருப்பவற்றை சோதிக்குமாறு என்னிடம் கேட்டுக்கொண்டார், இல்லை, உத்தரவிட்டார்.

அனைத்தும் இருக்க வேண்டிய இடத்தில் சேதாரமின்றி இருப்பதை உறுதி செய்து கொண்ட பின் உஸ்ஸ் என்று பெருமூச்செறிந்து மேலும் சிலமுறை சிகரெட்டை ஆழமாக இழுத்துவிட்டு, மெதுவாக உறக்கத்தில் மூழ்கினார். அவருடைய சுவாயம் நிதானப்பட்டது. நிச்சலமாகத் தோன்றினார்.

சிகிச்சை நிலையத்தில் நாங்கள் பிரிக்கப்பட்டோம். ஒரு கூடாரத்திற்குள் படுக்க வைக்கப்பட்டேன். என்னை திறந்த வெளியில் என் தொடைக்கு பாண்டேஜ் இடுவதற்கு நேரம் வந்தபோது அவர்கள் கிண்டலடித்து சிரிக்கும் நிலைக்கு உள்ளாகியிருந்தேன். இன்னமும் என்னிடம் மாட்டியிருந்த விஷவாயு முகமூடியின் குடுவை குண்டு வெடிப்பினால் விரலளவுக்கு விரிசல் விட்டு உள்ளே நான் நிரப்பி வைத்திருந்த ஜாம் என் பேண்ட் மீதெல்லாம் வழிந்திருந்தது. அப்போதிலிருந்து எங்கே உட்கார்ந்தாலும் என் பிருஷ்டத்தில் பேண்ட் ஒட்டிக்கொண்டது. பிறகு எறும்புகளும் இதனால் கவரப்பட்டன. அது ஒன்றும் சிரிப்பதற்கான விஷயமாக இல்லை.

என் தொடைக்கு கட்டு போட்ட பிறகே எனது இடது தோளை கவனித்தனர். ரத்தம் ஏதும் அதிகமாக வரவில்லையென்றாலும் சின்னதாக ஏதோ உலோகத்துண்டு உள்ளே குத்திக் கொண்டிருக்க வேண்டும் என்றனர். அது என் யூனிபார்ம் சட்டையில் ஏற்படுத்தியிருந்த துவாரம் கண்ணுக்குத் தெரியாதளவுக்கு இருந்தது. அதுவரை தொங்கி கொண்டிருந்த கரம் இப்போது தொங்கற்கட்டு இடப்பட்டிருந்தது. என்னைச்சுற்றிலும் யுத்தம் சூழ்ந்திருக்கையில் திடீரென்று அது எனக்கு முடிந்து போயிருந்தது.

அன்று மாலை ஒரு ரயிலில் ஏற்றப்பட்டோம். அது ஏப்ரல் இருபதிற்கும் இருபத்தியொன்றிற்கும் இடைப்பட்ட இரவாக இருந்திருக்கக்கூடும். ஏனென்றால் ராணுவ மருத்துவர், ஆர்டர்லிகள், என்னோடு காயமுற்றிருப்பவர்கள் அனைவரும் அன்று மதியம் சோதனைச்சாவடி உணவறையில் ஏற்கனவே நான் கேட்டிருந்த அதே புகார்களை கூறிக்கொண்டிருந்தனர். ஃபியூரரின் பிறந்தநாளையொட்டி ஒவ்வொரு வருடமும் வழங்கப்படும் கூடுதல் சலுகைகள் எங்கே? சிகரெட்டுகள் இல்லை. ஸார்டன் மீன்கள் இல்லை. நான்கு பேருக்கு ஒன்று என்று தரப்படும் டோப்பல்கார்ன் மதுக்குப்பி இல்லை, எதுவுமே இல்லை, எல்லா வீரர்களுக்கும் நான் புகைபிடிக்காதவனாக இருந்தாலும் கூட சந்தேகமேயில்லாமல் வீழ்ச்சியுற்றுவரும் ஜெர்மன் ரைக்கைவிட இந்த நிலைமை மோசமான அறிகுறியாகத் தோன்றியது. ரைச் (Reich).

காயமுற்றிருந்த மற்றவர்களோடு சேர்ந்து படுத்திருந்த இந்த சரக்கு ரயில் எங்கே செல்கிறது என்று எதுவும் எனக்குத் தெரியவில்லை. அடிக்கடி வெகுநேரத்திற்கும் சிலமுறை கொஞ்ச நேரத்திற்கும் நின்று நின்று, வெவ்வேறு ட்ராக்குகளுக்கு பலமுறை மாற்றப்பட்டுச் சென்றது. விரைவிலேயே இருட்டி விட்டது. எங்களுக்குக் கிடைத்த ஒரே வெளிச்சம் பழங்கால அசிடலீன் விளக்கு ஒன்றிலிருந்து வந்தது.

நாங்கள் அழுகிப்போன, மூத்திர வாடையடிக்கும் வைக்கோற்படுக்கையில் படுத்திருந்தோம். எனக்கு இடப்புறம் இருந்தவர் மலைப்பிரதேச படைப்பிரிவைச் சேர்ந்தவர். தலையைச் சுற்றி கட்டுப்போட்டிருந்தார். பாக்கெட் டார்ச் வெளிச்சத்தில் மதநூல் ஒன்றை படித்துக்கொண்டு வந்தார். அவருடைய உதடுகள் அசைந்துகொண்டிருந்தன. எனக்கு வலப்புறம் இருந்தவருக்கு வயிற்றில் குண்டு பாய்ந்திருந்தது. வேதனை தாங்காமல் முறுக்கி நெளிந்து ஓலமிட்டுக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அவரது நெளிவும் ஓலமும் நின்றது.

குடிப்பதற்கு தண்ணீர் கிடைக்கவில்லை. காயமுற்றவர்களின் வேண்டுகோளைக் கேட்பதற்கு ஆர்டர்லிகளும் இல்லை.

அந்த இரவு முடியவே முடியாது போலிருந்தது. போர் முடிந்த கொஞ்ச காலத்திற்கு அது என் கனவுகளில் வந்து கொண்டேயிருந்தது. ஒருவழியாக ரயில் அதன் கடைசி நிறுத்தத்திற்கு வந்து நின்றதும் சரக்குகள்- வேகமாக இறந்தவர்களும், இருப்பவர்களும் இறக்கப்பட்டனர். ஒரு ராணுவ மருத்துவர் லிஸ்ட்டிலிருந்து எங்கள் பெயரை சரிபார்த்து படுகாயமுற்றிருப்பவர்களை மற்றவர்களிடமிருந்து பிரித்தார். ஒரே ஒரு பார்வை அவருக்கு போதுமானதாக இருந்தது. நேரம் எடுத்துக்கொள்ளவில்லை.

பழைய வாய்ந்ததும், அதிருஷ்டவசமாக போரில் சிரழிந்திராததுமான கதீட்ரல் நகரம் மெய்ஸென் வேனிற்பருவத்தின் காலை வெயிலில் நிரம்பியிருந்தது. நாட்டுப்பாடல்களில் வருவதைப்போலவே எல்லா பறவைகளும் அங்கிருந்தன.

படுகாயமுற்றிருந்தவர்கள் டிரக்குகளில் ஏற்றிச் செல்லப்பட்டனர். மற்றவர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவாக தாங்கிக்கொண்டே தற்போது ராணுவ மருத்துவமனையாக மாற்றப்பட்டிருந்த கோட்டைக்குச் செல்லும் பாதையில் நொண்டிக்கொண்டு சென்றோம். உள்ளூர்வாசிகள். பெரும்பாலும் பெண்கள், இயலாதவர்களுக்கு உதவினர்.

கோட்டையில் இருந்தவரை நான் மிக நன்றாகவே கவனிக்கப்பட்டேன். அந்த மருத்துவமனை நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. தாழ்வாரங்களில் அவசர சிகிச்சை படுக்கைகள் வரிசையிட்டிருந்தன. களைப்புற்ற டாக்டர்கள், அவசர ஓட்டமாய் நர்ஸ்கள். எல்லாமே குறிப்பாக மருந்துகள், பற்றாக்குறையாக இருந்தன. அவர்கள் எனக்குச் செய்ய முடிந்ததெல்லாம் என் வலது தொடையிலும் இரு தோளிலும் புதிய கட்டுகளைப் போட்டதுதான். இப்போது அதிகார பூர்வமாக, கையெழுத்தும் முத்திரையும் இடப்பட்டு வழங்கப்பட்டுவிட்டது. என் இடது தோளில் குண்டு வெடித்ததில் ஒரு சிறிய சிம்பு பொதிந்திருக்கிறது. அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய அளவுக்கு அவசியமில்லை என்று கருதினர். ஒரேயொரு டெட்டனஸ் ஊசியைக் கூட எனக்குப் போட்டு விரயம் செய்ய அவர்களுக்கு விருப்பமில்லை.

இறுதியாக ஒரு ஊசியும், காற்சட்டை ஒன்றும் வழங்கப்படுவதாக ஆவணம் ஒன்றுடன் எனக்கு புதிய மார்ச்சிங் ஆர்டர் எனது கடைசி மார்ச்சிங் ஆர்டர் தரப்பட்டது. சேருமிடம் மரியன் பாத் ஒரு காலத்தில் செல்வந்தர்களுக்கும் புகழ்பெற்றவர்களுக்குமான உறைவிடம். இலக்கியங்களில் வெகுவாக சிலாகிக்கப்பட்ட இடம். கதேஷ தனது வயதான காலத்தில் இளம்பெண்ணொருத்தியின் மேல் காதல் வயப்பட்டு, புறக்கணிக்கப்பட்ட நகரம். தன் சோகத்தை மரியன் பாத் துயரகீதம் என்று வடித்துவைத்த அந்நகரம் ஒரே மலைகளுக்கு மறுபுறத்தில் சூடென்லாந்திற்கு தொலைவில் அமைந்திருக்கிறது.

எனது உத்தரவுக்காக காத்திருந்த போது ஆப்பரேஷன் ரூமிலிருந்து என் பிஃபேப்சியை சக்கர வண்டியில் தள்ளிக்கொண்டு வந்தனர். கால்களற்ற அவரது உடல் வலைத்து துணியால் முழுக்க கட்டுப் போடப்பட்டிருந்தது.

அவர் ஆழ்ந்த மயக்கத்தில் இருந்தார். மயக்கத்திலிருந்து அவர் தெளியப்போவது விரும்பத்தக்கதா அல்லது அச்சமுறவைப்பதா என்பது கேள்வியாக இருந்தது. அவர் தன் பெயரை என்னிடம் சொல்லவேயில்லை.

ஒரே மலைகளை எப்படிக் கடந்தேன் என்று நினைவில் இல்லை. கொஞ்ச தூரத்திற்கு ரயில் - அப்போது ரயில்கள் அரிதாகவே இருந்தன. குதிரை, மாட்டு வண்டி என்று பெயர்கள் இப்போது மறந்துவிட்ட கிராமங்கள் வழியாக எப்படியோ தொடர்ந்து சென்று கொண்டிருந்தேன். என் மார்ச்சிங் ஆர்டரிலிருந்து நான் விலகவே இல்லை.

மலையில் ஓரிரவு நான் தங்கிய வீட்டிலிருந்து கணவனும், மனைவியும் வீட்டிற்குப் பின்னால் முயல்கள் வளர்த்து வந்தனர். அவர்கள் இருவருமே ஆசிரியர்கள். எனக்கு ஜுரம் ஆரம்பித்தது. அவர்கள் எனக்கு சிவிலியன் உடைகளைத் தந்து, நிலவறையில் ஒளித்து வைத்தனர். எல்லாம் முடியும் வரை அங்கேயே இருக்கச் சொல்லினர். புத்தக அலமாரியில் வைத்திருந்த புகைப்படத்திலிருந்த அவர்களுடைய மகன் செவஸ்தாபோல் யுத்தத்தில் மரித்திருந்தான். அவனுக்கு இருபது வயதிருக்கலாம். அவனது உடைகள் எனக்குப் பொருந்தியிருக்கும் கைகளை நீட்டி அவன் புத்தகங்களை என்னால் எடுக்க முடிந்தது.

நான் அங்கே தங்கவில்லை. எனது பயண ஆவணங்களை என்னை எங்கே செல்வதற்கு பணிக்கப்பட்டிருக்கிறதோ அங்கே, மலைகளைக் கடந்து என் சொந்த உடுப்புகளிலேயே செல்ல விரும்பினேன். நன்றாகத் தோய்த்த பிறகு என் பேன்ட் எறும்புகளை ஈர்க்கவில்லை. அந்தக்கணவனும் மனைவியும் அவர்களது மரப்பாவோடு வேய்ந்த வாசலில் நின்றபடி நான் சென்று மறைவதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

மற்றொரு வாசஸ்தலமான சாள்ஸ்பாத்திற்கு இதற்கும் இலக்கிய மற்றும் (பெரிய நிர்வகிக்க உள்ள தொகையினால்) அரசிய பிரச்சங்கள் உண்டு நான் எப்படித்தான் போய் சேர்ந்தேனோ, கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

இந்த ஊரில் தெருவில் நடந்து செல்கையில் திடீரென்று முட்டிகள் மடங்கி கீழே விழுந்தேன். எழுந்திருக்க முடியவில்லை.

எனக்கு ஜுரம் இருந்தது. அது என் தோளிலிருந்து வெடிகுண்டுச்சிப்பு வினாலோ, அல்லது டெட்டனஸ் ஊசி போடாததினாலோ இருக்கலாம். என் இடது கரம் விரல் நுனிகள் வரை மரத்துப் போயிருந்தது. வலித்ததாக ஞாபகமில்லை.

என்னைத் தூக்கி நிறுத்திய ராணுவ காவலர் எனது மார்ச்சிங் ஆர்டரை எழுத்து எழுத்தாகப் படித்தார். அவரது மோட்டார் சைக்கிளின் பின் சீட்டில் என்னை வைத்துக் கட்டி நான் மயக்கமாகயிருந்தேன் மரியன் பாதிற்கு ஓட்டிச் சென்றார். அங்கே அந்த போர்க்களப் பூண் துப்பாக்கி வீரனுக்கு போர் முடிவுக்கு வந்திருந்தது. அந்தக்காவலர் என்னை இறக்கிவிட்டு, புதிய படுக்கையில் நான் கிடத்தப்பட்டபோது ஃபியூரர் உயிரோடு இல்லை.



சாயைகளை வளர்க்கும் வெளியிலிருந்து தப்பித்த கலைஞன் விளிம்புநிலை குறித்த சில கட்டுப்பாடுகள் — பின் நவீன, காலனிய புத்தனை குறைந்த ஆயுளுக்கு வழங்கும் யவனிகா ஸ்ரீராம் கவிதைகள்.

— பா.செல்வகுமார்

யதார்த்தத்தை மழக்கக்கூடிய அதிகாரங்கள் கவிதைக்குள் தூரபாரமான காலத்தை ஆண்டுள்ளது. இதற்குள் தீவிர உணர்ச்சிக் கலப்பு, உணர்வு நடுவல். மொழி மேதமை என்பதுடன் அறிவாளித்தனமான நவீன நூற்றாண்டுக்கும் அடக்கம். எனினும் நவீனத்தின் வேறுபட்ட ஆளுமைகள் நிகழ்கணத்தின் குறுக்குவெட்டுக் காட்சிகளைத் தந்துள்ளதிலிருந்து கவிதைப் பொழிப்பின் நாடல் வேறுபக்கமும் திரும்பியுள்ளது. பரிசோதனைக்குரிய மொழியின் வளப்பம் இகழ்ச்சிக்குறியதாகவும் பார்க்கப்பட்டுள்ளது. அகம், புறம் என்ற தீவிர கண்காணிப்பை அவை உடைத்துப் போட்டுவிட்டன. மனம் என்பதே மொழியால் சமைக்கப்பட்டது எனும்போது மொழியின் துளி அலகும் தடங்களை அழித்துச் செல்லும் அபத்த இருப்பின் சாட்சியங்களாகிவிட்டது. மனம், உடல், மொழி, இருப்பு, அதிகாரம், வன்முறை என்பவற்றினோடு விதையடிக்கப்பட்ட கடவுளாகவும் சுற்றிக்கொண்டிருக்கிறது மனித தன்னிலை அது நான் நாம் தேங்காய்களை உருட்டி, வாலாட்டி, இரத்தம் வர பிராண்டி குறைத்துக் கொண்டுமிருக்கிறது. இம்மட்டில் பாலைவெளியில் ஆதி உடல் சாபு கொண்டும் மனமற்றமனத்தின் தேவைக்காகவுமென உள்ளொழிந்து செல்லும் யவனிகா கவிதைகளானது, பல்வேறு நுழைவு - வாசிப்பு- தர்க்க சாத்தியங்களைக் கோதி நிற்பது இக்கட்டுரையாக்கத்திற்கான அடிப்படை.

அதிகார அமைப்பிற்குத் தேவையான நடிப்பை சட்டத்திட்டங்களும் வரையறைகளும் பொது ஒழுங்குகளும் நிச்சயப்படுத்துகின்றன. இயல்புக்கு அப்பாற்பட்ட மனித உடலின் இயக்கம் மனதாலும் புலன்களாலும் இவ்வித வடிவமைப்பிற்கு உட்படும் பொழுது அதன் வலிகளும் எரிச்சல்களும் வைராக்கியங்களும் எதிர்ச்சாடல்களும் சற்றே துருத்திய வண்ணம் அழகியல் மதிப்பிலிருந்து விலகி வெளிப்படுகின்றன. வடிவமைப்புக்கு உட்படாத எனினும் உள்ளது என்ற தள்ள முடியாமையில் இவ்வித மனவிலையைச் சங்கக் கவிதையிலுள்ள பெருந்திணையிலும் கைக்கிளையிலும் காணக்கிடைப்பதாகக் கொள்ளலாம். களவு, கறபெனும் வடிவமைப்பு மகிழ்வைத்தாண்டி அவை தன்னிச்சையில் உரையாடும் மறுக்கப்பட்ட இருப்பாகவும் கொள்ளலாம். இம்மனை வகிடையும் தாண்டி பெரும்பான்மை உதிரித் துருத்தல்கள் சங்கம் முதல் நவீனத்துவ காலம்வரை வெவ்வேறு தரவில் காணக்கிடைக்கின்றன. இதற்குள் முக்கத் இலக்கியத்தைப் பேசினால் அப்பாடல்கள் அதிகாரத்தின் மீதான மிகப்பெரும் கேள்விகளைத் தொடுத்தவை. பக்திப் பாடல்களின் இசைமீட்டல்களுக்கு மறுபுறம் இத்ததிலக்கியம் மௌனப்படுத்துவதற்கான காரணம் அரசியல் மத அதிகாரத்தின் நீட்சி என்பதுடன், சித்ததிலக்கியம் மனிதன் மேல் விழுந்துவிட்ட பலவகையான வடிவமைப்புகளின் மீது காறியுமிழ்வதுதான் என்று பார்க்க முடியும். இதனிலிருந்து, நகல்களை உற்பத்திச் செய்யாத அதேசமயம் அடிப்படை ஆன அறத்துடன் பெருஞ்சுதந்திரத்துடன் மனித உயிரையும் உடலையும் பிரஞ்ஞையையும் இயற்கை விகசிப்புடன் பிணைத்துப் பார்த்த எல்லாச் சிந்தனைகளும் இந்திய நீரோட்டத்தில் தன்னிலையற்றதாகத் தள்ளப்பட்டன உதிரிகளாக்கப்பட்டன என்று கூற முடியும். இத்தொடர் நிகழ்வில் விளிம்பின் நீட்சியாக யவனிகா ஸ்ரீராம் கவிதைகளை உட்படுத்திக் கொள்ளும்போது அவை இன்றைய பின்நவீன- காலனிய காலத்திற்குத் தேவையான மனத்துடன் மொழிவடிவம் கொள்ளக்கூடியனவாக இருக்கின்றன. இதன்பாற்பட்டு பின்நவீன காலனியை புத்தனை புரிந்துகொள்ளும் இடமும் ஏற்பட்டுள்ளது.

மணல் ருசி தொகுப்பு கடவுளின் நிறுவனத்திற்குள் வாசிக்கக்கிடைக்க, தொடர்ந்து சொற்கள் உறங்கும் நூலகம் வாசிப்பிற்குப் பின்பே இரவு என்பது உறங்க அல்ல வாசிக்கக் கிடைத்தது. பின் வந்த மூன்று தொகுதிகளிலிருந்து சில பால்ய

காதல் நினைவுடல், கையறுநிலை என்பவைகளைத் தாண்டி இத்தொகுப்புகளுக்கு இணக்கமான அடிகள் முதல் தொகுப்பிலேயே இருந்தது என்பதே இக்கட்டுரையின் தலைப்பாக்கத்திற்குமான காரணமாக அமைந்தது என்பேன்.

பிடிமானத்திற்கு இடந்தராது நழுவும் பொழுதுகள் அனைத்தும் வாழ்வனைத்துமானவை என்ற புரிதலுடன் அதன் அதிகாரத்திற்குத் தப்பி, அதே சமயம் பிடிமானமுள்ள - கயமைகள் கீழ்த்தரங்கள் என்று மறுக்கப்பட்டவைகளை உடலால் ஏற்றுக்கொண்டு கடவுளால் படைக்கப்பட்ட உலகைப் பழி தீர்க்கக் கேலித்து சகா நடந்து கொண்டிருக்கும் மனிதன் இரவு என்பது உறங்க அல்ல என்பதற்குள் அலைகிறான். இத்தகைய இருப்பின் நுழைவிற்கு, உலர்தலுக்கும் ஈரத்திற்குமிடையே என்று மரணத்தை சற்றே கழிவிரக்கம் செய்ததிலிருந்து துவங்குகிறது பயணம். இத்தகைய கழிவிரக்கம் - பெண்களை அல்லது அவர்களுக்கான கொடுமையைத் தன்னைப் பெண்ணாகப் பாவிப்பதன் மூலமடைந்து - பெண்ணுக்கும் உதவாத பெண் உடல் பயத்தால் கலவரமடைந்து, அவளும் தன்னைக் கொன்று விடாமல் என்பதிலிருந்து பயணம் பயணங்களாக முப்பட்டகம் அடைகின்றது. உடலை இருப்பாகவும், பல்வேறு உடல்களைக் கண்டெடுக்க வீசியெறிந்த உடலிருப்பாகவும், உடலமைத்த மொழியிலிருந்து உடல் வெடித்த மொழிக்குத்தாவும் ஒப்புக்கொடுத்தல் மீண்டும் உடல்வழியாக நிகழ்ந்தேறுதலாகவும் நிகழும்போதே பெண்ணாக மாறிவிடும் எத்தனத்தைக் கொண்டு பெண்களிடத்து இருக்கலாம் பூமியின் மீதிச் சுற்றென்று பேசுகிறது. இப்படி இச்சமூகத்தின் முன் கேள்விக்கானதாக, இட்டுபமோ முன்முடிவுகளையும் அதற்கான சேவர்களையும் அசட்டை செய்கிறது. இங்கே பின்னப்படுத்தலுக்கான நேர்பு துவங்கி, முப்பட்டக ஒளிப்பானங்களைத் துண்டுகளாக நறுக்கிய உடல்மொழி கிடைக்கின்றன. அது நிலமாகவும் அதீதமாகவும் அதுவே உண்மையாகவும் அதுவே பொய்யாகவும் அப்படி அல்லாமலுமாக, முப்பட்டகத்தின ஒரு கூறு காலி பீர் டின்களுக்கு இடையே அமர்ந்திருக்கும் பின் நவீன புத்தனை வழங்குகிறது.

காதலியின் நினைவோட்டங்கள் பழம்பாடலாக நெக்குருகாமல் இரகசிய வழிக்கு அழைப்பதும் இம்மீறுதல் வலிந்த கனவுகள் என்பதும் இயல்பான நிகழ்வானாலும், இரகசிய அழைப்பு மீண்டும் ஒரு பார்வை சாதிந்த புணர்ச்சியாகக்கூட முடிவடையும் தேவை. உடல் என்பதை மொழியிலிருந்து பரித்துவிட்ட கூறாகக் கருதவாய்ப்புள்ளது. முறையற்ற புணர்ச்சிக்கான பிம்பத்தையும் ஒழுங்கு என்ற சதிக்கான உறவுப்பாலத்தை அறுத்துப் பெயரிலிகளாக மாற்றும் அசுரத்தனத்தையும் இவை கொண்டிருப்பதின் மூலம் அக்குறியீடு பிரபஞ்சத்தின் தோற்றுரு நாட்களை மீண்டும் அசைபோடும் ஒன்று என்றாகிறது. ஓதினப் புணர்ச்சிகளின் விழைவைக் காட்சிகளின் வழியாகத் தூண்டலை அசைப்பதன் மூலம், உளவியலின் லாவகத்துடன் அள்ளிச் சேர்த்து... புணர்ச்சியின் மீதான ஒழுக்க வடிவங்களையும் புணர்ச்சியின் லாவக இயல்பூக்கத்தினையும் உடல் வழி மற்றும் இளர்ச்சியுடன் மெல்லெனப் பேசும் கவிதைகள் இத்தொகுப்பிலிருக்கிறது.

வளர்ச்சி என்பதை மொன்னையாக்கிவிட்டு மாற்றம், மாற்றப்படும் உலகப் பின்னணியாக்கிவிட்டு காரண காரியங்களைத் தேடுவதில் பலனற்று, விளை நிலங்களையும் அதனாலான வாழ்வியலையும் காவுகொடுத்து என் சிறு நிலம் பாழாய்ப் போனாலென்ன நகரத்தில் கார்களையேனும் கழுவுவேன் என்பதற்குள் உள்ள வெம்புதல் கழுவமுடியாதது. காலத்தின் தோற்றலை அவசர முந்துதலில் இக்கணத்தின் வெம்மைகளை ஏற்றிவிடுபவை. இதற்குள் ஒளிந்திருக்கும் சூதாட்டத்தையும் கேலியாக நிலங்களானது விற்றுப்போன இடத்திலேயே விற்றுப்போய்க் கொண்டிருக்கின்றன. என்றும் மற்றொரு கவிதையில் எல்லோருக்குமாய் சேர்த்து ஒரு சிலர் தொலைக்காட்சியில் சூதாடிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் உறுத்துகிறது. இக்கேலி உணர்ச்சி பாகங்களின் வெவ்வேறு வண்ணங்களாற்பட்டது. இப்படியே, உடல் பின்னணியில் அடைபட்டதைப் பேசி, உடலைக் கொல்லும் நவீன கருவிகளையும் பேசி, உடலை உருவாக மாற்றும்

கொலைத் தொழில் நுட்ப வியாபார மூளையைப் பேசி - இப்படியாகிறது. கம்யூனிஸ்ட் என்றாலும் ஒரு காலத்தில் உரம் என்றும் அர்த்தமிருந்தது என்று.

இந்தியச் சமூகத்தின் சாதிய அடுக்கு கைங்கர்யத்தினை பேசி மாளமுடியாதென்றாலும் பறையின் மூலம் வரலாற்றிருப்பின் அழித்தொழிப்பினை ஞாபகமூட்டுவது கவிதை உடலின் சாதியத்தைத் தாண்டிய ஒன்றாகிறது. மேலும் இக்கவிதையே (இது மேல் முறையீடு அல்ல) நவீனத் தன்மையின் அரூப தஞ்சமடைதலை விட்டுவிலகாது என் சுடுகாட்டுத்தவம் ஜீவாலைகளில் மிளிர்கிறது. என்று மையல் சார்ந்த அடவுத்தன்மையில் நேர்ந்து விடுவதுடன் ஆம் அங்குதான் எனது பறையே உங்களது செவிப்பறையாகிறது என்று அறிவிப்பில் அவிழ்ந்து விடுகிறது.

இது ஒரு உலகம் உள்ளுறையான சிமிண்டலுடன் காதலியர்க்கும் எப்படியோ ஈகிப்போன நண்பர்களுக்கும் நிறுவனமயப்பட்ட இலக்கியவாதிகளுக்கும் என கேலிக்கும் வலிக்கும் பஞ்சமில்லாமல் பகிர்ந்தளித்த இத்தொகுப்பானது மொழியால் கட்டமைக்கப்பட்ட உலகம் உடலாக மனமாக பின்னம் மற்றுமானவைகளாக ஆனதின் பின்னணிகளை மதமாக வரலாளெடுக்கும் அதிகாரமானது உருவாக்கிய படித்தரங்களிலிருந்து தள்ளப்பட்ட வாழ்வை மனதை அதன கேளிக்கைகளை கவிழ்ப்புகளை பேசுபவை.

கடவுளின் நிறுவனம் மொழிவழி உலகின் பின் நவீனக் குறி குறிப்பீடு குறிப்பான, உலகம் என்பது வெளி அல்ல அப்படியும் கண்ணுக்கெட்டிய தூரம் கூடக் கிடையாது மனிதத் தலையுள் பறவையின் கூடுதலான அது என்பதற்குள் கடவுளின் நிறுவனம் கட்டமைந்துள்ளது. மொழி நீண்ட சபதமாக நடிப்பின் குணத்தையும், வியாபார உலகில் உண்ணப்படும் கருவியாகவும், நாணயமாகவும் (Coins) கடவுள் விதைத் வார்த்தைகள் வெடிக்கும் நீலமாகவும் (பலியாகும் உடல்களுடன்) வனைபுரிகின்றது. மொழிவழி அள்ளிக்கொட்டிய எல்லாவிதமான கருத்தியல்களும் மனிதனுக்கான அடைப்புக்கூண்டு மிக அழகிய தரமுள்ள நீடித்துழைக்கக் கூடியதாக இருக்க பிரக்ஞையை வழங்குவதற்காகவே அனாவசியமான கூதவுகள் என்னும் பெயரில் ஒரு சுயமைதுனத்தான் வெகுளி, நாடோடி, இசைக்கலைஞன், போதையன், பால்திரிபாளன், திருடன், மதுவருந்திகளை ஆசிர்வதிப்பவன், கணவனைப்பிரிந்து குழந்தைகளையும் கைவிட்டவள் இந்நகரத்தைத் தொடர்ந்து கேலித்து வருகிறார்கள்.

உழைப்புக்குள் அறிவுத்தரகமும் வாழ்க்கைக்குள் வாய்ப்பாட்டு வடிவமைப்பும் உணர்வுக்குள், உடலுக்குள், ஒழுங்கமைப்பின் கண்காணிப்பும் முக்கியமான அங்கம் வகிக்கும்போது வாழ்க்கையானது நினைவு மற்றும் கனவுகளால் நிரம்பி வழிகிறது. இதற்குப் புறமாக மனிதனுக்குள் இழைக்கப்படும் பதிவுத்தகடுகள் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன. எனவே, பிரக்ஞை உடைபடவும் மேலாக செயல்படவும் சாராசரியிலிருந்து தவறி கொஞ்சம் கோபமடையவும் இயன்றால் தற்கொலை செய்யவும் இயலாவிட்டால் நடோடிக்கான அழைப்பாகவும் கவிதைகள் செயல்படுகின்றன. பின் நவீன காலத்தின் ஒவ்வொரு அசைவுகளும் அரசியல் வணிகம் தகவலை நெறுக்கி நெய்தனவாக இருக்க அங்காடிச்சாலை வணிகவிலங்காக வீட்டை ஊடறுத்துச் செல்வேத கடவுளின் நிறுவனமாக இருக்கிறது. பயணம் என்பதின் குதூகலத்தை வெளிப்படுத்திக்கொண்டு தேசிய நெடுஞ்சாலைகள் ஆலையின் இயக்குப்பட்டையாக மாற்றியிருப்பது தான் கடவுளின் நிறுவனமான உலகத்தின் முதல் அடிக்கல்லாக இருக்க வேண்டும். தார்ச்சாலைகள் (நடைகளைத் தவிர்த்த) வாகனங்களுக்கானது என்பது ஒரு எளிய செய்தி. பன்னாட்டு நிறுவனங்களுக்கான முதல் கைக்குலுக்கல் சாலைகளும், பாலங்களும், உயர்ந்த கட்டிடங்ளும் அகில உலக தொழில்நுட்ப படிப்புகளும் என்பது அதைவிட எளிய செய்தி. இப்படி மலைகள், ஆறுகள், குளங்கள், குட்டைகள், நதிகள், வனம், விலங்குகள், மனிதர்கள், அறிவியல், தொழில்நுட்பம், குடும்பம், உறவுகள், கேளிக்கைகள், வியாபாரம், பாதுகாப்பு, இறையாண்மை, சட்டம் இன்னபிறவென்று இவையெல்லாம் நமக்கு முன் தெளிவாக இருப்பதாக கற்பிக்கப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தது விதிக்கும் ஒருவதிலிருந்துதான் கற்பிப்புகளின்

கடந்தச்சார்பும், அதிகாரமும், வன்முறையும் வெளிப்பட்டு நிற்கின்றன. எனவே, கடவுள் அவன் ஒரு குதம் விரும்பி, என்று உடைப்பதுமாகிறது. மேலும் துயரத்தைப் போல அலையும் உணவுக்கு இடையில் மதுக்கடையில் மிச்ச உணவினை கம்பீரமாகத் திருடிச் செல்பவன் புதிய புத்தனாகத் தென்படவல்லவனாகிறான். இந்தக்காட்சி, கறுப்பர்களின் உயாவிலும், அழகியலிலும் வாழ்வு ஒட்டப்பட்டுள்ளது எனவுமானா உடைப்பாகவும், இந்த சி குறிகளின் மதச்சினை வரைந்து கொள்வது உடலுறவை ஒருவனை புனிதமாககலாம் என்பது வரை உடைப்பையே சமராக்குகிறது. சாமானியருக்குள் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட வேண்டியதைப் பற்றி கடுகளவும் கவலைப்படாத தேசத்தில் பாரதப்புழையின் நாயகன் வர்ணிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கி, நாம் ஆதி இனத்தின் வேட்டையாடும் தேவையாகவும் மாறிநிற்கின்றன. இதனுடன் உடலுக்குள் ஆன்மாவினைத் தூயதாக்குபவர்கள், தமது முகங்களை மறைத்துக் கொள்பவர்கள். புன்சிரிப்பால், கடப்பவர்கள், சமரசர்கள். காலக்கழிப்பர் - வழிப்போக்கர்கள் என்று வழக்கமான பிம்பங்களை மாற்றுத்தளத்திலிருந்து அறிமுகப்படுத்திச் செல்கிறது கடவுளின், நிறுனம் இப்படியே சற்று வேறாக, மாலையும், இரவும் புணரும் வீடும் குடும்பமும் யார் யாருக்காக மையப்படுத்தப்பட்டவை என்று பார்வையை கவியாக்குவதில் மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்டும் உரையாடலின் தனிப்பட்ட பலன். அன்றாட மிகக்கொடிய நிம்மதியை எவித கரிசனையுமின்றி பிடுங்கிக் கொள்ளும் பாழடைந்த அடையாள இருப்புவெருக்கவிதைகள் அவை. இவை புலன்களுக்கான மாற்று பரிச்சயமும், பார்வைக்கான பார்வைகளின் தேவையுமென நீளும் தன்மையுடையதாகின்றன.

மனிதாயமற்ற நடைமுறைகளை உள்வாங்கிக் கொள்கிறபோத அவை அபத்தங்களை பீதியை மனநோய்த்தனத்தை உருவாக்குவது இங்கு பதிவாகியுள்ளன. பாவங்களுக்கான படிகள் தத்துவம் கொள்கைக் கோட்பாடுகள் கந்துவிட்டன எனும்போது பாவங்களைப் பிடித்துக் கொண்டே இவ்வுலகைத் தரிசிப்பதாகிவிடுகிறது. சவாலின் முதலுதவியாக பிரக்ஞையை அவிழ்த்தெளிந்துவிட்டுப் பயணப்பட நேர்கிறது. தவறுகளாகக் கற்பிக்கப்பட்டவைகள் தாயிடமிருந்து மன்னிப்புடன் பயணப்படுகிறது. மறைவாக அவள் நிரக்வாணத்தை கண்டு, பிரம்மைகள், கனவுகள், எதிர்பாராதவைகள் நடக்கக்கூடாதவைகள் அதிர்ச்சியிலிருந்து விலகி இயல்பாக மாறுகின்றன. இழப்பதற்கு எதுவுமில்லாத வாழ்வியலில், அன்றாட வாழ்க்கைக்கான சொதுககலும் நகரங்கள் வளரும் விதங்களும் உரங்களால் வீரியமாக்கப்படும் மலட்டு உணவுகளும் மனிதனின் பயணத்தை எதை நோக்கி வலுப்படுத்துகின்றன என்பதற்கு, மனிதனை இயந்திரமாக்கும் மிகப்பெரிய அறிவுவணிகப் புரட்சி எனும் பதில் கிடைக்கிறது. வலிகளை உணர்ந்தவன் உடனடியாக இறப்பதற்கு பரிசளிக்கப்படுகின்றன. இதனை ஏற்றுக்கொண்ட விதமாகவே அவனும் குறுக்கு மறுக்கைக் கொண்டாடுகிறான். இத்தகுவலிப்பாட்டை யதார்த்தத்தின் பக்கங்களிலிருந்து உரசி எடுத்து கவிதைக்குரிய வனைவில் ஊடுகடத்தும்போது, தீவிர அதிகாரத்தின் முற்றுக்கைக்குப் பின்னால் தன்னைப் பித்தலாட்டமாக முன்மொழிவது வாழ்வின் மீதான கடைசிப் பற்றுதலற்ற புத்தனை வழங்கியபடிச் செல்கிறது. ஆக, விரிவடையும் நகரமும் பழங்குடிகளின் வெளியேற்றமும் மையம் என்பதனை நினைவூட்டுகின்றன. சிண்டும் இருக்குமான விளிம்பின் அடையாளங்கள் தங்கள் இருப்பிலிருந்து குற்றவாளிகளாக, நிபந்தனைக்குரியவர்களாக மாற்றப்படுகிறார்கள். மேலும் மேலும் அவர்களின் மீதான அடக்குமுறையைக் கவிழ்த்தி மையம் தன்னை உறுதி செய்து கொள்கிறது. எல்லாம் எப்படி இருக்க வேண்டும் என்பதிலிருந்து நவகலெனிய சமூகத்துள் ஒருவன் கேள்விகளை அடுக்க முயற்சிக்கிறான். மறுபக்கம் அவனுடைய உலகம் கனவுகளாலும், ஒருவேளை உணவிற்கான தாளிப்புகளாலும் நிரப்பட்டிருந்தது. இப்படி கவிதையைக் கண்டுபிடிக்கத் தெரியாத்தனம்போல் செல்லும் காட்சிப் பின்னல்களுக்குள்ளிருந்து அறிக்கைகளை வெளியிடும் நூதனமும், வலியும், சீற்றமும், கேலியும் விட்டுவிலகுதலும் கவிதையைக் கொண்டு வந்து விடுகின்றன. இவை மிக நீண்ட உரைநடை விவரணமாக இருப்பினும் அத்தனைமையைப் பெற்று அதுவே தர்க்கப்படுத்தலுக்கான சமீபமாகவும் ஆகின்றன.

விளக்கங்களுக்கும், பொழிப்புரைக்கும் உட்படாத தன்மைகள் இங்கிருந்தே ஆரம்பிக்கின்றன. யவனிகாவின் தனிப்பட்ட எழுத்தின் சேர்மானமிது.

சொற்கள் உறங்கும் நூலகம் தலைப்புக்கான குறியீட்டமையில் மொழியைப் பிரயோகமற்றதாக்கும் நிலையில் விடுபடல் என்பதை மௌனத்திற்கு நகர்த்துபவையாகின்றது. அழகியில் எனும் சொல் புனைவிலக்கியத்தில் நெறியை, முறையை வகுத்த ஆளுமைத்தனம் என்று விளங்கிக்கொள்கிறபோது, அவை அழகற்றவை என ஒதுக்கிவைத்ததின் மௌனங்கள் பேசுபடுபொருளாகின்றது. புனைவு இலக்கியத்தின் ரசவுணர்ச்சி இருப்பு, மற்றும் செய்தொழில் நேர்த்தியுடன் உறவுடையதாக அழகியலுக்கு நெருக்கமாக்கப்படுகிற பொழுத அவை வாழ்வின் வரலாறின், அரசியலின், அதிகாரத்தின் இருப்பினை பாதர நசுக்கலாக உருவு காட்டுகிறது என்பதை மறுக்க முடியாது. எனவே அழகியல் அதிகாரத்தின் பகுதியாகிறபோது அது பிறவற்றை, பிறவற்றின் இருப்பை மறுக்கிறது என்றுமாகிறது. அழக்ற்றவை என்பதை இருப்பின் அழகியலாக பேசப்படுகிறபோதுதான் அது மைத்துடனான சமராகவும் உரையாடலாகவும் அசைப்பாகவும் மாறுகிற சாத்தியம் பெறுகிறது. எனவே இருபபறறவை, முறையற்றவை, நெறியற்றவை, பிறழ்வானவை, தகுதியற்றவை என கருதப்பட்டவை அனைத்தும் தமிதிருப்பின் அடையாளத்துடன் அடிப்படை அறத்துடன் தம்மை முன்வைக்கும்போது நிலைநாட்டப்பட்டிருந்த அடையாளம் கேள்விக்குள்ளாகிறான். தலைகீழாககின்றன. இங்கு, ஓரினப்பாலுறவின் ஈர்ப்பும், தகைப்பும் வெற்று தொழிறகூடத்தில் ஆண்களின் தொடுகை, தழுவலை, முக்கத்தைப் பேசுகின்றது. இவ்வகையில் அழகியலின் இருபபு மையத்துவத்தின் ஆளுகையாக, எதிர் இருப்பின மீதான வன்முறையாக உணரப்பட்டபொழுது எல்லாவற்றின் இருப்பையும் பேசப்படக்கூடியதாக அழகியல் என்ற சொல்லை அவரவருக்கான அழகியலாக, நிறுவப்பட்ட பிரக்ஞையின் உடைப்பாக யவனிகா கவிதைகள் உருக்கொள்கிறது. தனக்கு இணக்கமான பிறவற்றை வடிவமைப்பது முதலாளிய அரசியல் சமூகத்தின் முதல்படி நிலையாகக் கொண்டால் அவை தந்தையாதிக்க கட்டுமானத்தின் விளைபொருளேயன்றி வேறல்ல. பெண்ணைப் பத்தினியாகவும், கன்னியமையாகவும், பதுமையாகவும், தியாக ரூபமாகவும் உருவாக்கி நிறுத்தி பூரிப்பு களிப்பைச் சாத்தியது தந்தையாதிக்க அரசியல் மூளை. உள்ளழிந்துபோன அவளின் சுயமார்ந்த விடுதலையுணர்வின் மீதான சதா சந்தேக ஆண்மனநிலைக்குப் பக்கத்தில் அவள் இன்னும் அலங்காரப் பொருளாக அமர்த்தப்படும். அமர்ந்துகொள்ளும் காட்சிப்பிண்ணனிக்கிடையில் சகியாது அவளைத் துரத்தப்பார்க்கிறது அவிழ்ந்த நூற்கண்டு.

இன்றைய அடைத்துத்தரப்பட்ட வெளி கதைகளற்ற உலகமாகிவிட்டது. வடிவமைப்பால் வன்முறையால் உருவான பிரதிகள் போதையும் மனநோயுமென தம்மை கதைகளாக்குவதற்கு யவனிகாவின் எழுத்துமுறை இடம் தருகிறது. அவை மனுயிரியின் இயற்கைப் புலன்களை மீண்டும் அனைத்தின் மீது மோதி, அழிந்து அழிந்து எதையும் நுகரும் இச்சையில்லாது கணங்குவதை அப்பட்டப்படுத்துகிறது. இத்தகு இடத்தில் அழாத குழந்தையை வடிவமைக்கும் அறிவுப்பிரதியாளனின் தருணம் முன்பு திறக்கப்பட வேண்டிய மனநோய் விடுதிகளும், விலங்குப் பண்ணைகளும் எச்சரிக்கை மணிகளற்று தேவையின் அறத்தை மட்டுமே பேசுகின்றது. இவ்வறம் அறிவியலுலகு கற்பிக்கும் இன்மை வெளியின் முன் தன் மௌனத்தையே முகமாக்கி நிற்பதாகிறது. எனினும் கதைகளை உருவாக்கும் உலகமானது புத்த பிரக்ஞையும், சுவைத்துத் தெளியும் காந்தப்புலன்களும், இசைதரும் நீர்க்கிண்ணங்களாக உடலைக் களிக்கின்றன. கடலாகிக் கணக்கும் உடலை விள்ள முடியாத பெருமூச்சுடன் கரையில் கலக்கும் புணர்ச்சிவெளியும் கூடி வருகின்றது. இவ்வெளியில் உடலின் பல்வேறு பனுவலாக்கத்திற்கான உடல்களாகவும் நுழைந்து வெளியேறுகிறாள். அவ்வுடல்களுக்கான தீர்வுகள் இறந்துபடும் நிலையில் கவிஞனொருவன் அவள் யோனியை பூவாக நினைவு கூர்ந்தலைகிறான். இதற்கு கொலாஜ் ஆக ஒரு வரியை இணைத்தால் வாசிப்புச் சுழலுக்கு உதவக்கூடும். அவ்வதி இயல்பில் உருவான உடலை அறிவால் துன்புறுத்தாதே?

பிரிது பிரிதொன்றென தொடர்ந்து உரையாடும் இக்கவிதைகள், உடலிக்ககாட்டி இறுக்கமான வாழ்விலிருக்குள்ள முரண்நிலைகள் அடையாளங்கள் கருதிச் சோற்று எதைக் கண்டடைவது எனும் தகிப்பை கொண்டுள்ளது போலவே, ஆண்மை, பெண்மை என்ற அலாதி கட்டமைப்புப் போதையை விளையாட்டாகவும் ஆண்மையையைக் கீழிறக்கும் கருவியாகவும் மாற்றிவிடுகின்றன. இவ்வோட்டத்திலேயே உறக்கத்திற்கும் விழிப்பிற்குமான இடையில் உள்ள தெளிவற்ற உணர்வுகளாக மாற்றமாக்கிக் கொண்டிருப்பதை அனுபவிக்கும் புயற்றி கவிதையின உள்ளுறையில் மடிந்தும் ஒடிந்தும் சென்றபடியிருக்கின்றன.

யவனிகாவின் கவிதைகள் காட்சிப்பின்னல்களை உள்ளடக்கிய அளவிலும், இவை மொழிவளவிலான செயல்பாட்டுநிலைகள் ஓர்மைக்கான தடிப்பிணைகளைக் குலைந்து நழுவி, பன்மைக்கான தொடர்பை உறுதி செய்வதிலுமாக விளங்குகின்றன. கொண்டிகட்டி பொருள் விளைவுகள் ரசனைகளைத் தவிர்த்து ஓர்மையிலிருந்து விலகி கீழ்மையின் அழகியலைவைப்போம் அரசியல் தொகுப்பாகின்றன. இவை உலைவாரங்களின் வன்முறைக் காட்சிகளில் நகர்ந்து கழிவிரக்கத்தை விதைக்காமல் நமது புலன்களை பொம்மையாக இறைச்சியாக ஒப்புக்கொடுத்திருப்பதன் மேல் பேரிடியாக விழதிருவுளம் கொண்டவை. இத்தன்மையில், நிலைநாட்டப்பட்ட ஆழங்களே அதிகாரத்தின் தோற்றுருவாக இருக்க அதனோடு சமரிட்டபடியே விளிம்புகள் உருமாறிக் கொண்டிருக்கின்றன என்பதும் இந்த உருமாறுதல் இருப்பை வாழுதலை தேவையை என்று வலியோடுதான் வைக்கின்றன என்றாலும் அந்த அலவுகள் அதை சமருக்கான நிகழ்தகவு ஆக்குகிறது என்பதும் இங்கு இணைக்கோடுகள் நிரு பூத்த நெருப்பாய்ச் சுட்டப்படுகின்றன. யதார்த்தத்தில் புறவுலகு என்ற வாய்ப்புலக்குக்குள் ரகசிய வேட்கையாக, உடல் விடுதலையின் அந்தரங்கமாக, உயிரி எனும் அடிப்படையில் அதன் கொண்டாட்டங்களுமாக ஒரு உலகம் புதைந்திருப்பதே யவனிகா ஸ்ரீராமின் மூலக்கூறுகளில் ஒன்றாக இருக்கிறது. அவை வேற்றுநிலத்தின் மன உடல்களைக் கொண்டிருந்தாலும் அவ்வுலகம் இல்லையெனவாக உரையாடுவதற்கு போதுமான நெருக்கங்களும் பாய்ச்சல்களும் நிகழ்ந்துள்ளன என்பதைவிட விளிம்புகளுக்கு அவை வெகு விரைவாக இணைக்கப்படும் உலகம் என்றும் சொல்லலாம். அர்ப்பிக்கப்பட்ட வன்முறையை உருக்குலைக்கும் கீழ்மைகளின் ஆட்டமாகவும், கற்பிக்கப்பட்ட வன்முறையால் திரிதல் அடைந்து கோரங்களும், ஒரு நகர்வினால் கட்டாய நகர்த்தியினால் மாற்றிடத்தில் உண்டாகும் இறுக்கமும், உடைவும், பின்னலும், சமரும், இயக்க இயங்குவிசையின் அடிப்படையில் கவிதைக்கான மூலங்களுடன் சேர்கின்றன. அவை காட்சிகளில் அலைவரிசையை, மூழ்கடிக்கப்பட்ட மறதியாக்கப்பட்ட அலைவரிசைகளிலிருந்துள ஊடுருவிப் பிடிப்பதன் மூலம் தணித்த இருப்பை அடையும் கவிதைகளாக பயணங்கள் செல்லுகின்றன. இவை அனைத்தையும் ஊடுழைக்கும் தன்மையில் யதார்த்தங்களை புலனுருக்கும் அதீத செயல்பாடாக மீயதார்த்தத்தை அடைகின்றன. இதனளவில் வஞ்சிக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட உடல் மனத்தின் மூழ்க்கையாக, வசவுகளாக அவை நம்மோடு மிக இயல்பாக உரையாடுகின்றன. கனவுகளும் மொழிவழிச் சிதைவுகளும், வன்முறைப் பதிவுகளும் உளவியலின் அடியாழத்துத் தன்மைகளுமாகச் சேகரிப்பதற்கு மனவழி மற்றும் உடல்வழிக்கூறையும் கூடுதலாகத் தேவைப்படுகிறது. இத்தன்மை தத்துவ காலுறையிலிருந்தும், பௌதீக பட்டை யதார்த்தத்திலிருந்தும் சுய அனுபவத்தின் மோகிப்பை முற்றாகத் துறந்து கொள்வதற்கு சித்தமானவை என்பதுதான நவீனத்திலிருந்து பின் நவீன பின்காலனிய நிலை, தன்மையை உள்வாங்கியதற்குமானது என்று சொல்லலாம். எனவே கவிதையை அரசியல்மயமாக்குதல், உரைநடைத்தன்மை, பேசாப்பொருள், எதிர் கவிதை, காவியக்க. கவுந்தை எழுத்துகள் எனப்பல அலகாக இவ்வெழுத்துக்கள் அடையாளப்படுகின்றன. இதனுள் நேர்க்கோடற்ற காட்சிகளின் தொகுமண்டலமும் ஓர்மையைச சொல்ல முயலும் பாவனையில் பல துணைபாடல்களும் பொய் போன்ற உண்மை என்ற இருமையழிந்த நிகழ்வுகளும் யவனிகாவிடம் கிடைக்கக் கூடியவையாகின்றன. யவனிகாவின் தனித்த மொழியுருவிற்கு பெரும்பங்கு

வகித்திருப்பவை பயணங்களும் வலிகளும் பல்வேறு வாசிப்புகளும். இது தனித்த நடைக்கான வேறுபடல் மட்டுமல்லாது பேசுபடுபொருளின் தகைப்பிற்குமான இடத்தை வழங்கியிருக்க வேண்டும். இவை இருப்பின் மீது விமர்சனம் கொண்டவர்களுக்கு ஏற்பானது.

மொழியின் அதிகாரத்தைக் குலைப்பதிலிருந்து எதையும் விளக்காமல் புதிய கண்டுபிடிப்புகளை மொழியின் தேட்டம் கொண்டும் வசவுகளாலும், கேளிக்கைகளாலும், உடலுணர்வை உணர்வதாலும் புனைவைக் காட்டுபவையாக அமைவது நவீனத்துவத்திற்கு பின்பான விளிம்புநிலைக் கவிதைகள் என்றால் இத்தடத்தைக் கொண்டும் அழித்தும் செல்பவை யவனிகாவின் பார்வையிலமைந்த எழுத்துக்கள் எனவே அவசியமற்றும் நடித்துக்கொண்டிருக்கும் பிறழ்நிலைகளைக் காட்டிக்கொடுக்காமல் கொண்டாடும் தன்மையுமிங்கு உண்டு.

குற்றவுணர்ச்சிகள் மனத்தடைகள் இவற்றின் மீது வெட்கமும் பயமும் கழிவிரக்கமுமில்லாது பாதிக்கத் தூண்டுபவை. எந்நேரமும் இவை தர்க்கத்திற்கும் அதர்க்கத்திற்குமான விள(ல)க்கத்தைக் கொண்டவை. இதுவரையிலான மனிதயிருப்பை அதனுட்கூறுகளின் கட்டமைப்பைக் கொண்டு உலகப்பிரபஞ்சத்தை தத்துவப்படுத்தும் முயற்சியிலிருந்து மாறுபட்ட புனைவுகளைக் கொண்டவை. எனவே இவை ஒவ்வொரு வரியிலும் திறந்தநிலைக்கொண்டு அமைபவையாகவும் இருக்கின்றன. நுண்விளக்கத்திற்கான அறிவியலுடன் கூடியது. இங்கிருந்து மனியக்கமும் எதையும் உறுதிப்படுத்த தேவையில்லாத மொழியியக்கமும் யவனிகாவிற்கான தனித்த நடையை வழங்கியிருக்கிறது.

இசபெல் அலெண்டே கதைகள் தமிழில் விஜயராகவன்



தேரையின் வாய்

தென்பகுதியில் காலம் மிகவும், கடினமானதாக இருந்தது. இது இந்த நாட்டின் தென்பகுதியல்ல. உலகத்தின் தென்பகுதி. இங்கு பருவகாலங்கள் மாறியதாகவும், நாகரீக நாடுகளில் வருவது போல் குளிர்காலம் கிறுஸ்துமஸ் காலத்தில் வராமல், மிலேச்ச பிரதேசங்களில் வருவது போல் வருடத்தின் நடுவில் வந்தது. பாறைகளும், நாணலும், பனியாலும் ஆன கணக்கற்ற சமவெளிகள், டியாரா டெல் பியூகோ அருகில், மணி மணியாக பிரிந்து தீவுக் கூட்டங்களாகியது. தூரத்து தொடுவானில் கார்டிலேரா மலைத்தொடரின் பனி மூடிய சிகரங்கள், காலம் தொடங்கிய பொழுதிலிருந்து நிலவிய அமைதி அவ்வப்பொழுது, பனிக்கட்டி

அலைகள், கடலில் நொறுங்கி விழும் போது ஏற்படும் சப்தத்தால் தடைப்படும். இந்த கடினமான நிலப்பரப்பில் முரட்டுத்தனமான மனிதர்கள் வசித்தார்கள். இந்த நூற்றாண்டின் ஆரம்பமுதல் இங்கு கரண்டுவதற்கு ஒன்றுமில்லாததால் ஆங்கிலேயர்கள், ஆடு வளர்ப்பதற்கு அனுமதி பெற்றார்கள். சில வருடங்களிலேயே ஆடுகள் பல்கி பெருகி, தொலைவில் இருந்து பார்ப்பதற்கு தரையில் தவழும் மேகக்கூட்டங்கள் போல காணப்பட்டன. இவை எல்லா தாவரங்களையும் தின்று, சுதேசி கலாச்சாரத்தையும் காலால் மிதித்து துவைத்தெடுத்தது.

இந்த இடத்திலேதான் ஹெர்மலிண்டா தன்னுடைய விநோத விளையாட்டுகளை விளையாடி பிழைப்பு நடத்தி வந்தாள்.

ஆடு வளர்ப்பவர்களின் தூய்ய தலைமை அலுவலகம், விளைச்சலற்ற வரண்ட சமவெளியின் நடுவில் சாப்பிட மறந்த கேக் போல அமைந்திருந்தது. இந்த கட்டிடம் அபத்தமான புல்வெளியில் சூழப்பட்டு, கண்காணிப்பாளரின் மனைவியால் பராமரிக்கப்பட்டு வந்தது. இந்தப் பெண்மணி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு வெளியே வாழும் வாழ்க்கைக்கு அனுசரிக்க முடியாமல், இப்பொழுதும் தன் கணவருடன் சாப்பிடும் இரவு உணவிற்காக, பிரத்யேக உடை உடுத்தும் பழக்கமுள்ளவளாக இருந்தாள். இவளது கணவரான மந்த குணமுள்ள கனவான், ஆங்கிலேய பழம்பஞ்சாங்க சம்பிரதாயங்களில் ஊறியவராக இருந்தார். ஸ்பானிஷ் மொழி பேசும் சுதேசி ஆடு மேய்ப்பவர்கள், ஆங்கிலேய முதலாளிகளிடமிருந்து, தனித்து முகாம்களில் வசித்தார்கள். இருவரது குடியிருப்புகளுக்கு இடையே முள் வேலிகளும், காட்டு ரோகா செடிகளும் வளர்க்கப்பட்டு புதர்களை மறைத்து ஒரு அமைதியான ஆங்கிலேய நாட்டுப்புற தோற்றத்தை வெளி பார்வைகது அளிக்க முற்பட்டு, முடியாமல் ஒரு மாயையை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

நிர்வாகத்தின் காவலர்களால் கண்காணிக்கப்பட்டும், குளிரின் கொடுமையால் அவதிப்பட்டு வந்த ஆடு மேய்க்கும் தொழிலாளிகள் சூடாக சூப் குடித்துக்கூட பல மாதங்கள் ஆகியிருந்தது. ஆடு மேய்ப்பவர்கள் வறுமையில் உழன்று, மேய்க்கும் ஆடுகளைப் போலவே கவனிக்கப்படாமல், அசட்டை பீஷீசெய்யப்பட்டனர். மாலை நேரங்களில் யாராவது ஒரு மேய்ப்பர் தனது இட்டாரை எடுத்து உணர்ச்சிபூர்வமான பாடல்களால் அவ்விடத்தை இசையால் நிரப்புவார். சமையல் காரன் போட்ட அதிகப்படி உப்பால் கூட ஆடுமேய்ப்பவர்களின் நினைவுகளும் உடற்சூடும் ஆறுவதில்லை. காமப்பசியால் வாடி தாங்கள் மேய்க்கும் ஆடுகளுடனேயே கிடந்தார்கள். கடற்கரைக்கு சென்று சீல் மிருகத்தை வேட்டையாடினால் அதனுடன் கூட படுப்பார்கள். ஏனெனில், சீல், பூலூட்டி சீராட்டும் தாயின் முலைக்காம்பு போல பெரிய காம்புகளை, கொண்டதாகும். அவர்கள் உயிருள்ள சீலின் தோலை உரித்து, துடித்துக் கொண்டிருக்கும் சதைப்பிண்டத்தை காமப்பசி கொண்ட ஒருவன் அணைத்துக்கொண்டால் உயிர் துடிப்புள்ள ஒரு பெண்ணை அணைவது போல கற்பனை செய்து கொள்ள முடியும். இத்தனை தடைகளையும் மீறி தொழிலாளர்கள் தங்கள் முதலாளிகளை விட ஹெர்மலிண்டாவின் முறை தவறிய விளையாட்டுகளில், சந்தோஷமாக இருந்தார்கள்.

முயல் வேட்டையாடும், கண்காணிப்பாளரின் ஆஸ்தி மனைவியை தவிர்த்து, இந்த நிலப்பரப்பின் இளமையான பெண் ஹெர்மலிண்டா ஒருத்திதான். ஆங்கிலேய சீமாட்டி முயல் வேட்டையாட இரட்டை குழல் துப்பாக்கியுடனும் தன்னுடைய வேட்டை நாய்கள் சகிதமும் வரும்போது எல்லோரும் சீமாட்டியின் மூடியிட்ட தொப்பியை மட்டுமே பார்க்க முடியும். ஆனால் ஹெர்மலிண்டாவை பொறுத்த மட்டில், கேளிக்கைக்கு ஏங்கும் மனதும், உடல் முடிக்க சூடான ரத்தம் ஓடும் மாதுவாகவும் கொள்ள முடியும். அவள் மனிதர்களை இகழ்படுத்தும் இந்த தொழிலில் இருப்பதற்கு முக்காரணம் அவளால் எல்லோரையும் விரும்ப முடிந்ததுதான். அதிலும் பலரை முக்கியமாக பிடித்ததுதான். ஆண்களின் முன் அவள் ஒரு ராணித் தேனீப் போல இருந்தாள். தொழிலாளர்களின் ஆசையையும், அவர்களின் வாடையையும், முரட்டு தாடிகளையும் மனிக்கப்படாத தாடைகளையும், சக்தி மிகுந்த உடல்களையும், கலவை பிடிக்கும் தனங்களையும், மாறாத உள்ளங்களையும் அவள் காதலித்தாள்.

அவள் தன் வாடிக்கையாளர்களின் மாயையான பலத்தையும் மிகுந்த பலவீனத்தையும் அறிந்து வைத்திருந்தாலும், அதனை தன்னுடைய அனுகூலமாக எப்போதும் மாற்றிக் கொண்டதில்லை. மாறாக பலத்தையும், பலவீனத்தையும் உணர்ந்து நெகிழ்ச்சி கொள்வாள்.

அவளுடைய கலகலப்பான சுபாவத்தில் தாயன்பும் லேசாக கலந்திருக்கும். பல இரவுகளில் அவள் தொழிலாளர்களின் கிழிந்த சட்டைகளை தைத்துக் கொடுத்தும், உடல் நலமற்ற தொழிலாளிகளுக்கு கோழிச்சாறு வைத்துக் கொடுத்தும், மேலும் தூரதேசத்தில் உள்ள காதலிகளுக்கு காதல் கடிதங்கள் எழுதிக் கொடுத்துக் கொண்டும், இருப்பாள். ஒழுகும் துத்நாக தகடு வேய்ந்த, காற்றடித்தால் உளையும் ஊறுதலையும் ஒலிக்கும் கூரைக்கு கீழே கம்பளி பொதித்த படுக்கையில் படுத்து அவள் தன் சம்பாத்தியத்தை பெற்று வந்தாள். ஹெர்மலிண்டாவின் தேகம் உறுதியாகவும், சருமம், மாசு மறு வற்றுமிருந்தது. மிரண்ட பெண் ஆட்டை விடவும், தோலுக்கரிக்கப்பட்ட சிலை விடவும் உறுதியாகவும், பலமான சிரிப்பும், மனோதிடமும் மிகுந்த சரியான கட்டை. எந்த சிறிய அணைப்பாக இருந்தாலும், அதில் தான் ஒரு விளையாட்டுதனம் மிகுந்த விருப்பமுள்ள நண்பி என்பதை உணர்த்துவாள். அவளுடைய தொங்காத முலைகளைப் பற்றியும், குதிரை ஏற்றக்காரியின் தொடைகளைப் பற்றியும் சுற்றுவட்டார அறுநூறு கிலோமீட்டர் தூரத்திற்கும் பரவி அவளுடன் பொழுதைக் கழிக்க பலர் வெகு தூரத்திலிருந்து வரலானார்கள். வெள்ளிக்கிழமைகளில், குதிரை வீரர்கள் நாலு கால் பாய்ச்சலில் வெகு தொலைவிலிருந்து குதிரைவாயில் நுரை ததும்ப வந்தவண்ணமிருந்தனர்.

ஆங்கிலேய நிர்வாகிகள், மது விலக்கை அமல் செய்து யாரும் மது அருந்த விடாமல் செய்தார்கள். ஆனால் ஹெர்மலிண்டா தானே காய்ச்சிய கள்ள சாராயத்தால் தனது வாடிக்கையாளர்களின் உற்சாகத்தை உயர்த்தியும் அவர்களின் ஈரல் குலைகளை கெடுத்தும் வந்தாள். மேலும் இந்த மதுவானது கேளிக்கை நேரத்தில் விளக்கெரிப்பதற்கும் உபயோகமானது. மூன்றாவது முறையாக மது உள்ளே போனபின்பு பணையம் வைக்கும் பந்தயம் ஆரம்பமாகும். இப்போது வாடிக்கையாளர்களுக்கு பார்வை மங்கும், புத்தி மழுங்கும்.

ஹெர்மலிண்டா உறுதியான ஆதாயம் பெறும் வழிமுறையை, மற்றவர்களை ஏமாற்றாமலும் உருவாக்கியிருந்தாள். சீட்டு விளையாட்டு மற்றும் தாய விளையாட்டு மட்டுமல்லாமல் வேறு பல விளையாட்டுகளையும் விளையாடி வெற்றி பெற்றால் அவளையே பரிசாக அடைய முடியும். தோற்றவர்கள் அவளிடம் பணத்தை கொடுப்பதைப் போலவே ஜெயித்தவனும் பணத்தை அவளிடம் கொடுப்பான். ஆனால் அவன் ஜெயித்த காரணத்தால் ஹெர்மலிண்டாவுடன் சிறிது நேரம் கழிக்க முடியும். எந்தவித ஆரம்ப முகாந்திரமில்லாமல் நேரடியாக, ஏனெனில் அவளுக்கு ஒவ்வொருவரையும் தனி கவனம் செலுத்த நேரமில்லாததால்தான். குருட்டு சேவல் என்ற விளையாட்டில் பங்கேற்கும் வீரர்கள் தங்களின் கால் சராயங்களை கழற்றி விடுவார்கள். ஆனால் தங்களின் தொப்பிகளையும் ஆட்டுத்தோல் பூட்ஸ்களையும் மேலங்கிகளையும் கழற்றாமல், அண்டார்ட்டிக் குளிர்காற்றிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள் ஹெர்மலிண்டா அவர்களின் கண்களை கட்டிய பின் தேடுதல் வேட்டை ஆரம்பமாகும். சிலநேரத்தில் இவ்விளையாட்டின் மூலம் ஏற்படுத்தும் சத்தமும், சச்சரவும், முழக்கமும், இரவின் அமைதியை கெடுத்து அடுத்து குடியிருக்கும். இரவின் கடைசிக் சிலோன் டீ குடிக்கும் உணர்ச்சியற்ற ஆங்கிலேய தம்பதிகளின் காதுகள் வரை சென்று நாரசமாக ஒலிக்கும். ஆனால் அவர்களோ இந்த சத்தத்தை கேட்காதது போலவும், புல் புதர்களில் காற்று ஏற்படுத்தும் சத்தம் எனவும் பாவித்துக் கொள்வார்கள். ஹெர்மலிண்டாவை முதலில் பிடிக்கும் விளையாட்டு வீரன் அவளை அணைத்துக் கொண்டு வெற்றி முழக்கத்தை எக்காளமிடுவான்.

ஊசல் விளையாட்டு என்பது மற்றொரு ஆட்டமாகும். இவ்விளையாட்டில் ஹெர்மலிண்டா கூரையிலிருந்து தொங்கவிடப்பட்ட பலகையின் இரு புறமும் கால்களை தொங்கவிட்டு அமர்ந்திருப்பாள். அவளுக்குக் கீழே வரிசையாக வரும் வீரர்களின் பசித்த பார்வைகளுக்கு தன்னுடைய இரு கால்களையும் விரித்து, தனது

பஞ்சள் நிற பாவாடை களுக்கு உள் வேறு எந்த உடுப்பையும் அணியவில்லை என்பதை காட்டுவாள். கலந்து கொள்ளும் எல்லா விளையாட்டு வீரர்களுக்கும் அவளை அடைய ஒரு வாய்ப்பு கொடுக்கப்படும். எவனொருவன் இந்த அழகியின் தொடைகளுக்கு இடையே சிக்கி தழுவப்படுகிறானோ அவன் பாவாடை களின் இடையே அகப்பட்டு உயரே தூக்கப்படுகிறான். எலும்பு நொறுங்கும்படி சிக்கி, உயரே தூக்கப்பட்ட பலரில் வெகு சிலரே இலக்கை அடைந்துள்ளார்கள். பலரும் தரையில் உருண்டு தங்களின் நண்பர்களின் எள்ளலுக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

தேரையின் வாய் என்கிற விளையாட்டின் மூலம் ஒரு மனிதன் தனது ஒரு மாத சம்பாத்தியத்தை பதினைந்து நிமிடத்தில் இழக்கக் கூடும். ஹெர்மலிண்டா சாக்கு கட்டியால் கோடிழுத்து நான்கு தப்படிகள் தள்ளி ஒரு பெரிய வட்டமிட்டு, அவ்வட்டத்தில் அவள் மல்லாந்து படுத்துக் கொண்டு தனது முட்டிகளை அகல விரித்துக் கொண்டு, தனது உடலின் கீழ் மற்றும் நடுபாகத்தை உரித்த பழத்தைப் போல் காட்டுவாள். அறையின் மனநிலை பாரமாகவும் சூடாகவும் ஆகும்போது அவளது உறுப்பு தேரையின் வாயைப் போல சிரிக்கும். விளையாட்டு வீரர்கள் சாக்கு கோட்டுக்கு பின் நின்று குனிந்து தங்களது இலக்கு நோக்கி காசுகளை வீசுவர். இதில் சிலர் மிருகங்களை கவண் கற்கள் மூலம் எறிந்து பிடிப்பதில் வல்லவர்கள். ஆனால் ஹெர்மலிண்டா ஒரு நழுவலான நெளிதல் மூலம் தனது உடலை அசைப்பதன் மூலம் இலக்கிய காசு வீசுவதை தவிர்த்துவிடுவாள். அந்த சாக்கு வட்டத்துக்குள் விழும் காசுகள் அனைத்தும் அவளையே சாரும். எந்த வீரனின் காசு, சொர்க்கத்தின் வாசலுக்குள் விழுகிறதோ, அவனுக்கு சுல்தானின் புதையல் காத்திருக்கிறது. இரண்டு மணி நேரம் அவருடன் தனிமையில் துல்லியமான இன்ப வெள்ளத்தில் உறவாட உறவாட கிடைக்கும். இதனால் அவனின் இறந்த கால தேவைகளும், சொர்க்கலோக இன்பத்தின் கனவுகளும் அப்பொழுது நனவாகும். அனுபவப்பட்ட பலர் சொல்லியிருக்கிறார்கள். ஹெர்மலிண்டா தனது புராதன காமக் கலை ரகசியங்கள் மூலம் ஒரு மனிதனை சாவின் விளிம்பிற்கே கூட்டி சென்று விட்டு, மறுபடியும் உயிர்ப்பித்து அவனை ஞானியாக்குவாள் என்று பாப்லோ என்ற ஆஸ்ட்ரிய நாட்டான் வந்த நாளிற்கு முதலில் வெகு சிலரே இந்த சொர்க்கமயமான இருமணி நேரத்தை ஹெர்மலிண்டாவுடன் கழித்திருக்கிறார்கள். ஆனால் இவர்கள் செலவழித்தது சில காசுகள் அல்ல மாதத்தின் பாதி சம்பளமாகக் கூட இருக்கும். இதனால் இவள் நல்ல செல்வத்தை சேர்த்து வைத்திருந்தாள். ஆனாலும் கூட அவளுக்கு இத்தொழிலை விட்டு விட்டு லௌகீக வாழ்க்கைக்கு வரும் எண்ணம் துளி கூட வரவில்லை. உண்மையிலேயே அவள் தனது வேலையின் மூலம் மிகுந்த சந்தோஷத்தையும் இவள் சேவிப்பவர்களுக்கு கிடைத்த இன்பத்தினால் பெருமையும் அடைந்திருந்தாள்.

இந்த பாப்லோ என்கின்ற ஆஸ்ட்ரிய நாட்டான் பறவை போன்ற எலும்பமைப்பும், குழந்தையின் கைகளை ஒத்த அமைப்பையும் பெற்ற ஒல்லியான மனிதன். அவனது ஒல்லியான உடலமைப்புக்கும் சம்பந்தமே இல்லாத பிரமாண்டமான உறுதியையும் உடையவனாவான். கலகலப்புக்கும், ஐஸ்வர்யத்திற்கும் பெயர் போன ஹெர்மலிண்டாவுடன் இவன் நிற்கும் போது சிடுசிடுப்பான சேவையைப் போல காட்சியளித்தான். ஆனால் இவனது உருவத்தைப் பார்த்து கிண்டலும் கேலியும் செய்துவிடலாம் என நினைப்பவர்கள் எதிர்பாராத அவஸ்தையான ஆச்சரியம் அடைவார்கள். இந்த சிறிய அன்னிய நாட்டான் கட்டுவிரியன் பாம்பு போல் முதல் சீண்டலிலேயே சீறி பாய்வான். சச்சரவும் மற்றும் கை கலப்பும் ஆரம்பிக்கும் முன்னரே ஹெர்மலிண்டாவினால் தடுக்கப்படும். ஏனெனில் அவளது கூரையில் கீழ் யாரும் சண்டையிடக் கூடாது என்பது முதல் சட்டமாகும். பாப்லோவின் கௌரவத்திற்கு பங்கமில்லாதிருக்கும் பட்சத்தில் அமைதி கொள்வான். அவன் அதிகம் பேசாமலும், பேசும் போது தனது ஐரோப்பிய உச்சரிப்பை வெளிப்படுத்தியும், உறுதியான மற்றும் துக்ககரமான பாகுபாடு உடையவன். இவன் போலீசிடமிருந்து தப்பி ஐரோப்பியிலிருந்து ஓடி வந்தவன் தனது பிழைப்பிற்காக குறுகலான ஆண்டிஸ் கணவாய்களால் கள்ள கடத்தல் தொழில் நடத்தி வந்தான்.

இவனை அறிந்தவர்கள், அவன் ஒரு சிடுசிடுப்பான சண்டைக் கோழியென்றும், தனிமை விரும்பியென்றும், தட்பவெப்பத்தையும், ஆடுகளையும், அதன் முதலாளிகளான ஆங்கிலேயர்களையும் நக்கல் செய்யும் குணமுடையவன் என்பர். அவனுக்கென்று வீடோ, காதலிகளோ, கடமைகளோ ஏதும் கிடையாது. ஆனால் நாளாக நாளாக வயதேற, தனிமை அவனின் எலும்பையும் ஊடுருவியது. சில சமயம் குளிரான விடியற்காலையில் கருப்பு கம்பளி தொப்பியும், குதிரை சேணத் தலையணையிலிருந்து எழும் போது உடல் முழுக்க வலிக்கும். இந்த வலி உடல் வலியல்ல குவிந்த துயரத்தாலும், தனிமைப்படுத்தப்பட்டதாலும் ஏற்பட்ட வலியேதான். அவன் தனி ஓநாயாக வாழும் வாழ்க்கை சோர்வை அளித்தது. ஆனாலும் அவன் சராசரி வாழ்க்கைக்கு தயாரில்லை அவன் தெற்கு நோக்கி வந்ததே தான் கேள்விப்பட்ட வதந்தியினால்தான். யாரோ ஒரு பெண், காற்றின் திசையையே மாற்றும் திறன் பெற்றவள் என்றும் அவள் யார் என்று தன் கண்களால் பார்ப்பதற்காகவே வந்திருக்கிறான். பாதையின் ஆபத்துகளும், வெகு தொலைவும் அவனது மன உறுதியை சற்றும் குலைக்கவில்லை. கடைசியாக ஹெர்மலிண்டாவின் ஜாகையில், அவளை கை தொடும் தூரத்தில் பார்த்த பிறகு, அவளும் இவனைப் போலவே இரும்பை ஒத்த உறுதியை உடையவள் என்பதை உணர்ந்தான்.

அவளைப் பார்த்தபிறகு இவ்வளவு தொலைதூரம் தேடி வந்த பிறகு, இப்பேர்ப்பட்டவள் இல்லாமல் வாடிப் போகும் வாழ்க்கை பிரயோஜனமற்றது என்ற முடிவுக்கு வந்தான். அவன் அந்த அறையின் மூலையில் அமர்ந்து, அவளையே உற்று நோக்கிக் கொண்டு தனது வாய்ப்பிற்காக காத்திருந்தான்.

இந்த ஆஸ்ட்ரிய நாட்டான் இரும்பை ஒத்த வயிற்றை உடையவன். ஹெர்மலிண்டாவின் சாராயத்தை பல டம்ளர்கள் குடித்த பின்பும், அவனது கண்கள் தெளிவாக இருந்தது. அவன் வேறு எந்த விளையாட்டிலும் அக்கரை செலுத்தாமல் தூய மைக்கேல் உலா அல்லது மேண்டான்டிருன் டிருன்-டான் போன்ற விளையாட்டுகளுக்காக உடையை கழற்றாமலும், முக்கியமான அந்திப் பொழுது விளையாட்டான தேரையின் வாய்க்காக காத்திருந்தான். விளையாடும் நேரம் வந்ததும், விளையாடுபவர்களின் கோஷத்துடன சாராய நாற்றத்தை உதறிவிட்டு, சாக்கு கோட்டு, வட்டத்திற்கு அருகில் வந்தாள். அவன் பார்வைக்கு ஹெர்மலிண்டா கவர்ச்சியாகவும், மூர்க்கமான புமா மிருகத்தையும் நினைவுப்படுத்தினாள். அவளது தோற்றம், இவனுள் இருக்கும் வேட்டைக்காரனின் வேட்கையையும், விவரிக்க இயலாத வலியையும், மாற்றி உள்ளத்தைக்கும், உறுத்தலான எதிர்பார்ப்பை உருவாக்கியது. அவளது பாதங்கள் தாழ்வான பூட்ஸ்களுக்குள் இருப்பதையும், பின்னப்பட்ட ஸ்டாக்கிங்குகள், முட்டிகளுக்கு கீழே சுருட்டப்பட்டு கிடப்பதையும், நீண்ட எலும்புகள் கொண்ட திரட்சியான சதையால் ஆன தங்க நிற தொடைகளையும், சூழ்ந்து இருந்த பாவாடைகளையும் அவன் தரிசித்தான். ஒரே ஒரு வாய்ப்புதான் வெல்வதற்கு என்பதையும் அறிவான்.

அவன் கத்தபோல் குத்தும் பார்வையால் ஹெர்மலிண்டாவை துளைத்துக் கொண்டு நன்றாக காலூன்றி நின்று நிலை கொண்டான். அவன் தீர்க்கமான பார்வையால் ஹெர்மலிண்டாவின் நெளியும் வித்தையை கைவிட வைத்தான். இப்படியில்லாமல் அவளே இவனை தேர்ந்தெடுத்துமிருக்கலாம். பாப்லோ கண்களை இடுக்கி, பெருமூச்சை வெளியேற்றினான். ஓரிரு வினாடிகள் கவனத்தை ஒருமுகப்படுத்திவிட்டு தனது காசை விட்டெறிந்தான். சரியான வீச்சில் சென்று காசு துல்லியமாக துவாரத்தில் விழுந்தது. பெருத்த கைத்தட்டல்களும், பொறாமை கொண்ட சீழ்க்கை ஒலியும் அந்த இடத்தை நிறைத்தது.

சாந்தமான நிதானத்துடன், இந்த கடத்தல்காரன் தனது கால் சராய்களை இழுத்து விட்டுக் கொண்டு மூன்று தப்படிகள் முன்னேறி, ஹெர்மலிண்டாவின் கைகளை பற்றி இழுத்து அவளை நிற்க வைத்தான். 2 மணி நேரம் அவனில்லாமல் ஹெர்மலிண்டாவால் இருக்க முடியாது என நிரூபிக்க போகிறவன் போல அவளை இழுத்துச் சென்றான்.

மற்றவர்கள் பானமருந்திக் கொண்டும் தங்களது கடிகாரங்களைப் பார்த்துக்

கொண்டிரு பகல் நேரம் முடிந்துவிட்டன என ஆவலுடன் காத்திருந்தார்கள். ஆனால் இருவரும் வெளியே வந்தபாடில்லை. மூன்று மணி நேரம், நான்கு மணி நேரம் முழு இரவும் முடிந்தது. பொழுதும் புலர்ந்தது. வேலைக்கு செல்லும் மணியும் அடித்தது. ஆனாலும் அறைக் கதவுகள் திறக்கப்படவேயில்லை.

மதியம் காதலர்கள் இருவரும் அறையை விட்டு வெளியே வந்தனர். பாப்லோ, யாரையும் லட்சியம் செய்யாமல் வெளியே சென்று தனது குதிரைக்கு சேணமிட்டு, ஹெர்மலிண்டா விற்கும் ஒரு குதிரையை தயார் செய்துவிட்டு, அவர்களுடைய அனைத்து பொருட்களையும் ஒரு கோவேறுக் கழுதை மேல் ஏற்றலானான். ஹெர்மலிண்டா குதிரை சவாரி செய்ய ஏதுவாக கால் சராயும், மேலங்கியும் அணிந்து, தனது காசுகள் அனைத்தையும் ஒரு கான்வாஸ் பையில் போட்டு அதை இடுப்பில் கட்டிக் கொண்டாள். அவளது மறக்க முடியாத பின் பாகம், ஒரு திருப்தியான அசைவை காட்டியது. அவளது கண்களில் ஒரு புதிய ஒளி தெரிந்தது. அமைதியாக அவர்கள் இருவரும் தங்களின் பொருட்களை கோவேறு கழுதை மேல் ஏற்றியபின் தொடர விட்டு, விட்டு குதிரையேறி சென்றார்கள். ஹெர்மலிண்டா, தனது நிராதரவான வாடிக்கையாளர்களுக்கு முகமன் கூறிவிட்டு, ஆஸ்ட்ரியனை பின் தொடர்ந்து பாழ்பட்ட சமவெளியை கடந்து சென்றவள், பின்பு திரும்பவேயில்லை.

ஹெர்மலிண்டாவின் வெளியேற்றத்தால் ஏற்பட்ட பாதிப்பு மிகப் பெரியது. இதனால் பாதிப்படைந்த தொழிலாளர்களை திருப்திப்படுத்த, ஆடு வளர்ப்போர் சங்கம் பல்வேறுபட்ட விளையாட்டுகளை ஏற்படுத்தி கொடுத்து ஊஞ்சல்கள், அம்பு விளையாட்டு போன்றவைகளும் மிகப் பெரிய பீங்கானால் ஆன வாய் திறந்த தேரை உருவத்தை லண்டனிலிருந்து இறக்குமதி செய்து ஆடு மேய்ப்பவர்கள் காசு வீசும் விளையாட்டை விளையாட முயற்சி செய்தது. ஆனால் தொழிலாளர்களின் பொதுவான அலட்சியத்தால், இந்த விளையாட்டு பொருட்கள் அனைத்தும் ஆடு வளர்ப்போர் சங்க கண்காணிப்பாளர் வீட்டு மாடியில் போய் சேர்ந்தன. மாலைக் கருக்கல் பொழுதில், ஏற்படும் சலிப்புத் தன்மையை போக்கிக் கொள்ள இந்த ஆங்கிலேய தம்பதிகள் விளையாட்டு பொருட்களை விளையாடி கழித்தார்கள்.



சிரித்துக்குளி மரியா என்ற பேதை மரியா

பேதை மரியா, காதலில் நம்பிக்கை வைத்திருந்தாள். அதுவே அவளை ஒரு வாழும் சகாப்தமாக ஆக்கியது. அவளது மரண சடங்கிற்கு அருகில் உள்ள அனைவரும் வந்திருந்தனர். பொட்டிக் கடையை விட்டு விலகாத கண் தெரியாத

மனிதனும், போலீஸ்காரனும் கூட வந்திருந்தனர். காலே ரிபப்ளிக்கா என்கின்ற அந்த பகுதியே வெறுமையாகவும், அவளது மரணத்திற்கான துக்க அனுஷ்டிப்பிற்காக வீட்டு பால்கனியிகளிலிருந்து கருப்பு ரிப்பன்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. வீடுகளில் சிதவப்பு விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன. அந்த பகுதியில் உள்ள அனைவருக்கும் சொல்வதற்கு ஏதோ ஒரு கதை இருந்தது. அங்கே ஏறக்குறைய எப்போதுமே, சோகமான வறுமையான கதைகளும், குளிக்கப்பட்ட அந்திகளும், எல்லாவிதமான கொடூரமான மூர்க்கங்களும் புழங்கிக் கொண்டிருந்தன. அங்கே வளர்வதற்கு முன்னரே இறக்கும் குழந்தைகளும் ஓடிப் போகும் காதலர்களும், சாதாரணம் ஆனால் மரியாவின் கதை வித்யாசமானதாகும். அவளது கதையே ஒரு நேர்த்தியான கம்பீரமிக்க ஒளியாலானதால் கற்பனையின் சிறகுகள் முளைப்பதற்கு ஏதுவாகிறது.

மரியா தனது தொழிலை சுதந்திரமாகவும், அடுத்தவர்கள் தலையீடு இல்லாமல் ஜாக்கிரதையாகவும், அககறையோ கூட கிடையாது. பக்கத்தில் வசிக்கும் ஐந்து பெசோவிற்கு எதிர்காலத்தை ஆறுதலாக கணித்து சொல்லும் ஜோசியர்களிடமோ, சாமியார்களிடமோ கூட அவளுக்கு அக்கரையே கிடையாது. மரியா, நம்பிக்கைகளின் வேதனைகளில் சிக்காமல் அவற்றிற்கு வேறாக சஞ்சரித்தாள். அவளால் கண்டுபிடிக்கப்பட்ட காதல் ஒரு கவசம் போல் அவளை பாதுகாத்தது.

மரியா, ஒரு குட்டையான சிறிய பெண். அவளை பார்க்கும் பொழுது வெறுப்பதற்கு ஒன்றுமில்லாத, மரியாதைக்குரிய நாகரீகமான குண பண்புகளை உடைய பெண்மணி. ஆனால் ஏதாவது ஒரு விபச்சார மாமா பயல், அவளை தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயன்றால், அவள் ஒரு வெறி பிடித்த மிருகத்தை எதிர்கொள்ள வேண்டிய அவஸ்தைக்கு ஆளாவாள். அவளது உயிரையே பணயம் வைத்து நகத்தையும், பல்லையும் உபயோகித்து அவனுடன் மரியா போராடுவாள். இதனால் எல்லா மாமா பயல்கள் அவள் வம்புக்கே போவதில்லை. மற்ற பல பெண்கள் தங்களின் காயங்களை மட்டமான ஒப்பனைகள் மூலம் மறைக்க முயற்சி செய்தே தங்கள் வாழ்நாளில் பாதியை கழித்துக் கொண்டிருக்கும் போது, மரியா ஒரு கந்தலாடை ராணி போல், மரியாதை பெற்று வாழ்ந்து வந்தாள். அவளது பெயர் பிரபலம் பெற்று உள்ளதை தான் ஒரு சகாப்தமாகவே உருவாக்கப்பட்டுள்ளதையும் அவள் அறிய கூடவே இல்லை. அவள் ஒரு இளம் யுவதியின் மனம் படைத்த முதிய விலைமாது.

அவளது நினைவுகளில் ஒரு கொலைகார யுரங்கு பெட்டியும், ஒரு வெண் பழுப்பு நிறத்து மனிதனும், அவளது கடலின் வாசனையையும் முக்கியமாக இடம் பெற்றிருந்தது. அவளது நண்பர்கள் கொஞ்சம் கொஞ்சமாக பல செய்திகளை சேகரித்து, அவளது கடந்தகால வாழ்க்கையை அறிந்தார்கள். அவள் இப்பிரதேசத்தில் உள்ள மற்ற பெண்களை போன்றவள் அல்ல என்பது சொல்லாமலே தெரிந்த ஒன்று. வெகு தொலைவில் உள்ள ஒரு பிரதேசத்திலிருந்து வந்தவள். அங்கு ஸ்பானிய மொழி கடினமான மெய்யெழுத்துக்கள் உச்சரித்தும், ஸ்பெயின் தேசத்தின் எதிரொலிப்பு மிகுந்தது. வெண்மையான தோல் பிறப்பிலேயே ஒரு சிறந்த பிரபுத்துவ குடும்பத்தை சேர்ந்தவளாக, இருந்ததை மற்ற பெண்கள் யூகித்தனர். அவளது மேன்மையான நடத்தையும், பேச்சும் இதை அறிய செய்தன. ஏதேனும் இதில் சந்தேகம் இருந்தால் கூட அது இவளது மரணத்தினால் சுத்தமாக மறைந்து போனது. மரியா தனது மரியாதை சிறிதும் குறையாமல் இறந்தாள். குறிப்பிடத்தக்க எந்த நோயும் அவளுக்கில்லை. பயப்படவுமில்லை. சாதாரண மனிதர்கள் சாவது போல், காதில் கடைசி மூச்சை விட்டும் இறக்கவில்லை. அவள் வாழ்வதில் உள்ள சலிப்பை தாங்க முடியவில்லை என அறிவித்துவிகட்டு தன்னுடைய மிக சிறந்த உடையை அணிந்து கொண்டு உதட்டு சாயத்தையும் பூசிக் கொண்டு தனது அறையை திறந்துவிட்டு அனைவரையும் தன்னுடன் இருக்க வசதி செய்தாள்.

எனது இறப்பிற்கான நேரம் வந்துவிட்டது என்பதுதான் அவளது ஒரே அறிவிப்பு.

இந்த நிகழ்ச்சிக்காக நன்றாக வெளுத்த உறைகளை உடைய மூன்று தலையணைகளை சாய்மானமாக போட்டுக் கொண்டு நீட்டி படுத்த மரியா ஒரு குவளை நிறைய இருந்த ஒரு சாக்லேட் பானத்தை ஒரே மூச்சில் குடித்துவிட்டு சாய்ந்தாள். மற்ற பெண்கள் அவளைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தனர். ஆனால் நான்கு மணி நேரம் கழித்து அவளை எழுப்ப முடியாமல் போன பின்பு இறந்ததை அறிந்து ஊர் முழுக்க செய்தியை பரப்பினர். சிலர் என்ன என்பதை அறியும் ஆவலுடனும், பலர் உண்மையிலேயே வருந்தமடைந்து அவளருகில் இருக்க வந்தனர். மரியாவின் நண்பர்கள் வந்தவர்களுக்கு மதுபானம் வழங்காமல், காபி கொடுத்து உபசரித்தனர். ஏனெனில் விழாவாக யாரும் தவறாக நினைத்துவிடக் கூடாது என்பதற்காகத்தான்.

மாலை ஆறு மணிக்கு மரியா உடல் நடுங்க, கண் விழித்து எல்லோரையும் உருவம் பிடிபடாமல் பார்த்துவிட்டு, உடனடியாக உயிரை விட்டாள். அவ்வளவுதான். யாரோ அவள் சாக்லேட் பானத்தில் விஷம் கலந்து குடித்திருப்பாள் என சொன்னார்கள். இது உண்மையாக இருந்திருப்பின், அவர்கள் அனைவரும் அவளை நேரத்தில் மருத்துவமனைக்குகொண்டு செல்லாத குற்றமிழைத்தவர்கள் ஆவார்கள். ஆனால் இதைப்பற்றி யாரும் ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை.

மரியா வாழ்வை முடித்துக் கொள்ள நினைத்திருந்தால் அது அவளது இஷ்டமும், நியாயமும் ஆகும். அவளுக்கு கவனிக்க வேண்டிய குழந்தைகளோ, பெற்றோர்களோ இல்லாததும் ஒரு காரணம் ஆகும் என வீட்டின் தலைமை விபசாரி கூறினாள்.

மரியாவின் நண்பர்கள் அவளை ஈமச்சடங்கு நடக்கும் இடத்தில் வைப்பதற்கு சற்றும் விரும்பவில்லை. ஏனென்றால் அவளது அமைதியான முன்னேற்பாடான சாவு என்பது காலே ரிபப்ளிக்காவில் நடந்த ஒரு பவித்ரமான நிகழ்வாகும். அதனாலேயே புதைப்பதற்கு முன் அவள் வாழ்ந்த வீட்டிலேயே அவளை வைத்திருந்தனர். மேலும் பிணத்தை வாழ்ந்த வீட்டிலேயே வைத்திருந்தால் இறந்தவளின் ஆவிக்கும், அவளது வாடிக்கையாளர்களுக்கும் கெடுதல் வருமோ என சிலர் எண்ணினர். எதற்கும் கண்ணாடியை உடைத்து சவப்பெட்டியை சுற்றி அடுக்க வேண்டும் எனவும், சர்ச்சிலிருந்து புனித நீர் கொணர்ந்து தெளிக்க வேண்டும் எனவும் பல அபிப்ராயங்கள். யாரும் அன்று இரவு தொழில் நடத்தவில்லை. இசையோ சிரிப்போ இல்லை. ஆனால் கண்ணீருமில்லை. அவர்கள் சவப்பெட்டியை வரவேற்பறையின் டேபிளில் வைத்து சுற்றிலும் இரவல் நாற்காலிகளை போட்டு வந்திருந்தவர்கள் செதியாக அமர செய்து காபி குடித்துக் கொண்டும், சத்தமில்லாமல் பேசிக் கொண்டுமிருந்தனர். இதற்கு நடுவில் மரியா கிடத்தப்பட்டிருந்தாள். சாட்டின் துணிகளில் அவளது தலை சாய்த்து வைக்கப்பட்டிருந்தது. அவளது கைகள் கோர்த்திருந்தது. மார்பில் அவளது இறந்த குழந்தையின் புகைப்படம் வைக்கப்பட்டிருந்தது. அந்த இரவில் நேரம் செல்லச் செல்ல அவள் சாப்பிட்ட சாக்லேட் பானத்தின் நிறத்திற்கே அவளது தோலும் நிறம் மாறி கரும்பழுப்பாக காணப்பட்டது.

அவளது சவப்பெட்டியின் முன் பல மணி நேரம், நான் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த போது அவளது கதையை அறிந்து கொண்டேன். அவள் பெரும் யுத்தம் நடந்த காலக் கட்டத்தில் பிறந்ததாக அவளது சக தொழிலாளிகள் என்னிடம் கூறினார்கள். வருடத்தின் நடுவிலேயே இலையுதிர் காலம் ஏற்பட்டு கடுங்குளிர் எலும்பை துளைக்கும் தென் பிராந்தியத்தில் அவள் ஸ்பானிய பிரபுத்துவ குடும்பத்தை சேர்ந்த கௌரவமானவரின் மகளாக பிறந்திருந்தாள். அவளது அறையை ஆராய்ந்த போது ஒரு பிஸ்கட் டின்னில் ஒரு பிறப்பு சான்றிதழும், சில கடிதங்களும் புகைப்படங்களும் இருந்தன. மரியாவின் தகப்பனார் ஒரு மாளிகைக்குச் சொந்தக்காரர் என்பதும், அவளது தாய் திருமணத்திற்கு முன்பு பியோனோ வாசிப்புக்காரி என்பதும் கிழிந்து பழைமையடைய தொடங்கியிருந்த செய்தி தாளில் எழுதி இருந்தது. தண்டவாளத்தை கவனமில்லாமல் மரியா கடக்கும் பொழுது ஒரு சரக்கு ரயில் மோதி அவள் விபத்துக்குள்ளானாள். அப்போது அவளுக்கு பனிரெண்டு வயதிருக்கும்.

மோதியபின் அவளை தண்டவாளத்தின் இடையே இருந்து எடுத்தனர். பார்வைக்கு பெரிய காயமேதுமில்லாதிருந்தது. அவளுக்கு சில சிராய்ப்புகள் மட்டுமுண்டு. தனது தொப்பியை மட்டும் இழந்திருந்தாள். இந்த மோதலினால் அவளுக்கு ஒரு வெகுளித்தன்மை ஏற்பட்டதையும் அதிலிருந்து மீள முடியாததையும் பின்புதான் தெரிந்து கொள்ள முடிந்தது. மரியாவினால் மிக எளிய பள்ளிப் பாடங்களை ஞாபகப் வைத்துக் கொள்ள முடியாமலும், பியானோ பாடங்களை மறந்தும் (எம்பிராய்டரி பின்னல்) செய்யும் ஊசியை பயன்படுத்த முடியாமலும் போனது. யாராவது அவளிடம் பேசினால் அவள் அங்கில்லாதது போல் நடந்து கொள்வாள். இதற்கு மாற்றாக அவள் இறப்பது வரை அவளால் மறக்க முடியாதது என்ன என்றால் அவளது மரியாதைக்கான நடத்தையும் பணிவும்தான்.

ரயில் மோதியதினால் மரியாவின் பகுத்துணரும் அறிவு இல்லாமலாயிற்று. அவள் கவனமில்லாமலும், உயிர்ப்பு அற்றவளாகவும் இருக்கலானாள். சந்தோஷமாக இருக்க வேண்டியவளுக்கு சந்தோஷமற்ற விதி வாய்த்திருந்தது. அவளுக்கு பதினாறு வயதாகும் போது அவளது பெற்றோர் சுமையாக எண்ணி மகளது அழகு குறைவதற்கு முன் பாரத்தை வேறு இடத்திற்கு மாற்ற முடிவு செய்து திருமணத்திற்கு ஏற்பாடு செய்தனர். மணமகளாக ஒரு வயதான திருமணத்திற்கு சற்று தகுதியற்ற மருத்துவர் குவேரா என்பவரை தேர்ந்தெடுத்தனர். இந்த மருத்துவர் குவேரா மரியாவின் பெற்றோர்களிடம் கடன் வாங்கியிருந்ததால் மறுக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இதனால் அதே வருடத்தில் புத்தி மானாட்டம் உள்ள மணமகளுக்கும் கிழவரான மணமகனுக்கும் திருமணம் சந்தடியில்லாமல் நடந்தேறியது.

மரியா திருமண முதலிரவு படுக்கைக்கு, ஒரு குழந்தையின் அறிவுடனும், மங்கையின் உடலுடனும் வந்தாள். ரயில் மோதலால் அவளது இயற்கையான ஆவல் அழிக்கப்பட்டிருந்தாலும் அறிந்துக் கொள்ளத் துடிக்கும் விவரணையானது அழியவில்லை. அவளுக்கு தெரிந்ததெல்லாம் தனது பெற்றோர்களின் மாளிகையில் கண்ட மிருகங்களின் நடவடிக்கைகள் மட்டுமேயாகும். புணர்ச்சிக்கு பின் பிரிக்க முடியாமல் கிடக்கும் நாய்களை பிரிக்க குளிர்நீர் உதவும் என்று மரியாவிற்கு தெரியும். பெட்டை கோழியை அடைய நினைக்கும் சேவல் கூவுவதும், சிறகுகளை விரித்து ஆடுவதும் தெரியும். ஆனால் இந்த காரண காரியங்கள் எல்லாம் எதற்காக என்பது புரியவில்லை. அவளது முதலிரவன்று ஒரு கிழட்டு மணமகன் தட்டுத் தடுமாறி தன் அருகே வருவதையும், தான் எதிர்பாராத ஒன்றை அவரின் இடுப்புக்கு கீழே இருந்ததையும் கவனித்தாள். மிகுந்த கூச்சத்துடன் இதைப்பற்றி பேச முடியாத அளவிற்கு ஒரு மலசிக்கல் ஏற்பட்டது போல் உணர்ந்தாள். பின் பலூன் போல அவளது வயிறு உப்பியபோது ஒரு முழு பாட்டில் பேதி மருந்தை சாப்பிட்டு கழிக்க முயன்றாள். இதன் பயனாக இருபத்திரண்டு நாட்கள் கழிப்பறையில் உட்கார்ந்து, சற்றேரக் குறைய உடலின் முக்கிய பாகங்களை இழக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானாள். இத்தனை முயற்சிகளும் அவள் மசக்கையை மாற்ற முடியவில்லை. விரைவில் அவளால் உடுப்புகளுக்கு பொத்தான் கூட போட முடியாத அளவிற்கு வயிறு பெரியதாகி வெளிரிய முடி நிறமுடைய ஆண் குழந்தையை பெற்று எடுத்தாள். பின் தினமும் கோழின சூப்பும் இரண்டு லிட்டர் பாலும் குடித்து உடம்பைத் தேற்றிக் கொண்டு தன் வாழ்விலேயே மிகவும் ஆரோக்கியமானவளாக ஆனாள். தன்னுடைய தூக்க கலக்கத்தை துறந்தவளாகவும் விழிப்பவளாகவும் மாறினாள். இதனால் தனக்கு வேண்டிய அழகான உடைகளை கூட வாங்கினாள். ஆனால் இந்த உடைகளை போட்டு அழகு பார்க்கக் கூட சந்தர்ப்பம் தராமல் இவளது டாக்டர் கணவன் திடீர் என மாரடைப்பு ஏற்று சாப்பாட்டு அறையில் கையில் சூப் கரண்டியை பிடித்த வண்ணம் இறந்து போனான்.

மரியா துக்க ஆடை அணிந்து இரு வருடங்கள் துக்கம் அனுஷ்டித்தாள். இந்த கால கட்டத்தில் ஏழைக் குழந்தைகளுக்கு ஆடை தைத்துக் கொண்டும், தனது குழந்தையுடனும் தனது செல்ல நாயுடனும் விளையாடிக் கொண்டும் பொழுதைக் கழித்தாள். மரியா தனது மகனை பெண் குழந்தை போல் நீண்ட முடியுடன் சிங்காரித்திருந்தாள். இது பிஸ்கட் டின்னில் இருந்த எடுத்த புகைப்படத்தில்

தெரிந்தது. அப்புகைப்படத்தில் குழந்தை அதிகமான ஒளியில் கரடித் தோல் விரிப்பின் மேல் உட்கார்ந்திருந்தது.

விதவையான அவளுக்கு காலம் நிரந்தரமாக உறைந்து போனது. இப்பொழுதும் அவளது கணவனின் பழமையான வாடை அறையில் மாற்றமில்லாமல் வீசிக் கொண்டுதானிருந்தது. அவளது பெற்றோர்களாலும், சகோதரர்களாலும் கவனத்துடனும் அதே வீட்டில் பார்த்துக் கொள்ளப்பட்டாள். நம்பிக்கைக்கு பாத்திரமான வேலையாட்களும் அவளது எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றினர். அவளது பெற்றோர் தினமும் வந்து அவளை செலவுகளையும், அவளுக்கான எந்த ஒரு சிறிய முடிவுகளையும் கூட தேர்ந்தெடுத்து உதவி வந்தனர். பருவ காலங்கள் உருண்டோடின. தோட்டத்திலிருந்த மரங்கள் இலைகளை உதிர்த்தன. கோடையின் பாடும் பறவைகள் வரத் தொடங்கியும் அவளது வழக்கமான நடவடிக்கைகள் மாறாமல் இருந்தது. சில சமயங்களில் மரியா தனது துக்க உடையான கருப்பு நிற உடை அணிவதன் காரணத்தை யோசிப்பாள். தனது வயது தளர்ந்த கணவனை சற்றும் ஞாபகம் வைத்துக் கொள்ளவில்லை. அவன் எப்பொழுதாவது ஓரிருமுறை மரியாவை விளை போர்வைக்குள் வைத்து முயங்கியது உண்டு. அதன்பின் தனது பாபத்தின் தவற்றை குற்ற உணர்ச்சி கொண்டு, கன்னிமரியாளின் காலடியில் விழுந்து வணங்கிக் கொண்டு குதிரை சவுக்கால் அடித்துக் கொண்டும் இருப்பான். மரியா தனது அலமாரியை அவ்வப்போது திறந்து தனது அழகான உடைகளை உதறி அடுக்குவாள். அவள் தனது நீல நிற ஆபரணங்கள் பதித்த கவுனையும், சாட்டின் காலணிகளையும் மிருக தோலால் ஆன மேலாடையையும் ஆட்டுக்குட்டி தோலால் ஆன கையுறைகளையும் அணிந்து பார்க்கும் ஆசையை அடக்க முடியாமல் எல்லாவற்றையும் போட்டு தனது மூன்று பட்டை முழு நீள கண்ணாடி முன்பு நின்று அழகு பார்த்த போது அவன் முன் நடன விருந்துக்கு தயாரான வேறு ஒரு பெண்தான் கண்ணாடிக்குள் தெரிந்தாள்.

இரண்டு வருட தனிமைக்குப் பின்பு, தனது இளம் உடலில் ஓடும் ரத்தத்தின் வேகத்தை கட்டுப்படுத்த மிகவும் கஷ்டப்பட்டாள். ஞாயிற்றுக்கிழமைகளில் சர்ச் வாசலில் பிந்தி இருந்து கொண்டு ஆண்கள் உரத்தக் குரலில் பேசிச் செல்வதையும், அவர்களின் புகையிலை வாடையையும் சுத்தமாக முகச் சவரம் செய்த தாடைகளையும் பார்த்து, ரகசியமாக தனது முகத்திரையை திறந்து சிரிப்பாள்.

இந்த நடவடிக்கைகள், மரியாவின் பெற்றோர்களாலும் சகோதரர்களாலும் கவனிக்கப்பட்டு அமெரிக்க மண் விதவைகளின் ஒழுக்க பண்மைக் கூட கறைப்படுத்திவிட்டது என கருத வைத்தது. அவர்கள் மரியாவை ஸ்பெயினில் உள்ள ஒரு அத்தையுடனும் மாமாவுடனும் வசிக்க முடிவு செய்தனர். அங்கு உள்ள வலிமையான சர்ச்சும், சம்பிரதாயமான பழக்க வழக்கங்களும், இம்மாதிரியான முறையற்ற வசீகரிப்புகளிலிருந்து பாதுகாக்கும் என முடிவு எடுத்தனர். இப்படியாக பேதை மரியாவின் விதியையே மாற்றக் கூடிய கடல் பிரயாணம் தொடங்கியது.

மரியாவின் பெற்றோர் அவளை, அட்லாண்டிக் கடல் கடக்கும் நீராவிக் கப்பலில் அனுப்பி வைத்தனர், மலையளவு பெட்டி, படுக்கை, தட்டுமுட்டு சாமான்களுடன் அவளது மகனும், வேலையாளும் பாலுக்கா என்ற பால் பசுவும், வளர்ப்பு நாய்களும் ஒரு பியானோவும் பயணித்தன. அவளது பல பெட்டிகளுடனும், ஒரு பித்தளை குமிழ்கள் கொண்ட இரும்பு டிரங்குப் பெட்டி நிறைய பால் ரூம் நடன கவுன்கள் நிரம்பியதாகும். இப்பகட்டான உடைகளை மாமாவின் வீட்டில் அணிய அவசியமிராது என மரியாவின் பெற்றோர்கள் நினைத்தாலும் அவள் எடுத்த வைத்த போது தடுக்கவில்லை. கடல் பயணத்தின் முதல் மூன்று நாட்கள் தன் அறையிலிருந்து வெளியே வர முடியாதபடி கடற் காய்ச்சலும் வாந்தியுமாக இருந்தாள். பின்பு கப்பலின் ஆட்டத்திற்கும் அசைவிற்கும் பழகி படுக்கையறை விட்டு எழுந்து வேலையாளை உதவிக்கு வைத்துக் கொண்டு பெட்டிகளை திறந்து நீண்ட கடல் பிரயாணத்திற்கான உடைகளை தேர்வு செய்தாள்.

மரியாவின் வாழ்வு திடீரென நேரும் துரதிர்ஷ்டங்களால் ஆனது. ஆகச் சமுக நம் மோதியதால புத்தி சுவாதீனமற்று திரும்ப முடியாத குழந்தைய

பருவத்திற்கு போனது போல் பல நடந்துள்ளது. அவள் தனது அலங்கார உடைகளை அறையிலிருந்து அலமாரியில் அடுக்கிக் கொண்டிருந்த போது அவளின் குழந்தை திறந்திருந்த டிரங்கு பெட்டியினுள் தலையை நுழைத்து வேடிக்கை பார்த்தது. அப்போது கப்பல் அலையின் குலுக்கலால் குலுங்கிய போது கனமான இரும்பு டிரங்குப் பெட்டி கவிழ்ந்து மூடி குழந்தையின் கழுத்தை உடைத்துவிட்டது. மூன்று முரட்டு மாலுமிகளால்தான் அந்த இளந்தாயை அந்த சபிக்கப்பட்ட டிரங்குப் பெட்டியிடமிருந்து பிய்த்து எடுக்க முடிந்தது. ஒரு ஓட்டப் பந்தய வீராங்கனை வீழ்த்தக் கூடிய அளவுக்கு தூக்க மருந்தைக் கொடுத்துத்தான் அவள் முகத்தை கீறிக் கொள்வதிலிருந்தும் காப்பாற்ற முடிந்தது. பலமணி நேரம் கூக்குரலிட்டு அழுது பின் ஓய்ந்து மங்கலான ஒரு மயக்க நிலைக்கு ஆளானாள். பக்கவாட்டில் ஆடி ஆடி அழுது ஒரு பித்த நிலைக்கு சென்றாள். கப்பலின் கேப்டன் (தலைவன்) இந்த அபாக்கிய நிகழ்வை ஒலிபெருக்கியில் அறிவித்துவிட்டு சிறிய பிரார்த்தனைக்கு பின் அந்த இளம் பிரேதத்தை கொடித் துணியால் சுற்றி கடலில் விடக் கட்டளையிட்டான். அவர்கள் நடுக்கடலில் பிரயாணம் மேற்கொண்டிருந்ததால் உடலை பாதுகாத்து வைப்பதற்கு வழியொன்றுமில்லாத காரணமும் உடலை கடலில் விட வேண்டியதாயிற்று.

இந்த துக்ககரமான விபத்து நடந்த பல நாட்களுக்கு பின்புதான் மரியா, நிதானமற்ற நடையுடன் கப்பலில் மேல்தளத்திற்கு காற்று வாங்க முதல் முறையாக வந்தாள். அது ஒரு இளஞ்சூடான இரவு. சமுத்திரத்தின் ஆழத்தில் மூழ்கிய கப்பல்களின் வாசனையும், மீன்கள் மற்றும் கடல் பாசியின் கலங்கலான வாடைகளும் மரியாவின் நாசியில் நுழைந்து அவளது நரம்புகளில் ஒரு பூகம்பத்தை ஏற்படுத்தியது. அவள் தொடுவானத்தை எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்த போது கேட்ட ஒரு சீழ்க்கை ஒலியினால் அவளது தலை முதல் பாதம் வரை சருமம் கிளுகிளுத்தது. சப்தம் வந்த திசை நோக்கி பாதி திரும்பிய போது, இரண்டு அடுக்குக் கீழே, ஒரு இருண்ட நிழலுருவம் நிலவொளியில் அவளை அழைப்பது தெரிந்தது. ஒரு மயக்க நிலையிலேயே அவள் ஏணி வழியாக இறங்கி அவளை அழைத்த வெண் பழுப்பு நிற தோலை உடைய மனிதனிடம் சென்றாள். மரியாவின் கருப்பு நிற தலையங்கி மற்றும் உடைகளை அவன் கழட்டும் போதும் மிகவும் அமைதியாக இருந்தாள். பின்பு அந்த பெரிய கயிற்று சுருளைக்கு பின்புறம் சென்று, சரக்கு ரயில் மோதியது போன்ற வேறு ஒரு மோதலை இந்த கிரேக்க மாலுமியிடம் பெற்ற போது மரியா, கடவுள் பயம் கொண்ட கிழட்டு கணவனின் செயலிற்கும், பல வாரங்கள் கடலில் பயணம் செய்வதால் பெண் உறவுக்கு ஏங்கும் முரட்டு கிரேக்க மாலுமியின் செயலிற்கும் உள்ள வித்தியாசத்தை தொடங்கிய மூன்று நிமிடத்தில் உணர்ந்தாள். பிரமித்த மரியா தன்னுடைய சாத்தியமான சக்தியையும் கண்டடைந்தாள். அவளின் கண்ணீர் வற்றியது. மேலும் மேலும் வேண்டும் என கேட்டுப் பெற்றாள். அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள இரவின் வெகு நேரத்தை செலவிட்டனர். கப்பலின் அவசர கால சங்கு ஊதப்பட்டதை கேட்டபின்புதான் பிரிந்தனர். மரியாவின் வேலையாள், மகளை இழந்த தாய் துயரம் தாளாமல் கப்பலிலிருந்து விழுந்த விட்டதாக தவறாக புரிந்து கொண்டு எல்லோரிடமும் அறிவித்ததால், கிரேக்க மாலுமியை தவிர எல்லோரும் மரியாவை தேடும்படியானது.

மரியா கப்பல் கரீபியன் தீவுகளுக்கு அருகில் செல்வது வரை, ஒவ்வொரு இரவும் தன் காதலனுடன் கயிற்று சுருளைக்கு பின்புறம் இணைந்தாள். கரீபியன் தீவுகளின் பூக்களின் வாசனையும் பழுத்த பழங்களின் வாசனையும் மரியாவை மிகவும் மயக்கின. மரியா தன் இறந்த குழந்தையின் ஆவி உலாவும் கப்பலை விட்டு தன் காதலனுடன் செல்ல ஒப்புக் கொண்டாள். மற்றவர்களின் கழுகுப் பார்வையிலிருந்து தப்பி கொள்ளவும், காதலனுடன் செல்லும் வழிப் பயணத்திற்கு செலவுக்காக பணத்தை எடுத்து தனது பாவாடையில் முடிந்து வைத்துக் கொண்டாள். மரியாதை நிரம்பிய தன் கடந்த காலத்திற்கு பிரியாவிடை கொடுத்துவிட்டு காதலனுடன், ஒரு படகை கடலில் இறக்கி இருவரும் விடியற்காலையில் கப்பலை விட்டு காணாமல் போயினர். மரியாவின் வேலையாளையும், செல்ல நாய்களையும்,

பால் பகலையும், கொலைக்கார டிரங்கு பெட்டியையும் விட்டு விட்டு போய் போய்விட்டனர். மாலுமி தன்னுடைய வலுவான கைகளால் துடுப்பு போட்டு ஒரு பிரம்மாண்டமான துறைமுகத்தை நோக்கி விடியற்காலைப் பொழுதில் செலுத்திக் கொண்டு சென்றான். விடியற்காலைப் பொழுதில் அத்துறைமுகம் வேறு ஒரு உலகத்திலிருந்து உருக் கொண்டு வந்தது போல குடிசைகளும், பனை மற்றும் தென்னை மரங்களோடும் பளிச்சென்ற நிறமுடைய பறவைகளோடும் ரம்மியமாக காட்சியளித்தது. ஓடி வந்த இருவரும் கையிருப்பு பணம் தீரும் வரை அங்கே இருப்பது என்ற முடிவுடன் தங்கினர்.

பின்புதான் தெரிந்தது. அந்த மாலுமி ஒரு குடிகாரனும் வம்புச் சண்டைக்கு போகிறவன் என்பது. அவன் பேசும் மொழி மரியாவுக்கும் மற்றவர்களுக்கும் புரிந்ததேயில்லை. ஆனால் சைகைகளின் மூலமும் புன்னகைகளின் மூலமும் அவன் பேச முடிந்தது. மரியா முழு விழிப்புடன் அவனுடன் கழித்த நேரங்களில் அவன் தான் பழகிய முயக்க விளையாட்டுகளை அவளுக்கு பயிற்றுவித்தான். அவை சிங்கப்பூர் மற்றும் வால்பராய்சோ நகர விபச்சார விடுதிகளில் கற்ற வித்தைகளை செயல்படுத்தினான். பின்பு மரியா உடல் களைத்து படுத்து கிடப்பாள். உஷ்ணப் பிரதேசத்தின் வியர்வையில் நனைந்தபடி மரியா தன் காதலன் அருகில் இல்லாத போது கூட காதலை பற்றி கண்டுணர்ந்தாள். கற்பனை உலகில் தனியாக சஞ்சரித்தபடி பாதகங்களைப் பற்றி யோசிக்காமல் உலவி வந்தாள். அந்த கிரேக்க மாலுமிக்கு தான் ஒரு வெள்ளப் பெருக்கையே திறந்துள்ளதை அறியக்கூடிய பகுத்தறிவு இல்லை. அவன் ஒரு கருவியே தவிர, அந்தப் பெண் தனக்கு கிடைத்த பொக்கிஷம் என்பதையும் அவள் தரும் பரிசை உணரும் அறிவும் இல்லை. அவனருகில் கபடமற்ற, களங்கமில்லாத ஒரு பெண் தனது இச்சைகளை ஒரு மிருக குட்டி போன்று விளையாட்டுடன் ஆராயும் தன்மையை புரிந்து, அவளுடன் விளையாட தெரியவில்லை. மாலுமியை அறிவதற்கு முன் மரியா இது போன்ற சந்தோஷங்கள் இருக்கின்றன என்பதையே அறியவில்லை. ஆனாலும் அவளது ரத்தத்தில் கொடி காய்ச்சலின் நுண்ணுயிர் போல அது இருந்து கொண்டுதான் இருந்தது. அந்த சந்தோஷத்தை அவள் கண்டுணர்ந்த போது அது சொர்க்கத்திலிருந்து ஆசீர்வதித்து அனுப்பப்பட்டது எனவும், இதையே பள்ளியில் படிக்கும் போது கன்னியாஸ்திரிகள், நல்ல பெண்கள் அடையக் கூடிய நிலை என கூறியதையும் நினைவு கூர்ந்தாள். அவளால் உலக வரைபடத்தில் தான் எங்கிருக்கிறோம் என கண்டு தெளிய முடியாது. ஆனாலும் செம்பருத்தி செடியையும் கிளிகளையும் பார்க்கும் போது தான சொர்க்கத்தில் தான இருப்பதாக நினைத்தாள். அதனால் இதை அனுபவிக்க ஆரம்பித்தாள். அவளை யாருக்கும் அங்கு தெரியாது. முதன் முறையாக அவள் மிகவும் வசதியாகவும், கவலையுற்றும் உணர்ந்தாள். தனது பெற்றோர்களிடத்திலிருந்தும், சகோதரர்களிடமிருந்தும் வீட்டிலிருந்தும் வெகு தொலைவிலும், அவர்களின் கலாச்சார கட்டுப்பாட்டிலிருந்தும் விடுபட்டு இருந்ததை உணர்ந்தாள். முதல் முறையாக தனது உடலில் கிளைக்கும் உணர்ச்சிகளின் இசையில் மயங்கவும், காட்டாறாக ஓடி பெரும் நீர்வீழ்ச்சியாக விழும் உணர்வு கொந்தளிப்பில் சிக்கி பின்னா பின்னப்பட்டு களைத்தும், சந்தோஷமாகவும் இருக்க பழகினாள்.

சிறிது காலத்திற்கு பிறகு, மரியாவின் திரைமறைவற்ற வெட்கமில்லாத தன்மையும், அவமானத்திற்கோ அல்லது பாவத்திற்கோ எதிர் வினையாற்றும் அவளின் கண்டிப்பையும் கண்டு கிரேக்க மாலுமி பயந்தான். கலவி புரியும் காலங்களின் இடைவெளி நெடிதாக கூடியது. அவன் அடிக்கடி காணாமல் போனான். இருவருக்குமிடையே மௌனம் அதிகரித்தது. மாலுமி தான் நடுக்கடலில் கண்டு தான காதல் கப்பிக்க, அழகான குழந்தை முகம் கொண்ட பெண்ணைக் கண்டு அருகே தப்பி ஓட நினைத்தான். இந்த விதவை எப்போதும் கூடலுக்கு தன்னை அழைத்துக் கொண்டே இருக்கிறாள். இந்த காதல் வலையில் தான் சிக்கியிருப்பதாக பாதுகாப்பு அற்ற ஒரு சுவைப் போல படுக்கை அறைப் போராட்டத்தில் சாவு காணப்பட்டால் தனது ஆண்மையை நிலை நிறுத்த வீண் ஜம்பம் கொண்டு

வேறு விபசாரிகளுடனும், கை சண்டையும் கத்தி சண்டைகளும் போட்டுக் கொண்டு கோழிச் சண்டைகளிதல் பந்தயமிட்டுக் கொண்டும் மரியாவிடமிருந்து விலகியிருந்தான். சுத்தமாக அவனிடம் பணமில்லாமல் போன போது ஆளே காணாமல் போவான். பல வாரங்களாக மரியா பொறுமையாக அவனுக்காக காத்திருந்தாள்.

அவ்வப்போது ரேடியோவில் கூறப்படும் அறிவிப்புகளை மரியா அமைதியாக கேட்டுக் கொண்டிருப்பாள். ஆங்கிலே? கப்பலிருந்து தப்பி ஓடிய பிரஞ்சு மாலுமி பற்றியும், போர்ச்சுக்கீசிய கப்பலிலிருந்து ஓடிய டச்சுக்காரனை துறைமுகத்திற்கு அருகில் வைத்து குத்திக் கொன்றதையும் பற்றி ரேடியோவில் கேட்பாள். ஆனால் அவள் எதிர்பார்க்கும் செய்தி இத்தாலிய கப்பலிருந்து ஓடி வந்த கிரேக்க மாலுமி பற்றியாகும். தனது பரபரப்பு உள்ளத்தில் முற்றும் போதும், எலும்புகளில் சூடு பரவும் போதும், தன் முன் தென்படும் முதல் மனிதனிடம் ஆறுதலை எதிர்பார்த்து மரியா செல்வாள். அவள் அம்மனிதனின் கைகளைப் பற்றி, மிகவும் ஆதாரயாகவும், கனிவாகவும் எனக்காக உங்களது உடைகளை களைவீர்களா? என கேட்பாள். அந்த அந்நிய மனிதன் ஒரு கணம் தடுமாறுவான். ஏனெனில் அவள் அந்த சுற்றுப்புறத்தில் உள்ள தொழில்முறை வேசிகள் போல் இல்லாமல் கண்ணியமான இளமையான பெண்ணாக உள்ளதுதான். ஆனாலும் மிக வித்யாசமாக அழைத்தாலும் குறிப்பு தெளிவானதாக இருப்பதால், ஒரு பத்து நிமிடம் இவளுடன் செலவழிப்போம் என்று செல்லும் அவன் உண்மையான வேட்கையின் நீர் சுழலில் சிக்கி புதையுண்டு திக்குமுக்காடிப் போவான். ஆச்சரியப்பட்டும் அன்பால் ஆட்கொள்ளப்பட்டும் அவன் மரியாவின் மேஜை மேல் பணம் வைத்துவிட்டு தனக்கு தெரிந்த எல்லாரிடமும் இந்த நிகழ்வை சொல்வான் பின்புஇதைக் கேள்விப்பட்ட மற்ற மனிதர்கள், சிறிது நேரத்திற்காவது, காதலின் மாயையை அறிய மரியாவிடம் வருவார்கள், அவளது எல்லா வாடிக்கையாளர்களும் திருப்தியுடன் திரும்புவர். இதனால் மரியா துறைமுகத்தின் சிறப்பு மிக்க வேசியாக பெயர் பெற்றாள். மரியாவின் பெயரை பல மாலுமிகள் தங்கள் புஜங்களில் பச்சைக் குத்திக் கொண்டு ஒவ்வொரு கடல் தோறும் கதை கதையாக கூறி அவளது புராணம் உலகம் முழுக்க பரவ காரணமாயினர்.

காலமும் வறுமையும் மாயையை எதிர்நோக்கி போராடியதாலும், மரியாவின் இளமை சீரழிந்து போனது. அவளது நிறம் மங்கிப் போனது. எலும்பும் தோலுமாக ஆகிப் போனாள். தனது வசதிக்காக சிறைக் கைதி போல் தனது தலைமுடியை குட்டையாக வெட்டிக் கொண்டாள். ஆனாலும் அவள் இப்பொழுதும் தனது கம்பீரமான, கனிவான அணுகுமுறையை ஒவ்வொரு புதிய வாடிக்கையாளர்களிடமும் பாவித்தாள். அவர்களை ஒரு அந்நியராக எண்ணாமல் தனது கற்பனை காதலனாக எண்ணி அரவணைத்துக் கொள்வாள். நிதரிசனத்தில் தனது தற்காலிக வாடிக்கையாளரின் அவசரத்தை பொருட்படுத்தமாட்டாள். ஏனெனில் ஒவ்வொருவருக்கும் தனது மாறாத அன்பையும், ஒரு புது மணப்பெண்ணை போன்று அடுத்தவரின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் மனப்பாங்கையும் கொண்டிருந்தாள். வயதேற, வயதேற அவளது ஞாபக சக்தி குறையத் தொடங்கி சில சமயம் முட்டாள்தனமாக பேச முற்பட்டாள். அவள் தலைநகரத்திற்கு வந்து காலே பிப்பிளிக்காவில் கடை விருக்கும் போது அவள் ஒரு பழங்கதையாக மாறியிருந்தாள். இவளையா எல்லா இனத்தை சேர்ந்த மாலுமிகளும் பச்சைக் குத்திக் கொண்டும், பாடல் பாடிக் கொண்டிருந்தார்கள் என கேட்கும் அளவிற்கு பழையவளாகியிருந்தாள். சில சமயங்களில் வெகு தூர பிரதேசங்களிலிருந்து கேள்விப்பட்டு, உண்மையிலேயே இப்படி ஒரு பெண்மணி இருக்கிறாளா? என அறிய முற்பட்டு வரும் ஒரு சிலரை குழப்புவாள். அப்படி வரும் சிலர் இவளது சிறிய வெட்டுகிளி போன்ற எலும்பும் தோலுமான சிறிய உருவத்தைக் கண்டு ஒரு புராண சகாப்தம் சாம்பல் ஆகிவிட்டது என துயரம் கொண்டு மேற்கொண்டு ஏதும் சொல்லத் தோன்றாமல் திரும்பி விடுவர். அப்படியும் ஓரிருவர் கருணையின் காரணமாக இவளுடன் இருக்க உத்தேசிக்கும் பொழுதுதான் எதிர்பாராத பரிசை பெறுவார்கள். மரியா தனது திரைச் சீலைகளை மூடியதும் அறையில் சூழ்நிலையே உடனடியாக மாறிவிடும். பின்பு பிரமிப்பை எய்திய அம்மனிதன், தன்னுடன் ஒரு தேவதையின் பிரதிமையைக் கொண்டு செல்வான்

அவள் வந்த போது பார்த்த பரிதாபம் கொள்ளக் கூடிய கிழவேசியை அவள் நினைப்பதில்லை.

மரியாவின் கடந்த காலம் சிறிது சிறிதாக மறையலாயிற்று. அவளது தெளிவான ஞாபகங்கள் ரயிலைப் பற்றியும், டிரங்குப் பெட்டிகளைப் பற்றியும் ஆன பயம் மட்டும்தான் மீதம் இருந்தது. மற்ற வேசிகளின் நச்சரிப்பு இல்லாதிருந்தால் மரியாவின் கதையை யாரும் அறிந்திருக்க முடியாது. அவள் ஒவ்வொரு கணமும், கிரேக்க மாலுமியோ அல்லது அவளது கற்பனையில் உதித்த உருவமோ தன்னை கட்டி அணைத்து ஆழ்கடலின் மேலே கப்பலின் தளத்தில் நிகழ்ந்த இன்ப நிகழ்வை மறுபடியும் நிகழ்த்தி காட்டும் என்ற எதிர்பார்ப்பில் வாழ்ந்தாள். இந்த புராதன மாயையை அவள் காணும் ஒவ்வொரு மனிதனிடமும் எதிர்நோக்கினாள். கற்பிதம் செய்யப்பட்ட காதலின் ஒளியாலும், அரவணைப்புகளாலும் நிழல்களை தடுக்க முயற்சி செய்தாள். தீப்பொறிகள் பெரு நெருப்பாக எரிவதற்கு முன்பே அணைந்து போயின. வீணாக காத்திருந்து சலித்து தனது ஆத்மா செதிலேறி போய்விட்டதாக மரியா உணர்ந்த போது இந்த உலகை நீத்தால் நல்லது என நினைத்தாள். அப்பொழுதுதான் தனது எல்லாவித செயல்களிலும் அடங்கிய நளினமும், முன் யோசனைப்படியும் கூடிய செயல்களைப் போல் தனது சாக்லேட் பானம் நிரம்பிய குவளையை கையிலெடுத்து அருந்தத் துவங்கினாள்.

பிரகாச கோபுரம்

— எம்.பி.வீரேந்திரகுமார்

நீண்ட காலம் சிறைகளிலும் உழைப்பு முகாம்களிலும் இருக்க வேண்டி வந்த ரஷ்ய இலக்கியவாதி ஸோல்ஷெனிட்ஸின், மனதையும் உடலையும் மிக இறுக்கி, உறைந்து போகச் செய்கிற தனிமையும் பயங்கரமானதுமான வாதையின் காலகட்டத்தினிடையே, ஏதோ ஒரு காலத்தில் அச்சேறும் எனும் நம்பிக்கைகூட இல்லாமல் சர்வாதிகாரத்திற்கெதிராக வலுவான படைப்புகளை உருவாக்கினார். சொந்த அனுபவங்களின் கொதிகலனிலிருந்து சிருஷ்டித்த கதாபாத்திரங்கள் வழியே அவரின் கருத்துக்கள் தீப்பிழம்புகளாயின. சித்திரவதைகளையும் இன்னும் மேலதிக சித்திரவதைகளையும் அவர் எதிர்கொள்ள வேண்டி வந்தது. ஆயினும் ஏகாதிபத்தியத்திற்குப் படிக்காத உண்மைகளை உலகத்திடம் உரத்துச் சொல்லி, ரத்தத்தில் பேனா முனையை முக்கி, ஆன்





வேதனைகளையும் கோபங்களையும் மிக உறுதியாக வெளிப்படுத்திய, மரணத்திற்குக்கூட சவால்விட்ட, படைப்பாற்றல் மிகுந்த எழுத்தாளராயிருந்தார் அவர்.

ஸ்டாலினை 'மீசையுள்ள ஒரு ஆள்' என்று மறைமுகமாகக் குறிப்பிட்டு தன் உடன் பயின்ற நண்பருக்கு எழுதிய கடிதம் சோவியத் உளவு அமைப்பான 'ஸ்மெர்ஷ்'-இன் கவனத்தில் பட்டதைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார். *1945* ஜூலையில் சர்வாதிகார அரசின் தண்டனைச் சபையான ஒ.எஸ்.ஒ.வின் கட்டளைப்படி, குற்றவிசாரணை கூட நடத்தாமல் எட்டு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. நெடுங்காலம் நீண்ட சிறை வாழ்வின் தொடக்கமாக இருந்தது அது. கஸாக்ஸ்தானின் ஒரு முகாமில் சுரங்கத் தொழிலாளியாகவும், கல் வேலைக்காரனாகவும் கொலலுப்பட்டறையில் பணியாளாகவும் அவர் கடுமையாக உழைக்க வேண்டி வந்தது. அந்தக் கொல்லாலையின் கொடும் துன்பம் நிறைந்த வாழ்விற்கிடையில் தான் அவர் புற்று நோயால் பாதிக்கப்பட்டார்.

எட்டு வருட கடுங்காவல் தண்டணையின் கால அளவை நிறைவு செய்த ஸோல்ஷெனிட்ஸினை விடுதலை செய்வதற்குப் பதிலாக, 1953மார்ச் 5-ம்தேதி ஸ்டாலின் அரசு தெற்கு கஸாக்ஸ்தானின் 'கோக்-டெரக்'கிற்கு ஆயுட்கால நாடு கடத்தலை விதித்தது.

1918 டிசம்பர் *11*-ம் தேதி கிஸ்லோவோட்ஸிகியில் பிறந்த ஸோல்ஷெனிட்ஸினின் வாழ்க்கை சம்பவங்கள் நிறைந்ததாயிருந்தது. ஒரு எழுத்தாளன் ஆவதுதான் விருப்பமென்றாலும் சென்றடைந்தது ரொஸ்ட்டோவ் பல்கலைக்கழகத்தின் கணித-இயற்பியல் பிரிவைத்தான். கணிதத்திலும், இயற்பியலிலும் பெற்ற புலமையின் காரணத்தால் மட்டுமே இரண்டு முறையாவது மரண தண்டனையிலிருந்து நான் தப்பித்திருக்கிறேன் என்று ஸோல்ஷெனிட்ஸின் ஒரு சுய சரிதைக் குறிப்பில் எழுதியிருக்கிறார்.

கணிதவியலில் திறமை பெற்றிருந்ததால், எட்டு வருடம் என்றிருந்த சிறைத் தண்டனைக்கு இடையில் நான்காம் வருடம், 'ஷராஷ்கா'வுக்குச் செல்வதற்கான 'பணி உயர்வு' அவருக்குக் கிடைத்தது.

(பயிற்சி பெற்ற கைதிகளைக் கொண்டு அறிவியல் ஆராய்ச்சி நடைபெறச் செய்கிற மையமாக இருந்தது. உள் விவகார அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிற ஷராஷ்கா.) அரசியல் தத்துவத் துறைகளில் புகழ்பெற்ற லெவ்கோ பலேவ், டிமிட்ரி பானின் முதலியவர்களையும் ஸெர்கி, கிலேஷோவ் முஸாபோல் எனும் கலைஞனையும் ஸோல்ஷெனிட்ஸின் ஷராஷ்காவில்தான் அறிமுகங்கொண்டார். அவருடைய சிந்தனை மண்டலத்தை விரிவுபடுத்த அவர்கள் அளித்த கொடைகள் பெரிது.

ஸ்டாலினின் மரணம் அதிகாரப்பூர்வமாக வெளிப்படுத்தப்பட்ட பிறகுதான் 'கண்காணிப்பாள'னின் அணைப்பு இல்லாமல் அவர் வெளியே செல்ல முடிந்தது. அதற்குள் புற்றுநோயும் ஆபத்தான நிலையை அடைந்தது. 1953-இல் அவர் மரணத்தை நேருக்கு நேராகப் பார்த்தார். உண்ணவோ உறங்கவோ முடியாத இரவு பகல்கள் தாஷ்கண்டில் ஒரு புற்றுநோய் மருத்துவமனையின் சிகிச்சையில் 1954 ஆனபோது நோய் குணமடைந்தது.

1916 வரைதான் எழுதிய ஒரு வார்த்தையேனும் அச்சடிக்கப்படுமென்று அவர் கனவில் கூட நினைத்திருக்கவில்லை.

அவரின் படைப்புகளை மிக நெருங்கிய நண்பர்களுக்குக்கூடக் காட்டியதில்லை. கடைசியில் சிறைகள் பரிசளித்த கொதிக்கும் வாழ்க்கையின் அனுபவப் பதிவுகளை ஒரு திருட்டுப் பொருள்போல பாதுகாப்பதில் உள்ள கவலை, சிந்தனையையும் துயரத்தையும் சகிக்க முடியாமல், 1916-இல் யு.எஸ்.எஸ்.ஆர். கம்யூனிஸ்ட் கட்சியின் 22-ம் காங்கிரஸுக்குப் பிறகு, 'ஒன டே இன் தி லைஃப் ஆஃப் இவான் டெனிஸோவிச்' (One Day in the Life of Denisovich) என்ற படைப்பை வெளியே அனுப்பினார். அதன் கையெழுத்துப் பிரதியை தான் என்றென்றுமாக இழந்துவிடக்கூடுமென்றும், தன் உயிரும் ஆபத்திற்குள்ளாகக்கூடுமென்றும் தெரிந்துதான் அவர் அந்த முடிவெடுத்தார்.

எ.டி. டார்டோவ்ஸ்கியின் இடைவிடாத முயற்சியினூடே ஒரு வருடம் முடிந்து, அவரே ஸோல்ஷெனிட்ஸின் நாவலை அச்சிட்டார் என்றாலும் உடனேயே அதிகாரிகள் அதன் வெளியீட்டைத் தடுத்தார்கள். 1964-இல் இரண்டு நாடகங்களையும், 1965-இல் 'தி ஃபர்ஸ்ட் சர்க்கில்' (The First Circle) எனும் நாவலையும் மற்ற பதிவுகளையும் அதிகாரிகள் பறிமுதல் செய்தார்கள். தகுந்த நேரம் வரும் முன்பே தன் படைப்பை அறிவித்தது மன்னிக்க முடியாத குற்றமாகி விட்டது எனும் எண்ணம் ஸோல்ஷெனிட்ஸினை வெகுகாலம் கலக்கமடையச் செய்தது. "உங்களுடைய அனுபவங்களைக் குறித்து, அந்த சமயத்தில் மதிப்பிடுவது என்பது ஏறத்தாழ அமைந்திடும்; அவற்றின் கனிந்த பயன்களுடன் அவற்றின் அர்த்தத்தையும். ஆனால் இதிலெல்லாம் முன்னறிந்து கூற முடிவதற்கு அப்பாற்பட்டவையும் ஆச்சரியகரமானவையும்தான் எதிர்கால சம்பவங்களின் முன்பின்னான போக்குகள்" ஸோல்ஷெனிட்ஸின் தன் சுயசரிதைக் குறிப்பில் எழுதினார்.

அரசு ஸோல்ஷெனிட்ஸினின் திருமண வாழ்வையும் அலைக்கழித்தது. படிப்பிற்குப் பிறகு 1941-இல் அவர், ஒரு வேதியிலாளராயிருந்த நதாலியா ரெஷட்ரோவ்ஸ்கியைத் திருமணம் செய்தார். இரண்டாம் உலகப்போர் காலத்தில் ராணுவத்தில் சேவை புரிந்த அவரை, 1945-இல் போர் முடிந்தபோது ப்ரஷ்யன் போர முன்னணியில் வைத்து ஸ்மெர்ஷின் அதிகாரிகள் கைதுசெய்து சிறையிலடைத்தார்கள். இதைத்தொடர்ந்து நதாலியா விவகாரத்தில் பெற்று மற்றொருவரை வரித்துக்கொண்டார். 1956-இல் ஸோல்ஷெனிட்ஸின் சிறையிலிருந்து விடுதலையான போது, நதாலியாவையே மீண்டும் திருமணம் செய்துகொண்டார். பிற்காலத்தில், அதிருப்தியின் காரணத்தால் அவரிடமிருந்து விலகிய ஸோல்ஷெனிட்ஸின், நதாலியா ஸ்வெத்லேவா எனும் கணிதவியலறிஞருடன் நெருங்கிப் பழகி அவரையே திருமணமும் செய்துகொண்டார். 1962-இல் எழுதிய 'இவான் டெனிசோவிச்', 1968-இல் எழுதிய 'ஃபர்ஸ்ட் சர்க்கில்', 'கேன்சர் வார்டு' எனும் படைப்புகள் சர்வாதிகாரத்திற்கும் அந்த அசிங்கமான நிலைமையின் பகுதியான அறிவுஜீவி அடிமைகளுக்கும் எதிரான ஸோல்ஷெனிட்ஸினின், எதிர்பாராத் தாக்குதல்களாயிருந்தன.

இவான் டெனிஸோவிச் ஷூக்கோடா எனும் ஒருவர் குளிர்ந்துறைந்த சிறையறையில் வாழ்ந்த ஒரே ஒரு தினத்தின் அனுபவ காட்சிதான் 'ஒன் டே இன் தி லைஃப் ஆஃப் இவான் டெனிஸோவிச்' எனும் படைப்பு. 1950-53-களில் கஸக்ஸ்தானில் ஒரு பிரத்தியேக சித்திரவதை முகாமில் தான் அனுபவிக்க வேண்டியிருந்த அனுபவங்களைத்தான் இவான் டெனிஸோவிச்சின் மூலமாக ஸோல்ஷெனிட்ஸின் திரை விலக்கிக் காட்டுகிறார். தஸ்தயேவ்ஸ்கியின் புகழ் பெற்ற படைப்பான 'தி ஹவுஸ் ஆஃப் தி டெட்' (The House of the Dead) எனும் நூலுடன் ஒப்பிடும்போது, அதன் சில ஒப்புமைகள் இந்த நூலில் இருக்கின்றன.

அன்றைய தன் வாழ்க்கையில் மனநிறைவுடனும் மகிழ்ச்சியுடனும் உறங்கச் செல்வதுடன் டெனிஸோவிச்சின் ஒருநாள் முடிகிறது. தான் ஒரு தனிமைச் சிறையில் அடைக்கப்படவில்லையல்லவா, சுழற்காற்று வீசியடிக்கின்ற வெட்டவெளியில் கடினமான வேலை செய்யும்படி உத்தரவிடப்படவில்லையல்லவா, தனக்கும் கொஞ்சமதிகம் கஞ்சி கிடைத்ததல்லவா, மற்றொரு கைதியிடமிருந்து கொஞ்சம் புகையிலை ஏற்பாடு செய்ய முடிந்ததல்லவா என்றெல்லாம் நினைத்துப்

மகிழந்தும்தான் டெனிஸோவிச் உறங்குவதற்கும் படுத்திருக்கிறார். சுதந்திரமின்மையின் மூச்சு முட்டும் சூழ்நிலைகளிலும் ஒரு துளி ஆசுவாசம் கண்டடைவதற்கான கைதியின் மனப்போக்கு வாசகர்களைக் கலக்கமடையச் செய்கிறது.



டெனிஸோவிச் படைப்பு முழுமையடைந்த பிறகு அதன் ஒரு பிரதியை, தன்னுடன் சிறையைப் பங்கிட்டுக்கொண்ட லேவ் கொபெலேவிற்கு ஸோல்ஷெனிட்ஸின் அனுப்பினார். கொபெலேவும் அவர் மனைவி ரெய்ஸா ஒர்லோவாவும், சோவியத் யூனியனில் மிகச்சிறந்த பதிப்பகங்களில் முன் வரிசையிலுள்ள 'நோவி மிர்' பதிப்பகத்தைக் கொண்டு ஸோல்ஷெனிட்ஸின் படைப்பைப் பதிப்பிக்க முயற்சியைத் தொடங்கினார்கள். குருஷேவின், கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் நடவடிக்கைகளின் காலகட்டமாயிருந்தது அது.

பத்திரிகை ஆசிரியரும், சோவியத் கம்யூனிஸ்ட் பார்டியின் பொலிட்பீரோ உறுப்பினரும், குருஷேவின் ஆதரவாளருமான அலெக்ஸாண்டர் தார்டோவ்ஸ்கி, ஸோல்ஷெனிட்ஸினை அழைதது வரச்செய்தார். டால்ஸ்டாயின் சன்மார்க்கக் கதைகளோடு அவரின் நாவலை உவமை கூறிப்பேசிய தார்டோவ்ஸ்கி, ஆனால், தன்னால் புகழப்பட்ட இந்தப் படைப்பை வெளியிடுவார்கள் என்று உறுதியளிக்கத் தன்னால் இயலாது என்று முன்னறிவிக்கவும் செய்தார்.

பிறகு ஒரு இரவில் 'ஒன் டே இன் தி லைஃப் ஆஃப் டெனிஸோவிச்'சின் ஒரே ஒரு பக்கத்தை மட்டும் வாசித்து முடித்தபோது தார்டோவ்ஸ்கி படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தார். தான் அணிந்திருந்த இரவு உடையைக் கழட்டிவிட்டு கௌரவமான உடையணிந்த பிறகு வாசிப்பைத் தொடர்ந்தார். நாவல் எவ்வளவு மேலான சிறப்புடையது என்று உணர்ந்ததால்தான் தான் இரவு உடையைக் கழட்டிவிட்டு, சூட் அணிந்து வாசிக்க முடிவு செய்தேன் என்று தார்டோவ்ஸ்கி கூறியிருக்கிறார். குருஷேவ் இந்தப் படைப்பை வாசித்து, இது பிரசுரிக்கத் தகுதியானது என்று அபிப்பிராயம் கொண்டார். 1962-இன் நடுவில் பொலிட்பீரோ பிரஸீடியம் ஸோல்ஷெனிட்ஸினின் நூலின் வெளியீட்டைப்பற்றி விரிவாக சர்ச்சை செய்தது. அந்த நேரத்தில் குருஷேவ் தன் கருத்தை நியாயப்படுத்தினார். "உங்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஒரு ஸ்டாலினிஸ்ட் உண்டு, என்னிலும் உனக்கு ஒரு ஸ்டாலினிஸ்ட். நாம் இந்தத் தீமையை நம்மிடமிருந்து களைந்தெறிந்தே ஆகவேண்டும்" என்றும், மௌனம் என்றால் சம்மதம் என்றுதான் அர்த்தமென்றும் குருஷேவ் சொன்னதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

எப்படியாயினும் சிறைகளிலும் உழைப்பு முகாம்களிலும் கொடுந்துன்ப வாழ்க்கை வாழ்ந்த ஸோல்ஷெனிட்ஸின், தாமதமின்றி குறிப்பிடத்தக்க இலக்கியவாதியாக சோவியத் யூனியனில் அங்கீகரிக்கப்பட்டார். சோவியத் எழுத்தாளர்களின் அமைப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்னா அக்மதோவா எனும் புகழ்பெற்ற ரஷ்யக் கவிதாயினி 'பிரகாசக் கோபுரம்' என்று ஸோல்ஷெனிட்ஸினை விசேடமாகக் குறிப்பிட்டார்.

குருஷேவ், அதிகாரத்திலிருந்து விலக்கப்பட்டபோது டெனிஸோவிச்சின் வெளியீட்டைத் தடுத்தற்கு மேலாக, அவரின் இதர படைப்புகளையும் பிரஷ்னேவின் தலைமையில் அதிகாரமேற்ற புதிய அரசு தடை செய்தது. ஸோல்ஷெனிட்ஸினை 'வஞ்சகன்' என்று குறிப்பிட்டது துன்ப கட்டத்தின் இன்னொரு மறு வருகை.



எனும் நூலில் ஸோல்ஷெனிட்ஸின் தன் வேதனை நிறைந்த நோயத்துன்ப அனுபவங்களைப் பற்றி இப்படி எழுதினார்: "நான் என் சொந்த அனுபவங்களிலிருந்து புரிந்துகொண்டது ஒரு மனிதன் மரணத்தின் வாயிற்படியை மதித்தேறுவது, இன்னும் இறந்திராத தன் உடலுடன்தான் என்பதுதான். அப்போதும் உங்களுடைய உதிர ஓட்டம் தொடர்ந்துகொண்டிருக்கிறது; நீங்கள் உண்டதை வயிறு செரித்துக்கொண்டிருக்கிறது; ஆனால் மானசீகமாக நீங்கள் மரணத்தை ஏற்றுக்கொள்ள அதற்குள் ஆயத்தமாகியிருப்பீர்கள் மரணத்தின் மூலமாகத்தான் நீங்கள் வாழ்கிறீர்கள். நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்று ஒருபோதும் சிந்தித்திருக்கவில்லை என்றாலும் கூட, சிலபோது சிந்தனை அதற்கு எதிராகவும் இருக்கலாம். நிந்தித்தவர்களுக்கெல்லாம் சட்டென்று நீங்கள் மன்னிப்பளித்து விட்டீர்கள் என்றும் நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள்." "மரணத்தினூடே வாழ்ந்த மனிதனாயிருந்தார் ஸோல்ஷெனிட்ஸின்.

இக்காலத்தில்தான் ஸோல்ஷெனிட்ஸின் ஆன்மரீதியான ஒரு சிந்தனைக் குழப்பத்திற்கு ஆட்பட்டார். மதமும் மனிதனும் எனும் சிக்கலான பிரச்சினையைப் பற்றி ஆழமாகச் சிந்தித்த பிறகு, தன் அம்மாவின் கிறிஸ்தவ நம்பிக்கைகளுக்கு அவர் திரும்பிச் சென்றார். கொள்கையின் (ideology) மேலேதான் மதத்தின் இடம் என்று அவர் நம்பினார். மனிதனில் உள்ள தீமைகளுக்கு எதிராக மதம் போராடுகிறது என்று அவர் கருதினார்.

ஸோல்ஷெனிட்ஸின், கேன்சர் வார்டுக்குப் பிறகு மற்றொரு புகழ்பெற்ற படைப்பான, 'ஃபர்ஸ்ட் சர்க்'கிளை எழுதத் தொடங்கினார். 1968-இல் வெளியிடப்பட்ட இந்த நூல் 1947- ஜூலை முதல் அவரை அடைத்த, மாஸ்கோவிற்குப் புறத்தே உள்ள 16-ஆம் எண் ஜெயிலில் அனுபவித்த துன்பங்களை மையமாகக் கொண்டது. அவருடைய தத்துவார்த்த அறிவின் ஒளிப்பலைப்பால் இப்படைப்பு குறிப்பிடத்தக்கதாயிற்று. "நன்மையையும் தீமையையும் பிரிக்கிற கோடு கடந்து போவது மாநிலங்களூடே அல்ல; வர்க்கங்களினூடேயும், கட்சிகளினூடேயும் அல்ல; நம் ஒவ்வொருவரின் இதயத்தினூடேதான்."

ஸோல்ஷெனிட்ஸினின் நெருங்கிய நண்பர்களாகவும் சக கைதிகளுமாயிருந்த கோபலேவினுடையவும், டிமிட்ரி பானினுடையவும் ஓவியனான செர்கி இவாஷேவ் - முஸாட்டோவினுடையவும் தனது அனுபவங்களையும் முன் வைத்து எழுதப்பட்டதுதான் இந்த நூல். ஆனால் பிற்காலத்தில் கோலலேவ் ஸோல்ஷெனிட்ஸின் மீது குற்றம் சுமத்தினார்.

சர்வாதிகாரிகள் கருத்து வேறுபாடுகள் உள்ளவர்களை மௌனிகளாக்கி தங்களுடைய முடிவுகளை மக்களின் மீது திணிக்கும் செயலுக்கு வரலாற்றில் நிறைய உதாரணங்கள் உள்ளன. ஏகாதிபத்தியத்தின் அரச கட்டளைகள் என்றும் வேட்டையாடிய, உலகப் புகழ்பெற்ற கவிஞர் நெரூதா ஒரு கவிதையில் இப்படி எழுதினார்:

"பயங்கர ஆட்சி பாட்டுக்காரனின் கழுத்தறுக்கிறது, ஆனால் கிணற்றின் ஆழங்களிலிருந்து சப்தம் பூமியின் ரகவிங்களுக்குத் திரும்பி வரவும் மக்களின் நாவுகள் மூலம் எங்கெல்லாமோ சென்றடையவும் செய்கிறது."

இதன் தொடர்ச்சியாக வாசிப்பதற்கு நெரூதாவின் இன்னும் கொஞ்சம் வார்த்தைகள்:

"என் ஜொலிக்கின்ற சகோதரனே!
மக்களின் உதடுகளிலிருந்து
உன் பெயரைத் துடைப்பதற்குப் போதுமான
மறதியுமில்லை; மழைக்காலமுமில்லை"

பிற்காலத்தில் ஸோல்ஷெனிட்ஸின் மூன்று நூலகளாக எழுதிய 'குலாக் ஆர்ச்சிப்பிலாகொ' அவருடைய மற்றொரு உலகப்புகழ்பெற்ற படைப்பாகும். இதில் ஸ்டாலினை உழைப்பு முகாம்களின் பயங்கர அனுபவங்கள்தான் விவாதப்பொருள். ஆனால் 'குலாக் ஆர்ச்சிப்பிலாகொ'வின் படைப்புத்தளம் இவர் எழுதிய மற்ற நூல்களோடு ஒப்பிடும்போது மிகவும் விசாலமானது. மூன்று லட்சத்திற்கும் அதிகமான வார்த்தைகள் மூலம் ஸோல்ஷெனிட்ஸின் குலாக் சித்திரவதை முகாம்களின் வரலாற்றை சிருஷ்டித்திருக்கிறார். 1973-இல் சோவியத் உளவு அமைப்பான கெ.ஜி.பி. ஸோல்ஷெனிட்ஸினின் டைப்பிஸ்ட் எலிஸவேதா வொரோன்யான்ஸ்கா வை குரூரமாக விசாரித்து, ரகசியமாகப் பாதுகாத்திருந்த அவரது படைப்பைக் கண்டுபிடித்தார்கள். பிறகு, ஸோல்ஷெனிட்ஸினை தான் ஏமாற்றி விட்டோமே என்று நினைத்து துயரமும் குற்ற உணர்ச்சியும் தாங்க முடியாமல், எலிஸவேதா தற்கொலையைப் புகலடைந்தார்.

தாமதமில்லாமல் குலாக் ஆர்ச்சிப்பிலாகொ பாரீசில் வெளியிடப்பட்டது. அதற்கெதிராக, அதிகாரப்பூர்வ சோவியத் பத்திரிகையான ப்ராவ்தாவில் 'தி பாத் ஆஃப் எ ட்ரெய்ட்டர்' (ஒரு ராஜ துரோகியின் பாதை) எனும் தலைப்பில் ஒரு கட்டுரையை அதிகாரிகள் வெளியிட்டார்கள். ஆனால், இசைக்கலைஞரான மதிஸ்லாவ் ரோஸ்ட்ரொவிச் என்பவர் ப்ராவ்தா, இஸ்வெஸ்தியா முதலான முக்கியமான பத்திரிகைகளுக்கு ஸோல்ஷெனிட்ஸினைப் புகழ்ந்து கடிதங்கள் அனுப்பினார். தவிர ரோஸ்ட்ரொவிச், மாஸ்கோவிற்குப் பக்கத்திலுள்ள தன் வீட்டில் ஸோல்ஷெனிட்ஸ்லினை கொஞ்சம் காலம் தங்க வைத்திருந்தார். பத்திரிகை ஆசிரியர்களுக்கு அவர் அனுப்பிய கடிதங்கள் வெளிநாட்டில் பிரசுரிக்கப்பட்டதும் அதிகாரிகளுக்குச் சினமூட்டியது. கடைசியில் 1974-இல் அவர் ஸோல்ஷெனிட்ஸினின் பிரச்சினையைத் தொடர்ந்து நாட்டை விட்டு வெளியேற வேண்டி வந்தது.

1974 பிப்ரவரி 12-ஆம் தேதி ஸோல்ஷெனிட்ஸினை அதிகாரிகள் மீண்டும் கைது செய்தார்கள். மறுநாளே அவருடைய சோவியத் குடியுரிமையை ரத்து செய்த அரசு, அவரை ஜெர்மனிக்கு நாடு கடத்தியது. ஒரு ஏரோப்ளோட் விமானத்தில் பிராங்க்பர்ட்டில் இறங்கிய ஸோல்ஷெனிட்ஸினை வரவேற்க நோபல் பரிசு பெற்றவரான ஹென்ற்ச் போல் வந்திருந்தார்.

போலுக்கு நோபல் பரிசு கிடைப்பதற்கு இரண்டு வருடம் முன்புதான், சோவியத் யூனியனின் வலுவான எதிர்ப்பை பொருட்படுத்தாமல் 1970-இல் ஸோல்ஷெனிட்ஸினுக்கு, நோபல் ஜூரிகள் சிறந்த இலக்கியவாதிக்கான பரிசைக் கொடுத்தார்கள். "ரஷ்ய இலக்கியத்தின் ஆன்மாவை உட்கொண்டு எழுதிய படைப்பு மேதை ஸோல்ஷெனிட்ஸின்" என்று நோபல் பரிசு ஜூலிகள் அவரை மதிப்பீடு செய்தார்கள். ரஷ்ய அதிகாரிகள் தன்னைச் சொந்த நாட்டிற்குத் திரும்ப அனுமதிக்க மாட்டார்கள் எனும் எண்ணித்தின காரணமாக, பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு அவர் ஸ்டாக்ஹோமிற்குச் செல்லவில்லை. ஆயினும் அவர் எழுதிய நோபல் உரை விரிவாகப் பரப்பப்பட்டது. அதில் அவர் சொன்னார்:

"மனிதனிக் கொண்டிருக்கிற, [illegible]




[illegible] எழுமபோது எங்களிடம் சொல்வதற்கிருப்பதை உலகம் முழுதும் கேட்டிருந்ததென்றால்.. (என்றுள மோகம் கொண்டிருந்தேன்) பொய் சொல்லாதிருப்பதற்கு ஒரு சாதாரண கடமைப்பட்டவர், கலைஞர்களுக்கோ அந்த விஷயத்தில் கூடுதல் பொறுப்புகளுண்டு. அவர்கள் பொய்களை எதிர்த்துத் தோற்கடிக்க வேண்டியிருக்கிறது." நாடு கடத்தப்பட்டு ஆறு வாரங்கள் கழிந்தபோது அவரின் மனைவி நதாலியா ஸ்வெதுலோவாவும் அவர்களின் மூன்று பிள்ளைகளும் வந்தார்கள். ஸ்விச்சர்லாந்தில் குறுகிய கால வாழ்க்கைக்குப் பிறகு அவர்கள் அமெரிக்காவைத் தஞ்சமடைந்தார்கள். வெர்மோண்டிலில் காவண்டிஷியல் ஸோல்ஷெனிட்ஸினும் குடும்பமும் வசித்தார்கள். அமெரிக்க வாழ்க்கை, மேற்கத்திய ரீதிகளைக் கூர்மையாக எதிர்க்கிற ஸோல்ஷெனிட்ஸினுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. 1978-இல் ஹார்வர்டில் அவர் நிகழ்த்திய உரை சரித்திரப் புகழ்பெற்றது. தனக்கு அபயம் கொடுத்த நாடு ஆன்மீக ரீதியாகப் பலவீனமானதென்றும் பௌதிக சௌகர்யங்களில் மூழ்கியிருக்கும் நாடு என்றும் அவர் கூறினார். அவர் அமெரிக்கர்களை கோழைகள் என்று குறிப்பிட்டார்.

ஸோல்ஷெனிட்ஸினைக் குறித்து பலவித மையங்களிலிருந்து விமர்சன விவாதங்கள் எழுந்தன என்றாலும், 'நோவி மீர்' இன் பத்திரிகை ஆசிரியர் ஆன்ட்ரி வாஸிலேவ்ஸ்கி அபிப்பிராயப்பட்டது என்னவெனில், ரஷ்ய சமூகத்துக்கு ஸோல்ஷெனிட்ஸினைப் போன்ற மேதைகள் தேவையில்லை என்பதுதான். "நமக்கு மாமனிதர்கள் தேவையில்லை... புகழ்பெற்றவர்களும் குறிப்பிடத்தக்கவர்களும் சமூகத்திற்கு வேண்டும். ஆனால் மாமனிதர்கள், அந்த வார்த்தையின் முழுமையான அர்த்தத்தைக் கணக்கிலெடுத்தால் வேண்டவே வேண்டாம்" என்று வாஸிலேவ்ஸ்கி கூறினார். ஸோல்ஷெனிட்ஸினுக்குச் சமமான மேதைகள் இறுதி ஓய்வுகொள்வது புகழ்பெற்ற நொவோதெவிச்சி மொனாஸ்ட்ரியில்தான். இங்கேதான் முன்னாள் அதிபர் யெல்த்ஸினையும் ரோஸ்ட்ரோ போவிச்சையும் மற்றவர்களையும் அடக்கம் செய்திருக்கிறார்கள். இறப்பதற்கு வருடங்களுக்கு முன்பாகவே, தன்னை டான்ஸ்கோய் மயானத்தில் தன் சவ உடலை அடக்கம் செய்ய வேண்டுமென்று ஸோல்ஷெனிட்ஸின் கேட்டுக்கொண்டிருந்தார். இரண்டாம் உலகப்போரில் [illegible] நிறுத்தப்பட்ட டாங்கிகளும் ஆயுதங்களும் ரஷ்யக் கொடிகளும் அந்த மயானத்தின் பிரதான வாயிலின் முன்னால் காணப்படுவது வெறுப்பிற்குரியதாகத் தோன்றலாம். ஆனால் ஸோல்ஷெனிட்ஸினைப் போன்ற ஒரு உறுதியான தேசியவாதிக்கு, அமெரிக்காவில் தஞ்சமடைந்து வாழ்ந்த காலத்திலும் கூட மேற்கு நாடுகளைக் கடுமையாக விமர்சித்த ஒரு ஆளுமைக்கு, டான்ஸ்கோயியின் தளிர்காலம் மிகவு

அன்பிற்குரியதாகத் தோன்றியிருக்கக்கூடும். ஸோல்ஷெனிட்ஸின், என்றும் வித்தியாசமாகச் சிந்தித்த ஓர் மாமேதையாக விளங்கினார்.

“நிச்சலமான வெங்கலத் தகடுகளிலிருந்து
கண்ணீர்போல பனிச்சேகரம் உருகி வரும்போது,
தூரத்தில் ஒரு ஜெயில் புறாவின் குறுகல் கேட்கும்போது,
நோவாவின் கப்பல்கள் அமைதியாகச் செல்கின்றன.”

அன்னா அக்மதோவாவின் கவிதையின் ஈரடிகள் இவை. இவையே ஸோல்ஷெனிட்ஸினின் கல்லறையில் பொறிப்பதற்கு எல்லாவிதத்திலும் ஏற்றதாக இருக்கும்.



- நன்றி **மாத்ருபூமி**

தமிழில் **யூமா.வாசுகி.**

வி.பி.சிங் — சமூக அடுக்கை குலைத்த பெருங்கலகன்

— ஆதவன் தீட்சண்யா

வி.பி.சிங் மறைந்து விட்டார். இந்த நாட்டின் முன்னாள் பிரதமர் என்பதற்காக அவருக்கு அஞ்சலி செலுத்தியே ஆகவேண்டிய கட்டாயம் எதுவுமில்லை. ஓவியத்திலும் கவிதையிலும் நாட்டமுடைய படைப்பாளி என்பதற்காகவும் அவர் இங்கு நினைவு கூரப்படவில்லை. (அவ்வாறான பல ஆளுமைகளை கண்டுகொள்ளாமல் விட்டதற்கான நெடிய வரலாறு ஏற்கனவே நமக்குண்டு). அதிகாரமும் வாய்ப்பும் கிடைக்குமானால் எந்த நாயும் வெறும் கையை நக்கிக்கொண்டிருக்காது என்பதான பொதுவாழ்வு சீரழிந்து வரும் நிலையில் அவர் சில விழுமியங்களை உருவாக்கித் தந்திருக்கிறார் என்பதற்காக மட்டுமே தனித்துப் பேசப்பட வேண்டியவராக மேலெழுகிறார் வி.பி.சிங்.



படித்தக் கல்லூரியிலும், பல்கலைக்கழகத்திலும் மாணவர் பேரவையில் பொறுப்பேற்று நடத்தியதையெல்லாம் சொல்லி விளையும் பயிர் முளையிலேயே தெரிந்தது என்று கூறிவிடுவோமானால் வி.பி.சிங்கின் தனித்துவத்தை அவருடைய பிறப்புடன் தொடர்புபடுத்திவிடுகிற பெரும்பிழையை செய்தவராகிவிடுவோம். அவர்தான் வாழும் காலத்தின் அழைப்புகளுக்கு செவிமடுத்து பின்தொடர்கிறவராய் இருந்தார் என்பதுதான் இங்கு பேசப்பட வேண்டியதாய் இருக்கிறது.

உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்கிற இடதுசாரி முழக்கத்தின் தீவிரத்தை தணிக்கும் பதைப்புடன் பூமிதான் இயக்கத்தை வினோபா முன்னெடுத்தபோது, எதற்கும் உதவாத கரடுகளையும் புதர்களையும் தானமாகக் கொடுத்து பல நிலவுடைமையாளர்கள் வள்ளல்களாக குணமாற்றம் பெற்றுக்கொண்டிருந்தார்கள். மண்டா சமஸ்தானத்தின் அரசக்குடும்பத்தால் தத்தெடுக்கப்பட்டு அதன் வாரிசாக

இருந்த வி.பி.சிங்கை இந்த பூமிதான இயக்கம் ஏதோவொருவகையில் கவர்ந்திருக்கிறது. பஸ்னா கிராமத்தில் அவருக்கு சொந்தமான வளம்கொழிக்கும் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தை தானமாகக் கொடுத்திருக்கிறார். அரசகுடும்பத்தினரால் ஏழைகளிடமிருந்து அபகரிக்கப்பட்டதை அவர்களிடமே திருப்பிக் கொடுத்துவிடுவதற்கான வாய்ப்பாகக்கூட இதை அவர் பாவித்திருக்கலாம். ஆனாலும் 26 வயதில் இப்படியொரு துணிச்சலான முடிவை எடுப்பதற்கான பக்குவம் எப்படி வந்தது என்பதை யாரும் நுணுகிப் பார்க்கவில்லை என்றாலும், அதிகாரத்தை விட்டு வெளியேறுவதற்கான துறவு மனப்பான்மை இங்கேயே தொடங்கிவிட்டதாக சிலர் மதிப்பிடுகின்றனர். (அவரது பிறந்தநாளை டில்லியின் சேரிப்பகுதி குழந்தைகளோடு கழிப்பதை இறுதிவரை வழக்கமாகக் கொண்டிருந்ததும் கூட அவரது இருப்புக்கு எதிரான மனநிலைதான்.)

1969-ல் உத்திரபிரதேச சட்டமன்ற உறுப்பினர் எனத் தொடங்கி 1991-ல் பத்தாவது நாடாளுமன்ற அவைக்கு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டது வரையான காலகட்டத்தில் அவர் பல்வேறு பொறுப்புகளை வகித்திருக்கிறார். உ.பி.யில் பெரும் அச்சுறுத்தலை நிகழ்த்திக்கொண்டிருந்த கொள்ளையர்களை ஒடுக்குவதிலும், ஆயுதங்களை ஒப்படைத்த கொள்ளையர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான உருவாக்குவதிலும் மாநில முதல்வர் என்ற வகையில் அவர் காட்டிய உறுதி, இன்றும் நினைவுகூரப்படுகிறது. அவரது நடவடிக்கைகளால் ஆத்திரமுற்ற கொள்ளையர்கள், நீதிபதியாயிருந்த அவரது சகோதரரையே கொன்று பழிதீர்த்த நிலையில், கொள்ளையர்களை ஒடுக்கும் முயற்சியில் தான் தோல்வியை தழுவிட்டதாகக் கூறி முதல்வர் பொறுப்பிலிருந்து விலகினார். இக்கட்டான அந்த நேரத்தில் கொள்ளையர் விடுத்த சவாலை அவர் எதிர்கொள்ளாமல் போய்விட்டார் என்ற குற்றச்சாட்டு எழுந்தாலும், தன்னால் முடியாத இடத்தில் அழிச்சாட்டியமாக உட்கார்ந்துகொண்டு நாற்காலி தேய்க்கிற மனநிலைக்கு அவர் இரையாகிவிடவில்லை என்பதை உணரமுடியும்.

வரிஏய்ப்பு, நிதிமோசடி, பொதுப்பணத்தை சூறையாடுதல் மூலம் கொழுத்துத் திரியும் பெரும் வர்த்தக தொழில் நிறுவனங்கள் மீது கடும் சோதனைகளை நிகழ்த்தி கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர மத்திய வர்த்தக, நிதித்துறை அமைச்சர் பொறுப்புகளில் இருந்தபோது வி.பி.சிங் எடுத்த நடவடிக்கைகள் பெரும் விவாதத்தைக் கிளப்பின. காங்கிரசின் ஆதரவு முதலாளிகளாக இருந்தும், முதலாளிகளுக்கு ஆதரவான கட்சியாக காங்கிரஸ் இருந்தும் அதை பின்தள்ளி நாட்டின் பொருளாதார நிலைத்தன்மையை உறுதிப்படுத்தும் அவரது போக்கு காங்கிரஸ் தலைமைக்கும் பெருமுதலாளிகளுக்கும் அவர்களது நலன் காக்கும் ஊடகங்களுக்கும் எரிச்சலூட்டியதில் ஆச்சர்யம் கொள்ள எதுவுமில்லை. விளைவாக அவர் பாதுகாப்புத் துறைக்கு மாற்றப்பட்டார். அவகீர்த்தியான போபர்ஸ் பேரத்தில் நடந்த ஊழலை அவர் வெளிச்சத்திற்கு கொண்டு வந்ததும் பொதுவாழ்வில் தூய்மை, நேர்மை என்ற உரையாடலை முன்னிலைப்படுத்தியதும் இவ்வாறாகத்தான் நிகழ்ந்தது.

காங்கிரசையும் அதன் தலைவர் ராஜீவ்காந்தியையும் எதிர்த்து அவர் நடத்திய இயக்கங்களின் ஊடாக இந்த நாட்டின் பிரதமராக அவர் பொறுப்பேற்றார். நாட்டின் ஆகப்பெரும் அதிகாரம் தன்னிடம் கிடைத்தபோது அவர் வாக்குறுதி அரசியலையோ வாரிசு அரசியலையோ நடத்தி என்றென்றைக்கும் அந்த நாற்காலியை இருத்திப் பிடித்துக் கொள்வதற்கான மலிவான தந்திரங்கள் எதையும் மேற்கொள்ளவில்லை.

பிற்பட்டோருக்கான இடஒதுக்கீடு என்ற சமூகநீதிக் கோட்பாட்டை முன்னெடுக்க நேருகாலத்திலிருந்து அவரது பேரன் ராஜீவ்காந்தி காலம்வரை அமைக்கப்பட்டிருந்த பல்வேறு குழுக்களின் பரிந்துரைகள் உயிர்பெற்றெழ வி.பி.சிங் தான் ஆட்சியை காவு கொடுத்தார் என்ற உண்மையை அதன் முழு பரிமாணத்தோடு விளங்கிக்கொள்ளும்போதுதான் அவரது தனித்தன்மையை உள்வாங்கிக் கொள்ள முடியும். மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்துவது என்ற அவரது முடிவினால் நிம்மதியிழந்தவர்கள், அரசியல் தேவைகளிலிருந்து வி.பி.சிங் மண்டல் கமிஷன் அறிக்கையை அமல்படுத்தும் முடிவை அறிவித்தார் என்று குற்றம்

சாட்டுவதுண்டு. இருக்கட்டுமே, அப்படியே இருந்தாலும் அதில் தவறேதுமில்லை. எதையுமே செய்யாமல் தேர்தல் நேரத்தில் மட்டும் வந்து தொண்டணிட்டு விழுந்து ஓட்டு கேட்கிற கேவலங்களை விடவும், இந்த நாட்டின் மக்கள் தொகையில் மிகப்பெரும்பான்மையினராகவும், ஆனால் ஆட்சியலோ அதிகாரத்திலோ நிர்வாகத்திலோ உரிய பங்கற்றவர்களாகவும் இருந்து பிற்படுத்தப்பட்ட சாதியினரின் வாழ்வில் அடிப்படையான மாற்றங்களை உருவாக்கவல்ல 27 சதம் இடஒதுக்கீட்டை அறிவித்துவிட்டு, பதவியைத் துறப்பது பெருமைக்குரியதுதானே? பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டை ராம்விலாஸ் பாஸ்வான் என்கிற தலித் அமைச்சர் அறிவித்தது பெரிய முரண்தான் என்றாலும் அது அம்பேத்கர் தொடங்கிவைத்த கொடை என்றும் இவ்விடத்தில் சொல்ல வேண்டியிருக்கிறது.

தன் அரசியல் வாழ்விலும் சமூகத்தின் வாழ்விலும் என்னவிதமான மாற்றங்கள் நிகழப்போகின்றன என்று தீர்க்கமாக யோசித்து அவர் மண்டல் பரிந்துரைகளை அறிவித்தாரா என்ற சந்தேகங்கள் இப்போது எழுப்பப்படுகின்றன. உயர்சாதியினரும், அவர்களது அரசியல் பிரதிநிதியாக இருக்கும் பா.ஜ.க.வும் கடும் எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும் என்பதை அவர் அறிந்தே இருந்தார். பிற்பட்டோருக்கு இடஒதுக்கீடு வழங்கப்படுவதை எதிர்த்து உயர்சாதி மாணவர்கள் நடத்திய ரகளைகளும் அவர்களது பிரச்சாரத்துக்கு பலியான சில மாணவர்களின் தீக்குளிப்பும் உயர்சாதியினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற ஊடகங்களால் பெரிதுபடுத்தப்பட்டன. பா.ஜ.க.தன் மூடாக்கை களைந்துவிட்டு அப்பட்டமான இடஒதுக்கீட்டு எதிர்ப்புக் கருத்தை முன்னிறுத்தி களமிறங்கியது. அத்வானி நடத்திய ரதயாத்திரையை லாலுபிரசாத் யாதவ் தடுத்து நிறுத்தியதை முன்னிட்டு பா.ஜ.க.ஆதரவைத் திரும்பப் பெற்று வி.பி.சிங் அரசை கவிழ்த்தது. ஆட்சிபோனது குறித்து அவரிடம் கேட்டபோது, ‘நான் என் காலை உடைத்துக்கொண்டேன். ஆனாலும் இலக்கை அடைந்துவிட்டேன்’ என்றார்.


நாடாளுமன்றத்தில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பின்போது அத்வானியும் ராஜீவ்காந்தியும் ஒரே குரலில் பேசினர். சமூக நிதி காத்த வீராங்கனை ஜெயலலிதாவின் கட்சியும் அவர்களோடு இணைந்து நின்றது. அதுவரை பொத்தாம் பொதுவான அரசியல் பேசிகொண்டிருந்த பலரும் தத்தமது சுயரூபங்களோடு வெளியே வந்தனர். தமது ஆழ்மனங்களில் தங்கியுள்ள உயர்சாதி மனப்பான்மையை அப்பட்டமாக வெளிப்படுத்தினர். தாங்கள் மட்டுமே அனுபவித்து வந்த சமூகத்தின் கல்வி வேலை அனைத்திலும் பங்கு கேட்டு பிற்பட்டவர்கள் வருகிறார்களே என்ற ஆத்திரம் வி.பி.சிங் மீது திரும்பியது. இப்படியாகத்தான் அவர் இந்திய உயர்சாதியினருக்கும் அவர்களது பிடியிலுள்ள ஊடகங்களுக்கும் துஷ்டனாக மாறினார். நேர்மையான, அர்ப்பணிப்பு உணர்வுமிக்க, மக்களின் பொருட்டு தன்னலனை விட்டுக் கொடுக்கிற ஒரு தலைவர்கூட அரசியலில் இல்லை என்று அங்கலாய்க்கிற உயர்சாதியினரின் ஊடகங்கள் அப்படியான குணங்களோடு வெளிப்பட்ட வி.பி.சிங் என்ற ஆளுமையை அவர் இறந்தபிறகும் கூட அவமதித்தன என்பதை கவனப்படுத்த வேண்டியுள்ளது.

மண்டலுக்கு முன்பு மண்டலுக்குப் பின்பு என்று பாகுபடுத்திப் பார்க்குமளவுக்கு சமூகத்தில் செங்குத்தான பல மாற்றங்கள் நிகழத் தொடங்கிவிட்டன. சமூகநீதியின் பயனாய் சமூகத்தின் புதிய அடுக்குகளிலிருந்து மனித ஆற்றல் கட்டவிழ்த்து விடப்படுவதற்கான சாத்தியங்கள் உருவாயிற்று. இடஒதுக்கீட்டால் என்ன ஆகப்போகிறது என்று இளக்காரம் பேசியவர்களுக்கு, இடஒதுக்கீடு தங்களது அடிமடியிலேயே வைகவைத்து விட்டதைக் கண்டு அரற்றித் துடித்தனர். ஆனால் இது எதுகுறித்தும் உரிமைகோரிக்கொண்டு நிற்காமல் வி.பி.சிங் தன் மனம் வழிநடத்துகிற திசையில் சென்று கொண்டிருந்தார். ஆட்சியை இழக்க நேர்ந்ததன் பின்னேயுள்ள சதிகளை அம்பலப்படுத்தி நாட்டு மக்களிடம் உண்மையை விளக்கிச் சொல்ல அவர் நாடுமுழுக்க பயணம் மேற்கொண்டிருந்தார். அவர் தமிழ்நாட்டில் இருந்தபோதுதான் மும்பையில் இந்துத்வாவினர் சிறுபான்மையினருக்கு எதிராக கொடிய கலவரங்களை நிகழ்த்திக்கொண்டிருந்தனர். மும்பை சென்ற வி.பி.சிங்

கல்வராங்கலை உடனடியாய் நிறுத்த வேண்டுமென்றும் மதச்சார்பின்மை கோரியும் உயர்த்திப் பிடிக்கும் பொருட்டும் ஆயுளுமிலான உண்ணாநோன்பை மேற்கொண்டார். சிவசேனை உள்ளிட்ட காலிக்கும்பல் அவரது பந்தலுக்கு எதிரே உண்ணும் போராட்டத்தை நடத்தும் இழிவை மேற்கொண்ட போது அவர் தண்ணீர் குடிப்பதையும் எச்சில் விழுங்குவதையும் கூட நிறுத்திக்கொண்டார். தொடர்ச்சியாக ஐந்துநாட்களை நீருந்தாத நிலையில் அவரது சிறுநீரகம் பழுதடைந்து அவர் இறக்கும் வரையிலும் வாரத்தில் மூன்றுமுறை ரத்தசுத்திகரிப்பு செய்துகொள்ள வேண்டிய இன்னலுக்குள் தள்ளியது.

சமூகநீதிக்காக தனது ஆட்சியையும் மதச்சார்பின்மைக்காக தனது உடல்நலத்தையும் பணயம் வைத்த அந்த மாமனிதரது மறைவு இந்தியா டுடே போன்ற ஊடகங்களுக்கு பெரும் கொண்டாட்ட மனநிலையை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் வி.பி.சிங் என்ற பெயரையும் கூட அறிந்திராத இந்த நாட்டின் கடைக்கோடி கிராமத்திலிருந்து படிக்க வருகிற ஒரு மாணவன் முன்னால் படிப்பாகவும் அறிவாகவும் வாழ்வாகவும் வி.பி.சிங் கலந்திருப்பார்.

ஒரு நூறாண்டு காலத் தனிமை



அவ்ரெலியானோ புயெண்டியாவுக்கும், மாஸ்கோட்டிற்கும் இடையிலான திருமணம், மார்ச் மாதம் ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று வரவேற்பறையில் அருட்தந்தை நிக்கானோர் ரெய்னாவால் அமைக்கப்பட்டிருந்த திருப்பலி பீடத்தின் முன் நடந்தது. மாஸ்கோட் குடும்பச்சூழலையே அதிர்வடையவைத்த அடுத்தடுத்த காட்சிகளின் உச்ச கட்ட நிலையை அது அமைந்தது கழ்வா ஏனெனில் சிறுமி ரெமெடியாஸ் தனது குழந்தைத்தனமான செயல்பாடுகளிலிருந்து விடுபடும் முன்னேரே வயதுக்கு வந்து விட்டிருந்தாள். பருவமெய்துவது குறித்தும் வாலிபப்பருவ பிரச்சனைகள் குறித்து அவளதுத் தாய் அவளுக்கு எவ்வளவோ எடுத்துச் சொல்லி இருந்தும், வீட்டின் பிரதான ஹாலில் அவ்ரெலியானோ மற்ற சகோதரிகளுடன் உரையாடிக் கொண்டிருந்த ஒரு பிப்ரவரி மதியம், சாக்லெட் நிறத்தில் கூழ்அப்பியிருந்த தன் உள்ளாடையை காட்டி பெருங்கூச்சலிட்டபடி ரெமெடியாஸ், பாய்ச்சலில் உள்ளே வந்தாள். ஒருமாத அவகாசம் திருமணத்திற்காக கேட்கப்பட்டது. ஆனால் தனக்குத் தானே குளித்து பிறவேலைகள் செய்துகொள்ள., தனக்குத்தானே ஆடைகள் அணிய.... ஒரு இல்லத்தில் பெண்களுக்கான

அடிப்படை வேலைகள் இன்னதென போதிக்க போதுமான அவகாசமே இருக்கவில்லை. படுக்கையை நனைக்கும் பழக்கத்திலிருந்து மீட்க அவளை அவர்கள் கொதிக்கும் செங்கல் மீது சிறுநீர் கழிக்கவைத்தனர். மீறக்கூடாத சுயஅடக்கம், தாம்பத்ய ரகசியங்கள் என அடுத்த கட்டத்தை அவளுக்கு போதிப்பது பெரிய வேலையாக இருந்தது... ரெமெடியாஸ் பெருங்குழப்பத்திற்கு ஆளானதோடு மணநாள் இரவு பற்றி கூசாமல் பார்ப்பவர்களிடமெல்லாம் சந்தேகம் எழுப்பி சப்தமாய் விவாதிக்குமளவு அவளுக்கு ஆர்வமும் அதிகரித்து விட்டிருந்தது. சோர்வடைய வைத்த பெரும்பணி அவளை இப்படி நிற்க வேண்டும்..... திருமண கவுனில் இருக்கும்போது இப்படி நடக்கவேண்டுமென செயல் பயிற்சி மனதில் பாடமாக்கியதுதான் என்றாலும் திருமண வைபவத்தின் போது தனது மற்ற சகோதரிகளுக்கு சற்றும் சளைத்தவளல்ல என்பதான வல்லாண்மையோடு பெரிய மனுஷி போல அவள் நடத்தைகள் இருந்தன. பூ அலங்காரம் நிரம்பிய வீதியின் வழியே வானவேடிக்கைகள் முழங்க பல வாத்திய குழுக்களின் இசைக்கு நடுவே டான் அப்போலினாரர் மாஸ்கோட் அவளது தோளை அணைத்தபடி ஊர்வலமாய் அழைத்துவர, அவள் வீட்டின் மாடங்கள் வழியே வாழ்த்திய அனைத்து நெஞ்சங்களுக்கும் புன்னகையோடு கையசைத்து நன்றி தெரிவித்தாள், அவ்ரெலியானோ அந்த வைபவத்தின்போது, பின்னாட்களில் கொலைப்படையை எதிர்கொண்டபோது அணிந்துகொண்ட பின் மறைப்பு அற்ற பளபளத்த பித்தான்கள் வைத்த தோல் ஷூவும், கறுத்த சூட்டும் அணிந்து. சோகை விழுந்தவருக்கான சோர்வும் பெற்றவராய் காட்சியளித்தார். வாசற்படியில் மணமகளை வரவேற்று திருப்பலிக்கான இடம் நோக்கி அழைத்துச் செல்லும் போது ஏதோ ஒன்று உள்ளிருந்து எழுந்து தொண்டையை அடைக்கக் கண்டார். அவ்ரெலியானோ தன் விரலில் போடவேண்டிய மணநாள் மோதிரத்தை கைதவற விட்ட போது கூட எவ்வித சலனமும் வெளிக்காட்டாது, மிகுந்த பொறுப்புணர்ச்சியோடும் ஆழ்ந்த தன்னடக்கத்தோடும் ரெமெடியாஸ் நடந்துகொண்டாள்.... மணமகன் மோதிரம் வாசற்படி தாண்டிடாது காலில் தடுத்து அவசரமாய் எடுத்துக் கொண்டு திருபலி நோக்கி மூச்சிறைக்க ஓடிவரும் வரை, விருந்தினர்கள் களேபரமடைந்து பெருங்கூச்சலும் குழப்பமுமாய் ஆனபோதும் விரல் வைக்காக கையணியை கழட்டி மறுகையில் வைத்து தன்மோதிரவிரல் நீட்டியபடி அவள் அப்படியே நின்றுகொண்டிருந்தாள். தங்கள் வீட்டுக் குழந்தை ஏதாவது ஏடாகூடமாக செய்து விடாதிருக்க வேண்டுமென அவர்கள் தாயும் சகோதரிகளும் தாங்கொண்ணா பரிதவிப்பில் அவதியுற்றனர் என்றாலும் இறுதியில் அவளைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு முத்தமிட்ட அதிகப்பிரசங்கித்தனத்தை செய்தது என்னவோ அவர்கள் தான். கடுஞ்சோதனைத்தருணங்களை மிகுந்த கட்டுப்பாடுகளுடனும், இயற்கையாய் அமைந்த கருணையுடனும் அவள் அடக்கத்தோடு எப்படி எதிர்கொள்வாள் என்பது அன்றிலிருந்து தெரியத் தொடங்கியது. திருமண கேக்கிலிருந்து தானாகவே வெட்டி எடுத்த ஒரு பெரிய பாகத்தை தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு யாரும் சொல்லாமல் அவளாகவே அருந்தும் உணவுக்கரண்டியோடு ஜோஸ்அர்காடியோ புயெண்டியாவுக்காக எடுத்துச் சென்றாள் யார் அறிவுக்கும் எட்டாத தோத்திரப் பாடல் போன்ற ஒன்றை வாய்விட்டு பாடியபடியே மழையிலும் வெயிலிலும் கிடந்து நிறம் மாறிப்போய் அதே மரமுக்காலியால் மரத்தோடு பிணைக்கப்பட்டு உட்கார்ந்திருந்த பிரமாண்ட உடல்வாகு கொண்ட அவர் நன்றி உணர்வோடு ஒரு புன்னகை செய்தபடி கையால் எடுத்து கேக்கை சுவைத்து உண்டார். திங்கள் விடியல் வரையில் நீண்ட ஆரவாரமிக்க கொண்டாட்டங்களின் போது மிகுந்த துயரத்தோடிருந்தவள் ரெபக்கா புயெண்டியா ஒருத்தியே ஆவாள். ஒருவிதத்தில் அது சிதைத்தெறியப்பட்ட அவளது திருமண விருந்தும் ஆகும். ஊர்சுலாவின் ஏற்பாட்டின் அடிப்படையில் அவளது திருமணமும் கூடவே அன்றே நடந்திருக்கத்தான் வேண்டும். ஆனால் வெள்ளிக்கிழமையன்று பியட்ரோ கிரெஸ்பி, தனது தாயாரின் திடீர் அகாலமரணம் தாங்கிய கடிதத்தை பெற்ற மாநிலத் தலைநகர் நோக்கி கடிதம் கிடைத்த ஒருமணியில் கிளம்பிவிட்டான். வழியில் தாயார் தவறினாள். தவறிய அவனது தாயார் திருமண வைபவத்தின் இடையே மகன் திருமணத்திற்காக ஆசை ஆசையாய் உருகொடுத்த துயர இசைப் பாடலாய் நேரில் வந்து அவ்ரெலியானோ திருமணத்தில் கலந்தாள்.

[illegible] உண்மை அறிந்து பியெட்ரோ கிரெஸ்பி நேரத்திற்கு மணமேடைக்கு எப்படியோ திரும்பிட ஐந்து குதிரைகள் பூட்டிய [illegible] கை காசு அனைத்தும் செலவழித்தும் ஒரு வழியாய் [illegible] நள்ளிரவோ வந்துசேர முடிந்தது. [illegible] மணக்கோலத்தை நிறுத்திய [illegible] எழுதியது யார் என்பது கடைசி வரை [illegible] இல்லை [illegible] செய்தும், [illegible] அவளிதயத்தில் [illegible] ஒரு [illegible] என்று [illegible] பலவீனமான சத்தியங்களை [illegible] முடிந்து [illegible] அகற்றாமல் மிச்சம் வைத்திருக்க மன்றாட்டுகளுடன் செய்தாள்.

டான் அப்போலினார் மாஸ்கோட், அத்திருமணத்தை மேற்பார்வையிட [illegible] சதுப்பு நிலப்பகுதிக்கு அழைத்து வந்திருந்த அருட்தந்தை நிக்கானோர் ரெய்னா தனது அமைச்சகத்தின் விசுவாசமற்ற செயல்பாடுகளால் இறுகிப்போன முதியவராக இருந்தார். அவரது தோலில் துயரமே வழிந்தது. எலும்புகள் வெளியே துருத்தியபடி இருந்தன. முகச்சாயல் எப்போதும் பழங்கால தேவதையின் அழகோ இருந்தது. அச்சாயல் [illegible] அமைந்ததைக் காட்டிலும் எளிமையின் விளைவாகவே இருந்தது. திருமணம் முடிந்த கையோடு தனது தேவாலயத்தின் மாவட்டக் கிளைக்குத் திரும்பும் எண்ணத்தோடுதான் அவர் வந்திருந்தார். ஆனால், புனிதப்படுத்தப்படாத திருவிழாக்களும், தேவநாளையும் நாமகரண வைபவம் செய்யாத குழந்தைகளும் கொண்டிருந்து செழித்துக் கொண்டிருந்த மெக்காண்டோ வாசிகளைக் கண்டு திகைத்துப்போனார். ஆண்டவரை விதைத்திட இதைவிடவும் அவசியமான இடம் எதும் இருக்க முடியாதென கருதி, யூதரல்லாதார், சுன்னத்து செய்து கொள்வோர் முதல் சட்டத்துக்கு புறம்பானோர் காமக்கிழத்திகள் வரை அனைவரையும் வயது வித்தியாசமின்றி அப்பமளித்து கிறிஸ்துபதேசம் செய்தபடி மேலும் ஒருவாரம் தங்கியிருப்பதென தீர்மானித்தார். அத்தோடு பரித்தோர் சடங்குகளுக்கும் அவர் தயாராகவே இருந்தும் யாருமே அவரை கண்டுகொள்ளவில்லை. ஆண்டுகள் பலவாய் குருக்கள் இல்லாது ஆண்டவரிடம் நேரடியாக தங்கள் பிரார்த்தனைகளை செய்து வந்ததாகவும் ஆதிப் பிறப்பினது பாவங்கள் இரட்சிப்பு அடைந்துவிட்டதாகவும் அவர்கள் பதிலளித்தார்கள். திறந்த வெளியில் மதபோதனை செய்து வெறுத்துப்போன அருட்தந்தை நிக்கானோர் தேவாலயம் ஒன்று கட்டுவதென முடிவெடுத்தார். உலகின் மிகப்பெரியதான அது, அனைத்து பக்கங்களிலும் அலங்காரக் கண்ணாடிகளும், பெரும் புனிதர்களின் ஆளுயர உருவச்சிலைகளையும் கொண்டிருப்பதோடு உலகெங்கிலுமிருந்து அதன் கருவறை ஆண்டவரைத்தேடி பக்தியின்மையும் சமயப்பணி அடக்கமின்மை கொண்டோரும் கூட கவரப்பட்டு வருகைத்தருவாரகள். ஊரெங்கும் அதன் கட்டுமான செலவுகேட்டு வெட்கமின்றி அருட்தந்தை பிச்சை எடுக்க அவர்கள் அவருக்கு ஏராளமாக வாரிக் கொடுத்தனர். அதுவும் அவருக்குப் போதவில்லை. காரணம் தண்ணீரில் மூழ்கி இருப்பவரையும் கரைக்கு இழுத்து வரும்படியான ஓசை எழுப்பவல்ல மிகப்பெரிய ஆலயமணி இதுவரை எங்கும் காணாதபடி அமைக்க அவர்தேவைசித்தம் வெளியிட்டார். தன் குரலே மங்கிப் போகுமளவு அவர் மன்றாடினார். எலும்புகள் தேயும் ஓசைகூட வெளிப்படலாயிற்று. சனியன்று வீடுவீடாய் நடக்கும் வசூல் கூட முடிந்திடாத நிலையில் தாங்கொண்ணா துயர நிலை அவரை வாட்டியது. சதுக்கத்தில் அமைக்க [illegible] திறப்பவியில் [illegible] ஆசீர்வாத கூட்டம் ஒன்று நடத்தினார். ஞாயிறன்று, உறக்கமின்மை கொள்ளை நோய் பாதித்த நாட்களில் நடந்ததைப் போல ஒரு மணியை அடித்தபடி எங்கும் சென்று ஒரு திறந்தவெளி ஜெபத்திற்கு அழைப்பு விடுத்தார். ஆர்வத்தின் காரணமாய் பலரும், பழக்க தோஷத்தில் சிலரும் சென்றனர். மற்றவர்கள் [illegible] கவனிக்க ஆண்டவர் தன்னை இகழ்ச்சி செய்து விட்டதாக கருதலாகாது என பயந்து சென்றனர். எப்படியோ பாதிசதுக்கத்தில் மெக்காண்டோ காலை எட்டுமணிக்கு கூடி இருந்தது. அங்கே அருட்தந்தை நிக்கானோர், பணத்துக்காக இறைஞ்சி காயம்பட்டு கட்டியதன் [illegible] தோத்திரங்களை கூடுமான வரை சப்தமாக வாசித்தளித்தார். பூசை முடிந்து கூட்டம் [illegible] செல்லும் தருவாயில் கையை உயர்த்தி கவனத்தை ஈர்த்தார்.



"ஒரு நிமிடம்" அவர் சொன்னார், "ஆண்டவர் எத்தகைய அளவிட முடியாத பலவான் என்பதற்கான மறுக்கமுடியாத அத்தாட்சி ஒன்றை காண இருக்கிறோம்...இப்போது"

பிரார்த்தனைக் கூட்டத்தில் அவருக்கு பணிவிடைகள் செய்த சிறுவன் ஒரு கோப்பை நிறைய சாக்லெட் கூழ் எடுத்து வந்தான். மூச்சுவிடாமல் ஒரே மடக்கில் அதை வாங்கி அருட்தந்தை குடித்தார். தன் அங்கியிலிருந்து கைக்குட்டை ஒன்றை எடுத்து வாயைத் துடைத்துக்கொண்டு பின் இருகரங்களையும் அகல விரித்து கண்களை அவர் மூடினார். அப்போது அருட்தந்தை நிக்கானோர் தரையிலிருந்து ஆறு இஞ்சுகளுக்கு மேல், மேல்நோக்கி உயர்ந்ததை அனைவரும் கண்டனர். ஏற்றுக்கொள்ளத்தக்க, நம்பத்தக்க மேரநிசய யோக ஆற்றலோடு அந்தரத்தில் மிதக்கும் அந்த அற்புதத்தை வீடுவீடாக சென்று..... சாக்லெட்டால் நிகழ்த்தினார். தேவாலய குழு பெரும் வசூல் செய்து கொண்டதில் ஒரே மாதத்தில் அவர் யாருக்கும் எந்த சந்தேகமும் வரவில்லை.... ஜோஸ் அர்காடியோ புயெண்டியோவைத் தவிர. தனது செம்மலர் பூத்த மரத்தடியை சுற்றி மக்கள் கூடுவதை எவ்வகை புக உணர்வுமின்றி ஒரு நாள் சுவர் கண்டார். அங்கே அந்தக் காலையில் மீண்டும் அருட்தந்தை நிக்கானோரின் உபதேசத்தையும் பேரற்புதத்தையும் காண மக்கள் கூடினார்கள். அங்கு நடந்ததை கண்டு அவர் ஜோஸ் அர்காடியோ புயெண்டியா தனது மர முக்காலியில் லேசாக உடலை முறுக்கி ஏளனமாய் தோளை உயர்த்திட மட்டும் செய்தார். தனது நாற்காலியோடு அப்படியே மேல்நோக்கி அவர் எழுந்த போது ஜோஸ் அர்காடியோ

புயெண்டியா கேலியாக சிரித்தபடி தனது புரியாமொழியில்

“Hoc est simplicissimus” என்று கத்தினார். “Homo iste statum quartum materiae invent”

அருட்தந்தை நிக்கானோர் கைகளை உயர்த்த நாற்காலியின் நான்கு கால்கள் அவர் என அனைத்தும் தரைக்கு வந்தன.

“Nego” அவர் சொன்னார், “Factum hoc existentiam dei probat sime dubio”

இப்படித்தான் ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவின் வெறித்தனமான பினாத்தல் வேறு ஒன்றுமல்ல, அது லத்தீன் மொழி என அனைவருக்கும் தெரியவந்தது. தன்னால் மட்டுமே அவரோடு உரையாட முடியும் என்பதை சாக்காகக் கொண்டு தனது மத நம்பிக்கையை ஏற்கனவே முற்றிலும் குழம்பிய அவரது தலையில் நுழைக்க அருட்தந்தை நிக்கானோர் முயன்றார். ஒவ்வொரு நாளும் மதியத்தில் செம்மலர் மரத்தின் அடிக்கு வந்த அவர் ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவுக்கு ஞான உபதேசங்கள் செய்யத் தொடங்கினார். அனைத்து வகை வாதங்களையும் எளிதில் உடைத்து, சாக்லேட் உருமாற்றமும் எதுவும் தன்னை நம்பவைக்க முடியாது என்றும்....ஆண்டவரின் நிழற்படம் ஒன்று இருந்தால் மட்டுமே தன்னால் அதில் ஈடுபடுவது சாத்தியமென்றும் சத்தியவாக்குரைத்தார். அருட்தந்தையும் தன்னாலான பதக்கங்கள், புனிதரதம் படங்கள், வெரோனிகா தெய்வத்தின் மறு உருவம் என எதை எதையோ காட்டி விளக்கியும், ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவை அசைக்கவும் முடியாது போகவே தனது நற்செய்தி அளித்தலை நிறுத்திவிட்டு மதியத்தின் மனிதரான அடிப்படையில் வருகை புரிவதை தொடர்ந்தார், ஆனால் பிறகு தனது மேலாண்மையினால் ஜோஸ் அர்காடியோ புயெண்டியாதான் அருட்தந்தை நிக்கானோரின் ஆழமான தெய்வீகப்பிணைப்பையை அறுத்து அருட்தந்தை அவரை விளையாட்டிற்கு அழைத்தார். ஜோஸ் அர்காடியோ புயெண்டியா விளையாட ஒப்புக்கொள்ளவில்லை. இரண்டு துவேஷமிக்க பகைவர்கள் தம் விரோதப் போக்கின் முடிவுகள் ஏற்படலின்றி ஒரு விளையாட்டின் விதிகளை பொதுவாய் ஏற்பதில் தமக்கு உடன் பாடில்லை என கூறினார். தோல்வியுற்றால் கடவுளை ஆண்டவரை தான் கைவிட வேண்டி இருக்கும் என்பதை உணர்ந்து பதறியபடி அவ்விதம் விளையாடி தமக்கு பழக்கமும் இல்லை எனவும் இனி ஒரு போதும் தம்மால் விளையாட முடியாது எனவும் தெளிந்தார். இதன்மூலம் ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவின் மனத் தெளிவு அவருக்கு எல்லையற்ற திகைப்பை ஊட்டுவதாய் இருந்தது... பின் ஏன் அவரைப் போய் மரத்தில் கட்டி வைத்திருக்கிறார்கள் என்பதை அவர் வினவினார்.

ஜோஸ் அபர்காடியோ புயெண்டியா “Hoc est simplicissimus” என பதிலளித்தார்; “ஏனெனில் எனக்குப் பைத்தியம் பிடித்துள்ளது”.

அப்போது முதல் தானுண்டு தன் ஆண்டவர் உண்டு என விலகிக்கொண்ட பாதிரியார் தேவாலயத்தை விரைந்தெழுப்பி முடிக்க தன் சிந்தையைத் திருப்பினார். தான் மறு பிறவியே எடுத்தாய் ரெபக்கா தான் அதிர்ஷ்டக்காரி, “என்று எல்லாரும் அதிசயிக்க புகழ்ந்தாள் ரெபக்காவால் புரிந்துகொள்ள முடியாததால் அதைமேலும் விளக்கும் வண்ணம்... தன் அப்பாவித்தனமான புன்னகையுடன் அவன் தொடர்ந்தாள்:

“உனது திருமணத்தின் மூலம் நீதான் தேவாலயத்திற்கு திறப்பு விழாவே நடத்திட இருக்கிறாய்”

ரெபக்கா தானாக எதும் அது குறித்து கருத்து சொல்லாதவளாக வாயை சிரமப்பட்டு மூடியிருந்தாள். கட்டிட வேலை நடக்கும் வேகத்தினை வைத்துப் பார்த்தால் அடுத்த பத்தாண்டுகளுக்கு அதை கட்டி முடிக்கும் சாத்தியக்கூறே இருக்கவில்லை. ஆனால் அருட்தந்தை நிக்கானோர் ஒப்புக்கொள்ளவில்லை: நம்பிக்கை வைப்போரிடம் பெருகிய தாராளமனம் அவருக்கு நல்ல சகுனமாய் உதித்து இருந்தது என்பதால் அவரது கணக்கு மிகுந்த ஆறுதலான விஷயமாக இருந்தது. மதிய உணவை முழுமையாக முடிக்க முடியாத அளவிற்கு பணம் அற்றுப் போன ரெபக்காவின் செயல்பாட்டிற்கு நடுவே அமராந்தாவின் யோசனையை வரவேற்று கொண்டாடியபடியே ஊர்சுலா கட்டிட வேலையை வேகப்படுத்திட தாராளமாக வாரி வழங்கினாள். அது போன்ற இன்னும் ஒரு வருடம் நடந்தால் போதும், அருட்தந்தை முடிவாக கூறினார். அடுத்த மூன்று ஆண்டுகளில் தேவாலயம் தயாராக நிற்கும். அமராந்தாவிடம் ரெபக்கா அந்தத் தருணத்தில்

ஒருவார்த்தையும் கூறவில்லை. ஏனெனில் அவளது புதிய திருமண நாள்குறிப்பு முயற்சி என்பது அப்பாவித் தனமாக ஆதரவோடு வெளிப்பட்டதாக கருத ரெபக்காவால் முடியவில்லை. "அதை செய்ய நான் ஒன்றும் பைத்தியமில்லை" இரவில் அவர்களுக்குள் நடந்த கடுமையான வாக்குவாதத்தின் போது அமரந்தா உண்மையை உடைத்தாள். "இவ்வழியில் அடுத்த மூன்றாண்டுகளுக்கு உன்னைக் கொன்றுபோட எனக்கு அவசியமில்லை" ரெபக்கா சவாலை ஏற்றாள்.

புதிய தள்ளிவைப்பை குறித்து அறிந்தபோது பியெட்ரோ கிரெஸ்பி, ஏமாற்றத்தில் நிலைகுலைந்து அந்த சிக்கலிலிருந்து வெளிவர முடியாது தவிக்கத் தொடங்கினான். ஆனால் ரெபக்கா தனது விசுவாசத்தின் இடையே சாட்சியத்தை வெளியிட்டாள்: "ஆனால் உனக்கு எப்போதெல்லாம் வேண்டுமோ அப்போதெல்லாம் கேள்.... என்னைக் கொடுத்து விடுகிறேன்". அவனோ சாகசங்களில் மன ஒப்புமை உள்ளவனாய் இருக்கவில்லை. தனது மணமகளுக்கு இருந்த தைரியமும் எதிர்ப்புணர்வும் அவனுக்கு இருக்கவில்லை. அவனைப் பொருத்தவரை கொடுத்த வாக்குறுதியை ஊதாரித்தனமாய் வீணில்நலங்கெட வீசிட முடியாது. ஆனால் ரெபக்கா பிறவகை வழிமுறைகளில் எல்லாம் இறங்கிப் பார்த்தாள்.

ஒரு மர்மமான காற்று வரவேற்பறையின் விளக்குகள் அனைத்தையும் ஒரு சமயம் அணைத்து விட்டது. ஒளியை நீட்பெட்டியில் கொண்டு வந்த ஊர்சுலா இருளில் முத்தமிட்டபடி இருந்த காதலர்களை அதிர்ச்சியுற வைத்தாள். பியெட்ரோ கிரெஸ்பி மின் குழப்பமான விளக்கங்கள் பலமணிநேரம் அளித்து... தரமற்ற ஒளி விளக்குகளை சபித்து பாதுகாப்பான அறைவெளிச்சத்திற்காய் வேறு ஒளியேற்றங்களை அவன் ஏற்படுத்தவும் உதவினாள். அப்படி இருந்தும் எரிபொருள் தவறாலோ அல்லது திரி சரியாக இயங்காததன் காரணத்தினாலோ ஒரு முறை மீண்டும் ஒளி தடை ஏற்பட்டது... ரெபக்கா தனது காதலனின் மடியில் உட்காரந்திருப்பதை இப்போது ஊர்சுலா கண்டு மூர்ச்சித்தாள்.... இம்முறை விளக்கங்கள் எதனையும் ஏறக அவள் மனம் ஒப்பவில்லை. ரொட்டிக்கடையை இந்தியபெண்மணி விஷிந்தாசியோனிடம் ஒப்படைத்துவிட்டு சந்திப்புகளின் போது விடாப்படியாக தனது அசைந்தாடும் நாற்காலியில் உட்கார்ந்து உற்று நோக்கத் தொடங்கினாள் நிரந்தரமாக பொய் கோபங்கொண்டபடி ரெபக்கா சொல்வதுண்டு... 'பாவம்...அம்மா...' அவளது சோர்வு தட்டிய கொட்டாவிகளைக் கண்டு சந்திப்புகளில் பேச்சுகளைக்கூட விடாமல் கேட்டபடி இருப்பவளை நொந்து. 'அவள் சாகும் போது கூட கூடவே அந்த அசைந்தாடும் நாற்காலியையும் எடுத்துக் கொண்டு தான் போவாள்....' இப்படியாக கண்காணிப்பு காதலில் மூன்று மாதங்கள் கழிந்து எந்த முன்னேற்றமும் தேவாலய கட்டிட வேலையிலும் ஏற்படாததைக் கண்டு 'தினமும் சென்று அதை மேற்பார்வை இட்டு வந்த பியெட்ரோ கிரெஸ்பி... ஒரு நாள் அருட் தந்தை நிக்கானோரிடம் அதை கட்டி முடிக்கத் தேவையான தொகை முழுவதையும் அளிக்க முன்வந்தான்... அமரந்தா பொறுமை இழந்து விடவில்லை. தினமும் மதியத்தில் தன்னோடு சேர்ந்து பூவேலைத் தையல்களில் ஈடுபட வந்த தன் தோழிகளிடம் கூட அந்த விஷயத்தை பேசாது தட்டிக் கழிப்பதையே அவள் வழக்கமாய் கொண்டாள். ஆனால் திருமணத்தை நிறுத்திட அவள் ஆழமாக யோசித்து செயல்படுத்திய ஒரு முக்கியமான திட்டம் படுதோல்வி அடைந்தது. காரணம் அவள் போட்ட ஒரு தப்புக் கணக்கு ரெபக்காவின் திருமண அங்கி வைக்கப்பட்டிருந்த படுக்கை அறை துணிப் பெட்டியிலிருந்து அந்துருண்டைகளை எடுத்து விடுதல். தேவாலயம் கட்டி முடிக்கப்பட இன்னும் இரண்டு மாதங்கள் பாக்கி இருந்த போது அவள் அதைச் செய்தாள். ஆனால் ரெபக்காவின் மணநாள் குறித்த பொறுமையின்மையும் அமரந்தா எதிர்பார்த்ததை விடவும் முன்னதாக அவளை ஆடை தயாரிப்பில் இறங்க வைத்தது... ஆடைச்சாலையை அவள் திறந்த போது மடிப்புகளை அகற்றி மேற் காகிதங்களையும் ஆடையில் இருந்த அலங்கார ஒத்தையலையும் என். ஆரஞ்சு நிற கிரீடப் பூவேலையையும் கூட அந்தப் பூச்சிகள் துளைபிட்டிருந்தன. மேலுறை முழுதும் தான் மறக்காமல் அந்துருண்டைகள் போட்டு வைத்ததையும் அவை காணாமல் போயிருந்ததையும் கண்ட ரெபக்கா... அதிர்ச்சியடைந்தாலும் அமரந்தாவை சந்தேகப்பட்டு எதையும் கேட்டுவிடும் தைரியமற்று இருந்தாள்... மணநாளுக்கு ஒரு மாதத்தை விடவும் குறைவான அவகாசமே இருந்தது. ஆனால் அம்பாரோ மாஸ்கோட் ஒரே வாரத்தில் திருமண நாள் கவுனை தயாரித்து புதிதாய் தர வாக்களித்தாள் அவ்வாறே ஒரு நாள் மதியம்

அம்பாரோ புதிதாய் தயாரான மணநாள் மேலங்கியை அளவு சரி பார்க்க எடுத்து வந்து ரெபக்காவிற்கு அணிவித்து அழகு பார்த்த போது அமரந்தா பேச்சு மூச்சற்று போனதோடு அவளது முதுகில் வியர்த்து ஈரம் ஓடத் தொடங்கியது. பல மாதங்களாக இந்த ஒரு பொழுதுக்காக அவள் அச்சத்தோடும் அருவருப்போடும் காத்திருக்கிறாள். ஏனெனில் அவளைப் பொறுத்தவரை ஏதாவது ஒரு விதத்தில் தான் அமைக்கும் தடையரண்கள் எதுவுமே திருமண வைபவத்தை நிறுத்தவில்லை என்றால் இறுதியாக அவளை, ரெபக்காவை, விஷம் வைத்து கொலை செய்தாவது திருமணத்தை நிறுத்திவிடுதல் என்பதே அவளது திட்டம். அதை நிறைவேற்ற இத்தனை சீக்கிரம் ஒரு சந்தர்ப்பம் வந்ததால் அவளது உடல் நடுங்கியது. கொக்கி ஊசி இழைப்பின்னல் வேலையில் சிக்கி தவறுகள் இழைத்து அப்போது அமரந்தா விரல்களை புண்ணாக்கிக் கொண்டாள். அந்த நாள் திருமணம் நிச்சயிக்கப்பட்டு நடந்தேற இருக்கும் நாளின் முன்வரும் கடைசி வெள்ளிக்கிழமை என நெஞ்சில் பதற்றத்துடன் இறுதித் தீர்மானம் செய்து.... கொலையும் முறைமையையும் ரெபக்காவின் காப்பியில் அபினிக்கரைசலை கலப்பதே என்றும் தீர்மானம் செய்தாள்.

ஆனால் யாருமே நினைத்துக்கூடப் பார்க்க முடியாத எல்லாவற்றையும் விடப் பெரிய தடை, அதுவும் திருமணத்தை காலவரையற்று தள்ளிப்போட்ட ஒரு துயர சம்பவம் நடந்தேறியது. திருமணத்திற்கு ஒரு வாரம் முன், குழந்தை ரெமெடியாஸ் பாதி ராத்திரியில் ரத்தம் ரத்தமாய் வாந்தியெடுத்து உடலுக்குள் எங்கோ வெடித்த பெரும் புண்ணின் வலிதாங்காது தனது சொந்த ரத்தத்தாலேயே விஷமேறி கருவின் இரட்டை குழந்தைகள் வயிற்றில் தலைமாறி கிடக்க மூன்று நாட்கள் கழித்து இறந்துபோனாள். மனசாட்சி உறுத்தலால் மிக மோசமாக அமரந்தா பாதிப்பு அடைந்தாள். ரெபக்காவை விஷம் வைத்து கொன்றிட அவசியமின்றி மிகவும் அச்சம் விளைவிக்கும் வேறு ஏதாவது நடக்க அவள் ஆண்டவனை உளமார பிரார்த்தனை செய்திருந்ததால் அவளை மனசாட்சி தின்று கொண்டிருந்தது. ரெமெடியாஸின் மரணம் குறித்த குற்றவுணர்வு அவளை திணறடித்தது. அவள் பிரார்த்தனை செய்து கொண்ட தடைசம்பவம் இதுவல்ல. இது வீட்டையே உலுக்கி எடுத்து விடும். உண்மையில் ரெமெடியாஸ் வீட்டிற்கு மகிழ்ச்சியாரவார உயிர் அளித்திருந்தாள். ஆய்வுச் சாலைக்கு அருகிலிருந்த ஒரு அறையில் அவள் தனது கணவரோடு வாழ்ந்து வந்தாள். சமீபத்திய தன் குழந்தைப்பிராய பொம்மைகளினால் அந்த அறை முழுவதையும் அவள் அலங்கரித்திருந்தாள். இன்றியமையாத அவளது உற்சாக ஆரவாரமும் மகிழ்ச்சியும் நல்லதேக ஆரோக்கியத்தையும் வீடெங்கும் விதைத்தபடியே வரவேற்பு அறை தாண்டி கொடித் தாவரங்கள் படர்ந்த வெளித் தாழ்வாரம் வரை பரந்தது. விடியலின்போது பாடல் ஒன்றை அவள் பாடுவாள். ரெபக்காவுக்கும் அமரந்தாவிற்கும் இடையிலான மோசமான கூச்சல்மிக்க வாக்குவாதங்களில் தலையிட அவளுக்கு மட்டுமே தைரியம் இருந்தது. சோர்வும் வலியும் தரும் தினசரி வேலைப்பாட்டில் ஆழ்ந்து ஈடுபட்ட அவள், ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவை கவனிப்பதை தன் தலையாய கடமையாய் எடுத்துக் கொண்டாள். அவருக்கு உணவு எடுத்துச் செல்வாள், அவரது தினசரி தேவைகள் அனைத்திலும் உதவுவாள். உதாரணமாக சோப்பும், தேய்க்கும் நார் பிரஷையும் எடுத்து வந்து தேய்த்து குளிக்க வைப்பாள். தலைமுடியையும் தாடியையும் ஈரும் பேனும் போக நன்றாகக் கோதி சீவி விடுவாள் பனை ஓலைக் கூரையை சரி செய்தாள். மேலே மழை நீர் ஒழுகாமலிருக்க தண்ணீர் ஒட்டாதவகை தோல் கூரையால் மூடி ஆவன செய்தவளும் அவளே. ஆரம்ப மழலை லத்தீன் பேசி தனது கடைசி நாட்களில் ஓரளவு ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவோடு உரையாடவும் கூடியவளாய் அவள் ஒருத்தி மட்டுமே இருந்தாள். அவ்ரெலியானோவுக்கும் பிலர்டெனராவிற்கும் பிறந்த குழந்தையை வீட்டிற்கு அழைத்து வந்து அவனுக்கு அவ்ரெலியானோ ஜோஸ் என்று அவள் நாமகரண வைபவம் நடத்தி அவனை தங்களது முதல் மகன் என்று அவள் பெரிய மனது வைத்து சுவீகரித்துக் கொண்டாள். அவளது தாய்மை உணர்வும் குடும்பப் பாங்கும் உர்சுலாவையே மூக்கில் விரல் வைக்க வைத்தது. தான் ஏன் வாழ வேண்டும் என்பதற்கான ஒட்டு மொத்த காரணத்தை அவளிடம் அவர், அவ்ரெலியானோ உணர்ந்தார். அவரே நாள் முழுவதும் தனது பட்டறையின் பணியில் முழுமையாக ஈடுபட்டார். காலைப்பொழுது பாதி கடக்கும் போது ரெமெடியாஸ் கருங்காப்பி ஒரு கோப்பை எடுத்து வருவாள். அவர்கள் இருவருமாக தினமும்

மாலையில் மாஸ்கோட்களின் இல்லம் செல்வார்கள். பிற முக்கியமான விஷயங்கள் குறித்து ரெமெடியாஸும் அவளது சகோதரிகளும் திருமதி மாஸ்கோட்டிடம் பேசிக் கொண்டிருக்கையில் அவ்ரெலியானோ ரெமெடியாஸின் தந்தையான தனது மாமனாருடன் மணிக்கணக்கில் தாயம் ஆடியபடி நேரந்தள்ளினார். புயெண்டியாக்களுடனான உறவும் தொடர்பும் டான் அப்போலினார் மாஸ்கோட்டின் அதிகாரத்தை ஊரில் வேரூன்ற வைத்தது. தலைநகருக்கான அடுத்தடுத்த தனது விஜயத்தால் ஊரில் ஒரு பள்ளிக் கூடம் கட்டவைத்து அதனை பாட்டனாரைப் போலவே கல்வியில் மிகுந்த ஈடுபாடு காட்டிய அர்காடியோவின் பொறுப்பில் விட்டார். கட்டாயப்படுத்தியும் இறைஞ்சியும் தேசிய விடுதலை நாள் வரும்முன் அனைத்து வீடுகளையும் வெளிப்புறம் நிலம் பூசிட இணங்கவைத்தார் டான் அப்போலினார் அருட்தந்தை நிக்கானோரின் நச்சரிப்பு தாங்காமல் கட்டாரினோ அங்காடியை ஊரின் மையத்திலிருநது விரட்டி இரண்டு தெருக்கள் தாண்டி துரத்தியதோடு அதுபோன்ற பல பொந்து களிப்பு வர்த்தகங்களை மூடவும் வைத்தார். ஒரு சமயம் அவர் தலைநகரில் இருந்து ஆறு, ஆயுதம் தரித்த போலீர்காரர்களோடு வந்து இறங்கி ஊரில் அமைதியை பாதுகாக்க உத்திரவிட்ட போது யாருக்குமே பழைய ஒப்பந்தம் நினைவிற்கு வரவில்லை. தனது மாமனாரின் திறமையான நிர்வாகத்தை அவ்ரெலியானோ மெச்சி... அனுபவிக்கவும் செய்தார். "அந்த ஆளைப்போலவே நீயும் ஒரு நாள் உப்பி குண்டாகப்போகிறாய்", அவரது நண்பர்கள் அவரிடம் நக்கலாக கூறுவதுண்டு. ஆனால் பெரும்பாலும் அமர்ந்திருக்கும் தன்மை கொண்ட வாழ்வு அவரது தாடை எலும்புகளுக்கு மிகுந்த வலு சேர்த்ததோடு விழிகளின் ஒளியை குவியமாய் சுருக்கிசெதுக்கியது. அது ஒல்லியமான தேகத்தை ஒன்றும் செய்துவிடவில்லை என்பதோடு உடல் பளு ரீதியான கஞ்சத்தனத்தை அதிகரிக்கவே செய்திருந்தது. அவரது உதடுகளை இறுகவைத்து தனிமை ஆழ் உலக அமிழ்தலின் விளைகோடாக நெற்றியிலிருந்து கூழிறிங்கி யாருக்கும் வசப்படாத வகையான தேகத்தை அவருக்கு அது நல்கி இருந்தது. அவரும் அவரது இளம் மனைவியும் இருவரது குடும்பங்களாலும் எந்த அளவிற்கு பாசப் பிணைப்பை ஏற்படுத்தி இருந்தார்களென்றால்.... ரெமெடியாஸ் தான் கருகொண்டிருப்பதாக, மூழுகாமலிருப்பதாக அறிவித்தபோது ரெபக்காவும் அமராந்தாவும் கூட சண்டையை எல்லாம் மூட்டைக் கட்டி வைத்து விட்டு பிறக்கப் போகும் குழந்தைக்கு கம்பளியாடை ஆண்குழந்தை என்றால் நீல நிறத்திலும் பெண் குழந்தை என்றால் பிங்க் வண்ணத்திலும் என போட்டிப்போட்டுக் கொண்டு பின்னத் தொடங்கினர். சில ஆண்டுகளுக்குப்பின் கொலைப்படையை எதிர்கொண்ட போது அர்காடியோ கடைசியாய் மனதில் யோசித்தது ரெமெடியாஸ் தான்.

மூடப்பட்ட சன்னல்கள் கதவுகளுடன் கூடிய.... அவசியத் தேவைக் தவிர வேறு எதற்கும் யாரும் நுழையவும் யாரும் வெளியேறவும் கூட தடையிடப்பட்ட துக்ககாலம் ஒன்றை ஊர்சுலா கட்டளையிட்டாள். ஒருவருட காலத்திற்கு சப்தமாய் பேசுவதற்கும் தடையிட்டு ரெமெடியாஸின் நிழற்படம் ஒன்றை அவளது உடல் கடைசியாய் கிடத்தப்பட்டிருந்த இடத்தில் வைக்க ஏற்பாடு செய்தாள். மெகியூவாடெஸ் எடுத்த அப்படத்தை சுற்றி கருப்பு ரிப்பன் சுற்றப்பட்டதோடு முடிவின்றி ஒளிதரும் ஒருவிளக்கு ஏற்றப்பட்டது. அணையாவிளக்கை ஒருபோதும் அணைந்துவிடாமல் காத்துவந்த வருங்கால சந்ததியர் பூடிப்பு ஸ்ஆட்டும், வெள்ளை பூட்ஸும், நேர்த்தியான சல்லதுணியில் ஆன தலைகட்டும் அணிந்தபடி புன்னகை அந்த நிழற்படத்தை மர்மத்தோடு பார்த்து தங்களின் முப்பாட்டியின் மனப்பதிவோடு பொருந்திடாத தன்மையை நினைத்து குழம்பியிருந்தனர். மூத்தவனாய் ரெமெடியாஸ் கருதிய அவ்ரெலியானோ ஜோஸை அமராந்தா தன் பொறுப்பில் ஏற்றாள். தனது வீண்மன்றாட்டுதலினால் அபினிகரைசல் ரெமெடியாஸின் காப்பிக்கோப்பைக்குள் விதி வீசியதாய் தான் நொந்து வெகுண்ட தருணங்களின் கொடிய வலியிலிருந்து தன்னை மீட்டெடுத்து மன ஆறுதலும், தனிமை ஒரு வழுவமைதியும் பெற அவனை தன் மகனாகவே தத்தெடுத்துக் கொண்டாள். பியெட்ரோகிரெஸ்பி மாலை நேரங்களில் கருப்பு ரிப்பன் சுற்றிய ஒரு தொப்பியுடன், மிகவும் அமைதியாக ரெபக்காவின் சந்திப்புகள் தொடர வந்துசெல்வான், அவளோ தன்கைகளையும் தாண்டி நீளமாய் தொங்கிய குஞ்சலங்கள் வைத்த துக்கக் கருப்பங்கியோடு உள்ளே ரத்தம் கொட்டி ஏறத்தாழ செத்துக் கொண்டிருந்தாள். அடுத்த மணநாள் தேதி பற்றி யோசிக்கவும் கூட மடத்தனமாகி

நிச்சயிக்கப்பட்ட உறவு நிச்சயிக்கப்பட்டதாகவே நிர்கதி அடைந்தது. அந்த உறவு குறித்து கலைக்கொள்ள யாருமின்றி ஒரு சமயத்தில் கூடிக் கூக்குரல் செய்து முகமிட விளக்கங்களைக் அவர்கள் கவனிப்பாரற்று சாவின் கையில் விடப்பட்டார்கள். தன் நிலைமுறையிலும் இழந்து கெலிப்பிழுவும், கட்டழிவும் அடைந்து ரெபக்கா மீண்டும் மண் தின்னத் தொடங்கினாள்.

துக்ககாலம் நீண்டு மீண்டும் பூத்தையல்கள் தொடங்கிய சமயம் திடீரென்று ஒரு நாள் யாரோ வெளிக்கதவை தள்ளித் திறந்தார்கள். அப்போது பகல் இரண்டு மணிக்கும் மதியவேளை வெளியில் அந்த தோட்டம் தாண்டிய வீடு பெருங்களையோடு வெம்மை நிறைந்த வெப்பம் தகிக்கும் அந்த நேரத்தில் திறக்கப்பட்டவிதம். தன்தோழியருடன் பூத்தையல் வேலையில் ஈடுபட்டிருந்த அமரந்தா, படுக்கை அறையில் விரல் சூப்பியபடி கிடந்த ரெபக்கா, சமையலறையிலிருந்த ஊர்சுலா, ஆபரணப்பட்டறையிலிருந்து அவ்ரெலியானோ என மரக்கூடியிலிருந்த ஜோஸ் அர்காடியோ புயெண்டியாக்கூட வீட்டை உலுக்கியபடி நிலநடுக்கம் தங்களை அழிக்கவந்துவிட்டதாகவே கருதினர். மிகப் பருத்த மனிதரொருவர் வந்திருந்தார். நிதிலைப்படிகளை கடக்க முடியாது சதுரமாய் பருத்த தோள்கள் இடிபட்டன. தன் காட்டெருது கழுத்தில் உதவிக் தேவமாதா வான அவர் மேடிட்டாளை பெரிதாக அணிந்திருந்தான். அவனது வெளியில் தெரிந்த கையும் மார்பும் புரியாத மொழியில் தன்னெங்கும் இடைவெளியின்றி பச்சைகுத்தப்பட்டிருந்தது வலதுபுட்டியில் தாமிர கைகாப்புத் தாயத்து மின்னியது. கோவேறுக்கழுதையின் பிடறிமயிர் போல நீண்டிருந்த தலைமுடி கட்டையாய் இருந்தது. அவனது தோல் வெட்ட வெளியிலும் உப்புக்காற்றாலும் பதனிடப்பட்டதாயிருந்தது. தாடை இரும்பொத்த தன்மை கொண்டிருந்த துயரப் புன்னகையை முகம் உதிர்ப்பதாயிருந்தது. குதிரை சேணை சுற்றுவாரைவிட இருமடங்கு கனமான பெல்ட்டும், தடித்து வெடிப்புற்ற பெரிய பூட்ஸ்தண்டியில் குதிரை லாடம் அடிக்கப்பட்டதாயும் இருந்ததால் அவன் நடந்தாலே பூமிஅதிர்ந்து குலுங்குவதாயிருந்தது. இருக்குமிடம் நிலநடுக்கத்திற்குரிய அறிகுறிகளுடன் பதறவைத்த அவன் நேரே வரவேற்பறை சென்றான்.... குதிரை இருக்கை பையை முதுகிலேற்றி இருந்த அவன் கையில் தாங்கி ஒரு இடிபோல படர்கொடித் தாவரத் தாழ்வாரங்களை அடைந்து அங்கே பூத்தையல் செய்து கொண்டிருந்த அமரந்தாவை பார்த்து ஹலோ என கொலை நடுக்குற வைத்தான். அவளும் அவளோடமர்ந்தபடி பூத்தையலில் ஈடுபட்டவர்களும் அதிர்ச்சியில் வாய்பிளக்க காற்றில் ஊசிகளை தவறவிட்டனர். மீண்டும் சோர்வுடன் ஒரு 'ஹலோ' பின் தான் கொண்டுவந்த குதிரை இருக்கை பைகளை மேசையில் விட்டெறிந்தான். அறைகளைக் கடந்து பின் கட்டை நோக்கி தயக்கமற்றவனாக நடக்கத் தொடங்கினான். தனது படுக்கை அறை வாசலில் நின்ற அவனை பார்த்தமாத்திரத்தில் பதறிய ரெபக்காவுக்கு ஒரு 'ஹலோ'. எல்லா ஐம்புலன்களும் கூர்மையாகி தன் வெள்ளி கொல்லன்பட்டறை வேலை செய்த அவ்ரெலியானோவிற்கு ஒரு 'ஹலோ' ஆனால் யாரிடமும் வேறு எதுவும் அவன் பேசவில்லை. நேராக சமையலறைக்கு சென்றான்... உலகின் வேறு ஏதோ ஒரு மறு மூலையில் தொடங்கிய தன் பயணத்தை 'பெரும் பயணத்தை' அங்கே அவன் முடிவு றவைத்தான். சமையலறை வாசலில் நின்று 'ஹலோ'என அவன் விளித்தபோது ஒரு நொடி ஊர்சுலா வாய் பிளந்து செய்வதறியாது நின்றாள். ஒரு நொடிதான். அவனது கண்களை நேராய் கண்டு ஓவென அழுகைப் பீறிட சென்று கைகளை அகலமாய் விரித்து மாரிககளைக் கூப்பிட முயன்றாள். அவளது கத்தலில் மகிழ்ச்சியும் பொருமலும் ஒருங்கே கலந்திருந்தன. வந்திருந்தது ஜிப்ஸிகளுடன் ஓடிய அதே ஜோஸ் அர்காடியோ சென்றபோது எவ்வளவு ஏழையாக சென்றானோ அதே அளவு பரம ஏழையாக அவன் திரும்பி வந்திருந்தான். அவன் வந்த குதிரைக்கு வாடகை பணம் இரண்டு பெசோக்களை ஊர்சுலாதான் அளித்தாள். கப்பல் மாலுமிகளின் பரிபாஷை பன்றிக்கொழுப்பாய் பூசப்பட்ட விநோத வகை ஸ்பானிஷை எருமையாய் அவன் பேசினான். இவ்வளவு காலம் எங்கே இருந்தாய் என்றவர்கள் கேட்டனர். 'அங்கே வெளியே' என்று மட்டும் தான் சொன்னான். அவர்கள் ஒதுக்கிக் கொடுத்த அறையில் தனது தொங்கு படுக்கையைப் போட்டுக் கொண்டு மூன்று நாட்களுக்கு எழும்பாமல் உறங்கினான். எழுந்து கொண்டபோது பதினாறு பச்சை முட்டைகளை உடைத்து அருந்தியபின் காட்டரீனோ அங்காடிக்கு நேரே சென்றான். அங்கே அவனது பெருத்த பரிமாண உருவம் அவர்களையுறைய திக்குமுக்காட வைத்தது. குறிப்பாக அங்கிருந்த காமக்கிழத்திகள் ஆர்வத்தோடான

அதிர்ச்சியை அனுபவித்தார்கள். இசைத்தட்டை இயக்கவும் அங்கிருந்தோர் அனைவருக்கும் தன் கணக்கில் கரும்பஞ்சாரு மதுவினை ஆளுக்கொரு கோப்பை வழங்கவும் கட்டளை பிறப்பித்தான். இந்திய மல்யுத்தத்தில் அய்ந்து பேரை சேர்ந்தாற் போல தள்ளி அவனால் வீழ்த்த முடிந்தது.... அவனது புஜத்தை அசைக்கவும் முடியாது போன போது அவர்கள், "முடியாது....இப்படி இதுவரை நடந்ததில்லை" என நம்ப முடியாமல் பிதற்றினார்கள். 'நிகோனோஸெடன் கருஸ்' (மந்திர சக்தி கொண்டவன்). காட்டரீனோ 'மந்திரசக்திகளை நம்பாதவன்' தனது கல்லாப் பெட்டி கனமேசையை தனி ஆளாக நகர்த்துமாறும் பன்னிரண்டு பெஸோக்கள் எனவும் மனித பலத்தின் மீது பாரத்தைப் போட்டு பந்தயம் கட்டினான். ஜோஸ் அர்காடியோ அதை மிகவும் இளக்காரமான முறையில் இழுத்தசைத்ததோடு, தலைமேல் லாவகமாய் தூக்கிச்சென்று அலறல் குரல்களுக்கிடையே வீதியில் வீசினான். அதை திரும்பத் தூக்கி வந்து பழையபடி போட்டிட பதினோரு பேர் தேவைப்பட்டனர். விருந்தில் போதையேறிய ஒரு வெப்பத்தருணத்தில் ஒரு இடம் பாக்கியில்லாமல் மாறிமாறி நீலத்திலும் சிவப்பிலுமாய் பலவித மொழி சொற்களால் பச்சைக் குத்தப்பட்ட தனது திட காத்திர உடலை எல்லார் பார்வைக்கும் காட்சியாக்கி பரவசப்பட வைத்தான் அவன். துராசையோடு கவரத்துடித்தபடியே தன்னைச் சூழ்ந்து கொண்ட காட்டரீனோ அங்காடிப் பெண்களை, யாரால் ஆகக் கூடுதலான தொகை தரமுடியுமென அவன் வினவினான். தன்னால் முடியும் என்றவளிடம் இருந்தது மொத்தம் இருபது பெஸோக்கள். பிறகு அவன் பத்து பெஸோக்களுக்கு தன்னை அவர்கள் மத்தியில் குலுக்கல் முறையில் பகிர்ந்திட சம்மதித்தான். அதுவே பெருந்தொகையாக இருந்தது. ஏனெனில் அக் காமக்கிழத்திகள் வருமானமாய் ஈட்டியதே ஒரு இரவுக்கு உயர்ந்த பட்சம் எட்டு பெஸோக்களே ஆனால் அவர்கள் அனைவருமே ஒப்புதல் அளித்தனர். பதினான்கு காகிதத் துண்டுகளில் அவர்கள் அனைவரது பெயர்களையும் எழுதி ஒரு தொப்பியில் இட்டு ஒவ்வொருவராய் ஒரு துண்டெடுத்தனர். கடைசியாய் ஒரு சீட்டு மிஞ்சாமல் இரண்டு மிஞ்சியது.... 'அவை யாருடைய பெயர்கள் என்று அறிவிக்கப்பட்டது.

'ஆள் ஒன்றுக்கு ஐந்து பெஸோக்கள்' ஜோஸ் அர்காடியோ முன் மொழிந்தான். 'நான் இருவரையும் பகிர்வேன்'

தன் வாழ்வுக்கான சம்பாதியத்தை அவன் இப்படி நிகழ்த்தினான். சொந்த நாடில்லாத கப்பல் மாலுமிகளின் குழுவில் கடை ஊழியனாய் தேர்ந்தெடுக்கப்பட்டு உலகை அறுபத்தைந்து முறை வலம் வந்தவன் அவன். அவனோடு படுக்கையை பகிர்ந்திட அன்றைய இரவில் சென்ற காட்டரீனோ காமக்கிழத்திகள் அவனை, அனைவரும் காணட்டுமென்று நிர்வாணமாய் வெளியே அழைத்து வந்தனர். நீலமும் சிவப்பும் ஒன்றோடு ஒன்றாக பின்னிப் பிணைந்து நிறங்குழம்பிய உலகெங்கிலுமான பல்வேறு பல்வேறு மொழிகளின் சொற்களால் பச்சைக் குத்தப்பட்ட அவனது ஆண்குறி, பச்சையெழுத்துக்களால் முற்றிலும் முழு மறைக்கப்பட்டிருந்தது. அதில் சிறிதளவு இடைவெளியும் தெரிவதாயில்லை. அதில்மட்டுமல்ல முன்னும் பின்னும் கழுத்து முதல் பாதம் வரை, பட்டி முதல் முதுகு வழி புட்டம் கடந்து பின் பாதம் வரை ஒரிடம் பாக்கியில்லாது பச்சைக் குத்தப்பட்டிருந்ததை அனைவரும் கண்டனர். குடும்பம் எனும் எந்தக் கட்டுமையைப்பிலும் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ள அவனால் முடியாமலே இல்லை. நாள் முழுவதும் உறக்கத்தில் கழித்தவன் இரவுகளை சிவப்பு விளக்கு மாடங்களில் தன் உடல் பலத்தின் மீது பந்தயங்கள் கட்டியபடி கழித்தான். எப்போதாவது உர்சுலாவின் நச்சரிப்புகளுக்கு செவிமடுத்து உணவு மேசையிலேயே அமர்ந்திடும் போதோ தன் வயிறுகுலுங்க சிரிக்கவைக்கும் வசனத்தன்மையை வெளிப்படுத்துபவனாயிருந்தான்... குறிப்பாக அறியப்படாத நாடுகளில் உலகின் மூலைகளில் நடந்ததன் சாகசங்களை சுவையாக விவரிப்பான். ஜப்பானியக் கடலில் கப்பலோடு மூழ்கடிக்கப்பட்டு செத்த தனது தோழன் ஒருவனின் உடலையே இரண்டு வாரங்கள் தின்று அவன் தன்னை காப்பாற்றிக் கொள்ள வேண்டி இருந்தது.... சூரியவெப்ப இழப்பு வந்து இறந்திருந்த அவனது வெம்மையேறிய கறி, நுண்பொடிகளின் இனிய நறுமணம் வீசிட சுவையும் இனிப்பாரத் தினுடையதாகி இருந்தது. வங்காள வளைகுடாவிலோ நெருப்புயிர்க்கும் கடல் முதலை ஒன்றை பிடித்து வயிற்றை கிழித்துண்ட போது கிளுப்போர்களின் போது மறித்த ஒரு போர் விரனின், தலைக்கவசமும்

இடப்புப் பெத்தான்களும் ஆயுதங்களும் கிடைத்தன. கரீபியக்கடலிலோ கடல் பூதங்கள் கப்பல் பாதையை அரித்தும் அடித்தும் ஊரிலேயே போய்விட்ட நிலையிலும் இவ்வளவும் கடலூடே நிலைத்தோடி செத்தாய் அலைந்து கொண்டிருக்க பாழுமி விக்டர் ஹ்யூகளின் ஆவியை அலைக்கழ முகவரே கவட்டன் தனக்கே உரிய நிகழ்ச்சிகளை அவன் விவரிக்க விவரிக்க அப்போதே நடந்த வண்ணம் இருக்க அலைகளை கடக்டாய் தான் வாசிப்பதான கொலையில் ஊர்களை அந்த பேசையிலேயே முகம் பொத்தி அழுவாள். "உனக்கென்று ஒரு வீடு இங்கே எப்போதும் இருக்கத்தே மகனே..." அவள் விம்முவாள்." இறைச்சிப் பலிகளுக்கு இணையுப் எத்தனை உணவு விஷமாய் கொட்டப்பட்டது"... ஆனால் அணைத்திருக்கும் அடியில் தன்னைவிட்டு ஜிப்ஸிகள் பிரித்தெடுத்துச் சென்ற ஒரு சிறுவன், இப்படியான ஒரு அருவருப்பான தோற்றத்தோடும் விரும்ப ஒண்ணா பழக்கங்களுடனும், புழுதாய் ஒரு பாதி பன்றிக் கறியை தன் பசிய உணவுக்கு தயக்கமின்றி மலையாய் தவிக்க உணவுடன் புழுங்குபவனாய் திரும்பி வரமுடியும் என்பதை மட்டும் அவளால் ஏனோ ஏற்கமுடியவில்லை! அவன் விடும் ஏப்பங்கள் பூக்களை உதிர வைத்தன. சில நேரங்களில் குடும்பத்தின் ஏனையோர்களும் அவ்விதமாகவே நினைத்தார்கள். அவனது மிருகத்தன்மையுடன் கூடிய கக்கு வாந்தி, குதப்பல் உணவுமுறையைக் கண்டு ஏற்பட்ட அருவருப்பை மூடிமறைக்க அமரந்தாவால் முடியவே இல்லை, தனக்கும் அவனுக்குமான உறவின் ரகசியம் அறிந்திடாத அர்காடியோ, தனது அன்பையும் பாசத்தையும் பெற கேள்விகள் பரிவோடு கேட்ட அவனுக்கு எப்போதாவது தயங்கித் தயங்கியே பதிலளித்தாள் ஒரே அறையில் அருகருகே படுத்துறங்கியதை நினைவில் பதித்தபடி தங்களது இறந்த காலச் சிக்கல்களை திரும்பப்பெற செய்த முயற்சி எதுவும் எடுபடவில்லை. ஜோஸ் அர்காடியோ எல்லாவற்றையுமே மறந்திருந்தான், ஏனெனில் கடல் வாழ்க்கை தந்த அனுபவங்கள் வேறு எல்லா சம்பவ அடுக்குகளையும் மூளையிலிருந்து கரைந்தோட வைத்து விட்டது. முதல் பார்வையிலேயே சுருண்டு ஒரேடியாய் வீழ்ந்தவள் ரெபக்கா ஒருத்தியே. முதல்முதலில் தனது படுக்கை அறை கடந்து அவன் செல்வதை பார்த்த மாத்திரத்தில் தனது மூச்சுக்காற்றே எரிமலையாகி வீட்டை வெப்பமூட்டிய அந்த உண்மையான ஆண்மகனோடு ஒப்பிடும்போது, தம் பியெட்ரோ கிரெஸ்பி வெறும் இனிப்பு தடவிய மணம் வீசும் கைகால் முளைத்த வெத்து வேட்டு என்பதை அவளால் அப்போது உணரமுடிந்தது. ஏதாவது சாக்குபோக்கு சொல்லியாவது அவள் அவனது அருகிலேயே இருக்க முயன்றாள். ஒரு சமயம் அவளை ஏற இறங்க ஆழமாய் நோட்டம் விட்டு வெட்கமின்றி ஈர்ப்புடன், "சிஸ்டர்....நீ...நீ...முழுயுவதி சிஸ்டர்" என்று பல் இளித்தான். அவ்வளவு தான் அவள் தன் கொஞ்சநஞ்சமிருந்த நெறியும் பிறழ முழுமையாக கட்டழிவுற்றாள் பழைய நாட்களைப் போலவே வெறு ஆர்வமும் தன்னைத் தின்ன அவள் மண் தின்னவும் சுவர் சுண்ணாம்பு சுரண்டவும் தொடங்கினாள். பேராவும் கொன்றிட மனஉளைச்சல் தாங்காமல் விரலில் தோல் தடிப்பேறும்படி சூப்பிடவும் தொடங்கினாள். மண்புழுக்கள் கிளறியும் பச்சை வாந்தியெடுத்து இரவெல்லாம் உறங்காது இருளை விழித்து அதிகாலை வீடு திரும்பும் ஜோஸ் அர்காடியோ சேரும் வரை தவியாய் தவித்தாள். ஒரு நாள் மதியம் அனைவரும் மதியத் தூக்கத்தில் வெப்பந்தாளாது சுருண்ட போது, அவனது படுக்கை அறைக்கு செல்லாதிருக்க அவளால் தன்னை கட்டுப்படுத்த முடியவில்லை. அறைக்கால் டவுசரில் மேலே விட்டத்திலிருந்து கப்பல் நங்கூர வளையங்களால் பின்னிய இரும்பு சங்கிலியில் அவன் தொங்கவிடப்பட்ட தன் படுக்கையில் கிடப்பதை அவள் கண்டாள். அவனது பல்வகை வண்ணம் கொண்ட நிர்வாண உடலால் பெரும் இச்சை ஏற்பட அவள் ஏதேனும் செய்யும் தவிப்பு பெற்றாள் "மன்னிக்கவும்" அவள் வேறு யார் காதிலும் விழா வண்ணம் தாழ்ந்த குரலில் சொன்னாள், "நீ.... நீங்கள் இங்கே இருப்பீர்கள் என்று தெரியாது". "வா....இங்கே" அவன் அழைக்க அவள் உடனே பணிந்தாள். படுக்கை அருகே உடம்பெங்கும் குளிராய் வியர்த்து குடல்கள் பின்னிட அவள் நின்றாள். ஜோஸ் அர்காடியோ அவளது கணுக்காலினை தன் விரலால் வருடினான்; பின் அவளது முழங்கால்களையும் தொடையையும் அவ்விதமாய் தடவி வருடியபடியே, "ஓ...சிஸ்டர்...குட்டி...சிஸ்டர்" என முணுமுணுத்தான். பெருங்கிளியூட்டியபடி ஒரு பெரும் புயலாய் உடலுக்குள் இடி போல நுழைந்த படியால் தான் இறந்து போகாமலிருக்க அவள் பெரும் பிரயத்தனம் செய்யவேண்டி இருந்தது. அவளது அந்தரங்கத்தை துளைத்தபடி தெறிக்க இரத்தம் படுக்கை விரிப்பில் நிறைந்தப்பட்டதும் கற்பனைக்கும் எட்டாத அந்த பேரின்பம் அவளை ஒரு

பறவையைப் போல படபடக்க வைத்தது. அந்த சுகம் கிடைக்கும் முன்பாகவே முற்றிலும் இறந்துவிடாது பிழைத்தெழ வைத்தற்காக இறைவனை பிரார்த்திக்கும் அளவு சமாளிக்கவும் அவளால் முடிந்தது.

மூன்று நாட்கள் கழித்து ஒரு அய்ந்து மணி பிரார்த்தணையின் போது அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள். ஜோஸ் அர்காடியோ பியெட்ரோ கிரெஸ்பியின் இசை கருவி விற்பனை நிலையத்திற்கு திருமணத்திற்கு முதல் நாள் சென்றான் அவன், பியெட்ரோ சித்தார் வகுப்பு நடத்துவதில் முனைந்திருந்ததைக் கண்டும் காத்திருக்காது அவனருகில் சென்று, "நான் ரெபக்காவை மணக்கப்போகிறேன்" என்றான். அதிர்ச்சியில் மிகவும் சோர்வுற்ற பியெட்ரோ சித்தாரை மாணவர்களில் ஒருவனிடம் கொடுத்து விட்டு வகுப்பை உடனடியாக ரத்து செய்தான். இசைக்கருவிகளால் சூழப்பட்ட அந்த அறையில் இருவருமாய் தனியாய் இருந்த சமயம், பொம்மைகளுக்கு மத்தியிலிருந்து பியெட்ரே கிரெஸ்பி வாய்திறந்தான்:

"அவள் உனது சகோதரி"

"அது பற்றி எனக்குக் கவலை இல்லை" ஜோஸ் அர்காடியோ பதிலுரைத்தான். பூவாசனை திரவத்தில் ஊற வைத்து எடுக்கப்பட்ட கைகுட்டையை வைத்து தனது கண் புருவங்களை அழகுபடுத்தினான் கிரெஸ்பி.... பின்

"இது இயற்கைக்கு எதிரானது...." அவன் விளக்கினான், "தவிர, அது சட்டத்திற்கும் எதிரானது."

பியெட்ரோவின் விளக்கங்களை விட அதிகமாய், அவனது துயரம் ததும்பும் முகவாட்டமே ஜோஸ் அர்காடியோவை பொறுமை இழக்க வைத்தது.

"எத்தனை முறை முடியுமோ அத்தனை முறை... உன் இயற்கையை நீயே.. ஆண்டு அனுபவி... எனக்கு கவலை கிடையாது, "ஜோஸ் அர்காடியோ பற்களை கடித்தான்... "ஏதாவது ரெபக்காவிடம் வாய் திறக்கக் கூடாதென எச்சரிக்கவே நான் வந்தேன்"

ஆனால் அவனது முரட்டுத்தனமான முகப்பாவனை பியெட்ரோவின் கண்கள் குளமாவதைக் கண்டு உடைந்து தளர்ந்தது.

'இதோ பார்' மாறிப்போன தனது குரலில் அவன் சொன்னான், "உனக்கு உண்மையிலேயே என் குடும்பம் பிடித்திருந்தால் நீ... உனக்கு... அமரந்தா இருக்கிறாள்"

ஞாயிற்றுக்கிழமை மதபோதனையின் போது அருட்தந்தை நிக்கானோர் ஜோஸ் அர்காடியோவும், ரெபக்காவும் அண்ணன் தங்கை அல்ல என்பதைச் சொல்லி தெளிவுபடுத்தினார். ஆனால் திருமணமாகி தேவாலயத்திலிருந்து அவர்கள் வந்த போது ஊர்சுலா அவர்கள் இருவரையும் வீட்டிற்குள் வரவிடாமல் தடுத்து நிறுத்தினாள். விவரிக்கமுடியாத ஒரு மரியாதைக்குறைவு குடும்பத்திற்கு ஏற்பட்டு விட்டதாகவே அவள் கருதினாள். வீட்டிற்குள் கால் வைக்க அனுமதிக்காதது மட்டுமல்ல அவளைப் பொருத்தவரையில் அதன் பிறகு அவர்கள் இறந்தபோய் விட்டவர்களே எனவும் நினைத்தார்கள். எனவே அவர்கள் இடுகாட்டிற்கு மறுபுறத்தில் ஒரு வீட்டில் வாடகைக்கு தங்கி விட்டார்கள். ஜோஸ் அர்காடியோவின் தொங்கு படுக்கையைத் தவிர அவர்களிடம் வேறு எந்த வீட்டு உபயோக சாமான்களும் இருக்கவில்லை உண்மையில் திருமணமான இரவில் தனது செருப்பிற்குள் அடைந்து கிடந்த தேள் கொட்டி வலி பொருக்காது ரெபக்கா நாக்குழற பேச்சிழந்தாள். என்றாலும் ஊரெங்கும் பழித்துரைக்கப்பட்ட தேனிலவு நடக்காமலிருக்கவென எதுவும் அவர்களை தடுக்க முடியவில்லை. அக்கம்பக்கத்தவர்களும் ஊரும் ஒரு இரவில் அடுத்தடுத்து எட்டு முறையும் மதிய தூக்கத்தின் போது மூன்று முறையும் கேட்ட பெரும் இன்பக் கூச்சலும் ஆரவாரமும் காமஒலங்களும் செத்துறங்கும் இடுகாட்டு ஆன்மாக்களை எழுப்பி அமைதி இழக்கச் செய்து விடக்கூடாதேயென பயங்கொண்டனர்.

அவ்ரெலியானோவ் ஒருவர் மட்டுமே அவர்கள் மீது அக்கறை கொண்டிருந்தார் ஜோஸ் அர்காடியோ, தனக்கே அறிவு வந்து வீட்டின் முன் படர்ந்திருந்த வெட்ட வெளியை உழுது செப்பனிட்டு வேலை செய்யத் தொடங்கும் வரை பணமும், வீட்டு உபயோகப் பொருட்களையும் வாங்கிக் கொடுத்தார். அதே சமயம் தான் வெறிகொண்ட நிலையான வெறுப்புணர்வை ரெபக்கா விஷயத்தில் மாற்றிக் கொள்ள மட்டும் அமரந்தா முன்வரவே

இல்லை. அவளால் கற்பனை செய்தும் பார்க்க இயலாத பெருந்திருப்திகரமான ஒன்றை வாழ்க்கை அவளுக்கு பரிசாக வழங்கியது. ஊர்சுலாவிடமிருந்து ஆதரவும் முயற்சியும் கைகூட அது நடந்தது. அவளுக்கு வெட்கக்கேடான நிலையிலிருந்து வீட்டை எப்படி மீட்டெடுப்பதென புரியவில்லை என்பதால் பியெட்ரோ கிரெஸ்பி, செவ்வாய் கிழமைகளில் வீட்டிற்கு உணவருந்த மதியம் மீண்டும் வரத் தொடங்கினான் தனது மதிப்பு மிக்க சாந்தத்துடன் தோல்வியை தாங்கிக் கொண்டவனாக. இன்னமும் கூட குடும்பத்தின் மீதான தனது மதிப்பை வெளிக்காட்டிட கருப்பு ரிப்பனை தொப்பியில் அணிந்திருந்தான். ஊர்சுலா மீது தான் வைத்திருந்த மதிப்பின் அடையாளமாய், அவளுக்கு விலையுயர்ந்த போர்ச்சுகீஸ் மத்திக்கருகள் முதல் வருக்கிய ரோஜாபழச்சாறு வரை, ஏன் ஒருமுறை மிக அழகான மணிலா கம்பளித்துண்டுக்கூட, பரிசுப்பொருளாய் கொண்டு வந்து கொண்டே இருந்தான். கடுமையாய் உழைக்கும், மிகவும் அனுசரணையோடு பார்த்துக்கொள்ளும் அவள் புதிய கவனத்தோடு பியெட்ரோவை அமரந்தா கவனித்து கொண்டாள். அவனது தேவைகளை முன் உணர்ந்து சட்டையிலிருந்து நூல், புழுதி ஒட்டிட துடைத்து கைப்பித்தானை சரிசெய்து, அத்தோடு நில்லாது அவனது பிறந்த நாளைக்கு வழங்க அவனது முதலெழுத்து பொறித்த ஒரு டஜன் கை குட்டைகள் தயாரித்து கொடுத்தும் அவள் தன் அக்கறையை வெளிக்காட்டினாள். செவ்வாய் கிழமைகளில் மதிய உணவிற்கு பின் வரவேற்பறையில் அவள் தனித்திருந்து பூவேலைகளில் ஈடுபட, அவளுக்கு பியெட்ரோ கிரெஸ்பி மிகவும் மகிழ்ச்சியான துணையாய் வெகுநேரம் அளவளாவியபடி உடனிருக்கத் தொடங்கினான். பியெட்ரோ கிரெஸ்பியை பொறுத்தவரை ஒருகாலத்தில் குழந்தை என்றே பாவித்துப் அவ்விதமாக அவளை நடத்தியும் வந்த பெண் தான் இப்போது அவனது ஒரே ஆறுதலாக இருந்தாள். சுபாவத்தில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளத் தெரியாதவளாக இருந்த போதிலும் உலகின் பல்வேறு விஷயங்கள் குறித்த விசேட ரசிப்புத் தன்மை கொண்டிருந்ததோடு வெளியே தெரியாத ஒரு வகையான மென்மையும் நேர்த்தியும் அவளெங்குமிருந்தது. ஒரு செவ்வாய் மதியம் சீக்கிரம் நடக்குமென பதில் சந்தேகமே யாருக்கும் வராத அன்று அவன் பியெட்ரோ கிரெஸ்பி தன்னை மணந்து கொள்ளுமாறு அமரந்தாவை மன்றாடினான். அவள் தனது வேலையை நிறுத்திடவில்லை. வெட்கத்தால் காதுவரை சிவந்த படபடப்புந்திட அவள் காத்திருந்து பின் முதிர்ந்த சாந்தம் தவழும் குரலில் வெளிப்பட்டாள்.

'உன்னைதான்...கிரெஸ்பி,' அவள் சொன்னாள், "ஆனால் அதற்கு முன் நாம் ஒருவரை ஒருவர் நன்கறிய வேண்டும்... முடிவுகள் எடுப்பதில் நாம் அவசரமே காட்டக்கூடாது"

ஊர்சுலாவோ குழப்பமடைந்தாள். பியெட்ரோ மீது அவளுக்கு இருந்த அளவற்ற பிரியம் ஒருபுறம், மறுபுறமோ, ஊரே அறிந்த ரெபக்கா உடனான நீண்ட அவனது நிச்சயதார்த்தம். அதன்பின் இத்திருமணத்தை ஒப்புவது ஒழுக்க விதிகளுக்கு ஒவ்வாததென்று அவளுக்கு பயமேற்பட்டது. நல்லதா, கெட்டதா என அவளுக்கு குழப்பம் ஏற்பட்டது. ஆனால் கடைசியில் அவள் ஏற்றாள்... தான் நினைத்தது ஏனெனில் அவளது எண்ணக்குறிப்புகளை பகிர்ந்து கொள்வார் யாருமில்லை. இறுதியானது போல் தோன்றிய தன் பலமான முடிவின் மூலம் அவ்ரெலியானோவ் அவளை மேலும் குழப்பினார்.

"திருமணங்கள் பற்றியெல்லாம் யோசிக்க இது ஏற்ற காலமில்லை"

அந்த அவரது கருத்து, மாதங்கள் சில கடந்து சென்ற பின்தான். அந்த நேரத்திற்கு திருமணத்தையும் குறை கூறி விடாது, யுத்தம் குறித்த அர்த்தமும் ஏற்பட்டுவிடாது வெளியிட முடிந்த ஒரே கருத்து என்று அவளுக்கு புரிவதாயிருந்ததுதமதே ஒரு கொலைப்படையை எதிர் கொண்டு நின்ற அப்பொழுதில், தன்னை அவ்விடத்தில் கொண்டு வந்து சேர்ப்பித்த, தவிர்க்க இயலாததாகவும், சரி செய்ய முடியாதவையும் போன, ஒன்றோடு ஒன்று சுற்றியுள்ள பல சம்பவங்களின் சங்கிலித் தொடர் வரிசைபற்றி கோர்வையாய் சிந்திக்க இயலாத பெரும் அதிர்ச்சியுமே அவ்ரெலியானோவிற்கு அப்போதும் ஏற்பட்டது. ரெமெடியாஸின் அகால மரணம் அவர் பயந்த அளவிற்கு மனத்தளர்ச்சியை உண்டு பண்ணிவிடவில்லை. பெண் துணை இன்றி வாழ்ந்திட பிடிவாதமான முடிவு எடுத்த நாட்களில் ஏற்பட்டது போலவே அந்த மரணம் ஏற்படுத்திய துக்கம் ஒரு ஆத்திரமாக மாறி அவருக்குள் நடுக்க தனிமையாய் ஆழத்தில் கரைந்து மறைந்து இருந்தது. தன

வேலைகளில் முழுமையாய் ஈடுபடத் தொடங்கிய அவர் தனது மாமனாரான டான் அப்போலினாரோடு இரவில் பகடைக் காய்கள் உருட்டிதாயமாடுவதை மட்டும் நிறுத்தாமல் தொடர்ந்தார். துக்கம் முற்றிப்போய் அவ்வீட்டில் இருவருக்கும் இடையே ஒருவகை நட்பு அரும்புவதாய் அவர்களுக்குள் சம்பாஷணைகள் தொடர்ந்து லவின. "மீண்டும் மணம் செய்து கொள் அவ்ரெலியனோ", மாமனார் கூறுவார், "நீ தேர்ந்தெடுத்துக் கொள்ள என்னிடம் இன்னும் ஆறு மகள்கள் உள்ளனர்" தேசியத் தேர்தல் பணியாய் தலைநகர் சென்று திரும்பிய ஒரு குறிப்பிட்ட நாளில் அவர் டான் அப்போலினோர் மாஸ்கோட் மிகுந்த கவலையோடிருந்தார். அந்நாட்களில் அவர் அடிக்கொருதரம் தலைநகருக்கு அழைக்கப்பட்டார். நாட்டில் உருவாகி வந்த அரசியல் சூழல் அவரை கலங்க வைத்தது. லிபரல் கட்சிக்காரரர்கள் யுத்தத்திற்கு செல்ல அவரை கன்சர்வேடிவிற்கும் லிபரல் கட்சி என்பதற்குமான வித்தியாசங்கள் அவ்ரெலியானோவ் ரொம்ப அறிந்திருக்கவில்லையாதலால் அது குறித்து மேலோட்டமான பாடங்கள் டான் அப்போலினோர் நடத்தினார். கன்ஸர்வேட்டிவ்களான மதவாதிகளோடு ஒப்பிடுகையில் லிபரல்கள், பாதிரியார்களை தூக்கிலிடத் துடிப்பவர்கள். சமூக வித்தியாசமின்றி திருமணச் செய்யவும், விவாகரத்தை சரளமாக்கி சட்டமியற்றவும், கள்ளப்பிறப்பு பிறந்த குழந்தைகளை சட்டப்படியான குழந்தைகளுக்கு நிகராக வேண்டவும் எல்லாவற்றிற்கும் மேல் நாட்டை இப்படியோ ஒரே நாடாக இல்லாது மாகாணங்களாக உடைத்தாளவும் துடிப்பவர்கள் லிபரல்கள். அது ஆட்சி அதிகாரத்தை மையத்திலிருந்து உடைத்து விடும். ஆனால் மதவாதிகளான கன்ஸர்வேடிவ் கட்சிகாரர்களோ மிகவும் உயர்ந்த குடியில் பிறந்தவர்கள்..... ஆண்டவரிடமிருந்து அதிகாரத்தை நேரடியாக பெற்றவர்கள்... குடும்ப மரியாதை, ஒழுக்கம், பொது நீதியே அவர்களுக்கு முக்கியம். கிருஸ்துவின் நம்பிக்கையாளர்களான அவர்கள், அதிகாரமையத்தின் மீதான கொள்கை வாதிகள் புனித பூமியான நாட்டை சுய அதிகாரமிக்க குட்டிப் பிரதேசங்களாய் உடைக்க ஒரு போதும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். தனது மனிதநேய சுபாவத்தின் காரமணாக இயற்கையாய் பிறந்த குழந்தைகள் நலன் கருதி அவ்ரெலியனோவின் ஆதரவு லிபரல்களுக்கே மானசீகமாய் இருந்தது என்றாலும், கண்ணிற்குப் புலப்படாத கைகளால் தொட்டறிய முடியாத ஒன்றை குறித்து இரண்டாக பிரிந்து பெரும் யுத்தத்தில் ஒருவரை ஒருவர் வெறுப்போடு எதிர்கொள்ள முடியுமென்பது அவரால் நம்ப முடியாததாயிருந்தது. அரசியல் மீது எவ்வித விருப்பப்பாடும் இல்லாத ஒரு ஊருக்குள் வந்து தேர்தலைத் திணித்து ஒரு சார்ஜண்ட் அந்தஸ்து கொண்ட அவர் டஜன் ஆயுதமேந்திய காவல்துறை அனுப்பட்டது ரொம்பவும் சிறிய விஷயத்தை அர்த்த பெரிதுபடுத்துவதாக அவருக்குப்பட்டது. ஊரில் வந்திறங்கியதோடு அவர்கள் நின்றுவிடவில்லை. வீடுவீடாக சென்று அதிகாரத்தை காட்டி துப்பாக்கி முனையில் வேட்டைக் கருவிகள், வெட்டு அரிவாள், மரம் வெட்டி என சமையலறை கத்தி கூட விடாமல் அவர்கள் கைப்பற்றி அபகரித்தார்கள்... மிதவாத கன்சர்வேடிவ் வேட்பாளர் பெயர்கள் தாங்கிய நீலவர்ண வாக்குச் சீட்டையும், தீவிரவாத லிபரல் வேட்பாளர் பெயர் தாங்கிய சிவப்பு தேர்தல் வாக்கு சீட்டுகளையும் இருபத்தோரு வயதான ஆண்களுக்கு கொடுப்பதற்கு முன்னால் அவர்கள் அதை செய்தனர். தேர்தலை முன்னிட்டு டான் அப்போலினோர் மாஸ்கோட் தானே நேரடியாக தடை உத்திரவுகள் போட்டார். தேர்தல் நாளில் மதுபானங்கள் விற்கவும் ஒரே குடும்பத்தினரல்லாத மூன்றுக்கு மேற்பட்டோர் கூடவும், கட்டாயத் தடை உத்திரவு அமுலானது. தேர்தல் எவ்வித அசம்பாவிதம் இன்றி அமைதியாய் நடந்தது. ஞாயிறு காலை எட்டு மணிக்கு சதுக்கத்தில் மரப்பெட்டிப் பெட்டிகள் வைக்கப்பட்டன. வாக்களிப்பு முற்றிலும் சுதந்திரமாய் எவ்விதமான தடங்கலுமின்றி நடந்தது என்பதை அவ்ரெலியானோவே பின் நாட்களில் ஒப்புக்கொண்டார். ஏனெனில் அவரும் அவரது மாமனாருக்கு உதவியாக நேரடியாக தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்தார். யாருமே ஒரு முறைக்கு மேல் வாக்களிக்கவில்லை. மாலை நான்கு மணிக்கு தண்டோரா போட்டு வாக்களிப்பு முடிவுக்கு வர டான் அப்போலினோர் மாஸ்கோட் பெட்டிகளை மூடி அரக்கு வைத்தார். பின் அவற்றின் மீது முத்திரைச் சீட்டுகளை ஒட்டி கையொப்பமிட்டார். ஆனால் அன்றைய இரவில் பகடைத்தாயம் ஆடும்போது காவலனை அழைத்து வாக்குகளை எண்ணிப்பார்த்து விடலாமென பெட்டிகளின் முத்திரைகளை உடைக்க உத்திரவிட்டார். அவற்றில் நீல மற்றும் சிவப்பு வாக்குச் சீட்டுகள் கிட்டத்தட்ட

சம அளவில் இருப்பதைக் கண்டார்.... ஆனால் சார்ஜெண்ட் அவற்றில் பத்தே சிவப்பு சீட்டுகள் தவிர மற்றவற்றை எடுத்து நீல சீட்டுகளை அதே எண்ணிக்கையில் சேர்த்தான். பிறகு அவர்கள் மீண்டும் புதிய அரக்குகள் வைத்து மூடி முத்திரை சீட்டுகளை ஒட்டினார்கள் மறுநாள் முதல் காரியமாக அவை தலைநகருக்கு அனுப்பப்பட்டன. 'லிபரல்கள் அடாவடி யுத்தத்திற்கு தான் செல்வார்கள்' அவ்ரெலியானோவ் சொன்னார். டான் அப்போலினோர் தனது டாமினோக்கள் மீதே கவனமாயிருந்தார். "இப்படி வாக்குச் சீட்டுகளை மாற்றியதால் தான் அப்படி நினைக்கிறாயென்றால் அது சரியல்ல" அவர் சொன்னார், "ஏனெனில் நாம் தேவையான அளவு சிவப்பு சீட்டுகளையும் விட்டுவிட்டதால் குற்றச்சாட்டுகளுக்கு இடமில்லை". எதிரணியில் இருப்பதற்கான வசதி குறைவை அவ்ரெலியானோவ் புரிந்து கொண்டார். "நான் மட்டும் லிபரலாக இருந்தால் இந்த வாக்குசீட்டு விவகாரத்திற்காகவே யுத்தத்தில் குதிப்பேன்" அவர் ஒரு தீர்மானம் போல கூறினார். தனது மூக்குக் கண்ணாடி வழியே அவரை நேராக கண்ட மாமனார், "ஓ...இதோ பார்...அவ்ரெலிட்டோ", அவர் சொன்னார் "நீ ஒரு லிபரலாக இருந்தாலும் சரி, நீ என் மருமகனாக 'அவ்ரெலிட்டோ' இருந்தாலும் சரி...இங்கே வாக்குச்சீட்டு மாற்றப்பட்டதை எதையும் நீ பார்க்கவில்லை தெரிகிறதா"

ஊரில் பெரிய அதிருப்தியை ஏற்படுத்தியது தேர்தல் முடிவுகள் கூட இல்லை தேர்தலை சாக்காக வைத்து வீடுவீடாக பிடுங்கப்பட்ட கத்திகளும் அரிவாள் மனைகளும் திருப்பி ஒப்படைக்கப்படவில்லை என்பதே. அவரது மாமனாரிடம் தன் சிபாரிசை பயன்படுத்தி வீட்டு அரிவாள்மனைகளை மீட்டுத் தருமாறு அவ்ரெலினோவை சில பெண்கள் சந்தித்துக் கேட்டுக் கொண்டார்கள். கண்டிப்பான ரகசியமாக டான் அப்போலினோர் மாஸ்கோட் அவ்ரெலியானோவிடம் சொல்லி விட்டார், அந்த ஆயுதங்கள், லிபரல் கட்சியினர் யுத்தத்திற்கு தயாராகி வருவதை நிரூபிக்கவே கைபற்றப்பட்டன. அவர் கூறிய விதமும் அதிலிருந்த வெறுப்புணர்வும் அவ்ரெலியானோவை பதறி அஞ்ச வைத்தன. அவர் அப்போது எதும் பதிலளிக்க வில்லை... ஆனால் சில இரவுகள் கழித்து ஒரு இரவு தன் நண்பர்களுடன் இருந்த போது, ஜெரினல்டோ மார்க்வெஸூம் மாக்னி பிஸ்கோ விஸ்பாலும் எனையச் சிலருடன் கைபற்றப்பட்ட கத்திகள் குறித்து பேசியபோது; அவர்கள் அவரிடம் கூட்டமாக அவர் லிபரல் ஆளா, கன்ஸர்வேட்டிவ் மிதவாதியா எனக்கேட்டனர். அவ்ரெலியானோவ் சற்றும் தயங்கவில்லை.

"நான் எதாவது ஆகியே ஆகவேண்டுமெனில், நான் லிபரலாகவேன்" என்றவர் கூறினார், "ஏனெனில் கன்ஸர்வேட்டிவ் மிதவாதிகள் ஏமாற்றுப் பேர்வழிகளாக இருக்கிறார்கள்"

மறுநாள் தன் நண்பர்களின் வற்புறுத்தலால், டாக்டர் அலிரியோ நோகுயராவிடம் இல்லாத பெருங்குடல் வலிக்கு வைத்தியம் பார்க்கச் சென்றார். நேரடி உண்மையிலிருந்து விலகி சாக்குபோக்காய் வெளிப் பொய்யுடன் செயலாற்றுவதன் அர்த்தம் கூட அவருக்கு விளங்குவதாயில்லை. டாக்டர் அலிரியோ நோகுயரா சில ஆண்டுகளுக்கு முன் ருசியற்ற மாத்திரைகள் அடுக்கிய தன் அலமாரியுடன் மெக்காண்டோவில் வந்து குடியேறி இருந்தார். அவரது மருத்துவ முழக்கம் அனைவரையும் கவருவதாக இருந்தது. முள்ளை முள்ளால் தான் எடுக்க முடியும். ஆனால் அந்த ஆள் ஒரு போலி மருத்துவன். மருத்துவன் என்ற அவரது அப்பாவித் தோற்றத்திற்கும் கௌரவத்திற்கும் பின்னே அவர் ஒரு பயங்கரவாத இயக்கவாதியாக இருந்தார். அய்ந்தாண்டு கால படுகாயங்கள் பல களத்தில் கிடைத்ததை கால் உடைந்து வந்த தழும்புகள் பூட்ஸ்கள் மறைக்க வல்லமையாய் இருந்தன. முதல் கூட்டரசு சாகசங்களின் போது சிறை பிடிக்கப்பட்டு சிறைச் சாலையிலிருந்து குராகுவோவிற்கு உலகில் பிறந்து பெரும்பாலும் வெறுத்த ஒரு கோட்டில் தப்பினார். மதகுரு நீண்ட கால சுயநாடுகடத்தலுக்கு முடிவில், அண்டிலிஸ் தப்பிய கரீபியாவின் ஆவலுக்கு தீவிரவாதிகளும் குராகுவோவிற்கு வரவழைக்கப்பட்டுள்ள செய்தியால் மகிழ்வுற்று, கடத்தல்காரர்களின் பெரும் படகில் பயணித்து, ரியோ ஹாச்சாவில் தன் சர்க்கரை கட்டிகளினாலான மாத்திரைகள் நிரம்பிய பாட்டில்களுடனும், லிப்ஸிக் பல்கலைக் கழகம் வழங்கியதாக அவரே தயாரித்துக் கொண்ட போலிப்பட்டயத்துடனும் வந்திறங்கினார். ஆனால் ஏமாற்றத்தினால் அவருக்கு அழுகை பீறிட்டது. கூட்டாட்சிவாதிகளின் போராட்டம் நிச்சயமென நினைத்து வெறியோடு வந்தவர். எதோ தேர்தல் வாக்குறுதியாய் அந்த போரா

வெறி நீர்த்துப்போயிருப்பதை கண்டார். கூட்டாட்சி லிபரல் யுத்தத்திற்கு நாடே தயாராக இருப்பதாகவும் வெடிகுண்டு ஒன்றின் மருந்தாய் இடிப்பேற்றப்பட்டதாய் நாட்டை விட்டு ஓடிவந்தவர்கள் கூறியது உண்மையல்ல என வருந்தி தனக்கு வயதேறிப் போக, போலி ஹோமியோபதி மருத்துவராக அவர் தஞ்சமென புகுந்து வாழ, மெக்காண்டோவை தேர்தெடுத்தார். சதுக்கத்திற்கு ஒரு புறம் வாடகைக்கு எடுத்த வழி சிரிப்பால் குப்பி மாதிரியான வடிவ அறையில், எல்லா வகை மருந்துகளையும் உண்டு நோய் குணமடையாது போன எல்லா வகையானவர்களும் கடைசியாய் சர்க்கரை கட்டியிடம் தஞ்சமடைய அவரிடம் வந்தார்கள். அவர் மிகப் பொறுமையோடு தனது போராட்ட குணத்தை பதுக்கி வைத்தபடி டான் அப்போலினோர் மாஸ்கோட் ஒரு பெருந்தலை ஆகும் வரை... நுரையீரல் மூச்சிழுப்பு நோயோடு போராடியும் பழையவைகளை துணை கூறியபடியும் காலங் கழிக்கலானார். தேர்தல் சூழல் அவரது பழைய போராட்டத்தை கிளறிவிட்டு புதிய வாய்ப்பை நல்கியது. கடுஞ்சிக்கல் கொண்ட பாதைக்கு ஒரு இழையாய் அது பயன்படலாயிற்று. அரசியலின் அடிப்படை ஏதும் தெரியாத அந்த சிறு நகரத்தின் இளைஞர்களை தொடர்பு கொண்டு மெல்ல திட்டமிட்டு தன் ரகசிய பிரச்சாரத்தை வெற்றிகரமாய் அவர் நிகழ்த்தினார். டான் அப்போலினோரை துறைக்கு வைத்த சிவப்பு வாக்குசீட்டுகளின் அதீத எண்ணிக்கை அவரது எற்பாடு தான். தேர்தல்களால் எந்த பயனும் இல்லை என்பதை தனது சீடர்களுக்கு காட்டிடவே அவர் வாக்களிக்க வைத்தார். "நமக்கு சரியான நேரடி பலன் தருவது வன்முறைதான்". அவ்ரெலியானோவின் நண்பர்கள் பலரும் கன்ஸர்வேட்டிவ்களை அழித்தொழிப்பதில் சாகச திருப்தியோடு ஆர்வம் காட்டினாலும் அவர்களுக்கு அவரை அதில் இணைப்பதில் தயக்கம் இருந்தது அவர் அதிகார உச்சத்தின் உறவு முறை என்பதால் மட்டுமல்ல... அவரது அமைதியும், தனிமை நாடும் இயல்பாகவும் தான். தனது மாமனாரினது வழிகாட்டுதலின் காரணமாய் அவர் நீலச்சீட்டு சாக்கு அளித்ததாகவும் அறியப்பட்டிருந்தது. எனவே தனது நிலைப்பாட்டை அவர் வெளிகாட்டாது அகஸ்மாத்தாக கிடைத்த வாய்ப்பினால் தான் என்பதோடு தனக்கில்லாத ஒரு வலிக்கு மருத்துவம் பார்த்துக்கொள்ள டாக்டரிடம் வந்ததும் ஆர்வமேலீட்டாலும் மனம் போன போக்கிலும் தான். ஒரு குகைபோன்ற அறையில் மெழுகு எரிந்து நாற்றமெடுத்து கருத்த சிலந்தி வலைகளுக்கு நடுவே மூச்சிறைத்த போதெல்லாம் சீட்டியொலி யெழுப்பிய நுரையீரல் கொண்ட ஒரு உடும்பைத் தான் அவர் கண்டார். உள்ளே நுழைந்ததுமே சன்ன செக்கு அழைத்து சென்று விழிகளை பரிசோதித்தவரிடம், "அது அங்கேவ்" என்றும் மற்றும் நண்பர்களின் சிமிக்கை வாசகங்களையும் கூறிவிட்டு "இங்கே... குடலடியில்... இந்த வலி தூங்கவிடாமல் செய்கிறது" என்றார். வெயில் அதிகம் என்பது போல சன்னலை முற்றிலுமாய் சாத்திவிட்டு டாக்டர் நோகுயரா, அவருக்கு சாதாரண முறையில் கன்சர்வேட்டிவ் மிதவாதிகளை கொன்று விடுவது தான் நாட்டிற்கு ஒரு தேச பக்தி கொண்டவர் செய்ய வேண்டிய உடனடித் தொண்டென விவரித்தார். தன் சட்டைப் பையில் அவரளித்த மாத்திரை குப்பியை அவ்ரெலியானோவ் பல நாட்கள் எங்கு சென்றாலும் வைத்திருந்தார். இரண்டு மணிநோக்கிற்கு ஒரு முறை மூன்று வில்லைகளை வெளியே எடுத்து வாயில் போட்டு குதப்பி முழுங்குவதை வழக்கமாக்கிக் கொண்டார். டான் அப்போலினோர் மாஸ்கோட், அந்த திடீர் ஹோமியோபதி நம்பிக்கையை கேலி செய்தாலும், ரகசிய திட்டம் அறிந்த நண்பர்கள் தங்களுக்குள் அதையே அடையாளமாய் பகிர்ந்தனர். கிட்டத்தட்ட மெக்காண்டோவை கண்டடைந்தவர் தம் மகன்கள் அனைவருமே கூட்டத்தில் இணைக்கப்பட்டனர். ஆனால் எந்த ரகசிய திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோமென்பதை அவர்களில் யாருமே சரியாக அறிந்திருக்கவில்லை. அவ்ரெலியானோவ் மட்டும், டாக்டரை சந்தித்த அன்றே செயல் திட்டத்தை அனுமானித்து விட்டிருந்தார். உண்மையில் மிதவாத கன்ஸர்வேட்டிவ்களை அழிப்பது அவருக்கு திருப்தி அளித்த போதிலும் திட்டத்தை அறிந்து அவர் மிகுந்த அச்சமுற்றார். டாக்டர் நோகுயரா தனி மனித படுகொலைகளையே எழுச்சியென நம்புகிறவராயும் அதையே போதிப்பவராயும் இருந்தார். மிதவாதிகளை அப்புறபடுத்த நாடெங்கும் ஒரே நாளில் அனைத்து கன்ஸர்வேடிவ் ஆட்களையும் தனித்தனியே குடும்பத்தோடு கொலைசெய்து விட்டால் போதுமானதென அவர் கருதினார். வேரோடு மதவாத இயலை அழித்திட அதுவே வழி. டான் அப்போலினோர் மாஸ்கோட், அவரது மனைவி மற்றும் ஆறுமகள்கள் அந்த கொலை

பட்டியலில் இருந்தார்கள் என்பதைச் சொல்லத் தேவையில்லை

"நீங்கள் லிபரலும் இல்லை ஒன்றுமில்லை.... நீங்கள் ஒரு மாடுவெட்டும் ஆள்.... "அவ்வளவே...." அவ்ரெலியானோவ் உணர்ச்சிவசப்படாமல் கூறினார்


"அப்படியானால்" அதே அளவு வழுவமைதியோடு டாக்டர் பதிலுரைத்தார், "அந்த மாத்திரை குப்பி இனி உங்களுக்குத் தேவை இல்லை. அதை திருப்பித் தந்து விடுங்கள்"

ஆறு மாதங்களுக்கு பிறகே, அவ்ரெலியானோவ் கேள்விப்பட்டார்; டாக்டர் அந்த இடத்திலிருந்து, கைவிடப்பட்ட மெய்யுணர்விற்கே முக்கியத்துவம் தரும், எதிர்காலமே இல்லாத அடிமை எண்ணம் மேலோங்கும் சுபாவம் கொண்டவரெனவும் தனிமை வாழ்க்கைக்கு இயக்கம் லாயக்கற்றதெனவும், வெளியேற்றிவிட்டிருந்தார். சதித்திட்டத்தை வெளியிட்டு விடுவாரென பயந்து அவர்கள் அவரை சூழ்ந்த வண்ணமே இருந்தார்கள் அவ்ரெலியானோவ் அவர்களை அமைதிப்படுத்தினார். ஒருவார்த்தையும் அவரிடமிருந்து வராது. ஆனால், மாஸ்கோட் குடும்பத்தை கொலை செய்ய அவர்கள் கூடும் இரவில் அங்கே அக்குடும்பத்தை காப்பாற்ற கதவை உடைத்துக் கொண்டு அவர் இருப்பார். அவர் காட்டிய அந்த தீர்மானமான முடிவால் சதித்திட்டம் காலவரையன்றி தள்ளிவைக்கப்பட்டது, அந்த நாட்களில் ஒன்றில் தான் ஊர்சுலா, அமரந்தாவிற்கும், பியெட்ரோவிற்குமான திருமணம் குறித்து அவரிடம் வினவினாள். அதற்குதான் அவ்ரெலியானோவ் இது திருமணம் குறித்து யோசிக்கும் காலமல்ல என்று பதிலளித்தார். ஒரு வார காலத்திற்கு அவர் பழைய கைதுப்பாக்கியை சட்டைக்கடியில் மறைத்து வைத்தே இங்குமங்கும் சென்றார். தனது நண்பர்கள் மீதும் அவருக்கு ஒரு கண் இருந்தது. மதியத்தில் தங்கள் வீட்டை ஒருவாறு சரி செய்து கொண்டிருந்த ஜோஸ் அர்காடியோ—ரெபகா தம்பதிகளோடு காப்பியருந்தி நேரங்கழிக்க அவர் செல்வார். மதிய உணவு நேரத்திலோ பெரிய மனிதனாக வளர்ந்து விட்டிருந்த அர்காடியோவோடு கலந்துரையாடுவார்... அவனோ யுத்தத்தின் வருகை பற்றிய பேரார்வத்திலிருந்தான். பள்ளியில் தன்னை விட வயதான மாணவர்கள் அவனுக்கு இருந்தார்கள்... பேசவும் வார்த்தை வராத குழந்தைகளிடம் கூட அவன் சகஜமாயிருக்கவும் செய்தான். லிபரல் காய்ச்சல் எங்கும் பரவியது. ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தின் போது சுதந்திரமாய் காதல் கேளிக்கைகள் அனுமதிக்காத பள்ளிக்கூடமாக்கி விடலாமென்றும் அவன் அர்காடியோ வெடித்தான். அப்படி ஆத்திரமுடன் செயல்பட வேண்டாமென அறிவுறுத்தினார். அவரது அமைதியான சுபாவத்தையும் புரிதலையும் உணராத அர்காடியோ பொது இடத்தில் அனைவர் முன்னும் பலவீனமானவரென பழித்துரைத்தான். அவ்ரெலினோவ் காத்திருந்தார். இறுதியாக டிசம்பர் மாதத்தின் தொடக்கத்தில் ஒரு நாள் ஊர்சுலா பட்டறைக்குள் அதிர்ந்தபடி நுழைந்தாள்

"யுத்தம் தொடங்கிவிட்டது"

யுத்தம் உண்மையில் மூன்றாண்டுகளுக்கு முன்னதாகவே வெடித்துவிட்டது... நாடு முழுதும் யுத்தகால ராணுவ சட்டம் அமுலாக்கமாகி இருந்தது. உடனடியாக அதை அறிந்திருந்தவர் டான் அப்போலினார் ஒருவர் தான். இராணுவ காலாட்படை பிரிவு ஒன்று ரகசிய பயணம் மேற்கொண்டு மெக்கொண்டோவிற்குள் முன்அறிவிப்பின்றி நுழைந்து ஆக்கிரமிக்க இருப்பதை தன் மனைவிக்கும் அவர் சொல்லவில்லை. விடியலுக்கு முன்பதாகவே சப்தம் எதுமின்றி ஊருக்குள் நுழைந்தவர்கள், இரண்டுக் கழுதைகளில் ஏற்றிவரப்பட்ட ஆயுதங்களை கோவேறு வண்டிகளுடன் தங்கள் தலைமையகத்தை பள்ளிக்குள் அமைத்தார்கள். காலை ஆறு மணிக்கு ஊரடங்கு உத்திரவு வெற்றிகரமாய் அமலுக்கு வந்தது. இம்முறை முதலில் நடந்ததைக் காட்டிலும் மிகவும் ஆக்ரோஷத்துடன் மறுபடி ஒரு தேடுதல் வேட்டை நடைபெற்றது. வீடுவீடாக நடந்து ஆயுதங்களை பறிமுதல் செய்து அதிகாரி அச்சுறுத்தல் உழவுக்கருவிகளைக் கூட விட்டு வைக்கவில்லை. வீரர்கள் டாக்டர் நோகுயாராவை வெளியே இழுத்து வந்து சதுக்கத்தில் ஒரு மரத்தில் கட்டிப்போட்டனர். சட்டப்படியான எவ்வித விசாரணையும் இன்றி அவரை சுட்டுக் கொன்றனர். வழக்கம் போலான தனது மிதக்கும் மாயத்தை செய்து காட்டும் போர்வீரர்களை கவர்ந்திட முயன்று துப்பாக்கி கைப்பிடியால் தலையின் பக்கமொன்று ஒரு அடி விழுந்து தலை பிளவு பெற்றார் அருட்தந்தை நிகானோர். லிபரல்களின் எழுச்சி ஒடுக்கப்பட்டு ஒருவித அமைதியானது பயங்கரமாய் பதுங்கியது. அவ்ரெலியானோவ், முகம் வெளுத்து, வெறுப்பும், விநோத மனநிலையும், மர்மமான நடவடிக்கைகளுமாயிருந்தார். தன் நண்பர்களோடு பக்கம் தக்கபடி

ஆடிக்கொண்டிருப்பதை நிறுத்தவில்லை. தன்னை ஊரின் படைத்துறை சார்ந்த மற்றும் படைத்துறை அல்லாதவற்றுக்குமான பொறுப்பு தலைவர் என வீணில் அறிவித்துவிட்டு, டான் அப்போலினாரே அதிகாரம் செலுத்துவது அவருக்கு புரிந்தது. முடிவுகள் அனைத்தும் ராணுவ பிரிவின் கமாண்டோ ஒருவன்தான எடுத்தான். தினமும் காலையில் துப்பாக்கி முனையில் மிகப் பெரிய வசூல் வேட்டையை சிவில் நிர்வாகத்தை பேணிட என்று மக்களை அச்சமூட்டி பிடுங்கி வந்தான். நான்கு போர்வீரர்களை, வெறி நாய் கடித்துவிட்டதாக அறியப்பட்ட ஒரு பெண்ணை வீறிட கதற கதற வீதிக் கிழுத்து வந்து அவர்களில் ஒருவன் துப்பாக்கி கைபிடியில் அடித்தே கொன்றான். அவ்ரெலியானோவ், ஜெரினல்டோ மார்க்வெஸின் வீட்டில் நுழைந்து அழுத்தமான தனது பொருட் செறிவு வார்த்தைகளுடன் அடக்கமாய் ஒரு குவளை, சர்க்கரை சேர்க்காது காப்பி தருமாறு உத்திரவிட்டார். பின் இருவருமாக சமையல் அறையில் தனித்திருக்கும் போது, ஒருவகை அதிகாரத்தோடு முடிவாக சொன்னார்



"நமது பையன்களை தயார்படுத்து.... நாம் யுத்தமிடச் செல்கிறோம்" ஜெரினெல்டோ மார்க்வெஸால் அவரை நம்பமுடியவில்லை

"என்ன வகை ஆயுதங்களுடன்?" அவர் கேட்டார்

"அவர்களுடையவைகளுடன் தான்" அவ்ரெலியானோவ் பதிலளித்தார்.

செவ்வாய் அன்று நள்ளிரவில், முப்பது வயதுக்குக் கீழான இருபத்தோரு இளைஞர்கள், அவ்ரெலியானோவ் புயெண்டியாவின் தலைமையில், தங்கள் மேசைக் கத்திகள், மற்றும் கடப்பாறையொத்த கூர் ஆயுதங்களுடன் உள்ளூர் ராணுவ தலைமை அலுவலகத்தை திமீர் என தாக்குதல் நடத்தி, ஆயுதங்களை பறித்துக் கொண்டு, வெளி முற்றத்தில் வைத்து, அப்பெண்ணைக் கொன்ற ராணுவ வீரர்களுக்கும், தளபதிக்கும் மரண தண்டனை கொடுத்தார்கள்.

வீரர்களை கொன்ற கொலைப்படையின் துப்பாக்கி சுடும் சப்தங்கள் எங்கும் கேட்ட அந்த இரவில் அர்காடியோ ராணுவ மற்றும் சிவில் ஊர் தளபதியாக நியமிக்கப்பட்டான். ஏற்கனவே திருமணமான கலகக்காரப் படையின் வீரர்கள் போருக்கு செல்ல தங்கள் மனைவிமார்களுக்கு பிரியாவிடை பகிர்க கொஞ்சம் அவகாசமே இருந்தது. அவர்களை அவர்களது சொந்த பாதுகாப்பிலேயே விடுத்து சென்றனர்...... அதிகாலையில், கொடிய ஆட்சியிலிருந்து மீட்கப்பட்ட மக்களின் மகிழ்ச்சி ஆரவாரங்களுக்கு நடுவே, அவ்வீரர்கள் புரட்சிப் படை தளபதி விக்டோரியோ மெடினாவின் படைகளோடு இணைந்து கொள்ள புறப்பட்டார்கள். தளபதி மெடினா, கடைசியாய் கிடைத்திருந்த தகவல்களின்படி மனவூரை நோக்கி வந்து கொண்டிருப்பதாய் அவர்கள் அறிந்திருந்தார்கள். தான் புறப்படும்முன், படுக்கை அறையை விட்டு டான் அப்போலினோர் மாஸ்கோட்டை வெளியே இழுத்துவர அவ்ரெலியானோவ் உத்திரவிட்டார். "மாமனார் அவர்களே... பதட்டம் வேண்டாம்" அவர் சொன்னார், "புதிய அரசு, தன் வாக்குறுதியை காப்பாற்றும்... உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினரின் உயிருக்கும் பாதுகாப்பு உண்டு". உயர பூட்ஸும், தோளில் பெரிய துப்பாக்கியும் இடுப்பில் ரவைகள் மொய்க்கும்வாரும் அணிந்து நிற்கும், அதிகாரத் தலைவனை அடையாளம் காண, டான் அப்போலினோர் மாஸ்கோட் முதலில் திணறினார்.. நேற்று இரவு மணி ஒன்பது வரை பகடைத்தாயம் தன்னோடு ஆடியவனே, அங்கே நிற்பதை நம்பமுடியாமல்.....

"இது சுத்தப் பைத்தியக்காரத்தனம் "அவ்ரெலிட்டோ.." என ஆச்சரியத்தில் வாய்ப்பிளந்தார்...

"பைத்தியக்காரத்தனமல்ல," அவ்ரெலியானோவ் பதிலளித்தார். "யுத்தம்... என்னை இனி அவ்ரெலிட்டோ என்றழைக்காதீர்கள்... இப்போது நான் கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா"!

தொடரும்

நினைவின் விஷம்

செழியன்

இருளில் திரியெனப்பிரிந்து அலைவது கூந்தலா?
ஒற்றைக்கண் இமைமூட அணைகிறது ஒரு சுடர்.
மூடிய இமையும் ஜ்வலிக்கிறது.
கண.
கண் எனும் சொல்.
வெப்பத்தில் நெற்றியிலிருந்து வழியும் நீர்க்கோடு.
வெள்ளைப்பாம்பு.
குங்குமம் கலங்கி நீரில் சொட்டுகிறது..
நீரும் நிறமும் மயங்கி மிதக்கிறது நாகலிங்கப்பூ.
காற்றில் எழும்பி தீண்டத்துடிக்கும் கூந்தல்பிரிகள்.
இருளில் அலையும் கருநாகங்கள்.
அதன் ஒற்றைப்பல் வானம் வரை எழும்பி
நாடித்துடிப்பில் ஓங்கி ஒரு
சுளீர்.
கனவா..சொற்களின் வழியே மயக்கமா?
மூடிய புத்தகத்தினுள் பக்கநினைவுக்காக வைத்திருந்த என்விரல் சுடுகிறது.

நாட்டரசன்கோட்டை.கானல் அலையும் பொட்டல்வெளியில் கரை ஒதுங்கிய நூலகக்கட்டிடம். வரிசையாய்ச் சாய்ந்து நெருக்கிநெருக்கி அடுக்கப்பட்ட புத்த கங்கள்..அந்த அடைசலில் இருந்து ஒருமுறை பாம்பு வந்தது.ஈரத்தரையில் கொலுசு போல நெளிந்து வாசலில் இருக்கும் வாழைமரத்தினுள் மறைந்தது. தரையில் நெளி நெளியாய் இருந்த அதன் ஈரத்தடம் காற்றில் உலர்ந்தது. தடத்திலும் நிஜத் திலும் மறைந்த பாம்புகள் இருக்கும் அந்தக்கட்டிடத்தில் விளக்குகள் எரிந்த போதும் இருள் இருந்தது. ஒருநாள் பைண்டிங் மசியில் பூசண நெடிய டிக்கும் அந்தபுத்தகநெரிசலுக்குள் புகுந்து ஒன்றை உருவினேன்.புத்ர-லா.ச.ரா. தலைப்பும் பெயரும் புதிராக இருந்தன.முதல்பக்கத்தில் தலைதூக்கிப் படம் எடுக்கும் பாம் பின் சித்திரம்.நூலகத்தில் யாரும் இல்லை.நூலகரின் விசில்சத்தம் மட்டுமே அலைந்து கொண்டிருந்தது.காகிதப்பாம்பின் மகுடியோ?பூசண நெடி பாம்பின் வாசமெனக் கிறுகிறுத்தது.

புத்தகத்துடன் காலலில் நடந்து வீட்டுக்கு வந்தேன்.புத்ர.லா.ச.ரா...பாம்பு. ஒரு பக்கத்தைப்படிக்குமுன் தலைசுற்றியது.இருட்டுக்குள் பாம்பு துரத்த கண்தெரி யாமல் ஓடி சுவர்களில் முட்டிமுட்டித் திரும்பும் கனவு வந்தது.படிக்கப்படிக்க காய்ச்சலில் உடல் கனகனக்கிறது.புத்ரவை புரிந்தும் புரியாமல் புத்தக நெரிச லுக்குள் செருகிவிட்டேன்.அதன்பிறகு இருளில் அந்தப் பொட்டல்வெளியைக் கடக்கையில் தரையில் சரசரவென சருகுகள் ஊர்கின்றன. நிலவைக்கடந்து செல்லும் மேகத்தில் ஒரு முகம் தெரிகிறது. அம்பாள். கண்ணுடையநாயகி அம்மன் கோயிலின் வெண்கல மணி ஊர்முழுக்க அசைகிறது..அதன் ரீங்காரம் நான் இதுவரை கேட்காத புதுமொழி. யாருமற்ற தெருவில் பால்காரன் மணி யடித்துச் செல்கிறான்.கிணிகிணிகிணியென தெருமுழுக்க பன்னீர்மலர்கள் உதிர்கின்றன.

அபிதா..அவளை அழைத்துக்கொண்டு நாட்டரசன்கோட்டையின் பழைய கட்டிடங்கள் உயர்ந்த பூத தடித்தெருவின் சந்தில் நடந்துவருகிறேன்.மனிதர்களே இல்லாத அந்தபுராதனமான ஊரில் நானும் அபிதாவும் இருந்தோம். இருட்டுக குள் கண்கட்டி விளையாட்டு.கல் இடறி நகக்கண்ணில் ரத்தம் கசிகிறது.சொற்கள இடறி அந்த வலி.. அந்தக்கடுப்புதான் ஆனந்தம். விஷம் மெல்ல ஏறுகிறது. முதல் என்பது முதலில் மட்டும்.முதல்முறைதான்

பாம்புக்கொத்தல்.அடுத்தமுறை முத்தம். பற்கள் நெறித்து,உடல்முறுக்கி கண்கள் செருகி உச்சியில் ஏறும் விஷம்.இது வலியா? போதையா? புணர்ச்சியின் உச்சமா?மரணமா?சொற்கள் கொத்துகின்றன. பாம்பின் நீலப்பல்.சிட்டுக்குருவின் அலகு.குழந்தையின் பிஞ்சு இதழ். மழைத்துளி யா? சாரலின் ஸ்பரிசம்.சிலுவையில் உள்ளங்கையில் இறங்கும் இரும்பு ஆணி.தேள் கொடுக்கு.தீண்டல்.காந்தம்போல எட்ட இருந்தாலே ஒரு திகு திகு.தீக்குள் விரலை வை. சுடட்டும். உருகட்டும்.தொடுதலே சொஸ்தம்.என்னைத்தொடு.தழுவு.கட்டி இறுக்கு.ஊன் உருக்கு.அரூபம் செய். திடீரென சிறகுமுளைக்கும்.சர்ரென விண் ணில் கிளம்பி மேகம் முகர்ந்து அடுத்தநொடி சுடப்பட்டு தரையில் விழும் பொத். சொல் மிருது.அவர் சொன்னால் ம்ருது.

வீரகண்டான் ஊருணி.சிவன் கோயிலை ஒட்டிய அந்தச்சிறிய மண்பாதையில் நடந்து செல்லும் போது பெண் ஒருத்தி முழுக்க மூழ்கி கூந்தல் மட்டும் மிதக்க தலைஅலசுகிறாள்.செம்மண் நீரலைகளின் நடுவே கூந்தல் அலையோடு அலையாக நெளிகிறது.பறவையின் சிறகு விழுந்ததும் மொத்தக் குளமும் நலுங்குவதுபோல ஒரு சொல்.கோயில்மணியின் ஙங்.உடம்பு அதிர்ந்து புறாக்கள் சிதறுகின்றன. நாக்கில் வெண்மை படர்ந்து மேலண்ணம் ஒட்டிக்கொள்ளும் கசப்பு.அடிநாக்கில் நெல்லிக் காய் ஒதுக்கி விழுங்க விழுங்க இனிப்பு.ஒரு சொல் போதும்.தூண்டில் இடுபவனின் மோனம்.முள், ஆழத்திற்குப்போய் தக்கை அசையக்காத்திருக்கலாம். ஒரு வரியை உருவி அடிவயிற்றை அறுக்கலாம்.ஒரு சொல்லை விரல்நுனியில் ஏந்தலாம்.மல்லிகை.மசியிருளில் மலர்ந்த பவள மல்லிகை.வலை விசிறும் மீனவ னின் லாவகத்தோடு ஒரு பத்தியை விரித்து வீசிவிட்டுக் காத்திருக்கலாம். வீணை யில் ஸ ப ஸ. கோயில்கதவில் வரிசையாய்த்தொங்கும் சிறுமணியின் இசை. தெப்பத்தில் கால்வைத்ததும் கடிக்கும் மீனின் கூச்சம்.ஒரு சொல் போதும். காட்சிகள் விரியும்.

பல இரவுகளைக்கடந்து சென்னைவந்தேன்.காட்சிகளை சொல்லின் வழியாகவும் ஒளியின் வழி யாகவும் தேடிஅலையும் நகரவாழ்க்கை.லா.ச.ராவை ஆவணப்படம் எடுக்கலாமா?இருளும் எண்ணெயும் படர்ந்து மசியேறிக்கிடக்கும் கர்ப்பகிருகச் சிலையைத்தொட்டதும் அந்தசிலை நடந்து இருளில் மறைவது போல கனவு வந்தது.சொற்களின் இருண்மையை காட்சிகளாக மாற்றிப் பார்க்கவேண்டும். ரஸவாதம். கவிஞர் ரவிசுப்ரமணியன் சாகித்ய அகாதமியின் வழியாக விண்ணப பிக்கலாம் என்று சில படிவ மாதிரிகள் தந்தார்.நண்பர் தளவாய் சுந்தரம்,நண்பர் பாண்டியராஜனுடன் லா.ச.ராவை சந்திக்கப்போனேன்.அந்த நாளின்மேல் வெயில் படர்ந்திருந்தது.என்னிடம் பழைய பெண்டாக்ஸ் கேமராவும் சில கறுப்பு வெள்ளை சுருள்களும் இருந்தன.

அம்பத்தூருக்குப் போய் அங்கிருந்து மண்சாலையில் நடந்துசென்றால் சாலை யோரம் இருக்கும் அடுக்குமாடிக்குடியிருப்பு. உள்ளிருக்கும் சிறிய அறை.பச்சைநிற இரும்புக்கட்டில்.அருகே துணி விரிக்கப்பட்ட நாற்காலி.மெலிந்த உடலினுள் லா.ச.ரா இருந்தார்.பரஸ்பரம் அறிமுகத்திற்குப்பிறகு நண்பர்கள் அமர நான் கேமராவை எடுத்தேன்.அந்த அறையின் மேற்குப்பக்கமாக திறந்திருந்த கதவின் வழியாக எனக்கு சன்னமான ஒளியே வழங்கப்பட்டது. ஈரமான தரை. மெல்லிய இருள்.நூலக வாசனை.தரையில் பாம்பு ஊர்ந்ததற்கான தடங்கள் இல்லை. காயந் திருக்கலாம்.பதிலாக லாசராவின் மெலிந்த உடலில் அசையும் விரல்கள் என்னை ஈர்த்தன.கேமராவின் இருளுக்குள் கறுப்பு வெள்ளைச்சுருளில் லாசராவின் விதவிதமான நிழல்கள் மௌனமாகப்பதிவாயின.அவர் விரல் அசைந்து கொண்டேயிருந்தது. புத்தக அடுக்கில் டால்ஸ்டாயின் புத்துயிர்ப்பு நாவல் சாய்ந்திருந்தது.

சில இரவுகள் கழிந்தன.சாகித்யஅகாதமியின் படிவங்களோடு அவரைச் சந்திக்கப் போனேன். இந்த முறை வீட்டின் இன்னொரு அறையில் இன்னொரு லா.ச.ரா இருந்தார்.'நான்தானே இந்தப் படத் துக்கு ஹீரோ.இந்த டாக்குமெண்டரி

எடுக்க எனக்கு எவ்வளவு தருவேள்'சாகித்ய அகாதமி ஒப்புதல் கிடைத்தா என்ன வேண்டுமோ வாங்கிக்கங்க''கிடைக்கிறதுல பத்து பிரசண்ட குடுத்துடுங்கோ.நான இருப்பேனோ இல்லையோ தெரியாது..அவகிட்ட கொடுத்திடுங்கோ' மாமி காபி டம்ளரை என்னிடம் கொடுத்துச்சிரித்தார்கள்.'நான போங்க ஆபீசா.கணக்கு சரியா இருக்கணும் இல்லியோ'' பொக்கைவாய் சிரிப்பு'சும்மா..சொன்னேன.சாகித்ய அகாதமி பணம் கொடுக்காது.எனக்குத்தெரியும என்னை எடுக்கிறேன்னு வர் றேளே..அதுவே போதும் எடுங்க'

என்னிடம் நானூறு ரூபாய மட்டும் இருந்தது.பழைய ஒளி இழைகள இரண்டு இருந்தன.நண்பர் ஒருவரின் கேமராவை இரவல் வாங்கிக்கொண்டு உதவியாளர் ஒருவருடன வீட்டுக்குப்போனேன். முன்பக்க சன்னல் வழியே ஒளிர்ந்த வெயில் வீட்டை வரைந்திருந்தது.கால்கள் நடக்கமுடியாத நிலையில் இருந்த அவர் ஊன்றுகோல் துணையுடன் நடந்து ஹாலுக்கு வந்து அமர்ந்தார். கேமராவின் ஒளிச்செவ்வகத்தில் பதிவு செய்வதன் அடையாளமாக சிவப்புப்புள்ளி ஒளிர்ந்தது. பாம்பின் பல் தடம்.அவர் விருப்பத்துக்கு பேசட்டும் என்பதால கேள்விகள் எது வும் இல்லாமல் பெற்றோர்கள் பற்றிப்பேசினார்.தவமிருந்து தனது அம்மாவுக்கு ஒரு மழைநாளில் பிறந்ததைச் சொன்னார். 'நினைப்பு தானே எல்லாம்.''இப்ப உடம்புக்கு முடியல.எங்கேயும் போறதில்ல.ரெண்டு அறைக்கு இடையில நடந்துக் கிட்டிருக்கேன்.' இடையிடையே சிறிது ஓய்வு. 'ஆனாலும் சும்மா பண்ணக் கூடா துங்கிற சென்டிமெண்ட் எனக்கு உண்டு.என்ன சொல்லவர்ரேன்னாக்கா வெட்கத் தை விட்டாலும் கேட்கிறேன். இன்னும் மாம்பழசீசன் இருக்கா?' 'ம். இருக்கு' 'எனக்கு ஒரு அரைடஜன் பங்கனபள்ளி இல்லேன்னா அல்போன்ஸான் னு ஒண்ணு இருக்காமே.நான் அதைப் பாத்ததில்ல. சாப்பிட்ட தில்ல.''சரி நான் வாங்கிக்குடுத்திட்டுப்போறேன்'அதே புன்னகை.'இதெல்லாம் எடுக்க செலவுக்கு என்ன செய்வீங்க' நான் சிரித்தேன்.நீண்ட யோசனையில் தலை குனிந்து இருந் தவர் தலைநிமிர்ந்து பேசினார்.முடி வில்'நானே ராமாமிர்தம்' என்று சொன்னார். அவ்வளவுதான். சிவப்புப்புள்ளி அணைந்தது. 'இப்படியெல்லாம் எடுக்கறதே பெருமைதானய்யா..நான் பாஷையைப்பத்தியும நடைபத்தியும் நிறையப் பேசணும். அடுத்து எப்ப வருவேள்?' 'நாளைமறுநாள வர்ரேன்''போன் பண்ணிட்டு வாங்க..' பகலின் மெல்லிய இருள்படர்ந்த அறைக்குள் அவரது கால்கள் ஊன்றுகோலுடன் நடந்து மறைந்தன.

வெளியில் மழை பெய்திருந்தது.மண் சாலையில் தண்ணீர் அங்கங்கே தேங்கி யிருக்க கேமராவையும் அதன் உபகரணங்களையும் ஆளுக்கொன்றாயத் தூக்கிக் கொண்டு நடந்து அம்பத்தூர் பஸ்நிலையம் வந்தோம்.கேமரா கொண்டுவந்தவரை ஆட்டோவில் அனுப்ப வேண்டும்.வழியில் மஞ்சள்மஞ்சளாய மாம்பழங்கள் குவிந் திருந்தன.கோடைப்பருவத்தின் கடைசி மாம்பழங்கள்.இன்னும ரெண்டு நாளில் திரும்பவரும்போது நிறைய மாம்பழங்களோடு போய்ப்பார்க்கவேண்டும் என்ற நினைவுடன் வீடு திரும்பினேன்.இன்னும இரண்டுநாட்கள் படம் பிடித் தால் ஆவணத்தில் அவரதுபகுதிகள் நிறைவுறும். இரண்டாவது நாள் போன் செய்த போது விருந்தினர் வருகையால் படப்பிடிப்பு சாத்தியப்படவில்லை. கேமரா ஓய்வாக இருக்கும் நாளும் வாய்க்கவில்லை.

அதன்பிறகு கழிந்தது நான்கு வருடமா?நானூறு வருடங்கள்கூட இருக்கலாம். அம்பத்தூர் மண்சாலை யில் நடந்துசெல்லும் அந்த இரண்டாவதுநாள வரவே யில்லை.ஒருநாள் காலை ஆந்திர மாநிலத்தின் மதனப்பள்ளி எனும் ஊரில்

இருக்கையில் தொலைபேசியில் ரவிசுப்பிரமணியனின் குரல். 'லா.ச.ரா இறந்துட் டார்.'நூலகத்தில் பார்த்த பாம்பின் ஈரத்தடம் ஒளிர்ந்து தரைக்குள ஒளிகிறது. ஊர் திரும்பியதும் பதிவுசெய்த ஒளி இழைகளைத் தேடிஎடுத்தேன். ஆவணம் செய்ய முயற்சிகள் எடுத்த ரவிசுப்ரமணியனிடமே அதைக்கொடுத்து விட்டேன். மாமபழங்களின் எடை அழுத்துகிறது. அதைத்தான் யாரிடம் கொடுப் பதென்று தெரியவில்லை.

ஐராவதி

(ஐராவதம் மகாதேவன் பாராட்டு விழா நூல், வரலாறு .காம் சென்னை,2008. விலை 500)

சு. இராசவேலு



தமிழகத்தில் துறை சார்ந்து சிறந்த ஆய்வுகள் நடத்தும் அறிஞர்களுக்கு பாராட்டு விழா மலர் எடுப்பது என்பது சமீப காலங்களில் அருகி வருகின்ற வழக்கமாக உள்ளது. இது போன்ற பாராட்டு விழா மலர்களில் துறைபோகிய ஆய்வறிஞர்கள் பலர் தங்களது ஆய்வுக்கட்டுரைகளை எழுதி பாராட்டு பெறும் மூதறிஞருக்குப் பெருமை சேர்ப்பர். இதன் மூலம் பல அரிய கட்டுரைகள் வெளிவந்து புதிய செய்திகளை ஆய்வுலகிற்கு வழங்கி வருவது வழக்கமாக இருந்தது. இத்தகைய பாராட்டு ஆய்வு நூல்கள் வட இந்தியா, ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் மிகுந்த அளவில் வெளிவந்த வண்ணம் உள்ளன. ஆனால் தமிழகத்தில் இது போன்ற துறைபோகிய ஆய்வறிஞர்களுக்கு பாராட்டு விழாமலர் எடுப்பது என்பது அரிதாக ஆகி வருவது என்பது, சிறந்த ஆய்வறிஞர்கள தமிழ் நாட்டில் அருகி வருகின்றனரோ.' என்ற ஐயத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இது போன்ற பாராட்டு விழா நூல்கள் அத்துறை சார்ந்த ஆய்வு நண்பர்கள் எடுக்கின்ற முயற்சியின் மூலமாகவே வெளிவரும். இக்கூட்டு முயற்சியில் ஈடுபட்டாலும் அதற்கு காலமும் பிற முயற்சிகளும் கைகூடி வருதல் வேண்டும். பத்து ஆண்டுகளுக்கு முன்பாகவே திருவணந்தபுரத்தில் நடந்த ஒரு கருத்தரங்கில் நானும் நண்பர்கள் பேராசிரியர் இராஜன் மற்றும நாணயவியல் ஆய்வாளர் அளக்குடி சிதாராமன் ஆகியோர் இனைந்து மூதறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்களுக்கு பாராட்டு விழா மலர் எடுக்க வேண்டும் என்ற முயற்சி மேற்கொண்டு, அப்பணி பல்வேறு இடர்பாடுகளால் நடைபெறாது காலமும் கூடி வராத காலத்தில் இருந்தபொழுது, கல்வெட்டு ஆய்வில் பல ஆய்வுள்ளங்களை ஈர்த்து, கனிப்பொறி யுகத்தில் சென்றுகொண்டிருக்கின்ற ஆர்வலர்களுக்கு கல்வெட்டுப் பொறியைத் தட்டி எழுப்பி ஐராவதம் என்று கல்வெட்டு ஆய்வுலகில் அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் மூதறிஞர் ஐராவதம மகாதேவன் அவர்களுக்கு 'ஐராவதி' என்ற பாராட்டு ஆய்வு நூலை சமீபத்தில் சென்னையில் வெளியிட்டு பெருமை சேர்த்த இராசமாணிக்கனர் வரலாற்று ஆய்வு மைய இயக்குநர் முனைவர் இரா. கலைக்கோவன் அவர்கள் பாராட்டுக்குரியவர்.

அவரது அயாரா முயற்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு இந்நாலில் ஆங்காங்கே காணமுடிகிறது. அவரது ஒருங்கிணைப்பின் கீழ் மேற்குறித்த கணிப்பொறி சார்ந்த இளம் கல்வேட்டு ஆர்வலர்கள் இனைந்து நடத்தும் வரலாறு டாட்காம் அமைப்பினர், இந்த அரிய பணிக்குத் தங்களை அர்பணித்துக் கொண்டுள்ளனர். பதிப்புக்குழுவில் முனைவர் நளினி, கோகுல், கமலக்கண்ணன், கிருபாசங்கர்,

இளையராஜா, இராமச்சந்திரன் ஆகியோர் ஒருங்கிணைந்த முயற்சி 'ஐராவதி'. பல்வேறு நாடுகளில் பணியாற்றும் இவ்விளம் ஆய்வாளர்களை இணைத்து பாலமாகவும் பலமாகவும் இருந்து முயற்சியைத் திருவினையாக்கியவர் அறிஞர் முனைவர் இரா. கலைக்கோவன். அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்

கல்வெட்டு மூதறிஞர் ஐராவதம் மகாதேவன் தமிழக வரலாற்றிற்கும் தமிழ் கல்வெட்டு ஆய்விற்கும் ஆற்றிய மிகப்பெரும் பணியின் காரணமாக வெளியிடப்பட்ட இவ்வரிய நூல் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முதல் பிரிவில் ஆங்கிலக் கட்டுரைகளும் இரண்டாவது பிரிவில் தமிழ் கட்டுரைகளும் மூன்றாவது பிரிவில் பாராட்டு விழா நாயகர் ஐராவதம் மகாதேவன் அவர்களின் தன் விவரப்பட்டியல் அவர்கள ஆய்வு குறித்த ஒளிப்படங்கள் தொகுப்பு ஆய்வு நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் பட்டியல் அவரால் பல்வேறு கால கட்டங்களில் எழுதப்பட்டு வெளிவந்த சிறந்த ஆய்வுக்கட்டுரைகள் சில ஆகியவை இடம் பெற்றுள்ளன.

முதல் பிரிவில் உள்ள 16 ஆய்வுக்கட்டுரைகள் ஐராவதம் மகாதேவன் தன் இருகண்களாக நினைத்து ஆய்வு செய்த சிந்துவெளி எழுத்துக்கள் மற்றும் தமிழகத் தொல்லியல்,கல்வெட்டு, நாணயவியல்,வரலாற்று ஆய்வுக்கட்டுரைகளாக இத்துறைகளில் சிறந்து விளங்கி வருகின்ற அறிஞர் பெருமக்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன. ஜவஹர்லால் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர் செம்பகலக்ஷ்மியின் முதல் கட்டுரையில் தமிழகத்தில் சமனர்களின் தாக்கம் அவர்கள் இயற்கையான குகைத் தளங்களில் விட்டுப் போந்த தமிழிக் (தமிழ்—பிராமி) கல்வெட்டுகளின் மூலம் அறியப்படும் சமன சமயத் தொடர்பு; அக்கால கட்டத்தில் தமிழகத்தில் வழக்கில் இருந்த ஒழுங்கு முறையற்ற பிற சமய நம்பிக்கைகள் ஆகியவற்றைப் படம் பிடித்துக் காட்டுகிறது. தமிழகத்தில் சமன சமயம் கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து தொடர்ச்சியாக இருந்த இடங்களை காலம் தோறும் கல்வெட்டு எழுத்துக்களின் வளர்ச்சி அடிப்படையில் பட்டியல் இட்டுக் காட்டியுள்ளார்.

நாணயவியலில் சிறந்த அறிஞராக விளங்கும் முனைவர் கிருஷ்ணமூர்த்தி அவர்கல் கரூர் மற்றும் மதுரைப் பகுதியில் கிடைத்த உரோமாணிய நாணயங்கள் மூலம் கிறித்துவ மதத் தாக்கம் உள்ளவற்றை அழகிய படங்களுடன் வெளிப்படுத்தியுள்ளார். இந்திய அரசர்கள் குறிப்பாக குப்தர் காலத்தில் இந்து மத கடவுளர்களின் தாக்கம் அவர்கள் வெளியிட்ட நாணயங்களில் உள்ளதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளதை போல் உரோமாணிய நாணயங்களில் கிறித்துவத்தின் தாக்கம் மிளிர்வதை தக்க சான்றுகளுடன் இவ்வறிஞர் வெளியுட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

ஐராவதம் மகாதேவன் அவர்களின் சிறந்த ஆய்வுகளில் ஒன்றாகக் கருதப்படும் சிந்துவெளி எழுத்துக்கள் குறித்து இவ்வாய்வில் தங்களை பெரிதும் ஈடுபடுத்தி வருகின்ற ஆய்வறிஞர்களும் பாராட்டு மலர் நூல் நாயகன் ஐராவதம் அவர்களின் சிறந்த நண்பர்களான ஆஸ்கோ பர்போலா மற்றும் போஷில் கிரிகேரி வெல்ஸ் ப்ராயன் அவர்களால் எழுதப்பட்டுள்ளன.

இந்தியாவில் இருந்த காலத்தில் மாமல்லையில் தன் பெரும் நாட்களை ஆய்வுக்காக கழித்து பல்லவர்கள் காலத்தில் வடமொழி கல்வெட்டுக்கள் மற்றும் எழுத்தமைப்பு கட்டடக்கலை ஆகியவற்றை ஆய்வு செய்த மைக்கல் லாக்வுட்டின் பல்லவ—கிரந்த எழுத்துக்களின் வரிவடிவ வளர்ச்சி வரைபடங்களுடன் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. மகேந்திரவர்மனின் விருதுப்பெயர் உள்ள ஒருவரிக் கல்வெட்டுக்கள் குறித்து இவ்வாய்வறிஞர் இக்கட்டுரையில் எழுதியுள்ளார். இவர் ஆங்கிலத்தில் எழுதிய பல்லவர் கலை என்ற நூலின் கட்டுரையின் ஒன்றின் பகுதி இக்கட்டுரையில் இடம் பெற்று இருப்பினும் தமிழ் நாட்டில் பல்லவர் காலத்தில் இருந்த வட்டெழுத்து மற்றும் தமிழ் எழுத்து நடிகர்கள் குறித்து உரிய

ஒளிப்படங்களுடன் இக்கட்டுரை வெளிவந்துள்ளது. வட்டெழுத்து மற்றும் தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி நிலை குறித்து ஆய்வு செய்வோருக்கு பயனுள்ள கட்டுரை.

தமிழ் நாட்டில் 2004 ஆம் ஆண்டில் கடல்கோள் (சுனாமி) ஏற்படுவதற்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கல்வெட்டுக்களின் மூலம் மாமல்லை அருகில் உள்ள சாளுவன் குப்பத்துக் கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட முருகன் கோயில் கல்வெட்டுக்கள் அக்கோயிலின் கட்டட அமைப்பு குறித்து முனைவர் இராஜவேலு எழுதியுள்ள கட்டுரை பல ஒளிப்படங்களை உள்ளடக்கி தமிழகத்தில் பல்லவர்களுக்கு முன்பே முருகனுக்கான கோவில் ஒன்று இருந்துள்ளதை சுட்டிக்காட்டுகிறது. ஆய்வாளர்களுக்கு பயன் அளிக்கும் கட்டுரை.

தமிழகத்தில் இதுவரை பல்வேறு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொண்டதில் தமிழகம் இரும்புக் கால பண்பாட்டில் மிகுந்த அளவில் மிளிர்ந்துள்ளமையை அறிய முடிகிறது. சமிபத்தில் இயற்கை வளம் மிக்க கோடைவாசல் தளமான கொடைக்காணல் அருகில் கடல் மட்டத்திலிருந்து 1400 அடி உயரமுள்ள தாண்டிக்குடி மலைப் பகுதியில் முனைவர் இராஜன் மற்றும் அவரது குழுவினர் களஆய்வு மற்றும் அகழாய்வு மேற்கொண்டு வெளிபடுத்திய தொல்லியல் கூறுகளை ஒரு கட்டுரை வெளிப்படுத்துகிறது. இதன் மூலம் இவ்வுயர்ந்த மலைப்பகுதியில் இரும்புக் காலத்திற்கும் முற்பட்ட கால மக்கள் வாழ்ந்திருந்தமையையும அவர்களைத் தொடர்ந்து இரும்புக்கால பண்பாட்டையும் அறிய முடிகிறது. முதல் காலம் மட்கலன்களின் அடிப்படையில் கி. மு. 1500 முதல் கி. மு. 1000 வரை என்பதும் அதன் பின்னர் இரும்புக் காலம் கி. மு. 1000 முதல கி. மு. 500 வரை தொடர்ந்து இருந்ததையும இக்கட்டுரை சுட்டுகிறது.

பேராசிரியர் சன்முகம் அவர்களின் கரூரில் கிடைத்த மோதிரங்கள் குறித்த கட்டுரையின் மூலம் இதுவரை பல்வேறு இதழ்களில் செய்தித் தாள்களில் வந்த குறிப்புககள் மற்றும் கட்டுரைகளின் சாரங்களை ஒரே கட்டுரையில் பல புதிய செய்திகளுடன் வெளியிட்டுள்ளார். இக்கட்டுரையில் மோதிரங்களில் காணப்படும் எழுத்து வகை, அமைப்பு சரியான வாசிப்பு போன்றவற்றுடன் மோதிரங்கள் அணிகின்ற பழக்கம் எப்பொழுது தோன்றி இருக்கவேண்டும் என்பதும் இலக்கியங்கள் சுட்டும் மோதிரங்கள் குறித்தும் ஆயவு செய்துள்ள பாங்கு பாராட்டுக்குறியது.

பேராசிரியர் சுப்பராயலு அவர்களின் கட்டுரை ஐராவதம மகாதேவன் பாராட்டு மலருக்கு ஏற்ற கட்டுரையாக அமைந்துள்ளது. தமிழ் நாட்டில் இதுவரை குகைகளில் கிடைத்துள்ள தமிழிக் கல்வெட்டுக்களை முழுவதுமாக ஆய்வு செயத ஐராவதம அவர்கள் தமிழி எழுத்துக்கள் கீறப்பட்ட பானை ஓடுகள் குறித்து ஓரளவே தமது ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார். இக்குறையைப் போக்கும் வகையில் பேராசிரியர் சுப்பராயலு அவர்கள் தமிழநாட்டு அகழாய்வுகளில் இதுநாள் வரை கிடைத்த தமிழி எழுத்துககள கீறப்பட்டுள்ள பானை ஓடுகளை முழுவதுமாக ஆய்வு செய்தும் அவற்றை பிற இடங்களில் கிடைத்த கீறல் பொறிப்புகளுடன் ஒப்பு நோக்கியும் ஆய்வுக் கட்டுரையாக வெளியிட்டுள்ளார். தமிழநாட்டில் இதுவரை அகழாய்வு செயயபபட்ட இடங்களில் 15 இடங்களில் இத்தகைய தமிழி எழுத்துப் பொறிப்பு உள்ள பானை ஓடுகள கிடைத்திருப்பது பற்றியும் அவற்றுள் கொடுமணல், அரிக்கமேடு, அழகன்குளம் உறையூர், கரூர் ஆகிய பகுதிகளில் கிடைத்த மட்கல ஓடுகள் பெரும பங்கை வகிப்பது குறித்தும் ஆய்வு செய்யும் இக்கட்டுரை இப்பொறிப்புக்கள் யாவும் இப்பானைகளைப் பயனபடுத்தியவர்களின் பெயர்களாகவே பெரும்பாலும் அமைந்துள்ளன என்றும அறிதியிட்டு கூறுகின்றார்.

மேற்குறித்த கட்டுரைகளைத் தவிர ரோமிலாதாபர் வேலுப்பிள்ளை அலவப்பிள்ளை, முனவர் சாந்தலிங்கம் அலெக்சாந்தர் ஆகியோரின் ஆங்கிலக் கட்டுரைகளும் இப்பிரிவில் இடம்பெற்றுள்ளன.

இரண்டாவது பிரிவான தமிழ் பகுதியில் 8 ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் மாமல்லையின் கலைச்செல்வங்களாம் கட்டடக் கலை சிற்பக் கலை குறித்து முனைவர் அகிலா, முனைவர் கலைக்கோவன், முனைவர் நளினி ஆகியோர் தனித்தனியே கட்டுரைகள் யாத்துள்ளனர். இருதளத் திராவிட ஒருகல் தளி என்ற கட்டுரையை எழுதியுள்ள முனைவர் அகிலா பஞ்சபாண்டவர் இரதங்களில் ஒன்றான அர்ச்சுனரதம் என்ற இருதள கற்றளி குறித்து மிக விளக்கமாக ஆய்வு செய்துள்ளார். இரதங்களின் சிறப்பு அமைப்புக்களையும் விரிவாக இக்கட்டுரை குறிப்பிடுகிறது. இதேபோன்று முனைவர் இரா. கலைக்கோவன் மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றைக்கல் தளிகள் ஒன்பது — ஓர் மறுபார்வை என்ற தலைப்பில் மிக விரிவான ஆய்வுக்கட்டுரையை எழுதியுள்ளார். கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள பஞ்சபாண்டவர் இரதம், கணேச இரதம், வடபிடாரி, தென்பிடாரி மற்றும் வலையான்குட்டை இரதம் (வலையான்குட்டை) ஆகியவற்றை இக்கட்டுரை ஒப்பு நோக்கி மீளாய்வு செய்கின்றது. இத்தளிகளின் கட்டடக்கலை அமைப்பை விரிவாக கல்வெட்டுக்களுடன் ஆய்வு செய்கிறது. இராசமாணிக்கனார் வரலாற்று மையத்தின் மற்றொரு ஆய்வாளரான பேராசிரியர் நளினி அவர்களும் மாமல்லையில் உள்ள பரமேசுவர மகா வராக விஷ்ணுகிரகம் குறித்து ஆய்வு செய்து கட்டுரையாக எழுதியுள்ளார்.

பல்லவர் காசுகளில் கோயில்கள் என்ற கட்டுரையை எழுதியுள்ள அளக்குடி சீதாராமன் காசுகளில் உள்ள கோயில் அமைப்புக்களை புதிய பார்வையாக எழுதியுள்ளார். முனைவர் வேதாசலம் மன்னார்கோயில் — அய்யனார்குளம் குன்றுப் பள்ளிகள் குறித்து ஓர் ஆய்வுக்கட்டுரை எழுதியுள்ளார். இக்கல்வெட்டில் கடிகை குறித்து ஆசிரியர் குறிப்பிடும் கருத்தும் குணாவிளங்கோ என்ற சொல் பிற்காலக் கல்வெட்டுக்களில் எங்ஙனம் இளங்கோயக்குடி என்ற பெயரில் ஊராக வழங்கி வந்துள்ளமையை சுட்டிக்காட்டுவதும் பொருத்தமாகவே விளங்குகிறது. கல்வெட்டுக்களில் உள்ள பல சொற்களுக்கு ஆழ்ந்த கள ஆய்வுகள் மூலமே விடை காண இயலும் என்பதற்கு இக்கட்டுரை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

முனைவர் அ.கா. அவர்களின் தினமணியில் வருகின்ற தமிழ்மணி குறித்து மிக விளக்கமாக 'இதழா இயக்கமா' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை இந்நூலில் வெளிவந்துள்ளது. இது பத்திரிகைத் துறையிலும் தமது ஆற்றலை வெளிப்படுத்தி தினமணி நாளிதழில் ஆசிரியராகப் பணிபுரிந்த ஐராவதம் மகாதேவன் பாராட்டு ஆய்வு நூலில் இடம்பெற்றிருப்பது பாராட்டுக்குரியதே. ஐந்திரம் குறித்து அப்பொழுது ஆசிரியராகப் பணியாற்றிய ஐராவதம் அவர்களின் மதிப்புரை அதற்கான பிறர் எழுதிய கடிதங்கள் குறித்து பேராசிரியர் அ.கா. அவர்கள் குறிப்பது அக்கட்டுரையைப் படிக்காதவர்களுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

இந்நூலின் மூன்றாவது பிரிவில் ஐராவதம் மகாதேவன் அவர்களின் தன் விவரப்பட்டியலும் அவர் 1958 ஆம் ஆண்டிலிருந்து 2008 வரை எழுதிய தமிழ்நாட்டு தொடர்புடைய ஆய்வுக் கட்டுரைகளின் தலைப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதேபோன்று சிந்துவெளி எழுத்துக்கள் குறித்து எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளின் தலைப்புக்களும் தனியாக வரிசை படுத்தப்பட்டுள்ளதுடன் ஐராவதம் அவர்கள் எழுதியுள்ள தொடக்ககால தமிழ் கல்வெட்டு நூலிற்கு இதுவரை மதிப்புரை எழுதியுள்ள ஆசிரியர்கள் மதிப்புரை வந்துள்ள இதழ்கள் நாளிதழ்கள் குறித்த செய்திகளும் பட்டியல் இடப்பட்டுள்ளன. இவற்றுள் செண்பகலக்ஷ்மி மற்றும் இராஜன் குருக்கள் ஆகியோர் எழுதியுள்ள ஆங்கில மதிப்புரைக் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

இறுதிக்கட்டுரைகளாக ஐராவதம் மகாதேவன் அவர்கள் எழுதியுள்ள ஆங்கில தமிழ் கட்டுரைகள் நான்கும் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் வரலாற்று ஆர்வலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் மிகப்பயனுள்ள நூலாக அமையும். தக்க ஒளிப்படங்கள் கட்டுரைகளில் தெளிவான மேற்கோள் நூல்கள் ஆய்வுக்கட்டுரைத் தலைப்புக்களுடன் வெளிவந்துள்ளது. தெளிந்த ஆய்வாளர்களை தேர்ந்தெடுத்து தரமான கட்டுரைகளை வெளியிட்டுள்ள வரலாறு காமின் குழுவினருக்குப் பாராட்டுக்கள் பல.

முஹமத் தார்விஷ் கவிதைகள்

தமிழில் லும்பி

இரவில் காலடி ஓசைகள்

எப்போதுமே,
நெருங்கும் காலடி ஓசைகளை இரவில் நாம் செவியுறுகிறோம்
கதவு நமது அறையைவிட்டு தப்பித்துக்கொள்கிறது
எப்போதுமே,
விலகியோடும் மேகங்களைப்போல


அதை எனது படுக்கையிலிருந்து
ஒவ்வொரு இரவும் விலக்குகிறது
உன் துக்க நிழல்?
காலடிகள் நெருங்கத் தொடங்க, உனது கண்கள் நாடுகளாக,
ஒரு முற்றுகை எனது உடலைச் சுற்றி உன் கரங்கள்
அந்தக் காலடி ஓசைகள் தொடங்கிட,
ஏன் அந்த நிழல் என்னை மறைத்தேக் காட்டுகிறது
ஓ ஷஹர்ஷாத்?
அந்தக் காலடி ஓசைகள் தொடங்கிட, நுழைய வேண்டாம்.
ஒரு மரமாக இரு,
அப்போது நான் பார்க்க முடியும் உனது நிழலை
ஒரு நிலவாக இரு
அப்போது நான் பார்க்க முடியும் உனது ஒளிச்சாயலை
ஒரு கூர் வாளைப்போல் இரு
அப்போது நான் பார்க்க முடியும் உனது சாயலை என்னுள்,
சாம்பலில் ஒரு ரோஜாவாக
எப்போதுமே,
நான் நெருங்கும் காலடி ஓசைகளை இரவில் செவியுருகிறேன்
அப்போது நீ நாடு கடத்தப்பட்ட எனது நிலப்பகுதிகளாகி விடுகிறாய்
பிறகு எனது சிறைச்சாலைகளாகிறாய்
கொன்றுவிடப்பார் என்னைத்
தீர்க்கமாக
கொல்லாதே என்னை
நெருங்கும் காலடி ஓசைகளால்



ஒரு நிலப்பரப்பினூடாக நமது பயணம்


நமது பயணம் நமக்குச் சொந்தமில்லாத ஒரு நிலப்பரப்பினூடாக,
நமது உழைப்பில்லாத அதன் கஷ்கொட்டை மரங்களினூடாக
அதன் பாறைகள் விரும்பாத சுருள் முடி செம்மறியாடுகளின்
பாடல்களுடைய பாடல்கள்.
ஒரு நிலப்பரப்பினூடாக நமது பயணம்
அது நமக்காக ஒரு தனி சூரியனை தொங்கவிடுவதில்லை
புராணப்பெண்களின் கைத்தட்டல்
ஒரு கடல் நம்மைச் சுற்றி,
ஒரு கடல் நமக்கு மேலே
தானியங்களும் தண்ணீரும் உங்களை அடையவில்லையெனில்
எங்களது காதலையும் கண்ணீரையும் புசியுங்கள்
கருப்பு துகிலணிந்து கவிஞர்களுக்கு துக்கம் கொள்ளுங்கள்
நீங்கள் உங்களது வெற்றிகளைக் கொண்டிருக்க, நாங்கள் எங்களுடையவைகளை,
நாங்களும் ஒரு நாட்டை உடையவர்களாக அதைக் காண்கிறோம்
காண இயலாத வெறும் ஒன்றாக.

வார்த்தைகள்



எப்போது எனது வார்த்தைகள் தானியங்களோ
அப்போது நான் நிலமாக
எப்போது எனது வார்த்தைகள் சீற்றமோ
அப்போது நான் புயலாக
எப்போது எனது வார்த்தைகள் பாறையோ
அப்போது நான் ஆறாக
எப்போது எனது வார்த்தைகள் தேனாக மாறியதோ

தேனீக்கள் மூடியிருந்தன எனது உதடுகளை.



10-ஆம் ஆண்டு

புதிய சந்தாதாரர்களுக்கு அய்யப்பன் கவிதைகள் மற்றும் ஜீவன்பென்னி கவிதை தொகுப்புகள் அன்பளிப்பாக அனுப்பப்படும்.

விற்பனைக்கு கிடைக்கும் நூல்கள்









300 பிரதிகளே அச்சாகும் புது எழுத்து 10ம் ஆண்டு கொணரும் நான்கு இதழ்களுடன் நான்கு புதிய புத்தகங்களை இணைப்பாக வழங்க உள்ளது.

தொடர்புக்கு

மனோன்மணி, 98426 47101


2008
தனிச் சுற்றுக்கு மட்டும்











